வெளியீடு 27-4-2005 Issued 27-4-2005

# தமிழ்நாடு
# சட்டமன்றப் பேரவை நடவடிக்கைகள்
## செயலக வெளியீடு

# TAMIL NADU
# LEGISLATIVE ASSEMBLY DEBATES
## OFFICIAL REPORT

புதன்கிழமை, நவம்பர் 17, 2004—தொகுதி 65—எண் 2

**Wednesday the 17th November, 2004 —Volume 65—No. 2**

சட்டமன்றப் பேரவைச் செயலகம், சென்னை - 600 009
Assembly Secretariat, Chennai - 600 009

V211,31'P05
P05.65.2
226622

[Price Rs. 3.00

316
இரை

17-11-2004

உள்ளடக்கம் | பக்கங்கள்


1. இரங்கற் குறிப்பு—

முன்னாள் உறுப்பினர் மறைவு ... 5

2. வினாக்கள்—விடைகள்—

(அ) உடுக்குறியிட்ட வினாக்கள் ... 6-40

(ஆ) உடுக்குறியிடாத வினாக்கள் (பட்டியல்கள் 1, 2 மற்றும் 3) ... 41-252

3. விதி 110-ன்கீழ் அறிக்கை—

காஞ்சிபுரம் வரதராஜப் பெருமாள் கோவிலில் சங்கரராமன் படுகொலையும் ஜெயேந்திர சரஸ்வதி சுவாமிகள் கைதும் குறித்து மாண்புமிகு முதலமைச்சரின் அறிக்கை ... 253-261

4. சிறப்புக் கவன ஈர்ப்பு—

சென்னை மற்றும் சில மாவட்டங்களில் பொது மக்கள் காலரா நோயினால் பாதிக்கப்பட்டுள்ளது ... 262-272

திரு. பரிதி இளம்வழுதி ... 262

திரு. சி. ஞானசேகரன் ... 263-264

திரு. ஜி.கே. மணி ... 264-265

*திரு. கே. மகேந்திரன் ... 265-267

திரு. வை. சிவபுண்ணியம் ... 267-268

*திரு. ப. அரசன் ... 268

*மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன் ... 268-272

பக்கங்கள்

5. அறிவிப்புகள்—

(அ) பல்கலைக்கழகங்களின் ஆட்சிமன்றப் பேரவை, ஆட்சிக் குழு மற்றும் நிர்வாகக் குழு ஆகியவற்றிற்கு உறுப்பினர்கள் தேர்வு 272-273

(ஆ) மாற்றுத் தலைவர்கள் பட்டியல் 273

(இ) தமிழ்நாடு கேளிக்கைகள் வரி (திருத்தச்) சட்டமுன்வடிவு, 2004 (ஆ.இ.) 276

6. அரசினர் சட்டமுன்வடிவுகள் (அறிமுகம் செய்தல்)—

(அ) தமிழ்நாடு கள்ளச் சாராயக்காரர்கள், மருந்துச் சரக்குக் குற்றவாளிகள், வனக் குற்றவாளிகள், குண்டர்கள், விபச்சாரத் தொழில் குற்றவாளிகள், குடிசை நில ஆக்கிரமிப்பாளர்கள் ஆகியோரின் அபாயகரமான நடவடிக்கைகளைத் தடுத்தல் (திருத்தச்) சட்டமுன்வடிவு, 2004 274-275

(ஆ) தமிழ்நாடு ஒப்பந்தப்புள்ளிகள் ஒளிவின்மை (திருத்தச்) சட்டமுன்வடிவு, 2004 275-276

(இ) தமிழ்நாடு கேளிக்கைகள் வரி (திருத்தச்) சட்டமுன்வடிவு, 2004 276-277

(ஈ) தமிழ்நாடு வரிவிதிப்புத் தனித் தீர்ப்பாயம் (நீக்கச்) சட்டமுன்வடிவு, 2004 277-278

(உ) தமிழ்நாடு காணொலிப் பேழைப் பதிவுக் கருவிகள் மற்றும் கம்பி வடத் தொலைக்காட்சி இணைப்பமைவு மூலமாகத் தொலைக்காட்சி பெட்டித் திரையில் திரைப்படங்களைக் காட்டுதல் (முறைப்படுத்துதல்) திருத்தச் சட்டமுன்வடிவு, 2004 278-279



பக்கங்கள்

7. கூடுதல் செலவிற்கான இரண்டாவது துணை நிதிநிலை அறிக்கை, 2004–2005 அளித்தல்—

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் 279-283

8. பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள்— 283-290

226622
சென்னை-600 009

# தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை

## கார்த்திகை 2, தாரண – திருவள்ளுவர் ஆண்டு 2035

## 2004 நவம்பர் 17, புதன்கிழமை

மாண்புமிகு பேரவைத் தலைவர் **டாக்டர் கா. காளிமுத்து** அவர்கள் தலைமையில் காலை 10-00 மணியளவில் பேரவை கூடியது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:**

"அஞ்சாமை அல்லால் துணைவேண்டா எஞ்சாமை
எண்ணி இடத்தால் செயின்"

ஒரு செயலுக்குரிய வழிமுறைகளைக் குறையின்றிச் சிந்தித்துச் செய்யுமிடத்து, அஞ்சாமை ஒன்றைத் தவிர வேறு துணை தேவையில்லை.

## 1. இரங்கற் குறிப்பு

### முன்னாள் உறுப்பினர் மறைவு

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இரங்கற் குறிப்பு. தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையின் முன்னாள் உறுப்பினர், திரு தி.ஓ. பெரியசாமி அவர்கள் 4-11-2004 அன்று மறைவுற்றதைப் பேரவைக்கு வருத்தத்துடன் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. தி.ஓ. பெரியசாமி அவர்கள் அவினாசி தொகுதியிலிருந்து தமிழ்நாடு சட்டமன்றப் பேரவைக்குத் தேர்ந்தெடுக்கப்பட்டு 1971 முதல் 1976 வரை நல்ல முறையில் பணியாற்றியுள்ளார்.

இம்முன்னாள் உறுப்பினரது மறைவால் அவரைப் பிரிந்து வருந்தும் அவர்தம் குடும்பத்தினருக்கு ஆழ்ந்த இரங்கலையும், அனுதாபத்தினையும் இப்பேரவையின் சார்பிலும், என் சார்பிலும் தெரிவித்துக்கொள்கிறேன்..

மறைந்த இப்பெரியவருக்கு மரியாதை செலுத்தும் வகையில் மாண்புமிகு உறுப்பினர்கள் அனைவரும் எழுந்து நின்று இரு மணித்துளிகள் அமைதி காக்குமாறு கேட்டுக்கொள்கிறேன்.

(உறுப்பினர்கள் அனைவரும் எழுந்து நின்று இரண்டு மணித்துளிகள் அமைதி காத்தனர்.)

[2004 நவம்பர் 17

# 2. வினாக்கள்—விடைகள்

## (அ) உடுக்குறியிட்ட வினாக்கள்

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினாக்கள்-விடைகள். வினா எண் 1, திரு. ப. ஆண்டிவேல், மாண்புமிகு பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர்

1—

### நீர்த்தேக்கம் அமைத்தல்

***24428—திரு. ப. ஆண்டிவேல்:**

மாண்புமிகு பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வேடசந்தூர் தொகுதி, குஜிலியம்பாறை ஒன்றியத்தில் ராமகிரி நீர்த்தேக்கம் அமைக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம், பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, (அ) இல்லை (ஆ) வினா எழவில்லை.

**திரு. ப. ஆண்டிவேல்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வேடசந்தூர் தொகுதி, குஜிலியம்பாறை ஒன்றியம் ராமகிரிக்கு அருகில் ராமகிரி, ஆர். கோம்பை இரண்டு மலைகளும் 'வி' வடிவத்தில் இருக்கிற காரணத்தினாலும் அதில் அணை கட்டும்போது அரசுக்கு அதிகமான நிதிச் செலவு ஏற்படுவதற்கு வாய்ப்பு இல்லாத காரணத்தினாலும், அந்தப் பகுதியைச் சுற்றியுள்ள கோவிலூர், கோம்பை, வடுகம்பாடி ஊராட்சிகளைச் சேர்ந்த ஆயிரக்கணக்கான ஏக்கர் நிலம் பாசனம் அடையவும், நிலத்தடி நீர் பெருகவும், பல்லாயிரக்கணக்கான மக்கள், விவசாயிகள் முன்னேறவும் அடுத்த நிதியாண்டிலாவது மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய அரசு இந்தக் கோரிக்கையைப் பரிசீலனை செய்து நிறைவேற்றுமா என மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.



2004 நவம்பர் 17]

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, குஜிலியம்பாறை ஒன்றியத்தில் புதியதாக நீர்த்தேக்கம் கட்டும் திட்டம் எதுவும் இல்லை. ஏனெனில், திண்டுக்கல் மாவட்டம், வேடசந்தூர் வட்டம், குஜிலியம்பாறை ஒன்றியத்தில் ஏற்கெனவே ஆர். கோம்பை கிராமத்தில் ராமகிரி கண்மாய் பொதுப் பணித் துறையின் பராமரிப்பில் உள்ளது. 8.11 மில்லியன் கன அடி கொள்ளளவு உள்ள இக்கண்மாயினால் 194.62 ஏக்கர் நிலம் பாசனம் பெறுகிறது. மானாவாரி கண்மாயான இக்கண்மாய்க்கு நீர்வரத்து—அய்யலூர் பாதுகாக்கப்பட்ட வனப் பகுதியாகும்—மலையின் அடிவாரத்தில் அமைந்துள்ள இந்தச் சிற்றோடையின் நீர் வந்து கண்மாய் நிரம்பியவுடன் வழிந்தோடி நேரடியாக குடகனாற்றில் சேருகிறது.

நீண்ட காலமாக பராமரிப்பின்றி இருந்த இக்கண்மாயைப் புனரமைக்கும் பணி ரூபாய் 110.19 இலட்சம் மதிப்பீட்டில் செய்யப்பட்டுள்ளது. இக்கண்மாயின் மிகை நீர், மற்றொரு புதிய கண்மாயோ அல்லது அணைக்கட்டோ அமைப்பதற்குரிய அளவு இல்லாததால் ராமகிரியில் நீர்த்தேக்கம் எதுவும் அமைக்க வாய்ப்பு இல்லை. இருப்பினும், திண்டுக்கல் மாவட்டம், வேடசந்தூர் வட்டம், குஜிலியம்பாறை ஒன்றியத்தில் கரையனூர் கிராமத்தில் புதிய கண்மாய் அமைக்க ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டு, திட்டங்கள், வடிவமைப்புத் திட்ட வட்டப் பொறியாளர்களால் 2001-2002-ல் 200 ஏக்கர் நிலம் பாசனம் பெறும் வகையில் மதிப்பீடு ரூபாய் 282.25 இலட்சத்திற்கு தயாரிக்கப்பட்டு அரசுக்கு அனுப்பப்பட்டுள்ளது.

இக்கண்மாய் அமைக்க 32 ஏக்கர் நிலம் கையகப்படுத்த வேண்டியுள்ளது. 10 மில்லியன் கன அடி கொள்ளளவு கொண்ட இக்கண்மாய் பணியின் பயன் பெறும் விகிதம் 1.18:1 ஆகும். இக்குறிப்புகளுடன் திருப்பப்பட்ட இம்மதிப்பீடு மீண்டும் மறு ஆய்வு செய்யப்பட்டு வருகிறது. இத்திட்டம் நபார்டு வங்கியின் நிதியுதவி பெற்றவுடன் செயலுக்கு எடுத்துக்கொள்ளப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**திரு. ப. ஆண்டிவேல்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்களுடைய விளக்கத்திற்கு நன்றி.

முற்பகல் 10-05

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 2, திரு. ஜெ. குரு என்கிற குருநாதன், மாண்புமிகு பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர்.

2— [2004 நவம்பர் 17

## தனி வட்டமாக அமைத்தல்

***34143—திரு. ஜெ. குரு என்கிற குருநாதன்:**

மாண்புமிகு பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) ஆண்டிமடம் தொகுதி, ஆண்டிமடத்தை தனி வட்டமாக அமைப்பதற்கு அரசு நடவடிக்கை எடுக்குமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம், பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, (அ) இல்லை (ஆ) வினா எழவில்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஜி.கே. மணி.

**திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆண்டிமடம் பகுதி மிகப் பின்தங்கிய பகுதி, பரவலான பகுதி. பல்வேறு காலகட்டங்களிலே நிர்வாக வசதிக்காக மாவட்டங்களை, வட்டங்களை, ஒன்றியங்களைப் பிரித்து வரக்கூடிய சூழ்நிலை நிலவி வருகிறது. இந்தச் சூழ்நிலையில் நிர்வாக வசதிக்காகவும், நலத்திட்டங்கள் மக்களை உடனடியாகச் சென்றடைவதற்காகவும் ஆண்டிமடம் வட்டத்தை அவசியத் தேவையின் அடிப்படையிலே, தனி வட்டமாக அரசு அறிவிக்குமா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பொது நிர்வாகம் மற்றும் மக்களின் நன்மையைக் கருத்தில்கொண்டு பெரிய வட்டங்கள் சீரமைக்கப்பட்டு வருகின்றன. பெரம்பலூர் மாவட்டத்தில், பெரம்பலூர் கோட்டத்தில், பெரம்பலூர், வேப்பந்தட்டை, குன்னம் ஆகிய வட்டங்களும், அரியலூர் கோட்டத்தில் அரியலூர் வட்டமும், உடையார்பாளையம் கோட்டத்தில் உடையார்பாளையம் மற்றும் செந்துறை ஆகிய வட்டங்களும் அமையப்பெற்றுள்ளன. ஆண்டிமடம் சட்டமன்ற உறுப்பினர் அவர்கள் எழுப்பிய மேற்கண்ட வினாவிற்கு பெரம்பலூர் மாவட்டத்தில் 3 வருவாய்க் கோட்டங்களும், 6 வட்டங்களும்,



2004 நவம்பர் 17]

25 உள் வட்டங்களும், 347 வருவாய்க் கிராமங்களும் கீழ்க்கண்டவாறு அமைந்துள்ளன:

உடையார்பாளையம் வருவாய்க் கோட்டத்திலுள்ள 2 வட்டங்களில், உடையார்பாளையம் வட்டமும் ஒன்றாகும். உடையார்பாளையம் வட்டத்தின் பரப்பு 942.69 சதுர கிலோ மீட்டராகும். இவ்வட்டத்தில் 97 வருவாய்க் கிராமங்களும், 7 உள் வட்டங்களும், 99 ஊராட்சிகளும் அமைந்துள்ளன. இவ்வட்டத்தில் ஜெயங்கொண்டான், ஜி. பழூர் மற்றும் ஆண்டிமடம் ஆகிய மூன்று ஊராட்சி ஒன்றியங்கள் அடங்கியுள்ளன. இவ்வூராட்சி ஒன்றியங்களில் அடங்கியுள்ள ஊராட்சிகளின் எண்ணிக்கை கீழ்வருமாறு:

ஜெயங்கொண்டானில் 36-ம், ஜி. பழூரில் 33-ம், ஆண்டிமடத்தில் 30-ம் அடங்கியுள்ளன. ஆண்டிமடம் என்ற ஊர் தற்போது உடையார்பாளையம் வட்டத்தில் அமைந்துள்ளது. ஆண்டிமடம் ஊராட்சி ஒன்றியத்தின் தலைமையிடமாகவும், ஆண்டிமடம் வருவாய் உள் வட்டத்தின் பிர்க்கா தலைமையிடமாகவும் அமைந்துள்ளது. ஆண்டிமடம் ஊராட்சி ஒன்றியத்தில் மொத்தம் 30 வருவாய்க் கிராமங்களும், 30 ஊராட்சிகளும் அடங்கியுள்ளன.

2001 ஆம் ஆண்டு மக்கள் தொகைக் கணக்கெடுப்பின்படி, உடையார்பாளையம் வட்டத்தின் மக்கள் தொகை 3,58,467 ஆகும். அரசாணை எண் 279, வருவாய்த் துறை, நாள் 9-6-2003-ன்படி ஒரு புதிய வட்டம் அமைக்க 30 கிராமங்கள், 1 இலட்சம் முதல் 5,50,000 மக்கள் தொகை மற்றும் இரண்டு அல்லது மூன்று ஊராட்சி ஒன்றியங்கள் முழுவதுமாக இருத்தல் வேண்டும். மேலும் 250 சதுர கிலோ மீட்டர் முதல் 2,000 சதுர கிலோ மீட்டர் வரை பரப்பு இருத்தல் வேண்டும் என வரையறைகள் நிர்ணயிக்கப்பட்டுள்ளன. தற்போது உடையார்பாளையம் வட்டத்தில் 3 ஊராட்சி ஒன்றியங்களே அமைந்துள்ளன. உடையார்பாளையம் வட்டத்தை இரண்டாகப் பிரித்து ஆண்டிமடத்தைத் தலைமையிடமாகக் கொண்ட புதிய வட்டத்தை அமைக்கும்போது, 2 ஊராட்சி ஒன்றியங்கள் முழுமையாக இதில் அமையக்கூடிய வாய்ப்புகள் இல்லை. எனவே, இக்கோரிக்கை மேற்படி அரசாணையில் நிர்ணயிக்கப்பட்ட வரையறைகளுக்கு உட்படவில்லை என்பதால் இதனை ஏற்க இயலாத சூழ்நிலை உள்ளது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் ஒரு நீண்ட விளக்கத்தைக் கொடுத்திருக்கிறார்கள். இப்போதுகூட தமிழ்நாடு முழுவதும் பார்ப்போம் என்று சொன்னால், ஒரே ஒன்றியம் ஒரு வட்டமாக இருக்கிற சூழ்நிலை இருந்து கொண்டிருக்கிறது. ஒன்றரை ஒன்றியங்கள் ஒரு வட்டமாக இருந்து கொண்டிருக்கிறது. அமைச்சர் சொல்கிற நேரத்தில் 250 சதுர கிலோ மீட்டரிலிருந்து 2,000 சதுர கிலோ மீட்டர் சுற்றளவு உள்ள பகுதியாக இருக்கவேண்டும் என்ற காரணங்களை எல்லாம் சொல்லியிருக்கிறார்கள். ஆனால், இந்த ஆண்டிமடம் தாலுக்கா, உடையார்பாளையத்திலிருந்து ஒரு பகுதியையும், செந்துறை வட்டத்திலிருந்து ஒரு பகுதியையும் எடுத்து அமைக்கும்போது ஒரு மிகப் பெரிய வட்டமாக, நிர்வாக வசதிக்கு நீங்கள் சொல்கிற அந்த இரண்டு ஒன்றியங்கள், இரண்டரை ஒன்றியங்கள் சேர்ந்து வருவதற்கு வாய்ப்பிருக்கிறது. மிகப்பெரிய பகுதி, பின்தங்கிய பகுதி. ஆகவே, இதை அரசு கவனத்திலே கொள்ளவேண்டும். கடந்த 2, 3 ஆண்டுகளுக்கு முன்புகூட, அரியலூர் மாவட்டத்தைத் தனியாகப் பிரித்ததை, மீண்டும் அந்தப் பகுதியிலே** இணைக்கப்பட்டது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஜி.கே. மணி, கேள்விக்கு தொடர்பில்லாததை எல்லாம் பேசக் கூடாது.

**திரு. ஜி.கே. மணி:** இல்லை, குற்றச்சாட்டாகச் சொல்லவில்லை. அப்படியெல்லாம்..

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** தாங்கள் பேசியது அவைக் குறிப்பிலிருந்து நீக்கப்படுகிறது. (குறுக்கீடு) சம்பந்தப்பட்ட கேள்வியோடு தொடர்புடையதாகக் கேளுங்கள்.

முற்பகல் 10-10

**திரு. ஜி.கே. மணி:** அமைச்சர் அவர்கள் சொன்ன விளக்கத்திலே ஒரு ஒன்றியம், ஒன்றரை ஒன்றியம் எல்லாம் இருக்கிறது. இப்போது அங்கே மூன்று ஒன்றியங்கள் இருக்கின்றன.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அதைச் சொல்லிக் கேளுங்கள்.

**திரு. ஜி.கே. மணி:** மூன்று ஒன்றியங்களைப் பிரிக்கலாம். ஆகவே, அதையெல்லாம் நீங்கள் கருத்திலே கொண்டு, பின்தங்கிய பகுதி, பரந்த பகுதி என்பதால் நிர்வாக வசதிக்காக அவசியம் இதைப்

**மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.



பிரிப்பது பொருத்தமாக இருக்கும். ஆகவே, இதையெல்லாம் கருத்திலே கொண்டு நிர்வாக வசதிக்காக, அரசு ஆவன செய்யுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தற்போது நாடாளுமன்றம் மற்றும் சட்டமன்றத் தொகுதிகளுக்கான எல்லைகளை வரையறுப்பதற்காக நியமிக்கப்பட்ட எல்லை வரையறை ஆணையம், 15—2—2004 அன்று, புதிய ஊராட்சிகள், பேரூராட்சிகள், நகராட்சிகள் மற்றும் வட்டங்கள் போன்ற நிர்வாக அலகுகளின் எல்லைகளை எவ்வகையிலும் திருத்தியமைக்கவோ, மாற்றியமைக்கவோ கூடாது எனவும், புதிய நிர்வாக அலகுகளை உருவாக்குதல், நிர்வாக அலகுகளை ஒருங்கிணைத்தல் போன்றவற்றிற்கு எல்லை வரையறைப் பணி முடியும்வரை தடை விதித்து ஆணை பிறப்பித்துள்ளது. ஆகவே, தற்போது இதை ஆய்வுக்கு எடுத்துக்கொள்ள முடியாது என்பதைத் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஜி. பழனிசாமி.

**திரு. ஜி. பழனிசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சில வட்டங்களைப் புதிதாகத் தொடங்குகிறபோது, நிர்வாகத்தினுடைய நலனைக் கருதியே அந்த வட்டங்கள் தொடங்கப்படுகின்றன. மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இங்கே குறிப்பிடுகிறபோது, ஒரு இலட்சத்திற்கும் மேற்பட்டு, இரண்டு இலட்சத்திற்குள் மக்கட் தொகை இருந்தால் போதும் என்றும் அதேபோன்று இரண்டு ஊராட்சி ஒன்றியங்கள் இருக்க வேண்டுமென்றும் சொல்கிறார்கள். ஆனால், மக்கட் தொகை அடிப்படையிலே, ஒரு ஊராட்சி ஒன்றியத்திற்கு உட்பட்ட பகுதியில் அவ்வளவு மக்கள் தொகை இருந்தால், அதைப் பிரிப்பதற்குண்டான சாத்தியக்கூறு உண்டா? அதேநேரத்தில், நம்முடைய தமிழ்நாட்டின் அவசியம் கருதி, நிர்வாகத்தினுடைய நலனைக் கருதி சில மாவட்டங்களை இன்றைக்குத் தொடங்கியிருக்கிறோம். போதுமான தகுதி இல்லாமலே தமிழநாட்டிலே பல மாவட்டங்கள் தொடங்கப்பட்டிருக்கின்றன. அதுபோன்று, சில இடங்களிலே வட்டங்களைப் பிரிக்கிறபோது, அந்த மக்கள், பல பணிகளுக்காக தாலுக்கா தலைநகரங்களுக்கும் மாவட்ட ஆட்சித் தலைவர் அலுவலகத்திற்கும் வருகிறபோது, சில சுற்றுப்பாதைகளில் வந்து, பல்வேறு சிரமங்களை அனுபவிக்கின்ற நிலைமை தமிழ்நாட்டிலே இருக்கிறது. அப்படிப்பட்ட வட்டங்களைப் பிரிப்பதற்கு அரசு

முன்வருமா? அதுபோன்று, தேர்தல் ஆணையத்திற்கும் தங்களது சிபாரிசை செய்வதற்கு ஒரு சட்டமுன்வடிவை நிறைவேற்றிட இந்த அரசு முன்வருமா என்பதைத் தங்கள் மூலமாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பெரிய மாவட்டங்களைக் கூடுதலான மாவட்டங்களாகவும், அதிகப்படியான நிர்வாக வசதிகள் இருக்கின்ற கோட்டங்களைக் கூடுதலான கோட்டங்களாகவும், அதேபோல, வட்டங்களையும் பிரிப்பது நடைமுறையில் நிர்வாக வசதிக்காக ஏற்படுத்தப்பட்ட ஒன்றுதான் என்றாலும், அதனுடைய பரப்பு, மக்கள் தொகை, உள்ளடக்கிய வருவாய்க் கிராமங்களின் எண்ணிக்கை ஆகிய குறைந்த அளவு norms—ஐ நாம் உருவாக்கியிருக்கிறோம். அந்த அடிப்படையில் இருக்கின்ற தகுதி வாய்ந்த வட்டங்களையும், கோட்டங்களையும், மாவட்டங்களையும் பிரிக்கின்ற ஓர் ஏற்பாட்டை அரசு எடுத்துக்கொள்கின்றது.

உதாரணத்திற்கு, ஒரு மாவட்டம் உருவாக்கப்பட வேண்டுமென்றால், குறைந்த அளவு 2,500 சதுர கிலோமீட்டர் முதல், அதிக அளவு 9,000 சதுர கிலோமீட்டர் வரை பரப்பளவு இருத்தல் வேண்டும். குறைந்த அளவு மக்கட்தொகை 10 இலட்சம் முதல் அதிக அளவு 30 இலட்சம் மக்கட்தொகை வரை இருக்க வேண்டும். அதேபோல, வருவாய்க் கிராமங்களின் எண்ணிக்கை குறைந்த அளவு 200 கிராமங்கள் இருக்க வேண்டும். அதை உள்ளடக்கிய வட்டங்கள், குறைந்த அளவு 5 வட்டங்கள் இருக்க வேண்டும். மாவட்டத்தில் உள்ளடக்கிய கோட்டங்கள், குறைந்த அளவு 2 கோட்டங்கள் இருக்க வேண்டும். அதைப்போல, கோட்டங்களை நாம் உருவாக்குகிறபோது, குறைந்த அளவு 1000 சதுர கிலோமீட்டர் முதல் அதிக அளவு 4,500 சதுர கிலோமீட்டர் வரை பரப்பளவு இருக்க வேண்டும். மக்கட்தொகை 4 இலட்சம் முதல், 15 இலட்சம் வரை ஒரு கோட்டத்தில் இருக்க வேண்டும். வருவாய்க் கிராமங்களின் எண்ணிக்கை 100 கிராமங்கள் இருக்க வேண்டும். வட்டங்களின் எண்ணிக்கை, குறைந்த அளவு 2 வட்டங்கள் இருக்க வேண்டும். அதைப்போல, நாம் வட்டங்களை உருவாக்கும்போது, இதற்கு முன் சொன்ன குறைந்த அளவு, அதனுடைய norms இருக்க வேண்டும் என்ற வரையறை இருக்கிறது. இதற்கும் குறைந்த அளவு இருந்தால், அங்கே நாம் அனுப்புகின்ற Committees ஆய்வு செய்து அவர்கள் சிபாரிசு செய்கின்றபட்சத்தில்



வட்டங்களையோ, கோட்டங்களையோ, மாவட்டங்களையோ உருவாக்குவதற்கு அரசு ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளும் என்பதைத் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. சி. சிவசாமி.

**திரு. சி. சிவசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழகத்திலே இருக்கின்ற மாவட்டங்களில் கோவை மாவட்டம் மிகப் பெரிய மாவட்டமாக இருக்கிறது. மாவட்டங்களைப் பிரிப்பதிலே மாண்புமிகு அமைச்சர் அவர்கள் தெரிவித்த கருத்துகளுக்கு ஏற்ப திருப்பூரைத் தலைநகராகக் கொண்டு, அருகிலே உள்ள சில தொகுதிகளையும் இணைத்து, ஈரோடு மாவட்டத்திலே இருக்கின்ற சில பகுதிகளையும் இணைத்து, ஒரு தனி மாவட்டம் அமைக்க மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முன்வருவார்களா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

முற்பகல் 10-15

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அரசு ஆய்வு செய்யும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. லா. சந்தானம்.

**திரு. லா. சந்தானம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சில பழமையான வட்டங்களுக்குப் போதிய கட்டட வசதியில்லாமலும் அங்கு செல்கின்ற பொதுமக்கள் எல்லாம் உரிய முறையிலே உரிய அதிகாரிகளை சந்திக்க முடியாத அளவிலும் பெருங்கூட்டமாக இருக்கின்ற ஒரு சூழ்நிலை இருக்கிறது. எங்களுடைய உசிலம்பட்டி தொகுதியைப் பொறுத்தளவில்கூட அது ஒரு நெடுஞ்சாலைப் பகுதியிலே இருக்கின்ற ஒரு சிறிய கட்டடத்திலே இயங்கிக் கொண்டிருக்கிறது. அங்கு மனு கொடுக்கின்ற மக்கள் எல்லாம் சாலையிலேதான் நிற்கின்ற ஒரு நிலை இருக்கிறது. அதனால் போக்குவரத்துகூட பாதிக்கின்ற ஒரு சூழ்நிலை இருக்கிறது. இப்படிப்பட்ட வட்டங்களுக்கு எல்லாம், பழமையான வட்டங்களுக்கு எல்லாம் புதிதாகக் கட்டடங்களை—இப்போது புதிதாக அமைக்கப்படுகின்ற வட்டங்களுக்கும்—உரிய நிலையிலே கட்டித் தருவதற்கு அரசு முன்வருமா என்பதைத் தங்கள் மூலம் தெரிந்துகொள்ள விரும்புகிறேன்.

[2004 நவம்பர் 17

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு இதய தெய்வம் தமிழக முதலமைச்சர் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய எண்ணம், அரசு அலுவலகங்கள் யாவும் சொந்தக் கட்டடங்களில் இயங்க வேண்டுமென்பதுதான். அந்த அடிப்படையில்தான் 206 வட்டங்கள் தமிழ்நாட்டில் இருக்கின்றன. 206 வட்டங்களில் 188 வட்டங்கள் சொந்தக் கட்டடங்களில் இயங்கிக் கொண்டிருக்கின்றன. மீதம் உள்ள 18 வட்டங்களுக்குண்டான சொந்தக் கட்டடம் படிப் படியாக அரசினுடைய நிதிநிலைமைக்கு ஏற்ப கட்டிக் கொடுக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. வை. சிவபுண்ணியம்.

**திரு. வை. சிவபுண்ணியம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வட்டங்களைப் பிரிப்பதற்கான அளவுகளைப் பற்றி நமது மாண்புமிகு அமைச்சரவர்கள் இங்கே விரிவாக எடுத்துச் சொன்னார்கள். குறிப்பாக அந்த வரையறைக்குள் வரமுடியவில்லை என்கின்ற காரணத்தினாலே வட்டங்களைப் பிரிப்பதைத் தாமதப்படுத்தக்கூடாது என்பது என்னுடைய கருத்து. என்னுடைய மன்னார்குடி தொகுதிக்குட்பட்ட பகுதியிலே 25 ஊராட்சிகளுக்கு மேற்பட்ட கிராமங்கள் பக்கத்திலே இருக்கின்ற நீடாமங்கலம் வட்டத்திலே செயல்பட்டுக் கொண்டிருக்கின்றன. ஆனால் எல்லா வசதிகளுக்குமே மன்னார்குடிதான் அவர்களுக்குப் பொருத்தமாக இருந்தது. ஏற்கெனவே, மன்னார்குடி வட்டத்திலே இருந்தது. இப்போது அவர்கள் மூன்று இடங்களுக்கு மூன்று பேருந்துகள் மாறி செல்லவேண்டிய அவசியத்திற்கு ஆட்படுகிறார்கள். அதேபோல கோட்டூர் ஒன்றியத்திலே ஒரு பகுதி அதுமாதிரியான ஒரு சூழ்நிலைக்கு ஆட்படுகிறது. இப்படி நிர்வாக சிக்கல்களைக் காரணங்காட்டி போக்குவரத்தினால் மக்களுக்குப் பாதிப்பை ஏற்படுத்துகிற சிரமமான காரியங்களுக்கு உட்படுத்தப்பட்டிருக்கிற அந்தப் பகுதிகளை நிர்வாகக் காரணங்களைக் கூறாமல் வசதிகளுக்கான காரணங்களைக் கண்டறிந்து இப்படிப்பட்ட வட்டங்களை உருவாக்குவதற்கான முயற்சிகள் மேற்கொள்ளப்படுமா என்பதையும் அதேபோல இந்தத் தமிழகத்தில் புதிய வட்டங்களை உருவாக்குவதற்கான முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டிருக்கின்றனவா என்பதையும் அறிய விரும்புகிறேன்.



2004 நவம்பர் 17]

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** ஏற்கெனவே, அமைச்சர் பதில் சொல்லி இருக்கிறார்; தேர்தல் கமிஷனிலே தடையிருக்கிறது என்று பதில் சொல்லியிருக்கிறார்கள். மாண்புமிகு அமைச்சரவர்கள்.

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஏற்கெனவே மாண்புமிகு உறுப்பினர் ஜி.கே. மணி அவர்களும் இந்த வினாவை எழுப்பியிருந்தார்கள். புதிய வட்டங்கள் உருவாவதற்கு குறைந்த அளவு அளவுகோல்களை அரசு நிர்ணயம் செய்திருந்தாலும் மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் அதிக தூரம் அந்த நிர்வாக அலுவலகங்களுக்குச் சென்று வருவதில் மக்களுக்கு உள்ள இடர்ப்பாடுகளைக் கூறியிருக்கின்றார்கள். ஆகவே, தனிப்பட்ட முறையில் அவர்கள் எந்த எந்த வட்டங்களை உருவாக்க வேண்டுமென்று அரசினுடைய கவனத்திற்குக் கொண்டுவந்தால், வருவாய்த் துறை மூலம் குழு அமைத்து, அவற்றினுடைய சாத்தியக்கூறுகளை ஆராய்ந்து, சாத்தியக்கூறுகள் நயம்பயக்கக்கூடிய வகையில் இருந்தால் அரசு ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளும் என்பதைத் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. கா. கந்தசாமி.

**திரு. கா. கந்தசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பிற மாவட்டங்களில் இரண்டு தாலுகாக்களுக்கு ஒரு உட்கோட்டம் இருக்கிறது. ஆனால் நீலகிரி மாவட்டம் குன்னூர் உட்கோட்டத்தில் குந்தா, ஊட்டி, குன்னூர், கோத்தகிரி ஆகிய நான்கு தாலுகாக்கள் இருக்கின்றன. அமைச்சரவர்கள் தாலுகாக்களைப் பிரிப்பதில் தேர்தல் கமிஷன் தடை விதித்துள்ளது என்று சொல்கிறார்கள். இப்போது முடியாவிட்டாலும், பிற்காலத்தில் ஊட்டி தாலுகாவையும், குந்தா தாலுகாவையும் இணைத்து ஊட்டியில் ஒரு உட்கோட்டம் அமைக்க அரசு முன்வருமா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினரவர்களுடைய கோரிக்கை தேர்தல் ஆணையத்தினுடைய தடை விலக்கப்பட்ட பின்பு ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 3, திரு. பி.கே. சேகர்பாபு, மாண்புமிகு சட்டம் மற்றும் தகவல் தொழில்நுட்பவியல் துறை அமைச்சர்.

3—

[2004 நவம்பர் 17

## குற்றவியல் மருத்துவப் படிப்பு

***47955—திரு. பி.கே. சேகர்பாபு:**

மாண்புமிகு சட்டம் மற்றும் தகவல் தொழில்நுட்பவியல் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

சட்டம் பயிலுகிறவர்கள் குற்றவியல் மருத்துவப் படிப்பு பற்றியும் படிக்க வேண்டும் என்ற பழைய நடைமுறையை மீண்டும் அமல்படுத்த அரசு நடவடிக்கை மேற்கொள்ளுமா?

**மாண்புமிகு திரு. டி. ஜெயக்குமார், சட்டம் மற்றும் தகவல் தொழில்நுட்பவியல் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சட்டம் பயிலுகிறவர்கள் குற்றவியல் மருத்துவப் படிப்பு (Medical Jurisprudence) பற்றியும் படிக்க வேண்டும் என்ற நடைமுறை இதுவரையில் சென்னை பல்கலைக்கழகத்திலோ அல்லது தமிழ்நாடு டாக்டர் அம்பேத்கர் சட்டப் பல்கலைக்கழகத்திலோ இல்லை. எனவே, பழைய நடைமுறையை மீண்டும் அமல்படுத்தும் வினா எழவில்லை.

முற்பகல் 10-20

**திரு. பி.கே. சேகர்பாபு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 1968—1969 ஆம் ஆண்டுகளில் தமிழகத்தில் சட்டம் படித்த வழக்குரைஞர்கள், குற்றவியல் மருத்துவப் பட்டமும் பெற, பட்டப் படிப்பு இருந்ததை, மீண்டும் கொண்டுவர வேண்டுமென்று வலியுறுத்துகின்ற அதேநேரத்தில், குற்றவியல் வழக்குகளில் வாதாடும்போது, போதிய மருத்துவப் படிப்பு இன்மையால், நிரபராதிகள் சில நேரங்களில் தண்டிக்கப்படுகின்ற சூழ்நிலை ஏற்படுகிறது. ஐந்தாண்டுகள் பயிலுகின்ற இந்த சட்டப் படிப்பில், சமூகவியல், அரசியல், அறிவியல் மற்றும் வரலாறு ஆகிய பாடங்கள், முதல் இரண்டாண்டுகளுக்குக் கட்டாயப் பாடமாக அறிவிக்கப்பட்டு, நடைமுறையில் உள்ளது. அதைப்போலவே, இந்தக் குற்றவியல் மருத்துவப் படிப்பும் முதல் இரண்டாண்டுகளாவது கட்டாயப் படிப்பாக மாற்றுவதற்கு அரசு நடவடிக்கை எடுக்குமா என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் வாயிலாக அறிய விரும்புகிறேன்.



2004 நவம்பர் 17]

**மாண்புமிகு திரு. டி. ஜெயக்குமார்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்திய வழக்குரைர்கள் மன்றத்தின் திருத்தப்பட்ட மூன்றாண்டுகள் மற்றும் ஐந்தாண்டுகளுக்கான பாடத் திட்டத்திலும் இப்பாடம் குறிப்பிடப்படவில்லை. எனினும், தமிழ்நாடு டாக்டர் அம்பேத்கர் சட்டப் பல்கலைக்கழகத்தின் இளங் கலைக்கான பாடத் திட்டக் குழுவின் — Under Graduate Board of Studies—கூட்டத்தில், குற்றவியல் மருத்துவப் படிப்புத் தொடர்புடைய மருத்துவச் சட்டவியல் மற்றும் நஞ்சியல் — Medical Jurisprudence and Toxicology — பாடத் திட்டத்தினையும், மூன்றாண்டுகள், ஐந்தாண்டுகள் மற்றும் B.A., B.L., (Hons.)—சட்டப் படிப்பிற்கான, விருப்பப் பாடத்தை — optional subject- ஒரு விருப்பப் பாடமாகச் சேர்ப்பதற்குத் தமிழ்நாடு டாக்டர் அம்பேத்கர் சட்டப் பல்கலைக்கழகத்தின் ஆட்சிக் குழுவிற்குப் பரிந்துரைக்கப்பட்டுள்ளது. எனவே, கட்டாயப் பாடமாக, இதனை நாம் சேர்க்க வேண்டிய அவசியம் இல்லை. மேலும் 23 பாடங்கள், அதாவது, —Indian Penal Code— இந்தியத் தண்டனைச் சட்டம், Cr.P.C.— குற்றவியல் நடைமுறைச் சட்டம் —The Law of Evidence— சாட்சியச் சட்டம், அதேபோன்று 23 சட்டப் பாடங்கள், 3 ஆண்டு, 5 ஆண்டு மற்றும் B.A., B.L. (Hons.) படிப்பிற்கான பாடத் திட்டத்திலே கட்டாயமாக்கப்பட்டிருக்கின்றன. விருப்பப் பாடமாக —Insurance Law, Criminology and Penology, Intellectual Property Law, Law relating to Women and Children—அதாவது காப்பீட்டுச் சட்டங்கள், குற்றவியல் மற்றும் தண்டனையியல் சட்டங்கள், அறிவியல் சார்ந்த சொத்துரிமைச் சட்டம் மற்றும் பெண்கள், குழந்தைகளுக்கான சட்டங்கள் போன்று, இதை ஒரு விருப்பப் பாடமாக மாணவர்கள் படிக்கலாம். எனவே, இதை அடுத்த கல்வியாண்டிலேயிருந்து அமல்படுத்துவதற்கு, அதாவது விருப்பப் பாடமாக அமல்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. பால் மனோஜ் பாண்டியன்.

**திரு. பி.எச். பால் மனோஜ் பாண்டியன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, குற்றவியல் மருத்துவப் படிப்பில், கை ரேகை மற்றும் தடயங்களை அளப்பது என்பது முக்கியமான ஒன்று. குற்ற வழக்குகளில், காவல் துறையினர், கை ரேகை மற்றும் தடயங்களை அளப்பதற்கு—Identification of Prisoners Act 1920— என்ற சட்டம் ஒன்று இருக்கிறது. அதில், சட்டப் பிரிவு 4 மற்றும் 8-ன்படி, அதற்கான வரைமுறை —prescribed manner— நிர்ணயிக்க, சட்ட

[2004 நவம்பர் 17

விதிகளை மாநில அரசு அமல்படுத்த வேண்டுமென்று குறிப்பிடப்பட்டிருக்கிறது. இது சம்பந்தமாக, உயர் நீதிமன்றம்கூட ஒரு தீர்ப்பைக் கூறியிருக்கிறது. ஆகவே, சிறப்பு நிபுணர்கள் — experts— செய்யும் இந்த அளவு, போலீசார் — காவல் துறையினர் — எடுக்கும்போது, அந்தவொரு விதியைப் பயன்படுத்தி விடுதலையைப் பெறுகிறார்கள். ஆகவே, காவல் துறையினர், தடயங்களை அளப்பதற்கு Identification of Prisoners Act-ன்படி, மாநில அரசு, சட்ட விதிகளை உருவாக்குவதற்கு உடனடி நடவடிக்கை எடுக்குமா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. டி. ஜெயக்குமார்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. பி.கே. சேகர்பாபு எழுப்பிய வினா, பாடத் திட்டத்திற்குட்பட்டது. மாண்புமிகு உறுப்பினர் திரு. மனோஜ் பாண்டியன் அவர்கள் எழுப்பிய வினா, சட்டத் திருத்தத்திற்குட்பட்டது. எனவே, Forensic Science என்பது ஒரு important and vital role என்பது நிச்சயமாக யாராலும் மறுக்க முடியாத ஒன்று. எனவே, மாண்புமிகு உறுப்பினர் திரு. மனோஜ் பாண்டியன் அவர்களுடைய கருத்துரு அரசால் பரிசீலிக்கப்பட்டு, உண்மையிலேயே அவர் கூறுவதுபோன்று, அந்த issues-ல் சிரமங்கள் இருக்குமானால் அரசு சட்டத் திருத்தம் செய்வதற்குக்கூட தயாராக இருக்கிறது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 4, திரு. நா. சந்திரமோகன், மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர்.

4—

## கோயில்களைப் புதுப்பித்தல்

***48862— திரு. நா. சந்திரமோகன்:**

மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா —

(அ) சீர்காழி தொகுதியிலுள்ள இந்து சமய அறநிலையத் துறைக்குச் சொந்தமான வருமானம் இல்லாத கோயில்களைப் புதுப்பிக்கும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், எப்போது?



2004 நவம்பர் 17]

**மாண்புமிகு திரு. பி.சி. ராமசாமி, இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, (அ) சீர்காழி தொகுதியிலுள்ள இந்து சமய அறநிலைய ஆட்சித் துறைக்குச் சொந்தமான வருமானம் இல்லாத கோயில்களைப் புதுப்பிக்கும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளது. (ஆ) சீர்காழி தொகுதியில் இந்து சமய அறநிலைய ஆட்சித் துறையின்கீழ் உள்ள வருமானமில்லாத திருக்கோயில்களைத் திருப்பணி செய்ய உபயதாரர்கள் முன்வரும்போது, உரிய அனுமதியும், கிராமப்புற திருப்பணி நிதியுதவித் திட்டத்தின்கீழ் ஒவ்வொரு நிதியாண்டிலும் நிதி வழங்கப்படும்போது, திருப்பணி செய்யப்பட்டு குடமுழுக்கு செய்யப்படுகிறது என்பதைத் தங்கள் மூலம் தெரிவித்துக்கொள்கிறேன்.

முற்பகல் 10-25

**திரு. நா. சந்திரமோகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு தமிழக முதலமைச்சர் இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களை வணங்குகிறேன். மாண்புமிகு அமைச்சர் அவர்களுடைய பதிலுரைக்கு எனது நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். மேலும் சீர்காழி தொகுதியைப் பொறுத்தளவிலே இந்து சமய அறநிலைய ஆட்சித் துறையின் கட்டுப்பாட்டில் வருமானம் அல்லாத திருக்கோயில்கள் 214 உள்ளன. குறிப்பாக செம்பாம்பன்குடி என்கின்ற செம்மங்குடி கிராமத்தில் ஒரு கேது பகவான் கோயில் உள்ளது. முன்னொரு காலத்தில் தேவர்களும், அசுரர்களும், திருப்பாற்கடலைக் கடைந்தபோது தோன்றிய அமிர்தத்தை ஸ்ரீ மகாவிஷ்ணு மோகினி அவதாரத்துடன் வழங்கினார். அப்போது சயிங்கிகேயன் என்னும் அசுரன் தேவர்களுடன் கலந்து அமிர்தம் பெற்று உண்டான். அதனை சூரிய, சந்திரர்கள் மூலம் அறிந்த விஷ்ணு சட்டுவத்தால் அவ்வசுரனைத் தண்டிக்க, உடல் இருகூறானது. சிரம் விழுந்த பகுதி, சிரபுரம் எனவும்...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. சந்திரமோக பாகவதர், கேள்விக்கு வாருங்கள். (சிரிப்பு)

**திரு. நா. சந்திரமோகன்:** பேரவைத் தலைவர் அவர்களே, கேது பகவான் கோயில் என்பது முக்கியமான கோயில். அதனால்தான் இதுகுறித்து கேள்வியைக் கேட்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** சரி, சொல்லுங்கள்.

[2004 நவம்பர் 17

**திரு. நா. சந்திரமோகன்:** உடல் விழுந்த இடம் கேதுபுரம் என்கிற செம்பாம்பன்குடி எனவும் அழைக்கப்பட்டது. இப்படி வரலாற்றுச் சிறப்புமிக்க இத்திருக்கோயில் மிகவும் பழுதடைந்து இடிந்த நிலையில் உள்ளது. இத்திருக்கோயிலைப் புதுப்பித்து குடமுழுக்கு செய்யவும், மேலும் சீர்காழி தொகுதியில் உள்ள நலிவடைந்த 214 திருக்கோயில்களுக்கு இலவச மின்சாரம் வழங்கிடவும் அரசு முன்வருமா என மாண்புமிகு பேரவைத் தலைவர் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. பி.சி. ராமசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சீர்காழி தொகுதியிலுள்ள இந்து சமய அறநிலைய ஆட்சித் துறைக்குச் சொந்தமான வருமானம் அல்லாதவை என வகைப்படுத்தப்பட்ட திருக்கோயில்கள் 214 என்று சொன்னார்கள், ஆனால் 264 உள்ளன. அவற்றில் கீழ்க்கண்ட இரண்டு திருக்கோயில்களில் உபயதாரர்கள் மூலம் திருப்பணி செய்யப்பட்டு குடமுழுக்கு செய்யப்பட்டது. அருள்மிகு வாம்புலியம்மன் திருக்கோயில், மங்கைமடம், அருள்மிகு கோதண்டராமர் திருக்கோயில், தாடலங்கோயில்; இவைத்தவிர நெம்மேலி அருள்மிகு விஸ்வநாதசுவாமி திருக்கோயிலில் உபயதாரர்கள் மூலம் திருப்பணி நடைபெற்று வருகிறது. மேலும் இந்து சமய அறநிலைய ஆட்சித் துறையின் கட்டுப்பாட்டில் உள்ள வருமானம் அல்லாத திருக்கோயில்களுக்கு கிராமப்புற திருப்பணி நிதியுதவித் திட்டத்தின்கீழ் தலா ரூ.25,000 நிதியுதவி வழங்கப்பட்டு குடமுழுக்கு செய்யப்படுகிறது. இத்திட்டத்தின்கீழ் இரண்டு திருக்கோயில்களில் திருப்பணி முடிக்கப்பட்டுள்ளது. மேலும் 5 திருக்கோயில்களில் திருப்பணி வேலைகள் நடைபெற்று வருகின்றன. அண்மையில் மாண்புமிகு தமிழக முதலமைச்சர் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் பிறப்பித்த ஆணைக்கிணங்க ஆதிதிராவிடர் பகுதியிலுள்ள 6,000 திருக்கோயில்களில் திருப்பணித் திட்டம் மேற்கொள்ளப்பட்டது. இந்தத் திட்டத்தின்கீழ் சீர்காழி தொகுதியில், 33 திருக்கோயில்கள் தேர்வு செய்யப்பட்டு பணிகள் நடைபெற்று வருகின்றன என்பதைத் தங்கள்மூலம் தெரிவித்துக்கொள்கிறேன். அதுமட்டுமல்லாமல் அவர்கள் கேட்டுக்கொண்ட கோயில்களுக்கு திருப்பணி Committee—கள் அமைக்கப்பட்டு, அவர்கள் அதற்கு முன்வருவார்களேயானால், அறநிலையத் துறை மூலமாக ஒரு நிதியும் கொடுக்கப்பட்டு உடனடியாக அந்தப் பணிகள் தொடங்கப்படும் என்பதைத் தங்கள் மூலம் தெரிவித்துக்கொள்கிறேன்.



2004 நவம்பர் 17]

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. நா. சந்திரமோகன்.

**திரு. நா. சந்திரமோகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழக முதலமைச்சர் அவர்களுக்கும், அமைச்சர் அவர்களுக்கும் எனது தொகுதியின் சார்பாக நன்றிகலந்த வணக்கத்தைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. பி.ஆர். சுந்தரம்.

**திரு. பி.ஆர். சுந்தரம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழக முதலமைச்சர் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் தமிழ்நாட்டிலே உள்ள 6,000 ஆதிதிராவிடர் திருக்கோயில்களுக்கு, ஒரு கோயிலுக்கு ரூ.25,000 என்ற வீதத்திலே இந்தத் திருப்பணிகளைச் செய்வதற்கு உத்தரவிட்டிருக்கிறார்கள். அந்தத் திட்டத்தை ஆன்றோர்களும், சான்றோர்களும் பாராட்டிக் கொண்டிருக்கிறார்கள். அதிலே இன்னும் பல ஆதிதிராவிடர் கோயில்களின்--எங்களுக்கு அந்தத் தொகை வேண்டும் என்று பல கோயில்களுக்கு--பட்டியல் கொடுத்திருக்கிறார்கள். அதிலே என்னுடைய ராசிபுரம் சட்டமன்றத் தொகுதியிலே பல ஆதிதிராவிடர் கோயில்களுக்கு மேலும் 25,000 ரூபாய் வேண்டுமென்று அமைச்சர் அவர்களிடம் கேட்டிருக்கிறோம். ஆகவே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அம்மா அவர்களிடம் எடுத்துக்கூறி மேலும் அந்தத் திருக்கோயில்களுக்கு 25,000 ரூபாய் கொடுப்பதற்கு நடவடிக்கை எடுப்பார்களா என அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. பி.சி. ராமசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நம்முடைய இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் தமிழகத்தில் உள்ள வறுமைக்கோட்டிற்குக் கீழே வாழ்ந்து கொண்டிருக்கிற ஆதிதிராவிடப் பெருமக்களுடைய ஆலயங்கள் அனைத்திலும் திருப்பணிகள் செய்ய வேண்டுமென எண்ணியிருக்கிறார்கள். கூடியவிரைவில் தங்கள் கோரிக்கைகளை நிறைவேற்றுவதற்கு அம்மா அவர்கள் நடவடிக்கை எடுப்பார்கள் என்பதைத் தங்கள் மூலம் தெரிவித்துக்கொள்கிறேன்.

முற்பகல் 10-30

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஆ.கு.சி. அன்பழகன்.

**திரு. ஆ.கு.சீ. அன்பழகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சோழர்களுடைய பொற்கால ஆட்சிக்கு இணையாக தமிழகத்திலே, டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய அரசு பல நல்ல திட்டங்களை— திருக்கோயில்களைப் புனரமைப்பதும், அன்னதான திட்டங்களையும் அளித்து--சிறப்புற செய்து கொண்டு இருக்கிறார்கள். அதுபோல ஆதிதிராவிட மக்களுடைய கோவில்களுக்கு ரூ.25,000/- நிதி ஒதுக்கீடு செய்து இருக்கிறார்கள். அதுபோல கிராமக் கோயில்களுக்கு நிதி ஒதுக்கீடுகளைச் செய்ய இயலுமா என அமைச்சர் அவர்கள் மூலம் அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. பி.சி. ராமசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கிராமப்புற கோயில்களுக்கும் கூடிய விரைவில் ஆங்காங்கே பக்கத்தில் இருக்கிற ஆலயங்களில் இருக்கின்ற நிதியின் மூலமாக, நலிவுற்று இருக்கிற கோயில்களை திருப்பணி செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது என்பதைத் தங்கள் மூலம் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. டி. சுதர்சனம்.

**திரு. டி. சுதர்சனம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழகத்திலே பல இலட்சம் கோயில்கள், கிராமக் கோயில்கள் இருக்கின்றன. அந்தக் கோயில்களிலே கும்பாபிஷேகம் செய்வதற்கு அதிகமான வருவாய் உள்ள, உபரியாக வருவாய் உள்ள, கோயில்களின் நிதியைப் பெற்று, அந்த அந்தக் கோயில்களுக்கு உபரி வருமானத்திலே இருந்து, எவ்வளவு செலவாகிறதோ அதிலே 50 சதவிகிதத்தை அரசும்— மீதியை அந்தக் கோயில் உபரி நிதியிலிருந்து செலவழிக்க அரசு முன் வருமா? அதேபோன்று எங்கே பார்த்தாலும் திடீர் திடீரென்று நடைபாதைகளில்கூட கோயில்களைக் கட்டிக்கொள்கிறார்கள். அதற்குப் பின்னர் அதை எடுக்க வேண்டும் என்று சொன்னால் போராட்டங்கள் எல்லாம் நடத்துகிறார்கள். அதற்கு ஏதாவது வழிமுறை காண அரசு என்ன திட்டம் வைத்திருக்கிறது என அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. பி.சி. ராமசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இதுவரையிலும் வழிப்பாதையில் கோயில்கள் இருப்பதாகத் தெரியவில்லை. ஆண்டுதோறும் இருந்துகொண்டு இருக்கிற ஆலயங்கள்தான் இருந்துகொண்டு இருக்கின்றன. புதிதாக எந்த ஆலயங்களும் வழிப்பாதையில் தோன்றவில்லை. இருந்தாலும் மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் ஆட்சிப் பொறுப்பு



ஏற்றதற்குப் பிறகுதான் தமிழகத்தில் இதுவரையில் 3,500 ஆலயங்களில் திருப்பணி செய்து குடமுழுக்கு நடைபெற்று இருக்கின்றன. இன்னும் நாங்கள் சொல்லக்கூடிய அந்த ஆலயங்கள் எல்லாம் தேர்வு செய்யப்பட்டு, எந்த எந்த ஆலயங்கள் 12 ஆண்டுகளுக்கு ஒரு முறை திருப்பணி செய்யப்படாமல் இருக்கின்றனவோ, அவை எல்லாம் தேர்வு செய்யப்பட்டு நிதி ஆதாரம் உள்ள ஆலயங்களில் இருந்து நிதியைப் பெற்று, அங்கு இருக்கக்கூடிய பக்தகோடி மக்களுடைய நிதியைப் பெற்று, பல்வேறு ஆலயங்களில் திருப்பணி தொடங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என்பதைத் தங்கள் மூலம் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. சி. ஞானசேகரன்.

**திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, என்னுடைய மாவட்டத்திலே சோளிங்கரில் இருக்கக்கூடிய ஸ்ரீ லஷ்மி நரசிம்ம ஸ்வாமி கோயில்...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** தனிக் கேள்வி போடவும்.

*வினா எண் 5, திரு. க.ரா. கந்தசாமி, மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்.*

**5—**

## நடமாடும் மருத்துவமனை

**•31447—திரு. க.ரா. கந்தசாமி:**

*மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

*(அ) சத்தியமங்கலம் வட்டம், தாளவாடி ஒன்றியத்தில் நடமாடும் மருத்துவமனை மருத்துவர் குழுவுடன் அமைக்கப்படுமா?*

*(ஆ) ஆம் எனில், எப்போது?*

**மாண்புமிகு திரு. ந. தளவாய் சுந்தரம், மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, (அ) மற்றும் (ஆ) சத்தியமங்கலம் வட்டம், தாளவாடி ஒன்றியத்திலே நடமாடும் மருத்துவமனை மருத்துவர் குழுவுடன் அமைக்கப்பட்டு செயல்பட்டு வருகிறது.

[2004 நவம்பர் 17

**திரு. க.ரா. கந்தசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'தட்டுங்கள் திறக்கப்படும், கேளுங்கள் கொடுக்கப்படும்' என்று இயேசு சொன்னார். ஆனால் தட்டாமலும் கேட்காமலும் கொடுக்கக்கூடியவர் இந்தியத் திருநாட்டின் மனித நேயம் மிக்க முதல்வர் இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள்தான். கேட்டது ஒன்றாக இருந்தாலும், இரண்டு நடமாடும் ஊர்திகளை மருத்துவக் குழுவில் அனுமதித்து, சத்தியமங்கலம் ஊராட்சி ஒன்றிய மலைப் பகுதிக்கும், தாளவாடி ஊராட்சி ஒன்றிய மலைப் பகுதிக்கும் வழங்கியதற்காக மாண்புமிகு தமிழக முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய பொற்பாதங்களுக்கு, அம்மலைவாழ் மக்களின் சார்பாக மனமார்ந்த நன்றியை காணிக்கையாக்கி அமர்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. டி. மணி.

**திரு. டி. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தப் பிரச்சினை மாநிலம் பூராவிலும் இருக்கிற ஒரு பிரச்சினை என்கிற காரணத்தினால், இதுபோன்ற மலைவாழ் மக்கள் வாழ்கின்ற பிற பகுதிகளிலும், குறிப்பாக, கன்னியாகுமரி மாவட்டத்திலுடைய மலைப் பிரதேசப் பகுதிகளில் இந்த நடமாடும் மருந்தகம் அமைக்க அரசு நடவடிக்கை எடுக்குமா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ந. தளவாய் சுந்தரம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் பொறுப்பு ஏற்றவுடனே 2001-லே இருந்து இதுவரை கிட்டத்தட்ட 45 நடமாடும் மருத்துவக் குழுக்கள் செயல்பட்டுக் கொண்டு இருக்கின்றன. ஆண்டு ஒன்றுக்கு கிட்டத்தட்ட 2 1/4 இலட்சம் ரூபாய் மருந்துகள், மாத்திரைகள் இலவசமாகக் கொடுக்கப்படுகின்றன. அதுமட்டுமல்லாமல், அந்த ஊர்திக்கு ஒரு இலட்சம் ரூபாய் செலவில் டீசல் போடப்பட்டிருக்கிறது. கன்னியாகுமரி மாவட்டத்தை எடுத்துக் கொண்டால் இருக்கக்கூடிய பகுதிகளிலே குறைந்த இடங்களில்தான் மலைவாழ் மக்கள் இருக்கிறார்கள். நீங்கள் குறிப்பிட்ட இடம் எது என்று சொல்லுங்கள். அதற்குத் தக்க பதில் கண்டிப்பாக அளிக்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 6, திரு. கா.தி. இளையகண்ணு, மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்.



2004 நவம்பர் 17]

**6—**

## ஆரம்ப சுகாதார நிலையம்

**•48696—திரு. கா.தி. இளையகண்ணு:**

மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சேலம் மாவட்டம், வீராணம் ஊராட்சியில் ஆரம்ப சுகாதார நிலையம் அமைக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**மாண்புமிகு திரு. ந. தளவாய் சுந்தரம், மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, (அ) மற்றும் (ஆ) சேலம் மாவட்டம், அயோத்தியாப்பட்டிணம் ஊராட்சி ஒன்றியம், வீராணம் கிராமத்தில் புதிய அரசு ஆரம்ப சுகாதார நிலையம் அமைக்கும் திட்டம் ஏதும் இல்லை.

*முற்பகல் 10-35*

**திரு. கா.தி. இளையகண்ணு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சேலம் மாவட்டம், அயோத்தியாப்பட்டிணம் ஊராட்சி ஒன்றியம், வீராணம் ஊராட்சியில் உள்ள துணை சுகாதார நிலையத்தை ஆரம்ப சுகாதார நிலையமாக நிலை உயர்த்திவிட்டால் இதில் உள்ள சுமார் 8 ஊராட்சிகள் பயனடையும். உதாரணமாக எம். பாலப்பட்டி, கோராத்துப்பட்டி, பளையகாரனூர், சின்னனூர், தைலானூர், தாசநாயக்கன்பட்டி, டி. பிரம்மாபாளையம் மற்றும் வீராணம் பகுதிகளில் உள்ள ஆதிதிராவிடர் பகுதிகள் பயனடைகின்றன. இந்த 8 ஊராட்சிகளிலும் சுமார் 40 ஆயிரம் மக்கள் தொகை உள்ளது. எனவே மாண்புமிகு இதய தெய்வம் தமிழக முதல்வர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் பொற்கால ஆட்சியில் இந்தத் துணை சுகாதார நிலையத்தை ஆரம்ப சுகாதார நிலையமாக இந்த ஆண்டு இல்லாவிட்டாலும் அடுத்த ஆண்டிலாவது அமைத்துக் கொடுக்க ஆவன செய்வார்களா என்று மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் மூலமாக மாண்புமிகு அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன்.

[2004 நவம்பர் 17

**மாண்புமிகு திரு. ந. தளவாய் சுந்தரம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாட்டைப் பொறுத்தவரையில் கிட்டத்தட்ட 1,415 அரசு ஆரம்ப சுகாதார நிலையங்கள் இருக்கின்றன. ஓர் அரசு ஆரம்ப சுகாதார நிலையம் வரவேண்டுமென்றால் அங்கு குறைந்தது 30 ஆயிரம் மக்கள் தொகை இருக்கவேண்டும். இந்தக் கிராமத்தைப் பொறுத்தவரையில் அங்கு இருக்கக்கூடிய மக்கள் தொகை 2,756. அதுமட்டுமல்லாமல், குறைந்தது 4 கி.மீ. சுற்றளவிலே அரசு ஆரம்ப சுகாதார நிலையங்கள் இருந்தால் கொடுக்க முடியாத ஒரு சூழ்நிலை இருக்கிறது. மத்திய அரசின் வரையறைபடி நமது மாநிலத்திலே கிட்டத்தட்ட 1,173 அரசு ஆரம்ப சுகாதார நிலையங்கள்தான் இருக்க வேண்டும். இருந்தபோதிலும் மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் எடுத்த பல்வேறு நடவடிக்கைகள் காரணமாக கிட்டத்தட்ட 1,415 அரசு ஆரம்ப சுகாதார நிலையங்கள் இப்போது இயங்கிக் கொண்டிருக்கின்றன. 1,415 அரசு ஆரம்ப சுகாதார நிலையங்கள் இருந்தாலும் மாண்புமிகு உறுப்பினருடைய கோரிக்கை குறித்து அந்த இடத்திற்கு ஏற்றாற்போல் சாத்தியக்கூறு இருக்குமானால் அதற்கும் அரசின் மூலம் நடவடிக்கை எடுக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**திரு. கா.தி. இளையகண்ணு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இங்கே அமைத்துக் கொடுக்கப்படும் என்று வாக்குறுதி கொடுத்த மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்களுக்கு நன்றி கூறி விடைபெறுகிறேன். நன்றி, வணக்கம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. கு. பிச்சாண்டி.

**திரு. கு. பிச்சாண்டி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆரம்ப சுகாதார நிலையங்களில் நியமிக்கப்பட்ட சித்த மருத்துவர்களுக்கு ஓராண்டு காலமாக சம்பளம் வழங்கப்படவில்லை என்பதை அரசு அறியுமா? சம்பளம் வழங்க அரசு ஆவன செய்யுமா என அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ந. தளவாய் சுந்தரம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இதுபோன்ற குறைகள் இதுவரையிலும் எங்களுடைய கவனத்திற்கு வரவில்லை. இருந்தபோதிலும் நீங்கள் கூறியது தொடர்பாக உடனடியாக நடவடிக்கை எடுக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.



2004 நவம்பர் 17]

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 7, திரு. ஏ.கே. செல்வராஜ், மாண்புமிகு ஆதிதிராவிடர் நலத் துறை அமைச்சர்.

7—

## சாலை அமைத்தல்

***19512—திரு. ஏ.கே. செல்வராஜ்:**

மாண்புமிகு ஆதிதிராவிடர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

மேட்டுப்பாளையம் தொகுதி, மலைவாழ் மக்கள் இருளர் வகுப்பினர் வசிக்கும் தோலம்பாளையம் முதல் கோபனேரி வரை சாலை அமைக்கும் பணி நடப்பு ஆண்டில் தொடங்கப்படுமா?

**மாண்புமிகு திரு. சொ. கருப்பசாமி, ஆதிதிராவிடர் நலத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கோயம்புத்தூர் மாவட்டம், மேட்டுப்பாளையம் தொகுதியில் மலைவாழ் மக்களின் நலனுக்காக தோலம்பாளையம் முதல் கோபனேரி வரை 16 கி.மீ. தூரத்திற்கு தார்ச் சாலை அமைக்க ரூ.2.45 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டு, 12 கி.மீ. தூரத்திற்கு மிகத் தரம் வாய்ந்த தார்ச் சாலை அமைக்கப்பட்டு, தற்போது இச்சாலை மலைவாழ் மக்களின் பயன்பாட்டில் இருந்து வருகிறது. மீதம் உள்ள 4 கி.மீ. தூரத்திற்கான சாலை வனப் பகுதியில் வருவதால் வனத் துறை மூலமாக இச்சாலை அமைக்கும் பணி தற்போது நடைபெற்று வருகிறது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஏ.கே. செல்வராஜ்.

**திரு. ஏ.கே. செல்வராஜ்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த வினா 2001—இல் என்னால் கேட்கப்பட்டது. மாண்புமிகு தமிழக முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய கவனத்திற்கு, என்னுடைய மேட்டுப்பாளையம் சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட தோலம்பாளையம் மற்றும் கோபனேரி பகுதியில் வசிக்கின்ற ஆதிவாசி மக்களுக்கு தார்ச் சாலை அமைக்கப்பட வேண்டுமென்று கோரிக்கை மனு கொடுக்கப்பட்டதின் பேரிலே மலைவாழ் மக்கள் மேம்பாட்டுத் திட்டத்தின் மூலமாக 310 இலட்சம் ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டு, அதிலே 230 இலட்சம் ரூபாய்க்கு தோலம்பாளையம் முதல் கோபனேரி வரை உள்ள 16 கி.மீ. சாலை

[2004 நவம்பர் 17

நல்ல தரமான சாலையாக மாற்றப்பட்டிருக்கிறது. மீதம் உள்ள 90 இலட்சம் ரூபாய் செலவிலே சிறுமுகை பகுதியில் உள்ள காந்தையூரிலே இருக்கின்ற ஒரு பள்ளத்திலே 40 இலட்சம் ரூபாயிலே ஒரு பாலமும், 25 இலட்சம் ரூபாயிலே அந்தப் பகுதிக்கு ஒரு தார்ச் சாலையும் அமைத்துக் கொடுக்கப்பட்டிருக்கிறது. அதேபோல தோலம்பாளையத்திலிருந்து நீலாம்பதி வரையில் இருக்கின்ற அந்த 3.5 கி.மீ. சாலைக்கு 55 இலட்சம் ரூபாயும், தோலம்பாளையத்திலிருந்து முட்டியூர் வரை இருக்கின்ற அந்தப் பகுதிக்கும், நீலாம்பதியிலிருந்து ஊக்கையனூர் போன்ற பகுதிகளுக்கும் தார்ச் சாலைகள் எல்லாம் அமைக்கின்ற பணிகள் இப்போது முடிவுற்றிருக்கின்றன. அந்தப் பகுதியிலே வசிக்கின்ற ஆதிவாசி மக்களுக்கு மொத்தம் 380 இலட்சம் ரூபாய் செலவிலே தார்ச் சாலைகள் எல்லாம் அமைத்து முடிக்கப்பட்டிருக்கின்றன. ஆகவே, மலைவாழ் மக்களுடைய முன்னேற்றத்திற்காக நிதியை ஒதுக்கித் தந்திருக்கின்ற எங்களுடைய இதய தெய்வம் மாண்புமிகு டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களுக்கு மேட்டுப்பாளையம் சட்டமன்றத் தொகுதியிலே இருக்கின்ற பொது மக்கள் சார்பாகவும், ஆதிவாசி மக்கள் சார்பாகவும், என்னுடைய நெஞ்சார்ந்த நன்றியினைப் பணிவோடு தெரிவித்துக்கொள்கிறேன்.

முற்பகல் 10-40

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திருமதி டி. யசோதா.

**திருமதி டி. யசோதா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மலைவாழ் மக்கள் வசிக்கின்ற பகுதிகளுக்கு மட்டும்தான் ஆதிதிராவிடர் நலத் துறையின் மூலமாக சாலைகள் அமைக்கப்படுமா அல்லது ஆதிதிராவிடர் மக்கள் வசிக்கின்ற பகுதிகளுக்கும் சாலைகளை அமைக்கின்ற பணி இருக்கிறதா என்பதை நான் அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. சொ. கருப்பசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மலைவாழ் மக்கள் வசித்து வருகிற பகுதிகளுக்கு ஆதிதிராவிடர் நலத் துறையின் மூலமாக சாலைகள் அமைக்கப்பட்டு வருகின்றன என்பதைப் பணிவோடு தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 8, திரு. ஆ. ராஜகோபால், மாண்புமிகு போக்குவரத்து மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்.



2004 நவம்பர் 17]

**8—**

## புதிய பேருந்து

**•25705—திரு. ஆ. ராஜகோபால்:**

மாண்புமிகு போக்குவரத்து மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

*(அ) தமிழ்நாடு சிமெண்ட்ஸ் ஆலங்குளத்திலிருந்து இராஜபாளையம் வழியாக சென்னைக்கு புதிய பேருந்து இயக்கப்படுமா?*

*(ஆ) ஆம் எனில், எப்போது?*

**மாண்புமிகு திரு. இரா. விசுவநாதன், போக்குவரத்து மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, (அ) மற்றும் (ஆ) தமிழ்நாடு சிமெண்ட்ஸ், ஆலங்குளத்திலிருந்து இராஜபாளையம் வழியாக சென்னைக்கு புதிய பேருந்து இயக்கும் செயற்குறிப்பு ஏதும் அரசின் பரிசீலனையில் இல்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**திரு. ஆ. ராஜகோபால்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சிவகாசி சட்டமன்றத் தொகுதி ஆலங்குளத்தில் அரசு சிமெண்ட் ஆலை மற்றும் ஆஸ்பெஸ்டாஸ் ஆலைகள் ஏற்படுத்தப்பட்டதன் காரணமாக கடந்த 30 ஆண்டுகளுக்கு மேலாக அந்தப் பகுதியில் உள்ள அந்த ஊர் தொழில் ரீதியாக ஒரு முக்கியமான மையமாக இருந்து வருகிறது. மேலும் சிவகாசி சட்டமன்றத் தொகுதியில் இராஜபாளையம் ஊராட்சி ஒன்றியம் மற்றும் திருவில்லிபுத்தூர் ஊராட்சி ஒன்றியப் பகுதிகளில் நூற்றுக்கணக்கான பேண்டேஜ் துணிகள் தயாரிக்கின்ற தொழிற்சாலைகள் இருக்கின்றன. சிறிய, பெரிய நூற்பாலைகளும் அங்கே இயங்கி வருகின்றன. மேலும் விசைத்தறித் தொழிற்சாலைகளும் இருக்கின்றன. ஆகவே இந்தச் சூழ்நிலையில் தினந்தோறும் அந்தப் பகுதியிலிருந்து சென்னைக்குச் செல்லுகின்ற மக்களுடைய எண்ணிக்கை அதிகரித்து வருகிறது. அந்தப் பகுதி மக்களுக்கு சென்னைக்கு நேரடியாக பேருந்து வசதி வேண்டுமென்பது நீண்ட நாளைய கோரிக்கையாக இருக்கிறது. இந்தச் சூழ்நிலையில் அந்தப் பகுதி மக்களுடைய கோரிக்கையை

நிறைவேற்றுகின்ற பொறுப்புடன் அரசு மீண்டும் இந்த வழித் தடத்தில் சென்னைக்கு ஒரு பேருந்தை விடுவதற்கு பரிசீலனை செய்யுமா என்பதைத் தங்கள் வாயிலாகக் கேட்டுக்கொள்கின்றேன்.

**மாண்புமிகு திரு. இரா. விசுவநாதன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாடு சிமெண்ட்ஸ் ஆலங்குளத்திலிருந்து இராஜபாளையத்திற்கு தமிழ்நாடு அரசுப் போக்குவரத்துக் கழகம், மதுரை உட்கோட்டம், விருதுநகர் போக்குவரத்துக் கழகத்தின் சார்பாகவும், நகரப் பேருந்துகளும், தனியார் துறையின் சார்பாக பேருந்து வசதிகளும், ஆக அரசுப் பேருந்துகளும் தனியார் துறை பேருந்துகளும் 72 முறை இயக்கப்படுகின்றன. அதாவது இராஜபாளையத்திற்கும் ஆலங்குளத்திற்கும் 72 முறை போதிய அளவிற்கு நிறைய பேருந்து வசதிகள் செய்யப்பட்டிருக்கின்றன. இராஜபாளையத்திலிருந்து சென்னைக்கு இரண்டு சொகுசுப் பேருந்துகள் இயக்கப்படுகின்றன. அதேபோல, செங்கோட்டையிலிருந்து இராஜபாளையம் வழியாக சென்னைக்கு மூன்று பேருந்துகள் இயக்கப்படுகின்றன. ஆக இராஜபாளையத்திலிருந்து 5 பேருந்துகள் சென்னைக்கு இயக்கப்படுகின்றன. இராஜபாளையத்திற்கு தொடர்புபடுத்தி 72 முறை இயக்கப்படுகின்றன. ஆகவே சிமெண்ட் ஆலையிலிருந்து, ஆலங்குளம் பகுதியிலிருந்து சென்னைக்கு வர விரும்புகிறவர்கள் இராஜபாளையத்திற்கு வந்து உடனே அங்கிருந்து பேருந்தில் சென்னைக்கு வருவதற்கு வசதிகளும் வாய்ப்புகளும் செய்யப்பட்டிருக்கின்றன என்பதை அன்போடு தெரிவித்துக்கொள்கிறேன். மேலும் ஒவ்வொரு ஊரிலிருந்தும் நேரடியாக சென்னைக்கு நேரடிப் பேருந்து வசதி வேண்டும் என்பது நடைமுறையில் இயலாத செயல். ஏனென்று சொன்னால் எல்லா ஊர்களிலிருந்தும் சென்னைக்கு நேரடியாக தனித் தனியாக பேருந்து வசதி வேண்டுமென்று கேட்கிறார்கள். ஆகவே ஏற்கெனவே இருக்கின்ற பேருந்து வசதிகளைப் பயன்படுத்திக்கொள்வதற்கு, தொடர்பு கொள்வதற்கு இணைப்புப் பேருந்துகள் போதிய அளவிற்கு இயக்கப்படுகின்றன என்பதை அன்போடு தெரிவித்துக்கொள்கிறேன். அந்த இணைப்புப் பேருந்துகள் போதவில்லை என்று சொன்னால், போதுமான அளவிற்கு இல்லை என்று சொன்னால், அவற்றை வேண்டுமானால் அதிகப்படுத்திக் கொடுப்பதற்கு அரசு பரிசீலிக்கும் என்பதை அன்போடு தெரிவித்துக்கொள்கிறேன்.





**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ராஜகோபால். ராஜகோபால், இராஜபாளையத்தில் இறங்கி ஒரு டீ சாப்பிட்டுவிட்டு அடுத்த பஸ்ஸில் ஏறுங்கள். (சிரிப்பு)

**திரு. ஆ. ராஜகோபால்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நூற்றுக்கணக்கான பேண்டேஜ் துணிகளைப் பொறுத்த அளவிலே தொழிற்சாலைகள் அந்த மேற்குப் பகுதியிலே இயங்கி வருவதால் நாளுக்குநாள் தொழில் ரீதியாக, வர்த்தக ரீதியாக சென்னைக்குச் சென்று வருகின்ற மக்கள் தொகையினுடைய எண்ணிக்கை அதிகமாக இருப்பதைக் கருத்தில்கொண்டுதான் அரசு இதை மீண்டும் பரிசீலனை செய்யுமா என்று தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. இரா. விசுவநாதன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் ஏற்கெனவே சொன்னதுபோல, அந்தப் பகுதியிலிருந்து இயக்கப்படுகின்ற, இராஜபாளையத்திலிருந்து சென்னைக்கு இயக்கப்படுகின்ற, ஐந்து பேருந்துகளுக்குமே போதிய அளவிற்குப் பயணிகள் அடர்வு இல்லை என்பதை அன்போடு தெரிவித்துக்கொள்கிறேன். இந்த நிலையிலே கூடுதல் பேருந்துகள் இயக்குவதற்குத் தேவையில்லை என்பதை அன்போடு தெரிவித்துக்கொள்கிறேன்.

முற்பகல் 10-45

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. சி. சிவசாமி.

**திரு. சி. சிவசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடந்த பல ஆண்டு காலமாக நஷ்டத்திலே இயங்கி வந்த போக்குவரத்துக் கழகம் மாண்புமிகு தமிழக முதல்வர் அம்மா அவர்களுடைய இந்தப் பொற்கால ஆட்சியில் இலாபத்தில் செயல்படுகின்ற இந்தக் கால கட்டத்தில் திடீரென்று ஏறியிருக்கின்ற டீசல் விலை காரணமாக போக்குவரத்துக் கழகத்திற்கு நாளொன்றுக்கு 1 கோடி ரூபாய் வருமான இழப்பு ஏற்பட்டாலும்கூட, மக்கள் நலனைக் கருத்தில் கொண்டு தொழில் நகரமாக திகழ்கின்ற திருப்பூர் நகரத்திற்குக் கூடுதல் நகரப் பேருந்துகளை இயக்க அரசு முன்வருமா என்று தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

[2004 நவம்பர் 17

**மாண்புமிகு திரு. இரா. விசுவநாதன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மத்திய அரசு அப்போதைக்கப்போது டீசல் விலையையும், பெட்ரோல் விலையையும் ஏற்றி வந்தபோதிலும்கூட அதன் மூலமாக பொதுமக்களுக்கு மட்டும் அல்ல, தமிழ்நாடு அரசு இயக்குகின்ற நமது போக்குவரத்துக் கழகங்களுக்கும் பெருமளவில் நிதி இழப்பு ஏற்படுகிறது என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சுட்டிக்காட்டினார்கள். அந்த நிலையிலும்கூட, இவ்வளவு இழப்பு ஏற்பட்ட சூழ்நிலையிலும்கூட, மாண்புமிகு இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய மேலான ஆலோசனையின்படியும், அறிவுரையின்படியும், வழிகாட்டுதலின்படியும் இந்தப் போக்குவரத்துத் துறை சிறப்பாக இயங்குவதன் காரணமாக ஓரளவு இந்த விலை ஏற்றத்தைக்கூட தாக்குப் பிடித்து, தாங்கிக் கொண்டு வருகிறது. (மேசையைத் தட்டும் ஒலி) இருந்தாலும்கூட, இன்னும் எவ்வளவுதான் இருந்தாலும்கூட சுமையை சுமப்பதற்கும் ஓர் அளவு இருக்கிறது. அந்த அளவுக்கு, இன்றைக்கு சுமக்க முடியாத அளவுக்கு மத்திய அரசு இந்தச் சுமையை ஏற்றியிருக்கிறது. தாங்க முடியாத அளவுக்கு விலை ஏற்றத்தை இன்றைக்கு ஏற்றியிருக்கிறது. அந்தச் சூழ்நிலையையும் இப்போது நாம் எதிர்கொள்ள வேண்டும். அதோடு மட்டும் அல்ல. எவ்வளவுதான் விலை ஏற்றம் இருந்தாலும்கூட மக்களுக்குத் தேவையான போக்குவரத்து வசதிகளை செய்வதற்கு அரசு எப்போதும் சிறப்பான முயற்சிகளை மேற்கொண்டு வருகிறது. அந்த வகையிலே பெருகி வரும் மக்கள் தொகைக்கேற்ப நமது திருப்பூர் நகரத்திற்குப் போதிய அளவுக்கு பேருந்து வசதிகளைச் செய்வதற்கு, கூடுதல் பேருந்துகளை இயக்குவதற்கு அரசு பரிவோடு சிந்திக்கும் என்பதை அன்போடு தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஆ.கு.சி. அன்பழகன்.

**திரு. ஆ.கு.சி. அன்பழகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழகத்திலே பல கிராமங்களுக்கும் பேருந்து வசதிகளை செய்திருக்கிறார்கள். குறிப்பாக திருவண்ணாமலை மாவட்டத்திலே கடந்த ஆட்சிக் காலத்திலே பல பேருந்துகள் நிறுத்தப்பட்டிருக்கின்றன. புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய மேலான பார்வைக்கு எங்கள் பகுதியிலே நிறுத்தப்பட்டிருக்கின்ற பேருந்துகளை எல்லாம் மீண்டும் விடுவதற்கு கோரிக்கையாக வைக்கிறோம். மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அதற்கு ஆவன செய்வார்களா என அறிய விரும்புகின்றேன்.



2004 நவம்பர் 17]

**மாண்புமிகு திரு. இரா. விசுவநாதன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடந்த ஆட்சிக் காலத்திலே நிறுத்தப்பட்டிருந்த, சாலை வசதி சரியில்லை என்ற காரணத்திற்காக நிறுத்தி வைக்கப்பட்டிருந்த ஆயிரத்திற்கும் மேற்பட்ட வழித்தடங்களில் மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசு வந்ததற்குப் பின்பு அந்தச் சாலைகள் எல்லாம் சீரமைக்கப்பட்டு, அந்தச் சீரமைக்கப்பட்ட சாலைகளில் நிறுத்தப்பட்ட பேருந்துகளை மீண்டும் இயக்கி இருக்கிறோம் என்பதை அன்போடு தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) அதோடு மட்டும் அல்ல. இன்னும் ஓரிரு வழித்தடங்களில் பேருந்துகளை இயக்க வேண்டும் என்று மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கேட்டிருக்கிறார்கள். அவர்கள் அந்தக் கோரிக்கையை எழுத்துமூலமாகக் கொடுத்தால் அதற்கு உரிய நடவடிக்கைகளை மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசு எடுக்கும் என்பதை அன்போடு தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 9, திரு. ப. ரங்கநாதன், மாண்புமிகு தொழில் துறை அமைச்சர்.

**9—**

## மாநில தொழில் மையம்

***36404—திரு. ப. ரங்கநாதன்:**

மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தமிழ்நாட்டில் அந்நிய முதலீட்டுடன் தொழில் தொடங்குவோருக்கு ஒரே இடத்தில் அனைத்து வசதிகளையும் பெறும் வகையில் மாநில தொழில் மையம் அமைக்கும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

**மாண்புமிகு திரு. நயினார் நாகேந்திரன், தொழில் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாட்டில் பெரிய அளவிலான தொழில் முதலீட்டாளர்களை கவரும் வண்ணம் மாண்புமிகு தமிழகத்தினுடைய முதல்வர் அம்மா அவர்களால் 1992 ஆம் ஆண்டு தமிழ்நாடு தொழில் வழிகாட்டுதல் மற்றும் ஏற்றுமதி நிறுவனம் ஏற்படுத்தப்பட்டது. இந்நிறுவனம் தொடங்கப்பட்ட

நாளிலிருந்து இதுவரை ரூ.9,500 கோடி முதலீட்டில் 46 பெரும் முதலீட்டுப் பிரேரணைகளை ஈர்த்துள்ளது. இந்நிறுவனம் முதலீட்டாளர்களுக்கு அனைத்து வசதிகளையும் செய்து கொடுக்கிறது. எனவே தனியாக மாநில தொழில் மையம் அமைக்கத் தேவையில்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**திரு. ப. ரங்கநாதன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடந்த 4 ஆண்டுகளில் அதாவது 2001, 2002, 2003, 2004 ஆம் ஆண்டுகளில் அந்நிய முதலீடு எவ்வளவு தொகை தமிழகத்திற்கு வந்துள்ளது? அந்த முதலீடுகளை எந்தெந்தப் பிரிவு தொழில்களில் முதலீடு செய்துள்ளார்கள்? செய்துள்ள முதலீடுகளில் அரசுத் துறை சார்பாக மூலதனம், பங்கு மூலதனம் செய்துள்ளதா? அல்லது முழுவதுமாக அந்நிய முதலீட்டில் தொழில்கள் தொடங்கப்பட்டுள்ளனவா? எப்போது தொடங்கப்பட்டன? அந்தத் தொடங்கிய தொழிற்சாலைகள் உற்பத்தியைத் தொடங்கியுள்ளனவா? உற்பத்தி செய்த பொருட்கள் உள்நாட்டில் விற்பனை ஆகின்றனவா அல்லது வெளிநாட்டிற்கு ஏற்றுமதி செய்துள்ளார்களா என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் மூலமாக அறிய விரும்புகிறேன்.

முற்பகல் 10-50

**மாண்புமிகு திரு. நயினார் நாகேந்திரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழகத்தினுடைய முதல்வர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் 2001-க்குப் பிறகு, ஆட்சிக்கு வந்த பிறகு Saint Gobain Glass விரிவாக்கத் திட்டம் ரூபாய் 500 கோடிக்கு இங்கே expansion project போடப்பட்டு அது இப்பொழுது ஏற்றுமதியைத் தொடங்கியுள்ளது. அதேபோன்று Saint Gobain Glass, automatic glass அது நூறு கோடி ரூபாய்க்கு தனியாக அதனுடைய திட்டத்தைத் தொடங்கி இருக்கின்றது. Saint Gobain Glass சிறப்பு முலாம் பூசப்பட்ட கண்ணாடி specially coated glass 65 கோடி ரூபாய்க்கு அதனுடைய முதலீட்டுடன் தொடங்கி ஏற்றுமதியைத் தொடங்கி இருக்கின்றது. அதேபோன்று TANSA நிறுவனம் 230 கோடி ரூபாய்க்கு அதனுடைய உற்பத்தியைத் தொடங்கி இருக்கின்றது. Asahi Glass 57 கோடி ரூபாய்க்கு அதனுடைய முதலீட்டுடன் இங்கே நிறுவி உற்பத்தியைத் தொடங்கி இருக்கின்றது. Asian Paints 60 கோடி



ரூபாய்க்கு அதனுடைய உற்பத்தியைத் தொடங்கி இருக்கின்றது. Jegannath Textiles, Coimbatore 95 கோடி ரூபாய்க்கு அதனுடைய முதலீட்டுடன் தொடங்கி இருக்கின்றது. அதேபோன்று Venkatesh Coats மற்றும் Power ரூபாய் 1,000 கோடிக்கு அதனுடைய உற்பத்தியை தொடங்குகின்ற நிலையில் இருக்கின்றது. இப்படியாக இன்னும் Hyundai போன்ற நிறுவனங்கள் விரிவாக்கத் திட்டத்தை தொடங்குவதற்காக 800 கோடி ரூபாய் முதல் 1,000 கோடி ரூபாய் வரை முதலீடு செய்வதற்காக ஆயத்த நிலையில் இருந்துகொண்டிருக்கின்றன என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ப. ரங்கநாதன்.

**திரு. ப. ரங்கநாதன்:** பேரவைத் தலைவர் அவர்களே, அந்நிய முதலீடு செய்தவர்களுக்கு, இந்த அரசு எந்த வகையான சலுகைகளை வழங்குகின்றது? அதே நேரத்தில் முதலீடு செய்பவர்களுக்கு ஒரு வழிப்பாதையில் அரசு தருகின்ற அனைத்து சலுகைகளையும் கொடுக்கின்றார்களா? அதேநேரத்தில் அரசு கடந்த நான்கு ஆண்டு காலத்தில்—இங்கே அமைச்சர் அவர்கள் கொடுத்த புள்ளி விவரங்களைப் பார்த்தால் சுமார் 3,000 கோடிகள்தான் முதலீடு வந்துள்ளதாகக் கூறியிருக்கின்றார்கள். ஆனால், கடந்த 1996 முதல் 2001 வரையில்—தமிழகத்திலே டாக்டர் கலைஞர் அவர்கள் ஆட்சியிலே இருந்தபோது Hyundai Car தொழிற்சாலை, Ford தொழிற்சாலை, திருவள்ளூர் மாவட்டத்திலே காக்களூரிலே இருக்கின்ற தொழிற்பேட்டையிலே....

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ரங்கநாதன், கேள்வியாகக் கேளுங்கள்.

**திரு. ப. ரங்கநாதன்:** கேள்விதான். கேள்விதான்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** தொழில் துறை மானியக் கோரிக்கையில் பேசலாம்.

**திரு. ப. ரங்கநாதன்:** இல்லை, இல்லை இது அந்நிய முதலீடு பற்றித்தான் கேள்வி. வேறு ஒன்றும் இல்லை.

[2004 நவம்பர் 17

**மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒரு விளக்கத்தை நான் இங்கே கூற விரும்புகிறேன். உண்மையைத் தெளிவுபடுத்த விரும்புகிறேன். Ford தொழிற்சாலையை கொண்டுவந்தது எனது ஆட்சிக் காலத்தில். (மேசையைத் தட்டும் ஒலி). அன்றைய அமெரிக்க நாட்டு Ambassador, Thiru Frank Wisner அவர்கள் இதற்குப் பெரிதும் உதவி புரிந்தார்கள். அப்பொழுது தமிழ்நாட்டிற்கும், மகாராஷ்டிர மாநிலத்திற்கும் கடும் போட்டி நிலவியது. அந்த நேரத்தில், தமிழ்நாட்டில்தான் புதிய தொழிலை அந்நிய முதலீட்டுடன் தொடங்குவதற்கு எல்லா வசதிகளும் மிகவும் சிறப்பான வகையில் அமைந்துள்ளன; சட்டம் ஒழுங்கு மிக நன்றாக இங்கே பராமரிக்கப்படுகிறது; (மேசையைத் தட்டும் ஒலி) தங்கு தடையின்றி மின்சாரம் கிடைக்கின்றது; (மேசையைத் தட்டும் ஒலி) என்பன போன்ற பல காரணங்களால் Ford நிறுவனம் எனது ஆட்சிக் காலத்தில் ஒப்பந்தம் செய்துகொண்டு இங்கே வந்து அந்தத் தொழிற்சாலையைத் தொடங்கி வைத்தார்கள். அதனை நான்தான் சென்று தொடங்கி வைத்தேன் என்பதையும், நான் மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு நினைவுபடுத்த விரும்புகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

அதைப் போலவே, Hyundai கம்பெனியின் Chairman, South Korea நாட்டிலிருந்து மூன்று முறை இங்கே சென்னைக்கு வந்து என்னைச் சந்தித்து Hyundai Car தொழிற்சாலை தொடங்குவதற்கான அனைத்து விவாதங்களையும் என்னுடன் நடத்திவிட்டு, அதற்கான ஒப்பந்தம் MoU கூட வரையப்பட்டு தயார் நிலையில் இருந்தது. அந்த நேரத்தில் பொதுத் தேர்தல் அறிவிக்கப்பட்டதால்—தமிழக சட்டப் பேரவைக்கான தேர்தலும் அறிவிக்கப்பட்டதால்—1996 ஆம் ஆண்டில் Election Code of Conduct அமலுக்கு வந்துவிட்டதால் ஒப்பந்தத்தில் கையெழுத்து போட முடியவில்லை. அந்த நிலையில்தான் விட்டுவிட்டு, தேர்தலைச் சந்திக்கச் சென்றோம். ஆட்சி மாற்றம் ஏற்பட்டது. அதன்பிறகு நான் ஏற்பாடு செய்து வைத்திருந்த அஸ்திவாரத்தின்மீது தி.மு.க. ஆட்சி வந்து அவர்கள் அந்த ஒப்பந்தத்தில் மட்டும் கையெழுத்து போட்டுவிட்டு அன்றிலிருந்து இன்று வரை "Hyundai Car நிறுவனத்தை நாங்கள்தான் கொண்டு வந்தோம், நாங்கள்தான் கொண்டு வந்தோம்" என்று (மேசையைத் தட்டும் ஒலி) தம்பட்டம் அடித்துக்கொண்டு இருக்கிறார்கள். அது உண்மை அல்ல. Hyundai-யும் என்னால்தான் வந்தது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.



2004 நவம்பர் 17]

முற்பகல் 10-55

**திரு. ப. ரங்கநாதன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, முதலமைச்சர் அவர்கள் இங்கே விளக்கத்தைத் தந்திருக்கின்றார்கள். ஆனால் கழக ஆட்சியில்...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ரங்கநாதன், கேள்விக்கு வாங்க.

**திரு. ப. ரங்கநாதன்:** அவர்கள் சொன்ன விளக்கத்திற்கு - கேள்விதான் கேட்கிறேன். நான் அவர்கள் விளக்கத்திற்குள்ளே போகவில்லை. Hyundai தொழிற்சாலை, காக்களூரிலே கண்ணாடி தொழிற்சாலை, தரமணியிலே Tidal Park, இன்னும் உயிரின தொழிற்சாலைகள்..

**மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, Saint Gobain கண்ணாடி தொழிற்சாலை இங்கே தொடங்குவதற்கான பூர்வாங்கப் பணிகள்கூட எனது ஆட்சிக் காலத்தில்தான் நடைபெற்றது. (மேசையைத் தட்டும் ஒலி)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** ரங்கநாதன் வெறும் கேள்வியைக் கேட்டிருந்தால் பரவாயில்லை. நீங்களே வில்லங்கத்தை விலைக்கு வாங்குகிறீர்கள். (குறுக்கீடு) கேள்வி கேளுங்கள்.

**திரு. ப. ரங்கநாதன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே...

**மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மேலும் ஒரு உண்மையை இந்த அவைக்கு விளக்க விரும்புகிறேன். 1996 முதல் 2001 வரை கடந்த தி.மு.க. ஆட்சி நடைபெற்ற அந்த ஐந்து ஆண்டு காலமும் எந்தவொரு புதிய தொழிற்சாலையும் இங்கே தமிழ்நாட்டில் தொடங்கப்படவில்லை. (மேசையைத் தட்டும் ஒலி) குறிப்பாக அந்நிய முதலீட்டுடன் எந்தப் புதிய தொழிலும் இங்கே தொடங்கப்படவில்லை என்பதுதான் உண்மை. (மேசையைத் தட்டும் ஒலி)

**திரு. ப. ரங்கநாதன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தரமணியிலே Tidal Park, கோயம்புத்தூரிலே அந்நிய முதலீட்டுடன் பல்வேறு தொழிற்சாலைகள், தூத்துக்குடியிலே அந்நிய முதலீட்டுடன் 2 ஆயிரம் ஏக்கரிலே ஏற்றுமதி...

[2004 நவம்பர் 17

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** ரங்கநாதன் (குறுக்கீடு) மாண்புமிகு அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. நயினார் நாகேந்திரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கேட்ட கேள்விக்கு ஏற்கெனவே பதில் தரப்பட்டுவிட்டது. தமிழகத்தினுடைய முதல்வர் புரட்சித் தலைவி அம்மா அவர்களும் தெளிவாக இந்தச் சபையில் Ford தொழிற்சாலை, Hyundai தொழிற்சாலை போன்ற மிகப் பெரிய தொழிற்சாலைகள் எல்லாம்...

**மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் ரங்கநாதன் அவர்களுக்கு இன்னொரு விளக்கத்தை நான் அளிக்க விரும்புகிறேன். Tidal Park என்ன அந்நிய முதலீட்டுடன் அந்நியர்கள் இங்கே தொடங்கியதா? தமிழக அரசு நிறுவியது. (மேசையைத் தட்டும் ஒலி)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. தாமோதரன். (குறுக்கீடு) திரு. ரங்கநாதன், ஏற்கெனவே கேட்க வேண்டிய கேள்விகளை எல்லாம் கேட்டுவிட்டீர்கள். தாமோதரன் (குறுக்கீடு) தாமோதரன். (குறுக்கீடுகள்) உட்காருங்கள் தாமோதரன். ரங்கநாதன், கேள்வியைக் கேளுங்கள். (குறுக்கீடு) கேள்வியைக் கேளுங்கள். (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வழக்கமான பாணியில்தான் இந்த அவையின் நடவடிக்கைகள் நடைபெற்றுக்கொண்டிருக்கின்றன. எதிர்க்கட்சி உறுப்பினர்கள் சரியான விவரங்களைத் தெரிந்து கொள்ளாமல் இங்கே தப்புத் தப்பாக எதையாவது சொல்லுகிறார்கள். அதற்குச் சரியான விளக்கத்தைச் சொன்னால் கோபப்படுகிறார்கள். (மேசையைத் தட்டும் ஒலி)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ரங்கநாதன், கேள்வி நேரத்திலே கேள்வியை மட்டும் கேட்டிருந்தால் பரவாயில்லை. (குறுக்கீடு) உங்களுடைய கேள்வி; அனைத்து வசதிகளையும் பெறும் வகையில் மாநில தொழில் மையம் அமைக்கும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா என்று கேட்டீர்கள். ஒரே கேள்வியிலே பத்து கேள்விகளைத் தொடுத்தீர்கள். அவ்வளவுக்கும் அமைச்சர் அவர்கள் விளக்கம் சொல்லியிருக்கிறார்கள். மறுபடியும் கேள்விக்குப் போகாமல் வெறும் விளக்கங்களுக்குள்ளே சுற்றிக்கொண்டிருப்பது சரியல்ல. ஒரே கேள்வியைக் கேளுங்கள். ஒரு கேள்வியைக் கேளுங்கள்.



2004 நவம்பர் 17]

**திரு. ப. ரங்கநாதன்:** மைக் வரவில்லை. பேரவைத் தலைவர் அவர்களே, நான் கேட்ட கேள்விக்கு முதலமைச்சர் பதில் சொல்லியுள்ளார்கள். அவர்களுக்கு நன்றி சொல்கிறேன். **

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அடுத்த கேள்விக்குப் போங்கள்.

**திரு. ப. ரங்கநாதன்:** மைக் கொடுக்கச் சொல்லுங்கள்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அது அங்கேதான் இருக்கிறது. நானா கொண்டு வந்து கொடுக்க முடியும்? (சிரிப்பு)

**திரு. ப. ரங்கநாதன்:** **

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அவைக் குறிப்பிலிருந்து நீக்கப்படுகிறது. கேள்விக்குச் சம்பந்தம் இல்லை நீங்கள் பேசுவது. அவைக் குறிப்பில் ஏறாது திரு. தாமோதரன்.

**திரு. ப. ரங்கநாதன்:** **

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. தாமோதரன். (குறுக்கீடுகள்) திரு. தாமோதரன், நீங்கள் பேசுங்கள்.

**திரு. எஸ். தாமோதரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, (குறுக்கீடு) நமது தமிழக அரசு 2001—2002 நிதிநிலை அறிக்கையில் வெளிநாட்டிலே வாழும் தமிழர்கள் மூலம் பல கோடி ரூபாய் முதலீடு செய்து தமிழ்நாட்டிலே புதிய தொழிற்சாலைகள் ஆரம்பிக்கப்படும் என்றார்கள். அமெரிக்காவில் மட்டும் 2 இலட்சம் தமிழர்கள் வசதியாக...

முற்பகல் 11-00

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினருடைய கேள்விக்கு விடை சொல்கிற வரை வினாக்கள்-விடைகள் நேரம் நீட்டிக்கப்படுகிறது.

---

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.

**திரு. எஸ். தாமோதரன்:** அமெரிக்காவில் மாத்திரம் 2 இலட்சம் வசதியான தமிழர்களும், ஜெர்மனி, ஃபிரான்ஸ் போன்ற இதர நாடுகளில் 3 இலட்சம் தமிழர்களும் வசிக்கிறார்கள். இவர்களை முறைப்படி நாம் அணுகினால் 5 இலட்சம் கோடி ரூபாய் வரை தமிழ்நாட்டிலே புதியதாக தொழில்கள் தொடங்க வாய்ப்புகள் ஏற்படும். இதுகுறித்து நமது மாண்புமிகு முதலமைச்சர் அவர்களும், மாண்புமிகு தொழில் அமைச்சர் அவர்களும் என்னென்ன நடவடிக்கைகளை எடுத்தார்கள் என்பதை நான் அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. நயினார் நாகேந்திரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 1992 ஆம் ஆண்டு மாண்புமிகு அம்மா அவர்களால்தான் Guidance Bureau என்ற நிறுவனம் தொடங்கப்பட்டது. மீண்டும் அம்மா அவர்கள் ஆட்சிக்கு வந்த பிறகுதான் வெளிநாட்டிலே வாழ்கின்ற தமிழர்களுக்காக ஒரு இணையதளம் ஆரம்பிக்கப்பட்டது. www.tidco.com என்கின்ற ஒரு இணையதளம் அம்மா அவர்களால் 19 ஜூலை 2001 ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்டது. இதுநாள் வரையிலும், வெளிநாட்டிலே வாழ்கின்ற தமிழர்கள் 1,00,53,000 பேர் அதைப் பார்த்திருக்கின்றார்கள். அதேபோன்று தமிழ்நாடு nri.com 9-1-2003 அன்று மாண்புமிகு அம்மா அவர்களால் ஆரம்பிக்கப்பட்டது. இதை 6,28,528 பேர்கள், வெளிநாட்டிலே வாழ்கின்ற தமிழர்கள் பார்த்திருக்கிறார்கள். நிறைய விசாரணையில் இருந்துகொண்டிருக்கின்றன. அவர்களும் தொழிலில் முதலீடு செய்ய வருகின்றபோது அரசு அவர்களுக்கு அனைத்து உதவிகளையும் செய்யும் என்பதை நான் இந்த அவைக்குத் தெரிவித்துக் கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அவைக் குறிப்பில் ஏறாது என்று நான் குறிப்பிட்டதற்குப் பிறகு திரு. ரங்கநாதன் பேசிய கருத்துகள் அவைக் குறிப்பில் இடம்பெறாது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.



## (ஆ) உடுக்குறியிடாத வினாக்கள்

*(பட்டியல்கள் 1, 2 மற்றும் 3) @*

### முதல் பட்டியல்

1—

### தாம்போகி கட்டுதல்

**வினா எண் 15836—திரு. மு. அப்பாவு:** மாண்புமிகு பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

திருநெல்வேலி மாவட்டம், இராதாபுரம் வட்டம், விஜயாபதி—கூத்தங்குளி சாலையில் கி.மீ. 0/2 மற்றும் 0/4-ல் தாம்போகி கட்ட அரசு முன்வருமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம், பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர்:**

சட்டமன்ற வினாவில் குறிப்பிடப்பட்டுள்ள இடத்தில் தாம்போகி கட்டுவதற்குத் தோராயமாக ரூ.40.00 இலட்சம் தேவைப்படும். இப்பணியானது அரசால் ஒப்புதல் அளிக்கப்பட்ட எந்தத் திட்டத்திலும் தற்போது இடம் பெறவில்லை

2—

### பாலம் கட்டுதல்

**வினா எண் 15837—திரு. மு. அப்பாவு:** மாண்புமிகு பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

திருநெல்வேலி மாவட்டம், இராதாபுரம் வட்டம், கஸ்தூரிரெங்கபுரம்-பெருங்கண்ணன்குளம் சாலையில் கி.மீ. 1/8-ல் பாலம் கட்ட அரசு முன்வருமா?

---

@ இந்தப் பட்டியல்களில் உள்ள வினாக்களுக்கான விடைகள் அந்தந்த அமைச்சர்கள் ஒப்புதல் அளித்த தேதியன்று உள்ளபடி அமைந்தனவாகும்.

[2004 நவம்பர் 17

**விடை—**

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம், பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர்:**

சட்டமன்ற வினாவில் குறிப்பிடப்பட்டுள்ள பாலப் பணியானது, நபார்டு வங்கி நிதி உதவியுடன் செயலாக்கப்படவுள்ள ஆர்.ஐ.டி.எப்.8 திட்டப் பட்டியலில் சேர்க்க பரிந்துரை செய்யப்பட்டுள்ளது. மேற்படி வங்கியின் ஒப்புதல் பெறப்பட்டவுடன் இப்பணியினைச் செயலாக்க நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

**3—**

## சாலை செப்பனிடல்

**வினா எண் 17887—திரு. லா. சந்தானம்:** மாண்புமிகு பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

உசிலம்பட்டி தொகுதி, உசிலம்பட்டி உட்கோட்டம் வலங்காகுளம் சாலையிலிருந்து பிரிந்து முண்டுவேலம்பட்டிக்குச் செல்லும் சாலையைச் செப்பனிட அரசு முன்வருமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம், பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர்:**

சட்டமன்ற வினாவில் குறிப்பிட்டுள்ள சாலையானது, இதர மாவட்டச் சாலையாகப் பராமரிக்கப்பட்டுவரும் வலங்காகுளம் சாலையில் கி.மீ. 0/10-ல் பிரிந்து முண்டுவேலம்பட்டி செல்லும் சாலை கி.மீ. 0/0-1/2 ஆகும். இச்சாலையினைப் புதுப்பிக்க இதர மாவட்டச் சாலைகள் மேம்பாடு திட்டம்-3-ல் ரூ.4.50 இலட்சம் மதிப்பிற்கு கருத்துரு பரிசீலனையில் உள்ளது.



2004 நவம்பர் 17]

**4—**

## சாலை செப்பனிடல்

**வினா எண் 17897—திரு. லா. சந்தானம்:** மாண்புமிகு பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

உசிலம்பட்டி தொகுதி, உசிலம்பட்டி உட்கோட்டம், கொக்குளம் உத்தப்பநாயக்கனூர் சாலையிலிருந்து பிரிந்து நரியம்பட்டிக்குச் செல்லும் சாலையைச் செப்பனிட அரசு முன்வருமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம், பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர்:**

சட்டமன்ற வினாவில் குறிப்பிடப்பட்டுள்ள சாலையானது, இதர மாவட்டச் சாலையான கொக்குளம் உத்தப்பநாயக்கனூர் சாலையில் கி.மீ. 12/8ல் பிரிந்து நரியம்பட்டி செல்லும் சாலை 0/0-2/3 ஆகும். இச்சாலையினைச் சீர்செய்ய ரூ.9.50 இலட்சத்திற்கு இதர மாவட்டச் சாலைகள் மேம்பாடு திட்டம் 3-ல் கருத்துருக்கள் பெறப்பட்டு அரசின் பரிசீலனையில் உள்ளன.

**5—**

## சாலை மேம்பாடு செய்தல்

**வினா எண் 23680—திரு. சி. சண்முகவேலு:** மாண்புமிகு பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

பொள்ளாச்சி நெடுஞ்சாலை கோட்டத்தைச் சேர்ந்த பூலாங்கிணறு கொங்கல் நகரம் சாலை கி.மீ. 2/0 முதல் கி.மீ. 3/4 மற்றும் கி.மீ. 8/6 முதல் கி.மீ. 9/0 மற்றும் கி.மீ. 10/0 முதல் 11/0 வரை மிக பழுதடைந்துள்ளதால் அதை மேம்பாடு செய்ய அரசு முன்வருமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம், பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர்:**

சட்டமன்ற வினாவில் குறிப்பிட்டுள்ள பூலாங்கிணறு—கொங்கல் நகரம் சாலையில் கி.மீ. 2/0—5/4 மற்றும் கி.மீ. 10/6—11/0 வரையில் சாலை ஓரளவு நல்ல நிலையில் உள்ளது. பழுதடைந்த சாலைப் பகுதிகளான கி.மீ. 0/0—2/0 மற்றும் கி.மீ. 5/4—7/4 வரையிலான பகுதிகளை மேம்பாடு செய்யும் பணி ரூ.44.90 இலட்சம் செலவில் தற்போது நடைபெற்று வருகிறது. இதரப் பகுதியான பழுதடைந்துள்ள சாலை கி.மீ. 7/4—10/6 வரையிலான இடங்களை மேம்பாடு செய்வதற்கு ரூ.16.00 இலட்சம் நிதி தேவைப்படும். மேற்கண்ட சாலைகளில் உள்ள பழுதடைந்துள்ள பகுதிகள் தற்காலிகமாகச் சீர் செய்யப்பட்டு போக்குவரத்திற்கு ஏற்றவாறு உள்ளன.

**6—**

## சாலை சீர்செய்தல்

**வினா எண் 23687—திரு. சி. சண்முகவேலு:** மாண்புமிகு பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

பொள்ளாச்சி நெடுஞ்சாலை கோட்டத்தைச் சேர்ந்த கோயம்புத்தூர் திண்டுக்கல் முதல் பெரியகோட்டை செல்லும் சாலை கி.மீ. 0/0 முதல் கி.மீ. 1/6 வரை பழுதடைந்துள்ளதை மேம்பாடு செய்ய அரசு ஆணையிடுமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம், பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர்:**

சட்டமன்ற வினாவில் குறிப்பிடப்பட்டுள்ள பெரியகோட்டை சாலை கி.மீ. 0/0—1/6 என்பது, தேசிய நெடுஞ்சாலை எண் 209ல் கி.மீ. 87/6-ல் பிரிந்து பெரியகோட்டை வரை செல்கின்றது. இச்சாலையின் முழு நீளத்திற்கும் (1.60 கி.மீ.) தார்தளம் புதுப்பிக்க ரூ.6.00 இலட்சங்கள் தேவைப்படும். இப்பணியினை மேம்பாடு செய்யும் திட்டம்





பரிசீலனையில் உள்ளது. எனினும் தார்தளத்தில் ஏற்படும் நொடிகளுக்கு அவ்வப்போது தார் நறுக்குகள் போடப்பட்டு பராமரிக்கப்பட்டு வருகின்றது.

**7—**

## சாலை சீரமைத்தல்

**வினா எண் 23707—திரு. சி. சண்முகவேலு:** மாண்புமிகு பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

பொள்ளாச்சி நெடுஞ்சாலை கோட்டத்தைச் சேர்ந்த தனி—குமரலிங்கம் சாலை முதல் இழுவன்காட்டூர் செல்லும் சாலை கி.மீ. 4/8 முதல் 6/0 வரை உள்ள சாலை பழுதடைந்துள்ளதால் அதை உடன் சரி செய்ய அரசு முன்வருமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம், பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர்:**

இதர மாவட்ட சாலைகள் மேம்படுத்தும் திட்டத்தின் (கட்டம் 3) கீழ் கி.மீ. 4/8—6/0 வரை உள்ள பழுதடைந்துள்ள சாலைப் பகுதியை மேம்பாடு செய்வதற்கு ரூ.6 இலட்சம் மதிப்பிலான கருத்துரு அரசின் பரிசீலனையில் உள்ளது. எனினும் மேற்கண்ட பழுதடைந்துள்ள பகுதிகளில் உள்ள நொடிகளுக்குத் தார் நொடி/கப்பி நொடி போட்டு சீரமைக்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

**8—**

## தனியார் ஆக்கிரமிப்பை அகற்றுதல்

**வினா எண் 41414—திரு. செ. வெங்கடாஜலம்:** மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

சேலம் அருள்மிகு கோட்டை பெருமாள் கோயில் சொத்து, 40வது கோட்டம் அம்மாபேட்டை பிரதான சாலைப் பகுதியில் உள்ள தனியார் ஆக்கிரமிப்பை அகற்ற அரசு நடவடிக்கை எடுக்குமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. பி.சி. ராமசாமி, இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர்:**

சேலம் அருள்மிகு கோட்டை பெருமாள் திருக்கோயிலுக்குச் சொந்தமான புஞ்சை நிலம், காலிமனை மற்றும் கட்டடங்கள் குத்தகைக்கு மற்றும் மாத வாடகைக்கு விடப்பட்டு வருகின்றன. இத்திருக்கோயிலுக்குச் சொந்தமான அம்மாப்பேட்டை நெடுஞ்சாலையில் 40வது கோட்டத்தில் 999—44 சதுர அடியில் காலி இடம் உள்ளது. கல்மண்டபம் ஒன்றும் உள்ளது. நவராத்திரி காலத்தில் தசமி அன்று சுவாமி அம்மண்டபத்தில் எழுந்தருளி அம்பு போடும் நிகழ்ச்சி நடைபெறுகிறது. மண்டபத்திற்கு அருகில் காலி இடத்தில் ஆக்கிரமிப்பு ஏற்படாமல் தடுக்க திருக்கோயில் பணியாளர் குடியிருந்து மாதம் ரூ.100/— வீதம் வாடகை செலுத்தி, அவரது காலத்திற்கு பிறகு அவரது மனைவி மற்றும் பிள்ளைகள் குடியிருந்து 1.11.2001 முதல் ரூ.945/— நியாய வாடகையாக நிர்ணயம் செய்யப்பட்டு வாடகை செலுத்தி வருகிறார்கள். எனவே, மேற்படி இடம் தனியார் ஆக்கிரமிப்பில் இல்லை. கோயில் கட்டுப்பாட்டிலேயே உள்ளது.

**9—**

## தேவஸ்தான இடங்கள் விற்பனை

**வினா எண் 53135—திரு. அ. சிவபெருமாள்:** மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

கழுகுமலை பேரூராட்சி, ஸ்ரீகழுகாசலமூர்த்தி தேவஸ்தானத்திற்குச் சொந்தமான இடங்கள் பொது மக்கள் உபயோகத்திற்கு விற்பனை செய்யப்படுமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. பி.சி. ராமசாமி, இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர்:**

திருக்கோயிலுக்குச் சொந்தமான இடங்கள் தனிப்பட்ட நபருக்கு விற்பனை செய்யப்படுவதில்லை என்பது அரசின் கொள்கை முடிவாக உள்ளதால், கழுகுமலை பேரூராட்சி, ஸ்ரீகழுகாசலமூர்த்தி திருக்கோயில் இடங்களைப் பொது மக்கள் உபயோகத்திற்கு விற்பனை செய்ய இயலாது.



**10—**

## தேசிய மகப்பேறு நிதியுதவித் திட்டம்

**வினா எண் 22793—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தேசிய மகப்பேறு நிதி உதவித் திட்டத்திற்கு கடந்த 2001-2002 ஆம் ஆண்டில் தமிழ்நாட்டிற்கு மத்திய அரசு வழங்கிய தொகை எவ்வளவு?

(ஆ) அத்திட்டத்திற்கு மாநில அரசு வழங்கிய நிதி எவ்வளவு?

(இ) மாவட்ட வாரியாக பயனாளிகள் எத்தனை பேர்?

**விடை—**

**மாண்புமிகு திரு. ந. தளவாய் சுந்தரம், மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:**

(அ) தேசிய மகப்பேறு நிதி உதவித் திட்டத்திற்குக் கடந்த 2001-2002 ஆம் ஆண்டில் தமிழ்நாட்டிற்கு மத்திய அரசு வழங்கிய தொகை ரூ.843.90 இலட்சம்.

(ஆ) அத்திட்டத்திற்கு மாநில அரசு எந்த நிதியும் வழங்கவில்லை.

(இ) மாவட்ட வாரியாக பயனாளிகள் விவரம்:—

| வ.எண் | மாவட்டம் | பயனாளிகள் 2001-2002 |
|---|---|---|
| 1 | சென்னை | 6872 |
| 2 | கோவை | 5020 |
| 3 | கடலூர் | 0 |
| 4 | தருமபுரி | 0 |
| 5 | திண்டுக்கல் | 8 |
| 6 | ஈரோடு | 2420 |
| 7 | காஞ்சிபுரம் | 4438 |

[2004 நவம்பர் 17

**11—**

## பிரசவ வார்டுக்குக் கூடுதல் படுக்கைகள்

**வினா எண் 35373—திரு. லா. சந்தானம்:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

உசிலம்பட்டி தொகுதி, உசிலம்பட்டி தலைமை அரசு மருத்துவமனையில் பிரசவ பகுதிக்குக் கூடுதலாக 24 படுக்கைகள் ஒதுக்க அரசு முன்வருமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. ந. தளவாய் சுந்தரம், மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:**

மதுரை மாவட்டம், உசிலம்பட்டி அரசு தலைமை மருத்துவமனையில் மொத்தம் 135 படுக்கை வசதிகள் உள்ளன. அவற்றில் 12 படுக்கைகள் கொண்ட பிரசவ வார்டு இயங்கி வருகிறது. இம்மருத்துவமனையில் நாள் ஒன்றுக்கு 3 பிரசவங்கள் மட்டுமே நிகழ்கின்றன. தற்போது படுக்கை வசதி போதுமானதாக உள்ளது. இருப்பினும், இம்மருத்துவமனை மாவட்ட தலைமை மருத்துவமனையாக உள்ளதால், எதிர்வரும் காலங்களில் பிரசவத்திற்கு அதிகமாக வருகை புரியும்பட்சத்தில், இம்மருத்துவமனைக்குக் கூடுதலாக படுக்கை வசதி செய்து தரப்படும்.

**12—**

## தாய் சேய் நல விடுதி பழுதுபார்த்தல்

**வினா எண் 35444—திரு. சி. சண்முகவேலு:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) உடுமலைப்பேட்டைத் தொகுதி, புங்கமுத்தூர் ஊராட்சி, சின்னபொம்மன்சாலையில் பழுதடைந்துள்ள தாய் சேய் நல விடுதியைப் பழுதுபார்க்க அரசு நடவடிக்கை மேற்கொள்ளுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?



2004 நவம்பர் 17]

**விடை—**

**மாண்புமிகு திரு. ந. தளவாய் சுந்தரம், மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) உடுமலைப்பேட்டை சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட சின்னபொம்மன்சாலை துணை சுகாதார நிலையத்தின் பழுதுகள் 2003-2004 ஆம் ஆண்டில் ஆர்.சி.எச். திட்ட நிதி ஒதுக்கீட்டில், ரூ.1,10,000/- மதிப்பீட்டில் பழுதுபார்க்கும் பணிகள் மேற்கொள்ளப்பட்டு, துணை சுகாதார நிலையம் மீண்டும் திறக்கப்பட்டு, அக்கட்டடத்தில் கிராம சுகாதார செவிலியர் தற்போது தங்கிப் பணிபுரிகிறார்.

**13—**

## ஆரம்ப சுகாதார நிலையத்திற்குக் கூடுதல் கட்டடம்

**வினா எண் 39597—திரு. ப. அரசன்:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

அறந்தாங்கி தொகுதி, மீமிசல் ஆரம்ப சுகாதார நிலையத்திற்குக் கூடுதல் கட்டட வசதி செய்து தரும் திட்டம் ஏதேனும் அரசிடம் உள்ளதா?

**விடை—**

**மாண்புமிகு திரு. ந. தளவாய் சுந்தரம், மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:**

அறந்தாங்கி தொகுதி, மீமிசல் ஆரம்ப சுகாதார நிலையத்திற்கு பிரசவ அறை மற்றும் 6 படுக்கைகளுடன் கூடிய வார்டு மற்றும் இரு குடியிருப்புக் கட்டடங்கள் கட்ட மதிப்பீடு தலைமைப் பொறியாளர் (கட்டடங்கள்) அவர்களிடம் கோரப்பட்டுள்ளது. வரைபடம் மற்றும் மதிப்பீடு பெறப்பட்டவுடன் கட்டடம் கட்ட பகுதி இரண்டு திட்டத்தின்கீழ் பரிசீலனைக்கு எடுத்துக்கொள்ள நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

[2004 நவம்பர் 17

14—

## புறநோயாளிகளின் எண்ணிக்கை

**வினா எண் 40267—திரு. கே. ஆறுமுகம்:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) செங்கற்பட்டு தொகுதியில் திருக்கழுக்குன்றம் தாலுக்கா மருத்துவமனையில் கடந்த ஆண்டு சிகிச்சை பெற்ற புறநோயாளிகள் எத்தனை பேர்?

(ஆ) அவர்களுக்கு வழங்கப்பட்ட மருந்துகளின் மதிப்பு எவ்வளவு?

**விடை—**

**மாண்புமிகு திரு. ந. தளவாய் சுந்தரம், மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) திருக்கழுக்குன்றம் தாலுக்கா மருத்துவமனையில் 2002-2003 ஆம் ஆண்டில் சிகிச்சை பெற்ற புறநோயாளிகள் எண்ணிக்கை 1,75,382 ஆகும். அவர்களுக்கு வழங்கப்பட்ட மருந்துகளின் மதிப்பு ரூ. 3,97,327/- ஆகும்.

15—

## சர்க்கரை, கொழுப்பு மற்றும் உப்பு பரிசோதனைகளுக்கு வசதிகள்

**வினா எண் 41253—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

சேலம் மாவட்டம், எடப்பாடி அரசு மருத்துவமனையில் சர்க்கரை, கொழுப்பு மற்றும் உப்பு போன்ற பரிசோதனைகளைச் செய்ய வசதி ஏற்படுத்தித் தர அரசு முன்வருமா?



2004 நவம்பர் 17]

**விடை—**

**மாண்புமிகு திரு. ந. தளவாய் சுந்தரம், மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:**

சேலம் மாவட்டம், எடப்பாடி அரசு மருத்துவமனையில் தற்போது இரத்தம் மற்றும் சிறுநீர், சர்க்கரை சம்பந்தப்பட்ட பரிசோதனைகள் செய்யப்பட்டு வருகின்றன. இரத்தத்தில் கொழுப்பு மற்றும் உப்பு போன்ற பரிசோதனைகளை செய்ய செமி ஆட்டோ அனலைசர் (Auto Analyser) என்ற உபகரணம் இல்லாத காரணத்தால், இப்பரிசோதனைகள் செய்யப்படுவதில்லை. நிதி நிலைமைக்கேற்ப இந்த உபகரணம் வாங்க நடவடிக்கை எடுக்கப்படும்.

16—

## ஊரக மருத்துவமனை தரம் உயர்த்துதல்

**வினா எண் 41749—திருமதி எஸ். கனிதா சம்பத்:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

திருப்போரூர் தொகுதிக்குட்பட்ட நெல்லிக்குப்பம் ஊராட்சியில் உள்ள ஊரக மருத்துவமனை, ஆரம்ப சுகாதார நிலையமாக நடப்பு ஆண்டில் தரம் உயர்த்தப்படுமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. ந. தளவாய் சுந்தரம், மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:**

நெல்லிக்குப்பம் ஊராட்சியை உள்ளடக்கிய திருப்போரூர் ஊராட்சி ஒன்றியத்தின் மக்கள் தொகைக்கேற்ப 4 ஆரம்ப சுகாதார நிலையங்கள் செயல்படுகின்றன. மேலும், தமிழகத்தின் மக்கள் தொகைக்கு ஏற்ப 1413 ஆரம்ப சுகாதார நிலையங்கள் தற்போது செயல்பட்டு வருவதால், நெல்லிக்குப்பம் ஊராட்சி ஒன்றிய மருந்தகத்தினை ஆரம்ப சுகாதார நிலையமாக தரம் உயர்த்தும் திட்டம் ஏதும் அரசின் பரிசீலனையில் இல்லை.

[2004 நவம்பர் 17

17—

## ஆரம்ப சுகாதார நிலையம் தரம் உயர்த்துதல்

**வினா எண் 47922—திரு. கோவை தங்கம்:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வால்பாறை தொகுதி, சோலையார் அணையில் உள்ள ஆரம்ப சுகாதார நிலையம் 10 படுக்கை அறைகள் கொண்ட மருத்துவமனையாக மாற்றப்படுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. ந. தளவாய் சுந்தரம், மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) வால்பாறை தொகுதி, சோலையார் ஆரம்ப சுகாதார நிலையத்தில் தற்போது இரண்டு படுக்கைகள் உள்ளன. இந்த ஆரம்ப சுகாதார நிலையத்தில் கடந்த ஓராண்டில் சராசரியாக மாதமொன்றுக்கு பயனடைந்த உள்நோயாளிகளின் எண்ணிக்கை ஒன்று; மற்றும் இங்கு நடைபெற்ற பிரசவங்கள் எண்ணிக்கை பத்து ஆகும். இங்கு பயனடைந்த உட்புற நோயாளிகளின் எண்ணிக்கை அடிப்படையில், படுக்கைகள் எண்ணிக்கையை மேலும் உயர்த்த சாத்தியக்கூறுகள் இல்லை.

18—

## ஆரம்ப சுகாதார நிலையத்திற்கு சுற்றுச்சுவர் கட்டுதல்

**வினா எண் 54279—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) எடப்பாடி தொகுதி, மகுடஞ்சாவடி ஆரம்ப சுகாதார நிலையத்திற்குச் சுற்றுச்சுவர் கட்டித் தர அரசு நடவடிக்கை எடுக்குமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?



2004 நவம்பர் 17]

**விடை—**

**மாண்புமிகு திரு. ந. தளவாய் சுந்தரம், மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) ஆரம்ப சுகாதார நிலையங்களுக்குச் சுற்றுச் சுவர் கட்ட அரசால் நிதி ஒதுக்கீடு எதுவும் செய்யப்படவில்லை. எனவே, சேலம் மாவட்டம், எடப்பாடி தொகுதி, மகுடஞ்சாவடி ஆரம்ப சுகாதார நிலையத்திற்குத் தற்போது சுற்றுச்சுவர் கட்ட சாத்தியக்கூறுகள் இல்லை.

19—

## மாணவிகளுக்கு இலவச தையல் பயிற்சி

**வினா எண் 22817—திரு. கோவை தங்கம்:** மாண்புமிகு சமூக நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வால்பாறை தொகுதியில் வேலை இல்லாமல் உள்ள மாணவிகளுக்கு தையற் பயிற்சிப் பள்ளி மூலம் இலவசமாய் தையல் கற்றுத் தர அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திருமதி பா. வளர்மதி, சமூக நலத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) கோவை மாவட்டத்திலுள்ள செட்டிப்பாளையம் என்ற இடத்தில் 20 நபர்களைக் கொண்டு தையல் பயிற்சி நிலையம் இயங்கி வருகிறது. பயிற்சி நிலையங்கள் மூன்றாண்டுக்கு ஒருமுறை சுழற்சி அடிப்படையில், பயிற்சியாளர்கள் கிடைக்கும் இடத்திற்கு மாற்றப்பட்டு, அந்தந்த இடத்தில் கிடைக்கும் மாணவிகளைக் கொண்டு தையல் பயிற்சி அளிக்கப்பட்டு வருகிறது. அவ்வாறு சுழற்சி முறை ஏற்படும்போது, வால்பாறைக்கு (செட்டிப்பாளையம்) இப்பயிற்சி நிலையத்தை இடமாற்றம் செய்து பயிற்சி அளிக்கலாம். தற்போது வால்பாறையில் தையல் பயிற்சி நிலையம் ஆரம்பிக்கும் கருத்துரு ஏதும் அரசிடமில்லை.

## முதியோர் உதவித் தொகை

**வினா எண் 33061—டாக்டர் சி. விஜயபாஸ்கர்:** மாண்புமிகு சமூக நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) புதுக்கோட்டையில் முதியோர் உதவித் தொகை பெறுபவர்கள் எத்தனை பேர்?

(ஆ) உதவித் தொகை பெறுவதற்கான தகுதிகள் யாவை?

**விடை—**

**மாண்புமிகு திருமதி பா. வளர்மதி, சமூக நலத் துறை அமைச்சர்:**

(அ) புதுக்கோட்டை மாவட்டத்தில் முதியோர் உதவித் தொகை பெறுபவர்களின் எண்ணிக்கை 21926 ஆகும்.

(ஆ) முதியோர் உதவித் தொகை பெறுவதற்கான தகுதிகள் இணைப்பில் கொடுக்கப்பட்டுள்ளன.

## இணைப்பு

### முதியோர் உதவித்தொகை பெறுவதற்கான தகுதிகள் பின்வருமாறு:



| திட்டம் | வயது | வருமானம் | சொத்து மதிப்பு | பிற நிபந்தனைகள் |
|---|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) | (5) |
| 1 (அ) முதியோர் உதவித் திட்டம் (சாதாரணம்) | 65 | ஏதுமில்லை | ரூ.5000/- மிகாமல் | (1) பிச்சைக்காரராக இருத்தல் கூடாது. (2) வயது வந்த மகன் இருக்கக்கூடாது. (3) சுயமாக வேலை செய்து தன்னை காப்பாற்றிக்கொள்ள இயலாதவராக இருத்தல் வேண்டும். |
| (ஆ) (i) முதியோர் உதவித்திட்டம் (கண்பார்வை அற்றோர், மனநிலை சரியில்லாதவர், தொழு நோயாளி பக்க வாதம் அல்லது கை, கால் இழந்தவர்கள்) | 60 | ஏதுமில்லை | ரூ.5000/- மிகாமல் | (1) பிச்சைக்காரராக இருத்தல் கூடாது. (2) வயது வந்த மகன் இருக்கக்கூடாது. (3) சுயமாக வேலை செய்து தன்னை காப்பாற்றிக் கொள்ள இயலாதவராக இருத்தல் வேண்டும். |
| (2) விதவை ஒய்வூதியத் திட்டம் | வயது வரம்பு இல்லை | ஏதுமில்லை | ரூ.1000/– மிகாமல் | (1) பிச்சைக்காரராக இருத்தல் கூடாது. (2) வருமானம் ஏதும் இன்றி, வயது வந்த மகன்கள் இருந்தாலும் ஓய்வூதியம் வழங்கலாம். |
| (3) உடல் ஊனமுற்றோர் உதவித் திட்டம் | 45 | ஏதுமில்லை | ரூ.1000/– மிகாமல் | (1) பிச்சைக்காரராக இருத்தல் கூடாது. (2) வயதுவந்த மகன் இருக்கக் கூடாது. (3) சுயமாக வேலை செய்து தன்னை காப்பாற்றிக் கொள்ள இயலாதவராக இருத்தல் வேண்டும். |
| (4) ஆதரவற்ற வேளாண்மைத் தொழிலாளர் ஒய்வூதியத் திட்டம் | 60 | ஏதுமில்லை | ரூ.1000/– மிகாமல் | (1) நிலமற்ற ஏழை. (2) பிச்சைக்காரராக இருத்தல் கூடாது. (3) வயதுவந்த மகன் இருத்தல் கூடாது. |
| (5) கணவனால் கைவிடப்பட்ட பெண்கள் ஒய்வூதியத் திட்டம் | 30 | ஏதுமில்லை | ரூ.1000/– மிகாமல் | (1) பிச்சைக்காரராக இருத்தல் கூடாது. (2) மறுமணம் செய்திருக்கக் கூடாது. (3) 5 ஆண்டுகளுக்கு மேல் கணவனை பிரிந்திருக்க வேண்டும். உரிமையியல் நீதிமன்றத்தின் மூலமாக விவாகரத்து பெற்றவர். (4) வருமானம் ஏதுமின்றி வயது வந்த மகன்கள் இருந்தாலும் ஒய்வூதியம் வழங்கலாம். |

[2004 நவம்பர் 17

21—

## நலிந்தோர் நலவாழ்வுத் திட்டம்

**வினா எண் 33967—திரு. கே.கே. சிவசாமி:** மாண்புமிகு சமூக நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

அருப்புக்கோட்டை தொகுதி, திருச்சுழி ஒன்றியம், கே.வாகைக்குளம் பகுதியில் நலிந்தோர் நலவாழ்வுத் திட்டத்தின் கீழ் விண்ணப்பம் செய்தவர்களுக்கு உதவித் தொகை வழங்க அரசு முன்வருமா?

**விடை—**

**மாண்புமிகு திருமதி பா. வளர்மதி, சமூக நலத் துறை அமைச்சர்:**

அருப்புக்கோட்டை தொகுதி, திருச்சுழி ஒன்றியம், கே.வாகைக்குளம் கிராமத்தில் நலிந்தோர் நலவாழ்வு நிதியுதவித் திட்டத்தின்கீழ் நிதியுதவி கோரி கே.வாகைக்குளம் கிராமத்தைச் சேர்ந்த திருமதி நாவக்காள், க/பெ. பாலு நாயக்கர் என்பவர் 18-4-2000-ல் விண்ணப்பம் செய்தார். மேற்படியாருக்கு நலிந்தோர் நலவாழ்வு திட்டத்தின்கீழ் நிதியுதவி 21-11-2000-ல் வழங்கப்பட்டுள்ளது. 5/2000-லிருந்து 30-9-2003 முடிய திருச்சுழி ஒன்றியம் உட்பட நலிந்தோர் நலவாழ்வுத் திட்டத்தில் பெறப்பட்ட விண்ணப்பங்களில் தகுதியுடைய விண்ணப்பங்கள் 2084 தேர்வு செய்யப்பட்டுள்ளன. அரசிடமிருந்து நிதி ஒதுக்கீடு பெறப்பட்டவுடன் விண்ணப்பதாரர்களுக்கு உதவித் தொகை வழங்கப்படும்.

22—

## ஊட்டச்சத்து மையம்

**வினா எண் 37398—திரு. சி. சண்முகவேலு:** மாண்புமிகு சமூக நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) உடுமலைப்பேட்டை தொகுதி, காந்திபுரம் பகுதியில் புதிதாக ஊட்டச்சத்து மையம் அமைத்திட அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?



2004 நவம்பர் 17]

**விடை—**

**மாண்புமிகு திருமதி பா. வளர்மதி, சமூக நலத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) உடுமலைப்பேட்டை தொகுதி, காந்திபுரம் பகுதி ஊட்டச்சத்து மையம் கடந்த 18-3-2004 முதல் தனியார் கட்டடத்தில் செயல்பட்டு வருகிறது. மாவட்ட ஊரக வளர்ச்சி முகமைமூலம் கட்டடம் கட்ட நடவடிக்கையும் எடுக்கப்பட்டு வருகிறது.

23—

## அங்கன்வாடி மையம் தொடங்குதல்

**வினா எண் 46813—திரு. ப. அரசன்:** மாண்புமிகு சமூக நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

அறந்தாங்கி ஒன்றியம், ஏகப்பெருமாளூர் ஊராட்சி, தோடாக்கி கிராமத்தில்,மேல்மங்களம் ஊராட்சி, மேல்மங்களம் தெற்கு குடியிருப்பு, ஏகணிவயல் தெற்கு கிராமம் மற்றும் அத்தாணி கிழக்கு குடியிருப்பில் அங்கன்வாடி மையம் தொடங்கும் திட்டம் ஏதேனும் அரசின் பரிசீலனையில் உள்ளதா?

**விடை—**

**மாண்புமிகு திருமதி பா. வளர்மதி, சமூக நலத் துறை அமைச்சர்:**

அறந்தாங்கி ஒன்றியம், ஏகப்பெருமாளூர் ஊராட்சி, தோடாக்கி கிராமத்தில் ஏற்கனவே அங்கன்வாடி மையம் செயல்பட்டு வருகிறது. மேல்மங்களம் ஊராட்சி, மேல்மங்களம் தெற்கு குடியிருப்பில் வசிக்கும் மக்கள் ஏற்கெனவே மேல்மங்களம் கிராமத்தில் செயல்படும் அங்கன்வாடி மையத்தில் பயனடைகிறார்கள். ஏகணிவயல் தெற்கு கிராம மக்கள், ஏகணிவயலில் செயல்படும் அங்கன்வாடி மையத்தில் பயனடைகிறார்கள். அத்தாணி கிழக்கு கிராமத்தில் ஏற்கெனவே அங்கன்வாடி மையம் ஒன்று செயல்பட்டு வருகிறது.

[2004 நவம்பர் 17

**24—**

## தனியார் முதியோர் காப்பகங்கள்

**வினா எண் 47824—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு சமூக நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழகத்தில் எந்தெந்த இடங்களில் தனியார் முதியோர் காப்பகங்கள் செயல்பட்டு வருகின்றன?

(ஆ) இதற்கு அரசு எந்த வழிகளில் உதவி செய்து வருகிறது?

**விடை—**

**மாண்புமிகு திருமதி பா. வளர்மதி, சமூக நலத் துறை அமைச்சர்:**

(அ) தமிழகத்தில் தருமபுரி, திருவண்ணாமலை, விழுப்புரம், தூத்துக்குடி மாவட்டங்கள் தவிர, ஏனைய அனைத்து மாவட்டங்களிலும் மத்திய / மாநில அரசின் மானிய உதவியுடன் தனியார் தொண்டு நிறுவனங்களால் நடத்தப்படும் முதியோர் காப்பகங்கள் செயல்பட்டு வருகின்றன.

(ஆ) தனியார் தொண்டு நிறுவனங்களால் நடத்தப்பட்டு வரும் முதியோர் காப்பகங்களுக்கு மத்திய மற்றும் மாநில அரசு மானிய உதவிகள் வழங்கி, அந்நிறுவனங்களின் செயல்பாடுகளை ஊக்குவித்தும் மற்றும் கண்காணித்தும் வருகிறது.

**25—**

## மகளிர் விடுதி

**வினா எண் 20270—திரு. செ. வெங்கடாஜலம்:** மாண்புமிகு ஆதிதிராவிடர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சேலம் மாவட்டத்தில் குறைந்த வருவாய் பெறும் ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் பெண்களுக்காக மகளிர் விடுதி கட்டப்பட்டுள்ளதா?

(ஆ) ஆம் எனில், எவ்வளவு நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது?



2004 நவம்பர் 17]

**விடை—**

**மாண்புமிகு திரு. சொ. கருப்பசாமி, ஆதிதிராவிடர் நலத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) இல்லை.

**26—**

## இலவச வீட்டுமனைப் பட்டா

**வினா எண் 29347—திரு. நா. சந்திரமோகன்:** மாண்புமிகு ஆதிதிராவிடர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

சீர்காழி தொகுதி, சீர்காழி ஒன்றியம், திட்டை ஊராட்சியில் ஆதிதிராவிடர் மக்களுக்கு இலவச வீட்டுமனைப் பட்டா வழங்க அரசிடம் திட்டம் உள்ளதா?

**விடை—**

**மாண்புமிகு திரு. சொ. கருப்பசாமி, ஆதிதிராவிடர் நலத் துறை அமைச்சர்:**

நாகப்பட்டினம் மாவட்டம், சீர்காழி வட்டம், திட்டை கிராமம் புல எண்.105/2பி மற்றும் பிறவற்றில் 1.31.5 ஹெக்டேர்ஸ் புஞ்சை நிலங்கள் கையகப்படுத்தப்பட்டு தீர்ப்பாணை வழங்கப்பட்டுள்ளது. இந்நிலையில் மயிலாடுதுறை சார்பு நீதிமன்றத்தில் வழக்கு எண் ஏ.எஸ்.எண்.145/03, 147/03 மற்றும் 149/03 ஆகிய வழக்குகள் நடைபெற்று வருகின்றன. இவ்வழக்குகளை விரைந்து முடிவு செய்ய நில எடுப்பு அலுவலர் மூலம் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது. வழக்குகள் முடிவுற்றதும் தீர்ப்பின் அடிப்படையில் பட்டாக்கள் வழங்கப்படும்.

**27—**

## இலவச வீடுகளைச் செப்பனிடுதல்

**வினா எண் 32818—திரு. எஸ். நடராஜன்:** மாண்புமிகு ஆதிதிராவிடர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

[2004 நவம்பர் 17

(அ) நாட்ராம்பள்ளி தொகுதி, கந்திலி ஒன்றியம், லக்கி நாயக்கன்பட்டி பல்லலப் பள்ளி காலனியில் அரசு வழங்கிய இலவச வீடுகள் இடிந்து விழும் நிலையில் உள்ளவற்றை செப்பனிட அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. சொ. கருப்பசாமி, ஆதிதிராவிடர் நலத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) பழுதடைந்த தொகுதி வீடுகளைச் செப்பனிட நிதி ஒதுக்கீடு ஏதும் செய்யப்படுவதில்லை. இலவச தொகுப்பு வீடுகள் கட்டித்தரும் திட்டத்தின்கீழ் வீடுகள் கட்டப்பட்டு பயனாளிகளுக்கு வழங்கிய பின் பிற்காலங்களில் ஏற்படும் பழுதுகளைச் சரிசெய்ய திட்டத்தில் வழிவகை ஏதும் செய்யப்படவில்லை.

**28—**

## மாணவியர் விடுதிக்கு எரிவாயு அடுப்பு வசதி

**வினா எண் 35407—திரு. நா. சந்திரமோகன்:** மாண்புமிகு ஆதிதிராவிடர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சீர்காழி தொகுதி, சீர்காழி நகரில் ஆதிதிராவிட மாணவியர் விடுதியில் எரிவாயு அடுப்பு வசதியுடன் (எல்.பி.ஜி.) சமையலறை கட்டிக் கொடுக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. சொ. கருப்பசாமி, ஆதிதிராவிடர் நலத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) சீர்காழி நகரில் உள்ள ஆதிதிராவிடர் நல மாணவியர் விடுதிக்கு அனைத்து வசதிகளுடன் கூடிய அரசு கட்டடம் கட்டப்பட்டு அதில் அரசாணை (நிலை) எண். 62, ஆதிதிராவிடர்



2004 நவம்பர் 17]

மற்றும் பழங்குடியினர் நலத் துறை, நாள் 21-5-2003 ஆணையின்படி சமையல் எரிவாயு இணைப்பு பொருத்தப்பட்டு தற்போது நல்ல முறையில் செயல்பட்டு வருகிறது.

**29—**

## பள்ளிக்கு மரச்சாமான்கள் வழங்குதல்

**வினா எண் 35426—திரு. நா. சந்திரமோகன்:** மாண்புமிகு ஆதிதிராவிடர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

சீர்காழி தொகுதி, சீர்காழி ஒன்றியம், காரைமேடு ஆதிதிராவிடர் நடுநிலைப் பள்ளிக்கு மரச்சாமான்களை கொடுப்பதற்கு அரசு முன்வருமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. சொ. கருப்பசாமி, ஆதிதிராவிடர் நலத் துறை அமைச்சர்:**

சீர்காழி தொகுதி, சீர்காழி ஒன்றியம், காரைமேடு ஆதிதிராவிடர் நடுநிலைப் பள்ளியில் போதுமான மரச்சாமான்கள் உள்ளன.

**30—**

## மாணவர் விடுதியில் ஆழ்குழாய்க் கிணறு அமைத்தல்

**வினா எண் 39165—திரு. சோ. இராசேந்திரன்:** மாண்புமிகு ஆதிதிராவிடர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கோவில்பட்டி ஆதிதிராவிடர் அரசு மாணவர் விடுதியில் கூடுதல் ஆழ்குழாய்க் கிணறு அமைக்கும் திட்டம் நிறைவேற்றப்படுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

[2004 நவம்பர் 17

**விடை—**

**மாண்புமிகு திரு. சொ. கருப்பசாமி, ஆதிதிராவிடர் நலத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) கோவில்பட்டி ஆதிதிராவிடர் நல மாணவர் விடுதிக்கு கூடுதலாக ஓர் ஆழ்குழாய்க் கிணறு அமைக்கப்பட்டு தற்போது போதுமான தண்ணீர் கிடைத்து வருகின்றது.

**31—**

## மயானக் கொட்டகை அமைத்தல்

**வினா எண் 47195—திரு. நா. சந்திரமோகன்:** மாண்புமிகு ஆதிதிராவிடர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சீர்காழி தொகுதி, பன்னங்குடி ஊராட்சி பெரிய கொப்பியம் கிராமத்தில் மயானக் கொட்டகை அமைக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. சொ. கருப்பசாமி, ஆதிதிராவிடர் நலத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) சீர்காழி தொகுதி, பன்னங்குடி ஊராட்சியில் உள்ள பெரிய கொப்பியம் கிராமத்திற்கு பாராளுமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு திட்டத்தின்கீழ் மயானக் கொட்டகை வரும் நிதியாண்டில் அமைக்க உத்தேசிக்கப்பட்டுள்ளது.

**32—**

## தார்ச் சாலை அமைத்தல்

**வினா எண் 47196—திரு. நா. சந்திரமோகன்:** மாண்புமிகு ஆதிதிராவிடர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சீர்காழி தொகுதி, புதுப்பட்டினம் ஊராட்சி, தர்காஸ் ஆதிதிராவிடர் தெரு மயானக் கொட்டகைக்கு செல்லும் சாலையை தார் சாலையாக மாற்ற அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?



2004 நவம்பர் 17]

**விடை—**

**மாண்புமிகு திரு. சொ. கருப்பசாமி, ஆதிதிராவிடர் நலத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) சீர்காழி தொகுதி, புதுப்பட்டினம் ஊராட்சி, தர்காஸ் ஆதிதிராவிடர் தெரு மயானக் கொட்டகைக்கு செல்லும் சாலையை தார் சாலையாக்கும் திட்டம் ஏதுமில்லை.

**33—**

## சமுதாயக் கூடம் கட்டுதல்

**வினா எண் 47876—திரு. நா. சந்திரமோகன்:** மாண்புமிகு ஆதிதிராவிடர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சீர்காழி தொகுதி, குன்னம் ஊராட்சி கீழத்தெருவில் வசிக்கும் ஆதிதிராவிட மக்களுக்கு மற்றும் வைத்தீஸ்வரன் கோயில் பேரூராட்சி 5-வது வார்டு தெற்கு வீதியில் சமுதாயக் கூடம் கட்டித்தர அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. சொ. கருப்பசாமி, ஆதிதிராவிடர் நலத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) கருத்துரு பரிசீலனையில் இல்லை.

**34—**

## காலனி வீடுகளைப் புதுப்பித்தல்

**வினா எண் 47950—திரு. அ. நடராஜன்:** மாண்புமிகு ஆதிதிராவிடர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

குத்தாலம் தொகுதி, சிவனாரகம் ஊராட்சியிலுள்ள காலனி வீடுகளை புதுப்பிக்கும் திட்டம் அரசிடம் உள்ளதா?

**விடை—**

**மாண்புமிகு திரு. சொ. கருப்பசாமி, ஆதிதிராவிடர் நலத் துறை அமைச்சர்:**

ஊராட்சிகளில் கட்டப்பட்ட தொகுப்பு வீடுகளின் பழுதினை நீக்கி சரி செய்ய மத்திய / மாநில அரசுத் திட்டம் ஏதும் தற்போது நடைமுறையில் இல்லை. எனவே, குத்தாலம் தொகுதி சிவனாரகம் ஊராட்சியில் உள்ள பழுதடைந்த தொகுப்பு வீடுகளை அரசால் சரிசெய்ய இயலாது.

**35—**

## மயானச் சாலை அமைத்தல்

**வினா எண் 49494—திரு. நா. சந்திரமோகன்:** மாண்புமிகு ஆதிதிராவிடர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) நாகப்பட்டினம் மாவட்டம், சீர்காழி ஒன்றியம், விளந்திட சமுத்திரம் ஆதிதிராவிட மக்களுக்கு மயானச் சாலைக்கு நிலம் கையகப்படுத்தப்பட்டும், மயானச் சாலை அமைக்கப்படவில்லை என்பதை அரசு அறியுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது மயானச் சாலை அமைக்கப்படும்?

**விடை—**

**மாண்புமிகு திரு. சொ. கருப்பசாமி, ஆதிதிராவிடர் நலத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) நாகப்பட்டினம் மாவட்டம், சீர்காழி ஒன்றியம், விளந்திட சமுத்திரம் ஆதிதிராவிட மக்களுக்கு மயானச் சாலை அமைத்திட சாலையின் நீளம் 250 மீட்டர் ஆகும். இச்சாலையினை கிராவல் சாலையாக மேம்பாடு செய்திட மதிப்பீடு ரூ.50,000/- ஆகும். 11-வது நிதிக் குழு மானியக் குழு திட்டத்தின்கீழ் இப்பணியினை நிறைவேற்ற ஆராயப்படும்.





**36—**

## மயானக் கொட்டகை அமைத்தல்

**வினா எண் 49514—திரு. நா. சந்திரமோகன்:** மாண்புமிகு ஆதிதிராவிடர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சீர்காழி ஒன்றியம், மங்கை மடம் ஊராட்சி, காமராஜர் காலனிக்கு மயானக் கொட்டகை அமைத்து சாலை அமைக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. சொ. கருப்பசாமி, ஆதிதிராவிடர் நலத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) நாகப்பட்டினம் மாவட்டம், சீர்காழி ஒன்றியம், மங்கை மடம் ஊராட்சி, காமராஜர் காலனிக்கு மயானக் கொட்டகையினை வரும் நிதியாண்டில் பாராளுமன்ற உறுப்பினர் உள்ளூர் தொகுதி மேம்பாட்டுத் திட்டத்தின்கீழ் அமைக்கவும், மயானச் சாலையினை 11-வது நிதிக் குழு திட்டத்தின்கீழ் மேற்கொள்ளவும் உத்தேசிக்கப்பட்டுள்ளது.

**37—**

## மகளிர் விடுதிக்குக் கூடுதல் கட்டடம்

**வினா எண் 50466—திரு. கோவை தங்கம்:** மாண்புமிகு ஆதிதிராவிடர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

கோவை மாநகரில் உள்ள நிர்மலா கல்லூரி சங்கம் எதிரில் உள்ள ஆதிதிராவிடர் மகளிர் தங்கும் விடுதிக்குக் கூடுதலாக கட்டடம் கட்ட நடவடிக்கை எடுக்கப்படுமா?

[2004 நவம்பர் 17

**விடை—**

**மாண்புமிகு திரு. சொ. கருப்பசாமி, ஆதிதிராவிடர் நலத் துறை அமைச்சர்:**

கோவை மாநகரில் டாக்டர் அம்பேத்கர் கல்லூரி மாணவியர் விடுதியில் கூடுதல் இடவசதிக்காக மாணவியர் அறை ரூ.21.45 இலட்சம் மதிப்பீட்டில் கட்ட 15.7.2004 அன்று உரிய ஆணைகள் வழங்கப்பட்டுள்ளன.

**38—**

## திருமண மண்டபம் அமைத்தல்

**வினா எண்—53146—திரு. அ. சிவபெருமான்:** மாண்புமிகு ஆதிதிராவிடர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

ஒட்டப்பிடாரம் தொகுதி, புளியம்பட்டியில் தாட்கோ மூலம் திருமண மண்டபம் அமைக்கும் திட்டம் அரசிடம் உள்ளதா?

**விடை—**

**மாண்புமிகு திரு. சொ. கருப்பசாமி, ஆதிதிராவிடர் நலத் துறை அமைச்சர்:**

ஒட்டப்பிடாரம் தொகுதி, புளியம்பட்டியில் புதிய திருமண மண்டபம் கட்டித் தர முன்மொழிவு ஏதும் அரசின் பரிசீலனையில் இல்லை.

**39—**

## மயானக் கொட்டகை அமைத்தல்

**வினா எண் 54120—திரு. நா. சந்திரமோகன்:** மாண்புமிகு ஆதிதிராவிடர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சீர்காழி தொகுதி, கொள்ளிடம் ஒன்றியம், வேட்டங்குடி ஊராட்சி ஆதிதிராவிடர் பயன்படுத்தும் மயானத்திற்கு மயானக் கொட்டகை கட்டிக் கொடுக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?



2004 நவம்பர் 17]

**விடை—**

**மாண்புமிகு திரு. சொ. கருப்பசாமி, ஆதிதிராவிடர் நலத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) சீர்காழி தொகுதி, கொள்ளிடம் ஒன்றியம், வேட்டங்குடி ஊராட்சியில் ஆதிதிராவிடர் பயன்படுத்தும் மயானத்திற்கு 2002-2003 ஆம் வருடத்தில் பாராளுமன்ற உறப்பினர் உள்ளூர் தொகுதி மேம்பாட்டு திட்டத்தின்கீழ் மயானக் கொட்டகை கட்டிக் கொடுக்கப்பட்டுள்ளது.

**40—**

## நகரப் பேருந்தை இயக்குதல்

**வினா எண் 9688—திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தருமபுரி மாவட்டம், பெண்ணாகரம் தொகுதி, ஒசஅள்ளி புதூருக்கு கோமனஅள்ளி, ஒசஅள்ளிபுதூர், பூச்செட்டிஅள்ளி வழியாக நகரப் பேருந்தை இயக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. இரா. விசுவநாதன், போக்குவரத்துத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழகம் (சேலம்) லிமிடெட், தருமபுரியின் மூலம் இயக்கப்பட்ட அக்கழக நகர் பேருந்து தடம் எண். டி31-ன் மூலம் நாளொன்றுக்கு 10 நடைகள் தருமபுரியிலிருந்து கோமனஅள்ளி, ஒசஅள்ளிபுதூர், பூச்செட்டிஅள்ளி வழியாக இயக்கப்பட்டு வருகிறது. இத்தடத்தில் பயணிகளின் பயன்பாடு 48 விழுக்காடுகளே உள்ளன. மேலும் கோரியுள்ள வழித்தடத்தில் மேலும் கூடுதல் பேருந்து வசதி செய்திட இயலாத நிலையில் உள்ளது.

41—

[2004 நவம்பர் 17

## பேருந்துகள் விவரம்

**வினா எண் 14239—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழ்நாடு அரசுப் போக்குவரத்துக் கழகம், சேலம் கோட்டம் 1-ல் எத்தனை பேருந்துகள் உள்ளன?

(ஆ) இவற்றில் எத்தனை பேருந்துகள் நல்ல நிலையிலுள்ளன?

(இ) புதுப்பிக்க வேண்டிய பேருந்துகள் எவ்வளவு?

**விடை—**

**மாண்புமிகு திரு. இரா. விசுவநாதன், போக்குவரத்துத் துறை அமைச்சர்:**

(அ) தமிழ்நாடு அரசுப் போக்குவரத்துக் கழகம் சேலம் கோட்டம் 1ல் தற்பொழுது மொத்தம் 924 பேருந்துகள் உள்ளன.

(ஆ) அனைத்துப் பேருந்துகளும் நல்ல நிலையில் உள்ளன.

(இ) பழைய பேருந்துகள் அவ்வப்பொழுது தேர்வு செய்யப்பட்டு காலக்கட்டத்தில் புதுப்பிக்கப்படுவதால் அனைத்துப் பேருந்துகளும் நல்ல நிலையில் உள்ளன.

42—

## டயர் டியூப் தயாரிக்கும் தொழிற்கூடம்

**வினா எண் 14878—திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழக அரசுப் போக்குவரத்துக் கழகத்தின் சார்பாக டயர் டியூப் தயாரிக்கும் தொழிற்கூடம் ஒன்று தருமபுரியில் தொடங்கும் திட்டம் அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது?



2004 நவம்பர் 17]

**விடை—**

**மாண்புமிகு திரு. இரா. விசுவநாதன், போக்குவரத்துத் துறை அமைச்சர்:**

(அ) அனைத்து தமிழக அரசுப் போக்குவரத்துக் கழகங்களின் சார்பாக டயர் டியூப் தயாரிக்கும் தொழிற்கூடம் ஒன்று தருமபுரியில் தொடங்கும் திட்டம் அரசின் பரிசீலனையில் இல்லை.

(ஆ) இக்கேள்வி எழாது.

43—

## காலை, மாலை பேருந்துகள் இயக்குதல்

**வினா எண் 14891—திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தருமபுரி மாவட்டம், பெண்ணாகரம் தொகுதி, ஏலகிரி ஊராட்சி, பழனிகவுண்டன்கொட்டாய்க்கு காலை, மாலை இரண்டு முறை பேருந்துகள் இயக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. இரா. விசுவநாதன், போக்குவரத்துத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) தருமபுரி மாவட்டம், பெண்ணாகரம் தொகுதியில், தருமபுரி தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழக பேருந்து தடம் எண் டி.5சி-யின் மூலம் தருமபுரியிலிருந்து ஏலகிரி ஊராட்சியில் உள்ள பழனிகவுண்டன்கொட்டாய் வரை நாளொன்றுக்கு 4 நடைகளும், நகர் பேருந்து தடம் எண். டி.11-ன் மூலம் நாளொன்றுக்கு 2 நடைகளும் மொத்தம் 6 நடைகள் இயக்கப்பட்டு வருகின்றன. இதில் பயணிகளின் அடர்வு 50 விழுக்காடுகளுக்கு குறைவாக உள்ளதால், மேலும் கூடுதல் பேருந்துகளை தருமபுரி முதல் பழனிகவுண்டன்கொட்டாய் தடத்தில் இயக்கிட திட்டம் ஏதும் அரசின் பரிசீலனையில் இல்லை.

[2004 நவம்பர் 17

**44—**

## பேருந்து இயக்குதல்

**வினா எண் 14904—திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) ஒகேனக்கல்லிலிருந்து பெங்களூருக்கு பேருந்து இயக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. இரா. விசுவநாதன், போக்குவரத்துத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) கர்நாடக / தமிழ்நாடு ஒப்பந்தங்களின் அடிப்படையில், தற்சமயம் தருமபுரி தமிழ்நாடு அரசுப் போக்குவரத்துக் கழகத்தின் மூலம் பெண்ணாகரம் முதல் பெங்களூர் (வழி) தருமபுரி வழித்தடத்தில் நாளொன்றுக்கு 2 பேருந்துகள் மூலம் 6 நடைகள் இயக்கப்பட்டு வருகின்றன. அதனால் ஒகேனக்கல்லிலிருந்து பெங்களூருக்கு நேரிடையாக பேருந்துகள் இயக்க இயலாத நிலை உள்ளது.

**45—**

## பேருந்தை மீண்டும் இயக்குதல்

**வினா எண் 17069—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சேலம் கிளை போக்குவரத்துக் கழகத்திலிருந்து வரும் 30டி என்ற நகரப் பேருந்து வெள்ளையம்பாளையம், கரையானூர் வழியாக சேலம் செல்பவை கடந்த ஒரு மாதமாக வருவதில்லை என்பது அரசுக்கு தெரியுமா?

(ஆ) ஆம் எனில், உடனடியாக அந்த 30டி நகரப் பேருந்தை மீண்டும் இயக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?



2004 நவம்பர் 17]

**விடை—**

**மாண்புமிகு திரு. இரா. விசுவநாதன், போக்குவரத்துத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) சேலம் கிளை போக்குவரத்துக் கழகத்திலிருந்து வெள்ளையம்பாளையம், கரையானூர் வழியாக சேலம் செல்லும் 30டி என்ற நகரப் பேருந்து நிறுத்தப்படாமல் தொடர்ந்து இயக்கப்பட்டு வருகின்றது. இப்பேருந்து மேற்கூறிய வழித்தடத்தில் தினசரி இரண்டு நடைகள் இயக்கப்பட்டு வருகின்றன. மேலும், தடம் எண்.87 என்ற பேருந்தின் மூலமாக சேலத்திலிருந்து கரையானூர் வழியாக வெள்ளையம்பாளையம் வரை இரண்டு நடைகள் இயக்கப்படுகின்றன.

**46—**

## எல்.எஸ்.எஸ். பேருந்துகள்

**வினா எண் 17825—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சேலம் மாவட்டம், சேலத்திலிருந்து மதுரைக்கு எத்தனை எல்.எஸ்.எஸ். பேருந்துகள் இயங்கி வருகின்றன?

(ஆ) இவற்றை அதிகரிக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. இரா. விசுவநாதன், போக்குவரத்துத் துறை அமைச்சர்:**

(அ) சேலம்-மதுரை வழித்தடத்தில் சாதாரணப் பேருந்துகளாக 22 பேருந்துகள் தமிழ்நாடு அரசுப் போக்குவரத்துக் கழகம் (சேலம்) லிமிடெட், சேலம் மூலமாக இயக்கப்பட்டு வருகின்றன. இவை ஒவ்வொன்றும் தலா 2 நடைகள் வீதம் தினசரி 44 நடைகளாக இயங்குகின்றன. இப்பேருந்துகளின் சராசரி பயணிகள் அடர்வு 80 சதவிகிதம் உள்ளது. ஆனால், சேலத்திலிருந்து மதுரைக்கு எல்.எஸ்.எஸ். பேருந்துகள் ஏதும் இயக்கப்படவில்லை.

(ஆ) கேள்வி எழவில்லை.

47—

[2004 நவம்பர் 17

## சிறப்புப் பேருந்து வசதி

**வினா எண் 25720—திரு. ப. அரசன்:** மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

அறந்தாங்கி நகரப் பேருந்து நிலையத்திலிருந்து அறந்தாங்கி ஸ்ரீவீரமாகாளியம்மன் ஆலயம், அழியாநிலை ஸ்ரீஆஞ்சநேயர் ஆலயம் வழியாக நற்பவளக்குடி ஸ்ரீமெய்யர் அய்யனார் ஆலயத்திற்கு செவ்வாய் மற்றும் வெள்ளிக்கிழமைகளில் சிறப்புப் பேருந்து வசதி செய்து தரும் திட்டம் அரசிடம் உள்ளதா?

**விடை—**

**மாண்புமிகு திரு. இரா. விசுவநாதன், போக்குவரத்துத் துறை அமைச்சர்:**

அறந்தாங்கி ஸ்ரீவீரமாகாளியம்மன் ஆலயம், அழியாநிலை ஸ்ரீஆஞ்சநேயர் ஆலயம், நற்பவளக்குடி ஸ்ரீமெய்யர் அய்யனார் ஆலயம் ஆகிய ஆலயங்களுக்கு விழாக்காலங்களில் அறந்தாங்கி பேருந்து நிலையத்திலிருந்து சிறப்புப் பேருந்துகள் இயக்கப்படுகின்றன. ஒவ்வொரு செவ்வாய் மற்றும் வெள்ளிக்கிழமைகளிலும் சிறப்புப் பேருந்து வசதியினைப் பயன்படுத்தும் பொதுமக்களின் பயன்பாடு குறைவாக உள்ளதால் சிறப்புப் பேருந்து வசதி செய்து தரும் திட்டம் அரசிடம் இல்லை.

48—

## பேருந்து வசதி

**வினா எண் 35807—திரு. என். ரெங்கநாதன்:** மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

மயிலாடுதுறை - நாகப்பட்டினம் செல்லும் அனைத்து பேருந்துகளும் பூம்புகார் தொகுதி காளஹஸ்தினாபுரத்தில் நின்று செல்ல அரசு ஆவன செய்யுமா?



2004 நவம்பர் 17]

**விடை—**

**மாண்புமிகு திரு. இரா. விசுவநாதன், போக்குவரத்துத் துறை அமைச்சர்:**

மயிலாடுதுறை — நாகப்பட்டினம் தடத்தில் செல்லும் அனைத்து பேருந்துகளும் காளஹஸ்தினாபுரத்தில் நின்று பயணிகளை ஏற்றியும், இறக்கியும் சென்று வருகின்றன. மேலும் போக்குவரத்து ஆய்வாளர் மூலம் மேற்படி பேருந்து நிறுத்தத்தில் பேருந்துகள் நின்று செல்கின்றனவா என்று தொடர்ந்து கண்காணித்து வரப்படுகிறது.

49—

## பேருந்து வசதி

**வினா எண் 39553—டாக்டர் சி. விஜயபாஸ்கர்:** மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) புதுக்கோட்டை தொகுதியில் பல்வேறு வழித்தடங்களில் போதுமான பேருந்து வசதி செய்துதர அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. இரா. விசுவநாதன், போக்குவரத்துத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) கோரிக்கையில் கேட்டுள்ளபடி கழகப் பேருந்துகள் போதுமான அளவில் அனைத்து வழித்தடங்களிலும் இயக்கப்பட்டு வருகின்றன. பேருந்து வசதி கோரி பொதுமக்களிடமிருந்து மனுக்கள் வரும்பட்சத்தில் மனுவில் கூறப்பட்ட வழித்தடத்தின் சாலையின் தன்மை, பயணிகள் அடர்வு மற்றும் வழித்தடத்தில் இயங்கும் பேருந்துகளின் எண்ணிக்கை ஆகியவற்றை ஆய்வு செய்து தேவைப்படின் அரசு அனுமதி பெற்று பேருந்து வசதி செய்து தரப்பட்டு வருகிறது.

**50—** [2004 நவம்பர் 17

## பேருந்து புதிய வழித்தடங்கள்

**வினா எண் 43563—டாக்டர் சி. விஜயபாஸ்கர்:** மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) புதுக்கோட்டை தொகுதி, கந்தர்வக்கோட்டையில் இருந்து தஞ்சாவூர் வழியாக சென்னை செல்ல அரசு விரைவுப் பேருந்து புதிதாக வழித்தடங்கள் ஏற்படுத்தித் தர அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. இரா. விசுவநாதன், போக்குவரத்துத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) புதுக்கோட்டை தொகுதி, கந்தர்வக்கோட்டையிலிருந்து தஞ்சாவூர் வழியாக சென்னைக்கு விரைவுப் பேருந்துகள் இயக்கிட கோரப்பட்டுள்ளது. புதுக்கோட்டைக்கும்—தஞ்சாவூருக்கும் இடையில் கந்தர்வக்கோட்டை அமைந்துள்ளது. கந்தர்வக்கோட்டையிலிருந்து புதுக்கோட்டை தஞ்சாவூர் செல்ல 10 நிமிடத்திற்கு ஒரு வண்டி வீதம் இயங்கி வருகிறது. மேலும் அரசுப் போக்குவரத்துக் கழகம் கும்பகோணம் மூலமாக மூன்று பேருந்துகளும் மற்றும் அரசு விரைவுப் போக்குவரத்துக் கழகத்தின் மூலம் 24 பேருந்துகளும் தஞ்சாவூரிலிருந்து சென்னைக்கு இயக்கப்பட்டு வருகின்றன. தஞ்சாவூரிலிருந்து கந்தர்வக்கோட்டை வரை வழித்தடத்தின் நீளம் 32.1 கி.மீ. (பழைய பேருந்து நிலையம்) ஆகும். அவற்றின் பயணிகள் அடர்வு முறையே 90%, 72% ஆகும். அரசு விரைவுப் போக்குவரத்துக் கழகப் பேருந்தை கந்தர்வக்கோட்டை உள்ளிட்ட தமிழகத்தின் அனைத்துப் பகுதிகளிலிருந்தும் தலைநகர் சென்னைக்கு பேருந்து இயக்க சாத்தியமில்லை. ஆகவே, கந்தர்வக்கோட்டை பயணிகள் நகரப் பேருந்தை பயன்படுத்தி அருகிலுள்ள தஞ்சாவூர் மற்றும் புதுக்கோட்டை வந்து கீழ்க்காணும் அரசு விரைவுப் போக்குவரத்துக் கழக வழித்தடப் பேருந்துகளைப் பயன்படுத்தி சென்னை சென்று வர ஏதுவாக உள்ளது.



| வ. எண் | தடம் எண் | செல்லுமிடம் | மொத்த பேருந்துகள் | நடைகள் |
|---|---|---|---|---|
| 1 | 323 | தஞ்சாவூர் - சென்னை | 26 | 50 |
| 2 | 126 | புதுக்கோட்டை - சென்னை | 1 | 1 |

எனவே, அரசு விரைவுப் போக்குவரத்துக் கழகத்தின் மூலம் கந்தர்வக்கோட்டையிலிருந்து தஞ்சாவூர் வழியாக சென்னைக்கு பேருந்து இயக்க திட்டம் ஏதும் அரசின் பரிசீலனையில் இல்லை.

**51—**

## அரசு தானியங்கிப் பணிமனை அமைத்தல்

**வினா எண் 44809—திரு. நா. சந்திரமோகன்:** மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) நாகை மாவட்டத்திலுள்ள அனைத்து அலுவலகங்களிலும் இயங்கி வரும் நான்கு சக்கர வாகனங்களைப் பழுது பார்க்க சீர்காழி பகுதியில் அரசு தானியங்கிப் பணிமனை அமைத்துக் கொடுக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. இரா. விசுவநாதன், போக்குவரத்துத் துறை அமைச்சர்:**

(அ) தஞ்சாவூர் மாவட்டத்தில் ஏற்கெனவே அரசு தானியங்கிப் பணிமனை 80 பணியாளர்களுடன் செயல்பட்டு வருகிறது. சீர்காழியை உள்ளடக்கிய நாகப்பட்டினம் மாவட்ட எல்லைக்குள் மிகக் குறைந்த அளவிலான எண்ணிக்கையில் அரசு வாகனங்கள் உள்ளதால், இம்மாவட்டத்திலுள்ள அரசுத் துறை வாகனங்கள் தஞ்சாவூரிலுள்ள அரசு தானியங்கிப் பணிமனையையே பயன்படுத்தி வருகின்றன. நாகப்பட்டினம் மாவட்டத்தில் அரசுத் துறை வாகனங்களின் எண்ணிக்கை கூடுதலாகும்போது அம்மாவட்டத் தலைநகரில் அரசு தானியங்கிப் பணிமனை அமைப்பது குறித்து பரிசீலிக்கப்படும்.

(ஆ) எழாது.

[2004 நவம்பர் 17

52—

## பேருந்து வசதி செய்து கொடுத்தல்

**வினா எண் 49677—திரு. வெ. ஏழுமலை:** மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) செஞ்சி வட்டம், சண்டிசாட்சி சாத்தனந்தல் , அன்னமங்கலம் கிராமத்திற்கு பேருந்து வசதி செய்து கொடுக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. இரா. விசுவநாதன், போக்குவரத்துத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) தமிழ்நாடு அரசுப் போக்குவரத்துக் கழகம், விழுப்புரம் மண்டலம் செஞ்சி கிளையிலிருந்து நகரப் பேருந்து தடம் எண் 17 மூலமாக செஞ்சிக்கும், சாத்தனந்தலுக்கும் இடையே அன்னமங்கலம் வழியாக 8 நடைகள் பேருந்து வசதி உள்ளது. மேலும் மாற்று வழித்தடத்தில் செஞ்சிக்கும், சாத்தனந்தலுக்கும் இடையே மகாதேவிமங்கலம் மற்றும் சண்டிசாட்சி வழியாக தனியார் மினிப் பேருந்து ஒன்றும் இயக்கப்படுகிறது. பொதுமக்களின் பழக்கத்திற்கேற்ப தற்சமயம் உள்ள பேருந்து வசதிகளே போதுமானது எனக் கருதப்படுவதால் இவ்வழித்தடத்தில் கூடுதல் பேருந்து வசதி செய்யும் திட்டம் அரசிடம் இல்லை.

53—

## பள்ளி, வேலை நேரங்களில் பேருந்து செல்ல அனுமதி

**வினா எண் 49833—திரு. ப. பொன்னம்பலம்:** மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—



2004 நவம்பர் 17]

மதுரை மாவட்டம், சமயநல்லூர் தொகுதி, மதுரை பெரியார் பேருந்து நிலையத்திலிருந்து பூலாம்பட்டி வரை செல்லும் அரசுப் பேருந்து, பள்ளி, வேலை நேரங்களில் செல்ல அனுமதி வழங்கப்படுமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. இரா. விசுவநாதன், போக்குவரத்துத் துறை அமைச்சர்:**

மதுரை பெரியார் பேருந்து நிலையத்திலிருந்து 20.6 கிலோ மீட்டர் தூரமுள்ள பூலாம்பட்டிக்கு கருவனூர் வழியாக 28 தனி நடைகளும், கருவனூருக்கு என 2 தனி நடைகளும் பேருந்து இயக்கப்பட்டு வருகிறது. இந்த நடைகளில் பூலாம்பட்டியிலிருந்து பள்ளிகள், பணிபுரிவோர், நிறுவனங்கள் மற்றும் அலுவலகங்கள் சென்று திரும்ப, ஏதுவான நேரங்களில் போதிய பேருந்து வசதிகள் உள்ளன. எனவே, தற்போதைய பேருந்து வசதிகளே போதுமானவை ஆகும்.

54—

## பேருந்து வழித்தடம் நீட்டித்தல்

**வினா எண் 53538—திரு. ஜெ. குரு என்கிற குருநாதன்:** மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) ஆண்டிமடம் தொகுதி, கொங்குநாட்டார்குப்பம் வழியாக விருத்தாசலம் முதல் ஆண்டிமடம் வரும் தடம் எண். 3 பேருந்தை கொங்குநாட்டார்குப்பம், நெட்டலக்குறிச்சி, இரவாங்குடி வரை நீட்டித்து செல்ல அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. இரா. விசுவநாதன், போக்குவரத்துத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) விருத்தாசலத்திற்கும் ஆண்டிமடத்திற்கும் இடைப்பட்ட தூரம் 24.2 கிலோ மீட்டர். நீட்டிக்கக் கோரிடும்

[2004 நவம்பர் 17

பகுதியான ஆண்டிமடத்திலிருந்து கொங்குநாட்டார்குப்பம், நெட்டலக்குறிச்சி வழியாக இரவாங்குடி வரையிலான தூரம் 12.0 கிலோ மீட்டர். இதில் ஆண்டிமடம்-ஜெயங்கொண்டம் சாலையிலிருந்து பிரிந்து இரவாங்குடி சந்திப்பு சாலை வரையிலான 8.5 கிலோ மீட்டர் தூரப் பகுதி இதுவரை பேருந்து வசதி பெறாத பகுதியாகும். கோரிக்கையின்படி வழித்தடத்தை நீட்டித்தால் தட நீளம் 36.2 கிலோ மீட்டர் என்றாகும். பேருந்து வசதி பெறாத பகுதியில் நகரப் பேருந்து நிர்ணயிக்கப்பட்டுள்ள 35.0 கிலோ மீட்டர் மிகாத வழித்தடத்தில் மட்டுமே இயக்கிட இயலும். எனவே, இதனடிப்படையில் விருத்தாசலம் — ஆண்டிமடம் தடத்தில் இயங்கும் தடம் எண் டி3 என்னும் நகரப் பேருந்தை கொங்குநாட்டார்குப்பம், நெட்டலக்குறிச்சி வழியாக இரவாங்குடி வரை நீட்டித்து இயக்கிட வழிவகை இல்லை.

**55—**

## போக்குவரத்துக் கழக இலாப விவரம்

**வினா எண் 53580—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

*தமிழகத்தில் உள்ள அரசுப் பேருந்துகளில் எந்த மாவட்டத்தில் உள்ள போக்குவரத்துக் கழகம் இலாபத்தைப் பெற்றுத் தருகிறது?*

**விடை—**

**மாண்புமிகு திரு. இரா. விசுவநாதன், போக்குவரத்துத் துறை அமைச்சர்:**

தமிழகத்தில் உள்ள அரசுப் பேருந்துகளில் விழுப்புரம், கடலூர், கோயம்புத்தூர், ஈரோடு, திருச்சி, பெரம்பலூர், கரூர், சிவகங்கை, இராமநாதபுரம் ஆகிய மாவட்டங்களில் உள்ள பேருந்துக் கழகங்கள் இலாபத்தைப் பெற்றுத் தருகின்றன.



2004 நவம்பர் 17]

**56—**

## கூடுதலாக பேருந்து இயக்குதல்

**வினா எண் 53812—திரு. கோவை தங்கம்:** மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

*(அ) கோயம்புத்தூர் மாவட்டம், வால்பாறை தொகுதி, அர்த்தநாரிப்பாளையம் ஊராட்சி, அர்த்தநாரிப்பாளையம் முதல் பொள்ளாச்சி வந்து செல்லும் தடம் எண் 16-ஐ கூடுதலாக இயக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?*

*(ஆ) ஆம் எனில், எப்போது?*

**விடை—**

**மாண்புமிகு திரு. இரா. விசுவநாதன், போக்குவரத்துத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) பொள்ளாச்சி நகர வழித்தடம் எண் 16, பொள்ளாச்சி - அர்த்தநாரிப்பாளையம் என இயக்கப்படும் தமிழ்நாடு அரசுப் போக்குவரத்துக் கழகம் (கோயம்புத்தூர்) லிமிடெட், கோயம்புத்தூர் பேருந்தானது தினசரி 14 நடைகள் அர்த்தநாரிப்பாளையத்திற்கு இயக்கப்பட்டு வருகின்றது. இப்பேருந்தானது 4.30 மணிக்கு பணிமனையை விட்டுக் கிளம்பி அதிகாலை 4.45 மணிக்கு பேருந்து நிலையத்தில் இயக்கத்தைத் தொடங்கி இரவு 9.35 மணிக்கு நடை முடித்து 10.00 மணியளவில் இரவு தங்கல் செய்கின்றது. அதிகாலை 4.30 மணிக்கு முன்பும் இரவு 10.00 மணிக்கு பின்பும் இத்தடத்தில் பயணிகள் போக்குவரத்து மிக மிகக் குறைவாகத்தான் இருக்கும். அதோடு கூடுதலாக ஒரு நடை அர்த்தநாரிப்பாளையம் சென்று வர வேண்டுமெனில் குறைந்தது இரண்டு மணி நேரம் கூடுதலாகத் தேவைப்படுவதால் வழித்தடம் எண் 16 பேருந்தானது இரவு 12.00 மணிக்குத்தான் இரவு தங்கல் செய்ய முடியும். இவ்வாறு நள்ளிரவு தங்கல் செய்த பேருந்தை பராமரிப்பு பார்த்து அதிகாலையில் வழித்தடத்திற்கு அனுப்புவதில் மிகுந்த

[2004 நவம்பர் 17

சிரமங்கள் ஏற்படுவதுடன் வழித்தடத்தில் பணியாற்றும் ஓட்டுநர், நடத்துநர்களுக்கு தேவைப்படும் ஓய்வு கிடைக்காது. தவிர இப்பேருந்தானது ஏற்கெனவே குறைந்த வருவாயுடன் இயக்கப்பட்டு வருகின்றது. மேலும், இரண்டு நடைகள் பயணிகள் அடர்வு குறைந்த இரவு நேரத்தில் இயக்கும்பட்சத்தில் கழகத்திற்கு வருவாய் இழப்புகள் ஏற்படும். எனவே, இத்தகைய சூழ்நிலையில் வழித்தடம் எண் 16-ஐ கூடுதலாக அர்த்தநாரிப்பாளையத்திற்கு இயக்க வாய்ப்புகள் இல்லை.

**57—**

## தொழிற்சாலைகளுக்கு வழங்கிய கடன் விவரம்

**வினா எண் 40276—திரு. கே. ஆறுமுகம்:** மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) 2001-2002 ஆம் ஆண்டில் காஞ்சிபுரம் மாவட்டத்தில் தொழிற்சாலைகளின் வளர்ச்சிக்காக தமிழ்நாடு தொழில் முதலீட்டுக் கழகத்தால் வழங்கப்பட்ட கடன் தொகை எவ்வளவு?

(ஆ) அதன் விவரம் என்ன?

**விடை—**

**மாண்புமிகு திரு. நயினார் நாகேந்திரன், தொழில் துறை அமைச்சர்:**

(அ) 2001-2002 ஆம் ஆண்டில் காஞ்சிபுரம் மாவட்டத்தில் தொழில் தொடங்க மற்றும் தொழிற்சாலைகளின் வளர்ச்சிக்காக தமிழ்நாடு தொழில் முதலீட்டுக் கழகத்தால் வழங்கப்பட்ட கடன் தொகை ரூ.617.32 இலட்சம் ஆகும்.

(ஆ) 2001-2002 ஆம் ஆண்டில் காஞ்சிபுரம் மாவட்டத்தில் தொழில் தொடங்க மற்றும் அதன் வளர்ச்சிக்காக தமிழ்நாடு தொழில் முதலீட்டுக் கழகத்தால் வழங்கப்பட்ட கடன் பற்றிய விவரம் கீழே கொடுக்கப்பட்டுள்ளது:



2004 நவம்பர் 17]

| வ. எண் | தொழிற் சாலைகளின் பிரிவு. | கடன் வழங்கப்பட்ட மொத்த தொழிற் சாலைகளின் எண்ணிக்கை | கடன் வழங்கப்பட்ட தொகை விவரம் (ரூபாய் இலட்சத்தில்) | | | |
|---|---|---|---|---|---|---|
| | | | காலக் கடன் | சுலபக் கடன் | மானியக் ஈடுசெய் கடன் | மொத்தம் |
| 1 | தோலினால் ஆன பொருட்கள் | 11 | 127.54 | 36.12 | 6.10 | 169.76 |
| 2 | பிளாஸ்டிக் பொருட்கள் | 3 | 20.22 | 7.27 | — | 27.49 |
| 3 | அரிசி ஆலைகள் | 2 | 91.70 | 4.00 | — | 95.70 |
| 4 | இயந்திர பொருட்கள் | 6 | 176.95 | 20.13 | — | 197.08 |
| 5 | அச்சுத் தொழில் | 2 | 26.86 | 6.91 | — | 33.77 |
| 6 | மருந்துப் பொருட்கள் | 1 | 2.72 | 1.43 | — | 4.15 |
| 7 | மூன்று நட்சத்திர ஓட்டல் | 1 | 64.00 | — | — | 64.00 |
| 8 | காகித கூம்பு | 1 | 20.64 | 4.73 | — | 25.37 |
| | மொத்தம் | 27 | 530.63 | 80.59 | 6.10 | 617.32 |

**58—**

## மணல் குவாரிகள் ஏலம்

**வினா எண் 43534—திரு. அ.இரா. மலையப்பசாமி:** மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கரூர், நாமக்கல் மாவட்டங்களில் 2002-2003 ஆம் ஆண்டு மணல் குவாரிகள் ஏலம் விடப்பட்டுள்ளனவா?

(ஆ) அவை யாவை?

(இ) இதற்காக அரசுக்கு செலுத்தப்பட்ட தொகை எவ்வளவு?

**விடை—**

**மாண்புமிகு திரு. நயினார் நாகேந்திரன், தொழில் துறை அமைச்சர்:**

(அ) கரூர், நாமக்கல் மாவட்டங்களில் 2002-2003 ஆம் ஆண்டு மணல் குவாரி ஏதும் ஏலம் விடப்படவில்லை.

(ஆ) இதற்கான வினா எழவில்லை.

(இ) இதற்கான வினா எழவில்லை.

**59—**

## நான்கு சக்கர ஈப்பு வழங்குதல்

**வினா எண் 47280—திரு. நா. சந்திரமோகன்:** மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) நாகப்பட்டினம் மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் இயங்கிவரும் துணை இயக்குநர் (கனிமம்) அலுவலகத்திற்கு புதிய 4 சக்கர ஈப்பு வழங்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. நயினார் நாகேந்திரன், தொழில் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) நாகப்பட்டினம் மாவட்டத்தில் இயங்கிவரும் துணை இயக்குநர் புவியியல் மற்றும் சுரங்கத் துறை அலுவலகத்திற்கு அதன் தேவையை உணர்ந்து நான்கு சக்கர ஈப்பு வழங்குவதற்கான நடவடிக்கைகள் நிதித் துறையுடன் கலந்து பரிசீலிக்கப்படும்.

**60—**

## நியாய விலைக் கடை கட்டுதல்

**வினா எண் 29266—திரு. நா. சந்திரமோகன்:** மாண்புமிகு வணிக வரி மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—



(அ) சீர்காழி தொகுதி, கொள்ளிடம் ஒன்றியம், கீழவாடியில் ஆதிதிராவிடர்கள் மற்றும் பிற்படுத்தப்பட்ட மக்களுக்கு நியாய விலைக் கடை கட்டிக்கொடுக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. செ.ம. வேலுசாமி, வணிக வரி மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) சீர்காழி தொகுதி, கொள்ளிடம் ஒன்றியம், கீழவாடியில் 92 குடும்ப அட்டைகள் மட்டுமே உள்ளன. கீழவாடியை சேர்ந்த குடும்ப அட்டைகள், 794 குடும்ப அட்டைகளைக் கொண்டு செயல்படும் மாதிரி வேளூர் கிராம கூட்டுறவு நியாய விலைக் கடையுடன் இணைக்கப்பட்டுள்ளன. பகுதிநேர கடை அமைக்க குறைந்தது 200 குடும்ப அட்டைகள் இணைக்கப்பட வேண்டும் என்று வரையறுக்கப்பட்டுள்ளதால் 92 குடும்ப அட்டைகளைக் கொண்டுள்ள கீழவாடி பகுதியில் பகுதிநேரக் கடை அமைக்க சாத்தியக்கூறுகள் இல்லை. ஆதலால், அங்கு நியாய விலைக் கடை அமைத்து கட்டடம் கட்டும் பிரச்சினை எழவில்லை.

**61—**

## நியாய விலைக் கடை கட்டுதல்

**வினா எண் 29365—திரு. நா. சந்திரமோகன்:** மாண்புமிகு வணிக வரி மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சீர்காழி தொகுதி, சீர்காழி ஒன்றியம், கன்னியாக்குடி ஊராட்சியில் நியாய விலைக் கடை கட்டிக்கொடுக்கும் திட்டம் அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. செ.ம. வேலுசாமி, வணிக வரி மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) சீர்காழி ஒன்றியம், கன்னியாகுடி ஊராட்சியில் இயங்கும் கன்னியாகுடி நியாய விலைக் கடை மயிலாடுதுறை

நுகர்வோர் கூட்டுறவு மொத்த விற்பனை பண்டகசாலையில் வாடகைக் கட்டடத்தில் செயல்படும் முழுநேரக் கடையாகும். இந்த நியாய விலைக் கடைக்கு அரசின் திட்டத்தின்கீழ் சொந்தக் கட்டடம் கட்டித்தர நாகப்பட்டினம் மண்டல இணைப் பதிவாளரினால் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

**62—**

## பகுதி நேர நியாய விலைக் கடைகள் விவரம்

**வினா எண் 30492—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு வணிக வரி மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சேலம் மாவட்டம், எடப்பாடி தொகுதியில் பகுதிநேர நியாய விலைக் கடைகள் எத்தனை இயங்கி வருகின்றன?

(ஆ) இவற்றை முழுநேர நியாய விலைக் கடைகளாக்க அரசு ஆவன செய்யுமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. செ.ம. வேலுசாமி, வணிக வரி மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர்:**

(அ) சேலம் மாவட்டம், எடப்பாடி தொகுதியில் 27 பகுதி நேர நியாய விலைக் கடைகள் செயல்படுகின்றன.

(ஆ) 27 பகுதி நேரக் கடைகளில் தானமூர்த்தியூர் மற்றும் ஒண்டிக்கரை ஆகிய பகுதிகளில் முறையே 507 மற்றும் 515 குடும்ப அட்டைகள் இணைக்கப்பட்டு பகுதி நேரக் கடைகளாக சேலம் மாவட்ட ஆட்சித் தலைவர் உத்தரவுபடி 2-7-2002 மற்றும் 8-9-1993 முதல் செயல்பட்டு வருகின்றன. இவ்விரண்டு பகுதி நேரக் கடைகளை முழுநேரக் கடைகளாக மாற்றினால் புதிதாக விற்பனையாளர் நியமனம், கடை வாடகை மற்றும் அரசு மானியம் போன்ற செலவினங்கள் அதிகமாகுமென்பதால் தானமூர்த்தியூர் மற்றும் ஒண்டிக்கடை பகுதி நேரக் கடைகளை முழுநேரக் கடைகளாக மாற்றுவதற்கு சாத்தியக்கூறுகள் இல்லை.



**63—**

## விவசாயக் கடன்

**வினா எண் 34100—திரு. ப. அரசன்:** மாண்புமிகு வணிக வரி மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) 2002 ஆம் ஆண்டு வரை விவசாயிகள் வேளாண்மைக் கூட்டுறவு வங்கிகளில் வாங்கியுள்ள கடன் தொகை எவ்வளவு?

(ஆ) வட்டி எவ்வளவு?

**விடை—**

**மாண்புமிகு திரு. செ.ம. வேலுசாமி, வணிக வரி மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர்:**

(அ) ரூ. 1101.28 கோடி

(ஆ) குறுகிய கால பயிர்க் கடன் - ரூ. 25,000/-வரைக்கும் வட்டி விகிதம் 12% ரூ. 25,001/-ரூ. 50,000/-வரைக்கும் வட்டி விகிதம் 13% 50,000/-க்கும் மேல் வட்டி விகிதம் 14% (தற்போது தொகை வரம்பின்றி வட்டி விகிதம் 12%)

மத்திய கால கடன் - வட்டி விகிதம் 10-11.75% (தற்போது வட்டி விகிதம் 9-10.75%)

தானிய ஈட்டுக் கடன் -வட்டி விகிதம் 12% (தற்போது 11%)

**64—**

## விளைபொருள் ஈட்டுக் கடனுதவி விவரம்

**வினா எண் 38262—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு வணிக வரி மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) 2001-2002 ஆம் ஆண்டு கூட்டுறவுச் சங்கங்கள் மூலமாக வேளாண் விளைபொருள் ஈட்டுக் கடனுதவி எவ்வளவு வழங்கப்பட்டது?

(ஆ) இதனால் எவ்வளவு பேர் பயன் பெற்றனர்?

**விடை—**

**மாண்புமிகு திரு. செ.ம. வேலுசாமி, வணிக வரி மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர்:**

(அ) 2001-2002 ஆம் ஆண்டு கூட்டுறவு விற்பனைச் சங்கங்கள் மூலமாக ரூ. 1862.52 இலட்சம் விளைபொருள் ஈட்டுக் கடனுதவி வழங்கப்பட்டுள்ளது.

(ஆ) இதன் மூலம் 15931 நபர்கள் பயன்பெற்றுள்ளனர்.

**65—**

## கூட்டுறவு நகர வங்கிக் கிளை அமைத்தல்

**வினா எண் 44560—திரு. நா. சந்திரமோகன்:** மாண்புமிகு வணிக வரி மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சீர்காழி தொகுதி, கொள்ளிடம் ஒன்றியம், திருமுல்லைவாசல் வைத்தீஸ்வரன் கோயில் மற்றும் கொள்ளிடம் ஆகிய பகுதிகளில் சீர்காழி கூட்டுறவு நகர வங்கியின் கிளையைத் தொடங்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. செ.ம. வேலுசாமி, வணிக வரி மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) கொள்ளிடம் திருமுல்லைவாசல் மற்றும் வைத்தீஸ்வரன் கோயில் பகுதிகளில் வணிக வங்கிகளின் கிளைகளும், கொள்ளிடத்தில் கும்பகோணம் கூட்டுறவு மத்திய



வங்கியின் கிளையும் செயல்பட்டு வருகின்றன. இந்திய ரிசர்வ் வங்கியின் சுற்றறிக்கையில் கண்டுள்ள அறிவுரைகள் மற்றும் தற்போதுள்ள பணியாளர் பணிநிலைத் திறனைக் கொண்டு கூடுதலாக ஒரு கிளையை மேற்படி பகுதிகளில் தற்சமயம் தொடங்க இயலாது.

மேலும், சீர்காழி கூட்டுறவு நகர வங்கி, சீர்காழி தென்பாதியில் ஏற்கெனவே ஒரு கிளை தொடங்கி செயல்பட்டு வருவதாலும், கொள்ளிடம் மற்றும் மேலையூர் ஆகிய இடங்களில் கும்பகோணம் மத்திய கூட்டுறவு வங்கி கிளைகள் செயல்பட்டு வைப்புத் தொகை பெறுதல், நகைக் கடன் வழங்குதல் மற்றும் இதர கடன் வழங்கும் பணிகளைச் செய்து வருவதாலும், கொள்ளிடம், வைத்தீஸ்வரன்கோயில், திருமுல்லைவாசல் ஆகிய இடங்களில் வணிக வங்கிகளின் கிளைகள் செயல்பட்டு வருவதாலும், சீர்காழி கூட்டுறவு நகர வங்கியின் மூலம் மேற்கண்ட இடங்களில் புதியதாக கிளைகள் திறந்து வளமான கிளைகளாக (viable) செயல்படுத்த வாய்ப்புகள் இல்லை.

**66—**

## நியாய விலைக் கடைகளுக்குக் கட்டடம்

**வினா எண் 48366—செல்வி சி. கனகதாரா:** மாண்புமிகு வணிக வரி மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பேரணாம்பட்டு தொகுதியிலுள்ள நியாய விலைக் கடைகளுக்கு சொந்தக் கட்டடம் கட்டும் திட்டம் அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. செ.ம. வேலுசாமி, வணிக வரி மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) வேலூர் மாவட்டம், பேரணாம்பட்டு சட்டமன்றத் தொகுதியில் 84 முழுநேர நியாய விலைக் கடைகள் கூட்டுறவு அமைப்புகள் மூலம் நடத்தப்பட்டு வருகின்றன. இவற்றில் 4 முழுநேர நியாய விலைக் கடைகள் சொந்தக் கட்டடங்களிலும், 60 நியாய விலைக் கடைகள் அரசின் பல்வேறு திட்டங்கள் மூலம் கட்டப்பட்ட அரசுக் கட்டடங்களிலும், எஞ்சிய 20 நியாய விலைக் கடைகள்

வாடகைக் கட்டடங்களிலும் செயல்பட்டு வருகின்றன. மேலும், கூட்டுறவு நியாய விலைக் கடை நடத்தும் கூட்டுறவு நிறுவனங்கள் தங்களது சொந்த நிதியினைக் கொண்டு கட்டடங்களைக் கட்டும் நிதி வசதிகளைப் பெற்றிருக்காத நிலையில், வாடகையில் செயல்படும் முழுநேரக் கடைகளுக்கு அரசின் பல்வேறு நலத் திட்டங்களின்கீழ் ஒதுக்கீடு செய்யும்பட்சத்தில், வாடகையில் செயல்படும் கட்டடங்களுக்குக் கட்டடம் கட்ட இயலும். எனினும், தற்போது வாடகையில் செயல்படும் கூட்டுறவு நியாய விலைக் கடைகளுக்குச் சொந்தக் கட்டடம் கட்டுவதற்கான முன்மொழிவுகளை சம்பந்தப்பட்ட மாவட்ட ஊரக வளர்ச்சி முகமைத் திட்ட அலுவலருக்கு அனுப்பி வைக்குமாறு மண்டல இணைப் பதிவாளர் அறிவுறுத்தப்பட்டுள்ளார்.

**67—**

## பொது விநியோகக் கடைகளுக்குக் கட்டடம்

**வினா எண் 48387—திரு. க. முருகவேல் ராஜன்:** மாண்புமிகு வணிக வரி மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வந்தவாசி தொகுதி, புன்னை ஊராட்சி, அதியனூர் கிராமம், அத்திப்பாக்கம் கிராமம், கல்லாக்குத்து கிராமம், இளங்காடு கிராமம், விழுதுபட்டு கிராமம், புளிவாய் ஊராட்சி, மருதாடு கிராமம், கீழ்நர்மா ஊராட்சி, பாதூர் ஊராட்சி, ஈயப்பாக்கம் கிராமம் ஆகிய இடங்களிலுள்ள பொது விநியோகக் கடைகளுக்குக் கட்டடம் கட்ட அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. செ.ம. வேலுசாமி, வணிக வரி மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) வந்தவாசி தொகுதி, புன்னை ஊராட்சியில் உள்ள அதியனூர் முழுநேர நியாய விலைக் கடை, கல்லாக்குத்து முழுநேர நியாய விலைக் கடை, விழுதுபட்டு முழுநேர நியாய விலைக் கடை, புளிவாய் ஊராட்சியில் உள்ள கீழ்நர்மா முழுநேர நியாய விலைக் கடை மற்றும் பாதூர் ஊராட்சியில் உள்ள ஈயப்பாக்கம்



முழுநேர நியாய விலைக் கடை ஆகியவை வாடகைக் கட்டடங்களில் செயல்படுகின்றன. புன்னை ஊராட்சியில் உள்ள அத்திப்பாக்கம் முழுநேர நியாய விலைக் கடை ஜே.வி.வி.டி. திட்டத்தின்கீழ் கட்டப்பட்ட இலவசக் கட்டடத்திலும் மற்றும் இளங்காடு முழுநேர நியாய விலைக் கடை சொந்தக் கட்டடத்திலும் செயல்படுகின்றன. புளிவாய் ஊராட்சியில் உள்ள மருதாடு முழுநேர நியாய விலைக் கடை சொந்தக் கட்டடத்தில் செயல்படுகிறது.

மேற்படி 8 நியாய விலைக் கடைகளில், 3 நியாய விலைக் கடைகள் வாடகையின்றியும், 5 கடைகள் வாடகைக் கட்டடங்களிலும் செயல்பட்டு வருகின்றன. வாடகைக் கட்டடங்களில் செயல்பட்டு வரும் 5 நியாய விலைக் கடைகளுக்கும் புதிய கட்டடங்கள் கட்டுவதற்கு ஏதுவாக 2004-2005 ஆம் ஆண்டில் நிதி ஒதுக்கீடு செய்யுமாறு திட்ட அலுவலர், ஊரக வளர்ச்சி முகமை, திருவண்ணாமலை அவர்கள் மண்டல இணைப் பதிவாளரால் கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளார்கள்.

**68—**

## பகுதி நேர நியாய விலைக் கடை அமைத்தல்

**வினா எண் 50905—திரு. வே. கிருஷ்ணமூர்த்தி:** மாண்புமிகு வணிக வரி மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) அரூர் தொகுதி, ஊத்தங்கரை வட்டம், எக்கூர் ஊராட்சியில் உள்ள புதூர் கொளகம்பட்டி, இந்திரா நகர், காந்தி நகர் ஆகிய இடங்களுக்கென பகுதிநேர நியாய விலைக் கடை திறக்கும் திட்டம் அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. செ.ம. வேலுசாமி, வணிக வரி மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) அரூர் தொகுதி, ஊத்தங்கரை வட்டம், எக்கூர் ஊராட்சியில் உள்ள புதூர் கொளகம்பட்டி, இந்திரா நகர் மற்றும் காந்தி நகர் ஆகிய பகுதிகளுடன் ஏனைய பகுதிகளைச் சேர்த்து 636

குடும்ப அட்டைகளுடன் எக்கூர் தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கியின்கீழ் ஒரு நியாய விலைக் கடை செயல்பட்டு வருகிறது. புதூர் கொளகம்பட்டியில் 67 குடும்ப அட்டைகளும், இந்திரா நகரில் 39 குடும்ப அட்டைகளும் மற்றும் காந்தி நகரில் 37 குடும்ப அட்டைகளும் உள்ளன. பகுதி நேரக் கடை அமைக்க குறைந்தது 200 குடும்ப அட்டைகள் இணைக்கப்பட வேண்டும். எனவே, போதிய குடும்ப அட்டைகள் இல்லாத புதூர் கொளகம்பட்டி, இந்திரா நகர் மற்றும் காந்தி நகர் ஆகிய பகுதிகளுக்கென பகுதி நேரக் கடை அமைக்கச் சாத்தியக்கூறுகள் இல்லை.

**69—**

## நடமாடும் நியாய விலைக் கடைகள் அமைத்தல்

**வினா எண் 51297—திரு. கா.தி. இளையகண்ணு:** மாண்புமிகு வணிக வரி மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) ஏற்காடு தொகுதியில் நடமாடும் நியாய விலைக் கடைகள் ஏற்படுத்தும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. செ.ம. வேலுசாமி, வணிக வரி மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) ஏற்காடு தொகுதியில் 95 முழு நேரக் கடைகளும், 12 பகுதிநேரக் கடைகளும் செயல்பட்டு வருகின்றன. ஏற்காடு தொகுதியில் உள்ள அனைத்துப் பகுதிகளுக்கும் ஆங்காங்கே நியாய விலைக் கடைகள் அமைக்கப்பட்டு செயல்பட்டு வருகின்றன. ஏற்காடு மலைப் பகுதியில் உள்ள வேப்பாடி, சொரக்காக்காடு, தப்பக்காடு மற்றும் கோயிலூர் ஆகிய பகுதிகளுக்கு சாலை வசதி இல்லாத காரணத்தினால் இப்பகுதி மக்கள் மட்டும் 6-8 கிலோ மீட்டர் வரை சென்று பொருட்கள் பெற்று வருகின்றனர். இக்கிராமங்களுக்கு போதிய சாலை வசதி செய்தபின் நடமாடும் நியாய விலைக் கடை அமைக்க நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.



**70—**

## கூட்டுறவு அங்காடிக்குச் சொந்தக் கட்டடம்

**வினா எண் 51949—திரு. நா. சந்திரமோகன்:** மாண்புமிகு வணிக வரி மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சீர்காழி தொகுதி, புங்கனூர், கீழ்சட்டநாதபுரம் ஆகிய ஊராட்சிகளிலுள்ள கூட்டுறவு அங்காடிக்கு சொந்தக் கட்டடம் கட்ட அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. செ.ம. வேலுசாமி, வணிக வரி மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) சீர்காழி தொகுதி, புங்கனூர் மற்றும் கீழ்சட்டநாதபுரம் ஊராட்சிகளிலுள்ள நியாய விலைக் கடைகள் மயிலாடுதுறை நுகர்வோர் கூட்டுறவு மொத்த விற்பனைப் பண்டகசாலையின் கட்டுப்பாட்டில் முழுநேரக் கடைகளாக வாடகைக் கட்டடத்தில் செயல்பட்டு வருகின்றன. புங்கனூர் நியாய விலைக் கடையில் 648 குடும்ப அட்டைகளும், கீழ்சட்டநாதபுரம் நியாய விலைக் கடையில் 685 குடும்ப அட்டைகளும் இணைக்கப்பட்டுள்ளன. இவ்விரு நியாய விலைக் கடைகளுக்கும் அரசின் ஏதாவது ஒரு நலத் திட்டத்தின்கீழ் கட்டடம் கட்டித்தர, நாகப்பட்டினம் மண்டல இணைப் பதிவாளரினால் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

**71—**

## விவசாயப் பொருள்கள் ஏலம்

**வினா எண் 52864—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு வணிக வரி மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

சேலம் மாவட்டம், கொங்கணாபுரம் வேளாண்மை உற்பத்தியாளர் கூட்டுறவு விற்பனைச் சங்கத்தின் மூலம் விவசாயப் பொருள்கள் ஏலம் விட்டதில் எவ்வளவு லாபம் ஈட்டியுள்ளது?

**விடை—**

**மாண்புமிகு திரு. செ.ம. வேலுசாமி, வணிக வரி மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர்:**

சேலம் மாவட்டம், கொங்கணாபுரம் வேளாண்மை உற்பத்தியாளர் கூட்டுறவு விற்பனைச் சங்கமானது 19-3-2001-ல் பதிவு செய்யப்பட்டது. சங்கம் தொடங்கப்பட்ட நாளிலிருந்து வணிகம் எதுவும் செய்யப்படவில்லை. தொடர்ந்து இரண்டு ஆண்டுகளாகச் செயல்படாமல் இருந்த காரணத்தால் 21-4-2003-ல் இச்சங்கம் கலைக்கப்பட்டு உள்ளது. இந்த இடைப்பட்ட காலத்தில் கொங்கணாபுரம் வேளாண்மை உற்பத்தியாளர் கூட்டுறவு விற்பனைச் சங்கத்தின் மூலம் விவசாயப் பொருட்கள் எதுவும் ஏலம் விடப்படவில்லை.

**72—**

## நியாய விலைக் கடை அமைத்தல்

**வினா எண் 52920—திரு. எம். சுப்பையா பாண்டியன்:** மாண்புமிகு வணிக வரி மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

செங்கோட்டை தாலுகா, பெரியபிள்ளைவலசை ஊராட்சியில் புதிய நியாய விலைக் கடை அமைத்துத் தர அரசு ஆவன செய்யுமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. செ.ம. வேலுசாமி, வணிக வரி மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர்:**

திருநெல்வேலி மாவட்டம், செங்கோட்டை வட்டம், தென்காசி 0.1919 கூட்டுறவு விற்பனைச் சங்கம் மூலம் டி.சி. 006 விசுவநாதபுரம்-2 நியாய விலைக் கடை பெரியபிள்ளைவலசை ஊராட்சிப் பகுதியிலேயே 349 குடும்ப அட்டைகளுடன் செயல்பட்டு வருவதால், பெரியபிள்ளைவலசை ஊராட்சியில் மேற்கொண்டு புதிதாக நியாய விலைக் கடை அமைக்க சாத்தியக்கூறுகள் இல்லை.



**73—**

## நியாய விலைக் கடைக்குக் கட்டடம்

**வினா எண் 53124—திரு. அ.இரா. மலையப்பசாமி:** மாண்புமிகு வணிக வரி மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கபிலர்மலை தொகுதி, வேலூர் பேரூராட்சி, 14-வது வார்டில் இயங்கிவரும் நியாய விலைக் கடைக்கு புதிய கட்டடம் கட்டித் தர அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. செ.ம. வேலுசாமி, வணிக வரி மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) கபிலர்மலை தொகுதி, வேலூர் பேரூராட்சி 14-வது வார்டில் இயங்கிவரும் நியாய விலைக் கடை எண் 3, நாமக்கல் வேளாண்மை உற்பத்தியாளர்கள் கூட்டுறவு விற்பனைச் சங்கத்தின் கட்டுப்பாட்டில் 988 குடும்ப அட்டைகளுடன் முழுநேரக் கடையாக வாடகைக் கட்டடத்தில் செயல்பட்டு வருகிறது. இக்கடைக்கு அரசின் திட்டத்தில் கட்டடம் கட்டுவது தொடர்பான முன்மொழிவினை மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை, நாமக்கல்லுக்கு அனுப்ப மண்டல இணைப்பதிவாளர் அவர்களால் உரிய நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

**74—**

## மாசுக் கட்டுப்பாடு வாரியம்

**வினா எண் 37399—திரு. சி. சண்முகவேலு:** மாண்புமிகு வனம் மற்றும் சுற்றுச்சூழல் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கோவை, உடுமலை, அமராவதி சர்க்கரை எரிசாராய ஆலையில் சுத்திகரிக்கப்பட்ட கழிவுநீரை மாசுக் கட்டுப்பாடு வாரியம் நிலங்களில் விட அனுமதிப்பதை மத்திய மாசுக் கட்டுப்பாடு வாரியம் ஏற்க மறுப்பது அரசின் கவனத்திற்குத் தெரியுமா?

(ஆ) ஆம் எனில், அரசின் நடவடிக்கை யாது?

**விடை—**

**மாண்புமிகு திரு. ஆர். வைத்திலிங்கம், வனம் மற்றும் சுற்றுச்சூழல் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) திருவாளர்கள் அமராவதி கூட்டுறவு சர்க்கரை ஆலை நிறுவனத்தினர் எரிசாராயத் தொழிற்சாலையிலிருந்து வெளிவரும் சுத்திகரிக்கப்பட்ட கழிவுநீரை விவசாயிகளின் வேண்டுகோளுக்கிணங்க நீருடன் கலந்து பயிருக்கு உரமாகப் பயன்படுத்த விவசாயத்திற்கு வழங்கி வந்தனர். இதனால் நிலத்தடி நீர் மாசுபடுவதாக எழுந்த புகாரையடுத்து சுத்திகரிக்கப்பட்ட கழிவுநீரை உயிர் உரம் தயாரிக்கப் பயன்படுத்த வேண்டும் என்று மத்திய மாசுக் கட்டுப்பாடு வாரியம் அறிவுறுத்தியதைத் தொடர்ந்து, கழிவுநீர் முழுவதையும் சுத்திகரிப்பு செய்து உயிர் உரம் தயாரிக்கப் பயன்படுத்தப்படுகிறது. தற்போது மேற்படி ஆலையின் கழிவுநீர் வெளியேற்றப்படுவதில்லை.

**75—**

## மலைப் பாதை சீரமைத்தல்

**வினா எண் 44437—திரு. எம்.எஸ். சந்திரசேகரன்:** மாண்புமிகு வனம் மற்றும் சுற்றுச்சூழல் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

இராணிப்பேட்டை தொகுதி, மகிமண்டலம் வனக் குழு மூலமாக மலைக்கோட்டைக்குச் செல்லும் மலைப்பாதை சீரமைக்கப்படுமா?



**விடை—**

**மாண்புமிகு திரு. ஆர். வைத்திலிங்கம், வனம் மற்றும் சுற்றுச்சூழல் துறை அமைச்சர்:**

இராணிப்பேட்டை தொகுதி, மகிமண்டலம் வனப்பகுதி மலைக்கோட்டைக்குச் செல்லும் மலைப்பாதையைச் சீரமைப்பது சம்பந்தமாக மகிமண்டலம் கிராம வனக் குழுத் தலைவர் மேற்படி பாதையைச் சீரமைக்க வனக் குழுவுக்கு விருப்பமில்லை எனத் தெரிவித்துள்ளார். இப்பாதை காப்பு வனப்பகுதியில் அமைந்துள்ளதால் இதனைச் சீரமைக்க மைய அரசின் வனப் பாதுகாப்புச் சட்டம், 1980-ன்படி மைய அரசின் முன் அனுமதி பெறவேண்டும். எனவே, மேற்படி பாதையினைச் சீரமைக்க வனக் குழு முன்வரும் பட்சத்தில் மைய அரசின் முன் அனுமதி பெற தேவையான நடவடிக்கை எடுக்கப்படும்.

**76—**

## ஏரிக்கரைப் பகுதியை மேம்படுத்துதல்

**வினா எண் 37513—திரு. கே. மகேந்திரன்:** மாண்புமிகு வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பெரம்பூர் தொகுதி, மூர்த்திங்கர் தெரு, ஏரிக்கரைப் பகுதியை குடிசை மாற்று வாரியத்தின் மூலம் மேம்படுத்தி, திட்டப் பணியைச் செய்ய அரசிடம் செயல்திட்டம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

**விடை—**

**மாண்புமிகு திரு. அனிதா ஆர். ராதாகிருஷ்ணன், வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை அமைச்சர்:**

(அ) தற்போதைக்கு இல்லை.

(ஆ) வினா எழவில்லை.

**77—**

## கூட்டுறவு வீட்டுவசதிச் சங்கங்கள் விவரம்

**வினா எண் 39332—திரு. கே. ஆறுமுகம்:** மாண்புமிகு வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) காஞ்சிபுரம் மாவட்டத்திலுள்ள கூட்டுறவு வீட்டுவசதி சங்கங்கள் எத்தனை?

(ஆ) இவற்றில் இலாபத்தில், நட்டத்தில் உள்ளவை எத்தனை?

**விடை—**

**மாண்புமிகு திரு. அனிதா ஆர். ராதாகிருஷ்ணன், வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை அமைச்சர்:**

(அ) காஞ்சிபுரம் மாவட்டத்தில் கீழ்க்கண்ட 17 கூட்டுறவு வீட்டுவசதி சங்கங்கள் உள்ளன:

| வ. எண் | சங்கங்களின் விவரம் | (ரூ. இலட்சத்தில்) இலாபம் | ஆண்டு |
|---|---|---|---|
| 1 | நங்கநல்லூர் கூட்டுறவு கட்டடச் சங்கம் | 1.25 | 1999-2000 |
| 2 | தாம்பரம் கூட்டுறவு வீட்டுவசதி சங்கம் | 2.35 | 2002-2003 |
| 3 | ஆதம்பாக்கம் கூட்டுறவு கட்டடச் சங்கம் | 3.63 | 2002-2003 |
| 4 | தாம்பரம் கூட்டுறவு கட்டடச் சங்கம் | 1.47 | 2002-2003 |
| 5 | சென்னை அரசு அலுவலக கூட்டுறவுச் சங்கம் | | |
| 6 | வாலாஜாபாத் கூட்டுறவு வீட்டுவசதி சங்கம் | | |
| 7 | மாமல்லன் கூட்டுறவு கட்டடச் சங்கம் | நட்டம் | |
| 8 | செங்கற்பட்டு கூட்டுறவு கட்டடச் சங்கம் | | |
| 9 | கார்த்திகேயபுரம் கூட்டுறவு கட்டடச் சங்கம் | | |



| வ. எண் | சங்கங்களின் விவரம் | |
|---|---|---|
| 10 | மதுராந்தகம் கூட்டுறவு கட்டடச் சங்கம் | |
| 11 | மதுராந்தகம் கூட்டுறவு வீட்டுவசதி சங்கம் | |
| 12 | செங்கற்பட்டு கூட்டுறவு வீட்டுவசதி சங்கம் | |
| 13 | குன்றத்தூர் கூட்டுறவு கட்டடச் சங்கம் | நட்டம் |
| 14 | நந்திவரம் கூட்டுறவு கட்டடச் சங்கம் | |
| 15 | மீனம்பாக்கம் கூட்டுறவு கட்டடச் சங்கம் | |
| 16 | காஞ்சிபுரம் கூட்டுறவு வீட்டுவசதி சங்கம் | |
| 17 | திருக்கழுக்குன்றம் கூட்டுறவு வீட்டுவசதி சங்கம் | |

(ஆ) இவற்றில் மேலே 1 முதல் 4 வரை உள்ள 4 சங்கங்கள் இலாபத்திலும், 5 முதல் 17 வரை உள்ள 13 சங்கங்கள் நட்டத்திலும் செயல்பட்டு வருகின்றன.

**78—**

## வீட்டுவசதி சங்கங்கள் விவரம்

**வினா எண் 40653—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சேலம் மாவட்டம், எடப்பாடியில் உள்ள வீடு கட்டும் கூட்டுறவுச் சங்கங்கள் எத்தனை?

(ஆ) இதில் எத்தனை கூட்டுறவுச் சங்கங்கள் இலாபத்தில் செயல்படுகின்றன?

**விடை—**

**மாண்புமிகு திரு. அனிதா ஆர். ராதாகிருஷ்ணன், வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை அமைச்சர்:**

(அ) சேலம் மாவட்டம், எடப்பாடியில் 3 வீட்டுவசதி சங்கங்கள் செயல்படுகின்றன.

[2004 நவம்பர் 17

1. எடப்பாடி கூட்டுறவு வீட்டுவசதி சங்கம்

2. எடப்பாடி கூட்டுறவு வீடு கட்டும் சங்கம்

3. எடப்பாடி வட்டக் கூட்டுறவு வீட்டுவசதி சங்கம்

(ஆ) இதில் மேற்குறிப்பிட்ட 3 சங்கங்களுமே தொடர் நட்டத்தில் (Cumulative loss) செயல்படுகின்றன.

**79—**

## வீடுகள் கட்டும் திட்டம்

**வினா எண் 48555 திரு. கா.தி. இளையகண்ணு:** மாண்புமிகு வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) ஏற்காடு தொகுதியில் உயர் வருவாய், நடுத்தர வருவாய் மற்றும் குறைந்த வருவாய்ப் பிரிவினருக்கு வீட்டுவசதித் திட்டத்தின்கீழ் 2003-2004 ஆம் ஆண்டில் வீடுகள் கட்டும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், இத்திட்டம் எப்போது செயல்பட உள்ளது?

**விடை—**

**மாண்புமிகு திரு. அனிதா ஆர். ராதாகிருஷ்ணன், வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை அமைச்சர்:**

(அ) இல்லை.

(ஆ) எழவில்லை.

**80—**

## வீட்டுவசதி வாரியம் மூலம் வீடுகள்

**வினா எண் 50705—திரு. கோவை தங்கம்:** மாண்புமிகு வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—



2004 நவம்பர் 17]

(அ) கோவை மாவட்டம், வால்பாறை தொகுதி, ஆழியார் நகரில் வீட்டுவசதி வாரியம் மூலம் வீடு கட்டித்தர அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. அனிதா ஆர். ராதாகிருஷ்ணன், வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை அமைச்சர்:**

(அ) திட்டம் ஏதும் இல்லை.

(ஆ) எழவில்லை.

**81—**

## குடிசை மாற்று வாரியம் மூலம் வீடுகள்

**வினா எண் 53147—திரு. அ. சிவபெருமாள்:** மாண்புமிகு வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கழுகுமலை பேரூராட்சியில் குடிசை மாற்று வாரியம் மூலம் வீடுகள் கட்டித்தர அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. அனிதா ஆர். ராதாகிருஷ்ணன், வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை அமைச்சர்:**

(அ) ஆம்.

(ஆ) கழுகுமலை பேரூராட்சியில் வால்மீகி அம்பேத்கர் வீட்டுவசதித் திட்டத்தின்கீழ் 14 தனி வீடுகள் ரூ.5.60 இலட்சம் செலவில் அமைக்கத் திட்டமிடப்பட்டுள்ளது. இத்திட்டப் பணிகள் ஆகஸ்ட் 2004 மாதத்தில் தொடங்கப்பட்டு அக்டோபர் 2004-க்குள் முடிவுறும்.

[2004 நவம்பர் 17

**82—**

## பால் உற்பத்தியைப் பெருக்குதல்

**வினா எண் 53081ஆ—திரு. கே. ஆறுமுகம்:** மாண்புமிகு பால் வளத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தமிழகத்தில் பால் உற்பத்தியை அதிகரிக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. எஸ். இராமச்சந்திரன், பால் வளத் துறை அமைச்சர்:**

ஆம். தமிழகத்தில் பால் உற்பத்தியை அதிகரிக்க அரசு கீழ்க்குறிப்பிட்டுள்ள நடவடிக்கைகளை எடுத்துள்ளது:

(அ) தமிழ்நாடு பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு இணையத்தின் கீழ் 17 மாவட்ட ஒன்றியங்களிலுள்ள கால்நடைகளின் உற்பத்தித் திறனைப் பெருக்கும் பொருட்டு 2,222 கிராம சங்கங்களிலுள்ள கால்நடைகளுக்கு உயர் இன பொலி காளைகளிலிருந்து உற்பத்தி செய்யப்பட்ட உறைவிந்துக் குச்சிகளின் மூலம் செயற்கை முறையில் கருவூட்டல் செய்யப்பட்டு கிராம அளவிலே நல்ல பால் உற்பத்தித் திறன்கொண்ட கிடாரிக் கன்றுகள் பிறப்பதற்கு வழிவகை செய்யப்படுகிறது.

(ஆ) உயர் இன பொலி காளைகளின் உறைவிந்துக் குச்சி தயாரிப்பதற்காக, வெளிநாடுகளிலிருந்து இறக்குமதி செய்யப்பட்ட உயர் இன பொலிகாளைகள் உதகையிலுள்ள ஜெர்சி இன பொலி காளைப் பண்ணையில் பராமரிக்கப்பட்டு வருகின்றன. இதைத் தவிர எருமையினக் கறவை மாடுகள் வளர்ச்சிக்கென எருமையின உறைவிந்து நிலையம் ஈரோட்டில் இயங்கி வருகிறது.

(இ) தமிழகத்தில் 7,117 பால் கூட்டுறவுச் சங்கங்கள் இயங்குகின்றன. 2002-2003 ஆம் ஆண்டில் பால் உற்பத்தி நாள் ஒன்றுக்கு 18.88 இலட்சம் லிட்டரில் இருந்த நிலை மாற்றப்பட்டு, 2003-2004-ல் 20.37 இலட்சம் லிட்டர் என்ற வகையில் பால் உற்பத்தி உயர்த்தப்பட்டுள்ளது. தற்பொழுது மாவட்ட கூட்டுறவு பால் உற்பத்தியாளர் ஒன்றியங்களின் அளவில் நாள் ஒன்றுக்கு 22.90 இலட்சம் லிட்டர் மற்றும் உள்ளூர் விற்பனை 3 இலட்சம் லிட்டர் சேர்த்து 25.90 இலட்சம் லிட்டர் நாள் ஒன்றுக்கு சங்கங்கள் அளவில் பால் உற்பத்தி உயர்த்தப்பட்டுள்ளது.



2004 நவம்பர் 17]

(ஈ) தரமான பால் உற்பத்தியைப் பெருக்கும் பொருட்டு சங்கங்களிலுள்ள ஆதிதிராவிடர் உறுப்பினர்களுக்கு ஆதிதிராவிடர் நலத் திட்டத்தின்கீழ் கறவை மாடு மானியத் திட்டம் செயல்படுத்தப்படுகிறது.

(உ) சிறுபான்மையினர் மற்றும் பிற்படுத்தப்பட்டோர் நல வாரியத்தின் உதவியுடன் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினருக்கு கறவை மாடுகள் கடன் வழங்கும் திட்டம் செயல்படுத்துவதன் மூலம் பால் உற்பத்தி பெருக்கப்படுகிறது.

(ஊ) 2003-2004 ஆம் ஆண்டில் 209 புதிய பால் உற்பத்தியாளர் கூட்டுறவுச் சங்கங்கள் அமைக்கப்பட்டுள்ளன. ஸ்டெப் திட்டத்தின் மூலம் 2003-2004 ஆம் ஆண்டில் 52 மகளிர் பால் உற்பத்தியாளர் கூட்டுறவுச் சங்கங்கள் அமைக்கப்பட்டதன் பயனாக பால் உற்பத்தி கணிசமான அளவில் உயர்த்தப்பட்டுள்ளது.

**83—**

## சுற்றுலாத் தலமாக்கும் திட்டம்

**வினா எண் 38405—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு சுற்றுலாத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சேலம் மாவட்டம், மேட்டூர் நகரைச் சுற்றுலாத் தலமாக்கும் திட்டம் அரசின் செயற்குறிப்பில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. அ. மில்லர், சுற்றுலாத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) சேலம் மாவட்டம், மேட்டூர் நகரைச் சுற்றுலாத் தலமாக்கும் திட்டம் பரிசீலனையில் இல்லை.

**84—**

## கழிவு நீர்க் கால்வாய் அடைப்பு நீக்குதல்

**வினா எண் 19500—திரு. பி.கே. சேகர்பாபு:** மாண்புமிகு செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

226622
சென்னை-600 009

[2004 நவம்பர் 17

ஆர்.கே. நகர் தொகுதி, 9-வது வட்டத்திற்குட்பட்ட 20-க்கும் மேற்பட்ட தெருக்களில் உள்ள கழிவு நீர் கால்வாய்களைப் பாஸ்பாசிங் முறையில் அடைப்பை நீக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன், செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

ஆர்.கே. நகர் பகுதி, 9-வது வட்டத்திற்குட்பட்ட 20-க்கும் மேற்பட்ட தெருக்களில் உள்ள கழிவு நீர் கால்வாய்கள் பாஸ்பாசிங் முறையில் அடைப்பு நீக்கப்பட்டு தூர் வாரப்பட்டுள்ளன எனத் தெரிவிக்கப்படுகிறது.

**85—**

## பள்ளிக்குச் சுற்றுச்சுவர் அமைத்தல்

**வினா எண் 22064—திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தருமபுரி மாவட்டம், பெண்ணாகரம் தொகுதி, பிக்கிலி ஊராட்சி, புதுக்கரம்பில் புதியதாக அமைந்திருக்கும் ஊராட்சி ஒன்றியத் தொடக்கப் பள்ளிக்குச் சுற்றுச்சுவர் அமைக்கும் திட்டம் அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன், செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) தருமபுரி மாவட்டம், பெண்ணாகரம் தொகுதி, பிக்கிலி ஊராட்சி, புதுக்கரம்பில் புதியதாக அமைந்திருக்கும் ஊராட்சி ஒன்றியத் தொடக்கப் பள்ளிக்குச் சுற்றுச்சுவர் அமைக்கும் பணிக்கு ஊர் பொதுமக்கள் அல்லது பெற்றோர் ஆசிரியர் கழகம் செலுத்தப்பட வேண்டிய தொகை இன்னும் செலுத்தப்படவில்லை. ஆகையால், மேற்படி பள்ளிக்கு சுற்றுச்சுவர் எழுப்பும் பணி மேற்கொள்ளப்படவில்லை.



2004 நவம்பர் 17]

**86—**

## தொலைக்காட்சிப் பெட்டி அறை அமைத்தல்

**வினா எண் 22069—திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தருமபுரி மாவட்டம், பெண்ணாகரம் தொகுதி, பிக்கிலி ஊராட்சி, பூமிநத்தம் கிராமத்திற்கு தொலைக்காட்சிப் பெட்டி அறை அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன், செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) பெண்ணாகரம் தொகுதி, பிக்கிலி ஊராட்சி, பூமிநத்தம் கிராமத்தில் தொலைக்காட்சிப் பெட்டி இல்லை. எனவே, மேற்காணும் கிராமத்திற்கு தொலைக்காட்சிப் பெட்டி அறை கட்ட அவசியம் இல்லை.

**87—**

## பேருந்து நிலையக் கடைகள்

**வினா எண் 34275—திரு. செ. வெங்கடாஜலம்:** மாண்புமிகு செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சேலம், பழைய பேருந்து நிலையத்தில் அனுமதியில்லாமல் கடைகள் நடந்து வருவதை அரசு அறியுமா?

(ஆ) ஆம் எனில், நடவடிக்கை எடுக்கப்படுமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன், செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) சேலம் மாநகராட்சி பழைய பேருந்து நிலையத்தில் அனுமதியற்ற கடைகள் தற்பொழுது இல்லை. அனுமதியற்ற கடைகள் உருவானால் அவ்வப்பொழுது அகற்றப்பட்டு வரப்படுகின்றன.

[2004 நவம்பர் 17

88—

## பள்ளிக்குச் சுற்றுச்சுவர் அமைத்தல்

**வினா எண் 37747—திரு. அ.இரா. மலையப்பசாமி:** மாண்புமிகு செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) நாமக்கல் மாவட்டம், கபிலர்மலை தொகுதி, மோகனூர் ஒன்றியம், தீர்த்தாம்பாளையம் பள்ளிக்கூடத்திற்கு சுற்றிலும் தடுப்புச் சுவர் கட்டித் தர அரசு நடவடிக்கை எடுக்குமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன், செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) நாமக்கல் மாவட்டம், கபிலர்மலை தொகுதி, மோகனூர் ஒன்றியம், தீர்த்தாம்பாளையம் பள்ளிக்கூடத்திற்கு சுற்றிலும் தடுப்புச் சுவர் கட்டித் தர 2003-2004 ஆம் நிதியாண்டில் எந்த திட்டத்திலும் நிதி ஒதுக்கீடு செய்யப்படவில்லை. அதனால் சுற்றுச் சுவர் கட்டித் தரும் திட்டம் ஏதுமில்லை.

89—

## வாகனங்கள் நிறுத்த வசதி செய்தல்

**வினா எண் 38318—திரு. செ. வெங்கடாஜலம்:** மாண்புமிகு செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சேலம் மாநகராட்சியில் முக்கிய சாலை ஓரங்களில் வாகனங்களை நிறுத்துவதற்கு "சீசன் டிக்கெட்" முறையை அமல்படுத்த அரசு நடவடிக்கை எடுக்குமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன், செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) தற்போதுள்ள போக்குவரத்து சூழ்நிலையின் அடிப்படையில் இத்திட்டத்தை செயல்படுத்த வாய்ப்பில்லை.



2004 நவம்பர் 17]

90—

## விளையாட்டு அரங்கங்களை நவீனப்படுத்தும் திட்டம்

**வினா எண் 38588—திரு. செ. வெங்கடாஜலம்:** மாண்புமிகு செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சேலம் மாநகராட்சியிலுள்ள விளையாட்டு அரங்கங்களை நவீனப்படுத்தும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன், செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) சேலம் மாநகராட்சியிலுள்ள விளையாட்டு அரங்கங்களை நவீனப்படுத்தும் திட்டம் தற்பொழுது இல்லை.

91—

## வீதிகள் சீரமைத்தல்

**வினா எண் 41421—திரு. செ. வெங்கடாஜலம்:** மாண்புமிகு செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

சேலம் மாநகராட்சியில் முரணாகப் பிரிக்கப்பட்டுள்ள வீதிகள் எப்போது சீரமைக்கப்படும்?

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன், செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

சேலம் மாநகராட்சியில் அனுமதி பெறாமல் முரணாகப் பிரிக்கப்பட்ட வீதிகள் அம்மனை உரிமையாளர்களிடமிருந்து விண்ணப்பம் பெறப்பட்டு அரசாணை விதிகளின்படி 50%-க்கும் அதிகமான முறைப்படுத்துதல் மற்றும் அபிவிருத்திக் கட்டணங்கள் மாநகராட்சிக்கு மனுதாரர்களால் செலுத்தப்பட்ட பின்னர் ஒப்பந்த அடிப்படையில் முறைப்படுத்தப்பட்டு மேற்படி வீதிகள் சீரமைக்கப்படும்.

[2004 நவம்பர் 17

92—

## காய்கறி அங்காடி வளாகம் அமைத்தல்

**வினா எண் 44753—திரு. செ. வெங்கடாஜலம்:** மாண்புமிகு செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

*(அ)* சேலம் மாநகராட்சி, 57-வது கோட்டம், கருங்கல்பட்டி பிரசவ பகுதிக்கு அருகே காய்கறி அங்காடி வளாகம் (ஷெட்) அமைக்க அரசு ஆவன செய்யுமா?

*(ஆ)* ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன், செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

*(அ)* மற்றும் *(ஆ)* சேலம் மாநகராட்சி, 57-வது கோட்டம், கருங்கல்பட்டி பிரசவ பகுதிக்கு அருகே காய்கறி அங்காடி வளாகம் அமைக்க தற்போது திட்டம் இல்லை. நிதி ஆதாரத்திற்கேற்ப பின்னிட்டு மேல் நடவடிக்கை எடுக்கப்படும்.

93—

## பழ அங்காடியை இடமாற்றம் செய்தல்

**வினா எண் 44754—திரு. செ. வெங்கடாஜலம்:** மாண்புமிகு செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

*(அ)* சேலம் மாநகராட்சி, வ.உ.சி. அங்காடியிலுள்ள பழ அங்காடியை மணியனூர் பகுதிக்கு மாற்றும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளதா?

*(ஆ)* ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன், செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

*(அ)* மற்றும் *(ஆ)* சேலம் மாநகராட்சி, வ.உ.சி. அங்காடியிலுள்ள பழ அங்காடியை மணியனூர் பகுதிக்கு மாற்றும் திட்டம் தற்போது இல்லை.



2004 நவம்பர் 17]

94—

## தொடக்கப் பள்ளி கட்டடத்தைச் சீரமைத்தல்

**வினா எண் 47123—திரு. கோவை தங்கம்:** மாண்புமிகு செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

*(அ)* கோயம்புத்தூர் மாவட்டம், வால்பாறை அரசு ஊராட்சி ஒன்றிய தொடக்கப் பள்ளியை சீரமைக்க நடவடிக்கை எடுக்கப்படுமா?

*(ஆ)* ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன், செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

*(அ)* மற்றும் *(ஆ)* கோயம்புத்தூர் மாவட்டம், வால்பாறை அரசு ஊராட்சி ஒன்றிய தொடக்கப் பள்ளியினை வால்பாறை பேரூராட்சி மூலம் ரூ.17,000/- செலவினத்தில் சுத்தம் செய்து, வெள்ளையடித்துக் கொடுக்கப்பட்டுள்ளது.

95—

## பள்ளி சத்துணவுக் கூடம் சீரமைத்தல்

**வினா எண் 48281—திரு. அ.இரா. மலையப்பசாமி:** மாண்புமிகு செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

*(அ)* கபிலர்மலை தொகுதி, பரமத்தி ஊராட்சி ஒன்றியம், பில்லூர் ஊராட்சி ஒன்றிய தொடக்கப் பள்ளியிலுள்ள சத்துணவுக் கூடத்தை செப்பனிட அரசு நடவடிக்கை எடுக்குமா?

*(ஆ)* ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன், செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

*(அ)* மற்றும் *(ஆ)* கபிலர்மலை தொகுதி, பரமத்தி ஊராட்சி ஒன்றியம், பில்லூர் ஊராட்சி ஒன்றிய தொடக்கப் பள்ளியிலுள்ள சத்துணவுக்கூடத்தை சட்டமன்றத் தொகுதி மேம்பாட்டுத் திட்ட நிதியில் இருந்து 2003-2004 ஆம் ஆண்டில் ரூ.20,000/- மதிப்பீட்டில்

பழுதுபார்த்து மற்றும் விரிவாக்கம் செய்து தற்பொழுது பயன்படுத்தப்பட்டு வருகிறது.

**96—**

## சுரங்கப்பாதை ஏற்படுத்துதல்

**வினா எண் 50372—திரு. கோவை தங்கம்:** மாண்புமிகு செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா

(அ) கோயம்புத்தூர் மாநகர் ஒப்பணக்கார வீதி, பெரிய கடைவீதி சந்திப்பில் உக்கடம் பகுதி, கோயம்புத்தூரில் ரயில் நிலையம் எதிரில் மற்றும் டவுன் ஹாலில் ஏற்பட்டு வரும் ஜனநெருக்கடியை தவிர்க்க சுரங்கப்பாதை ஏற்படுத்த அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன், செய்தி, விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) வினா சம்பந்தப்பட்ட பகுதி உள்ள கோவை மாநகரின் 10 சாலை சந்திப்புகளை தமிழ்நாடு நகர்ப்புற அபிவிருத்தி நிதி மையத்தால் நியமிக்கப்பட்ட ஆலோசகர் நேரில் ஆய்வு செய்து ஆராய்ந்ததில் காந்திபுரத்தில் தஞ்சப்பா சாலையில் மட்டும் ஒரு சுரங்கப்பாதை அமைக்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. இவ்வறிக்கையின் அடிப்படையில் வினாவில் குறிப்பிட்டுள்ள பகுதிகளில் சுரங்கப்பாதை அமைக்கும் திட்டம் ஆய்வில் இல்லை. எனவே, இப்பகுதிகளில் போக்குவரத்து அபிவிருத்தி மேற்கொண்டால் போதுமானது எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

**97—**

## நிதிக் குழு மூலம் தொகை ஒதுக்கீடு

**வினா எண் 50507—திரு. செ. வெங்கடாஜலம்:** மாண்புமிகு செய்தி, விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) 2002-2003 ஆம் ஆண்டில் சேலம் மாநகராட்சியில் பதினோராவது நிதிக் குழு மூலம் ஒதுக்கப்பட்ட தொகை எவ்வளவு?

(ஆ) இதன் மூலம் செய்து முடிக்கப்பட்ட பணிகள் என்னென்ன?



**விடை—**

**மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன், செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) ஒதுக்கப்பட்ட தொகை ரூ.52.35 இலட்சம்.

(ஆ) திருமணிமுத்தாறு அபிவிருத்தி திட்ட முதற்கட்ட பணிகளுக்காக தொகை முழுவதும் செலவிடப்பட்டது.

**98—**

## கழிவுநீரை அகற்ற ஏற்பாடு

**வினா எண் 50516—திரு. செ. வெங்கடாஜலம்:** மாண்புமிகு செய்தி, விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சேலம் மாநகராட்சி, 35-வது கோட்டம், மிலிடெரி ரோடு அருகே தேங்கியுள்ள கழிவுநீரை அகற்ற அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன், செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) சேலம் மாநகராட்சி, 35-வது கோட்டம், மிலிடெரி ரோடு அருகே தேங்கியுள்ள கழிவுநீர் முழுவதும் அகற்றப்பட்டு சாக்கடை மண் மற்றும் வீடு இடிக்கப்பட்ட மண் ஆகியவற்றால் நிரவப்பட்டுள்ளது. மேலும், கழிவுநீர் தேங்காவண்ணம் உடனுக்குடன் துப்புரவுப் பணியாளர் மூலம் சுத்தம் செய்யப்பட்டு பாதுகாக்கப்படுகிறது.

**99—**

## காய்கறி அங்காடி அமைக்கும் திட்டம்

**வினா எண் 50544—திரு. மு. கார்த்தி:** மாண்புமிகு செய்தி, விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

[2004 நவம்பர் 17

ஆர்.கே. நகர் தொகுதி, 9-வது வட்டத்திற்குட்பட்ட 20-க்கும் மேற்பட்ட தெருக்களில் உள்ள கழிவு நீர் கால்வாய்களைப் பாஸ்பாசிங் முறையில் அடைப்பை நீக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன், செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

ஆர்.கே. நகர் பகுதி, 9-வது வட்டத்திற்குட்பட்ட 20-க்கும் மேற்பட்ட தெருக்களில் உள்ள கழிவு நீர் கால்வாய்கள் பாஸ்பாசிங் முறையில் அடைப்பு நீக்கப்பட்டு தூர் வாரப்பட்டுள்ளன எனத் தெரிவிக்கப்படுகிறது.

**85—**

## பள்ளிக்குச் சுற்றுச்சுவர் அமைத்தல்

**வினா எண் 22064—திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தருமபுரி மாவட்டம், பெண்ணாகரம் தொகுதி, பிக்கிலி ஊராட்சி, புதுக்கரம்பில் புதியதாக அமைந்திருக்கும் ஊராட்சி ஒன்றியத் தொடக்கப் பள்ளிக்குச் சுற்றுச்சுவர் அமைக்கும் திட்டம் அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன், செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) தருமபுரி மாவட்டம், பெண்ணாகரம் தொகுதி, பிக்கிலி ஊராட்சி, புதுக்கரம்பில் புதியதாக அமைந்திருக்கும் ஊராட்சி ஒன்றியத் தொடக்கப் பள்ளிக்குச் சுற்றுச்சுவர் அமைக்கும் பணிக்கு ஊர் பொதுமக்கள் அல்லது பெற்றோர் ஆசிரியர் கழகம் செலுத்தப்பட வேண்டிய தொகை இன்னும் செலுத்தப்படவில்லை. ஆகையால், மேற்படி பள்ளிக்கு சுற்றுச்சுவர் எழுப்பும் பணி மேற்கொள்ளப்படவில்லை.



2004 நவம்பர் 17]

## இரண்டாம் பட்டியல்

**1—**

## மண்ணெண்ணெய் வழங்கு நிலையம் அமைத்தல்

**வினா எண் 32208—செல்வி சி. கனகதாரா:** மாண்புமிகு நிதி மற்றும் உணவு அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பேரணாம்பட்டு தொகுதி, சாலப்பேட்டை நகரை மையமாகக் கொண்டு ஒரு கிளை மண்ணெண்ணெய் பங்க் அமைக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன், நிதி மற்றும் உணவு அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) வேலூர் மாவட்டம், குடியாத்தம் வட்டம், பேரணாம்பட்டு பேரூராட்சி, சாலப்பேட்டையில் அரசு புறம்போக்கு நிலம் ஏதும் இல்லாததாலும், தொடக்க வேளாண் கூட்டுறவு வங்கி ஏற்கனவே நட்டத்தில் இயங்குவதாலும், அப்பகுதியின் மண்ணெண்ணெய் தேவை குறைவாக உள்ளதாலும், பேரூராட்சியில் இடம் ஒதுக்கினாலும், கூட்டுறவு நிறுவனம் இதனை எடுத்து நடத்த முன்வாராததாலும் மற்றும் அரசின் இதர நிபந்தனைகள் முழுமையாக பூர்த்தி செய்யப்படாத காரணத்தாலும் மண்ணெண்ணெய் வழங்கு நிலையம் அமைக்க இயலாது.

**2—**

## உணவு சேமிப்புக் கிடங்கில் உணவு தானிய மூட்டைகள் விவரம்

**வினா எண் 50891—திருமதி சி.எம். சூரியகலா:** மாண்புமிகு நிதி மற்றும் உணவு அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) 2002-2003 ஆம் ஆண்டில் குடியாத்தம் நகரிலுள்ள உணவு சேமிப்புக் கிடங்கில் கெட்டுப்போன உணவு தானியங்கள் எத்தனை மூட்டைகள்?

(ஆ) அவற்றின் அரசு மதிப்பும், சந்தை மதிப்பும் எவ்வளவு?

**விடை—**

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன், நிதி மற்றும் உணவு அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) குடியாத்தம் கிட்டங்கியில் கெட்டுப்போன அரிசி அல்லது உணவு தானியங்கள் 2002-2003 ஆம் ஆண்டில் ஏதும்

இல்லை. ஆனால் வழங்க இயலாத (Non-issuable) அரிசி இருந்தது. அவ்வரிசி தமிழ்நாடு அரசு ஆணையின் அடிப்படையில் டெண்டர் மூலம் கீழ்க்கண்டவாறு விற்கப்பட்டுவிட்டது:

| வ. எ. | ஆட்டி எண் | வழங்கிய அளவு பொருள் | வழங்கிய அளவு மூட்டை | நிகர எடை | அரசு வழங்குப் விலை ரூ.பை. | மொத்த விலை ரூ.பை | டெண்டர் விலை ரூ.பை | வழங்கப்பட்ட நாள் | வழங்கல் எண் | வசூலிக்கப்பட்ட தொகை ரூ.பை |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| 1 | ஆர். 9/86 | புழுங்கல் அரிசி "A" கிரேடு | 657 | 66.443 | 1 டன் 3500 | 232550.60 | 1 டன் 6350 | 26.8.02 26.8.02 | 9708 9715 | 366470.05 |
| 2 | ஆர். 6/93 | புழுங்கல் அரிசி "A" கிரேடு | 524 | 47.848 | 1 டன் 3500 | 167461.00 | 1 டன் 5350 | 25.8.02 | 10664 | 255878.10 |





**3—**

## மின் விளக்கு அமைத்தல்

**வினா எண் 41476—திரு. எஸ். நடராஜன்:** மாண்புமிகு சட்டம், தகவல் தொழில்நுட்பவியல் மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாககளுக்கு விடையளிப்பாரா—

(அ) நாட்ராம்பள்ளி தொகுதி, பேராம்பட்டு ஊராட்சி, 3 மற்றும் 4-வது பகுதிகளில் மின் விளக்கு அமைத்துத் தர அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. டி. ஜெயக்குமார், சட்டம், தகவல் தொழில்நுட்பவியல் மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) நாட்ராம்பள்ளி தொகுதி, பேராம்பட்டு ஊராட்சி, 3 மற்றும் 4-வது பகுதிகளில் தெரு மின் விள்க்கு வேண்டி எந்தவித விண்ணப்பங்களும் நிலுவையில் இல்லை. அந்தப் பகுதி உள்ளாட்சி அமைப்பு, உரிய விண்ணப்பத்துடன் விண்ணப்பித்தால் தெரு மின் விளக்கு அமைக்க வாரிய விதிகளின்படி உடன் நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

**4—**

## மின் இணைப்பு

**வினா எண் 42041—திரு. கே. ஆறுமுகம்:** மாண்புமிகு சட்டம், தகவல் தொழில்நுட்பவியல் மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) காஞ்சிபுரம் மாவட்டம், செங்கற்பட்டு தொகுதியில் விவசாய மின் இணைப்பு கோரி வந்த விண்ணப்பங்கள் எத்தனை?

(ஆ) அதில் 2001-2002 ஆம் ஆண்டில் எத்தனை இணைப்புகள் வழங்கப்பட்டுள்ளன?

[2004 நவம்பர் 17

(இ) காத்திருப்போருக்கு எவ்வளவு காலத்திற்குள் வழங்கப்பெறும்?

**விடை—**

**மாண்புமிகு திரு. டி. ஜெயக்குமார், சட்டம், தகவல் தொழில்நுட்பவியல் மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்:**

(அ) காஞ்சிபுரம் மாவட்டம், செங்கற்பட்டு தொகுதியில் விவசாய மின் இணைப்பு கோரி வந்த விண்ணப்பங்கள் 2388 ஆகும்.

(ஆ) அதில் 2001-2002 ஆம் ஆண்டில் 97 இணைப்புகள் வழங்கப்பட்டன.

(இ) அரசு உத்தரவின்படி வரிசைக்கிரமமாக மின் இணைப்பு வழங்கப்படும்.

**5—**

## எரிவாயு சுழலி மின் உற்பத்தித் திட்டம்

**வினா எண் 54857—திரு. இ. கணேசன்:** மாண்புமிகு சட்டம், தகவல் தொழில்நுட்பவியல் மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) குத்தாலம் எரிவாயு சுழலி மின் திட்டம் முழுமையாக பணி முடிவடைந்துள்ளதா?

(ஆ) ஆம் எனில், அங்கு உற்பத்தி செய்யப்படும் மின்சார அளவு என்ன?

**விடை—**

**மாண்புமிகு திரு. டி. ஜெயக்குமார், சட்டம், தகவல் தொழில்நுட்பவியல் மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்:**

(அ) 101 மெகாவாட் குத்தாலம் எரிவாயு மின் உற்பத்தித் திட்டம் முழுமையாக முடிவடைந்தது. 27-11-2003 முதல் திறப்பு சுழற்சி முறையில் 65 மெகாவாட் மின் உற்பத்தியும், 24-03-2004 முதல் இணைப்பு சுழற்சி முறையில் 101 மெகாவாட் மின் உற்பத்தியும் செய்து வருகிறது.



2004 நவம்பர் 17]

(ஆ) இத்திட்டத்தின் மூலம் ஆண்டொன்றுக்கு சுமார் 720 மில்லியன் யூனிட்டுகள் தமிழ்நாடு மின் கட்டமைப்புக்கு கிடைக்கும்.

**6—**

## திருக்கோயில் கட்டுதல்

**வினா எண் 46813—திரு. கோவை தங்கம்:** மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கோயம்புத்தூர் மாவட்டம், வால்பாறை ஹை பாரஸ்ட் எஸ்டேட் மற்றும் முடிஸ் பேருந்து நிலையம் அருகிலுள்ள ஸ்ரீ அம்மன் திருக்கோயில் கட்டி முடிக்கப்படாமல் இருப்பது அரசுக்குத் தெரியுமா?

(ஆ) ஆம் எனில், விவரம் என்ன?

**விடை—**

**மாண்புமிகு திரு. பி.சி. ராமசாமி, இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர்:**

(அ) ஆம்.

(ஆ) மேற்குறிப்பிட்ட அருள்மிகு அம்மன் திருக்கோயில் இந்து சமய அறநிலைய ஆட்சித் துறை ஆளுகையின்கீழ் இல்லாத திருக்கோயிலாகும். முடிஸ் பகுதியைச் சேர்ந்த தோட்டத்து மக்களால் அனுமதியின்றி புதிதாக கட்டி வரப்பெற்ற இத்திருக்கோயில் போதிய நிதிவசதி இல்லாததால் பணி பாதியிலேயே நின்று விட்டது. ஆளுநர் உரையில் அறிவிக்கப்பட்ட துறையின் ஆளுகையின்கீழ் இல்லாத ஆதி திராவிடர் வாழும் பகுதியிலுள்ள 6000 திருக்கோயில்கள் திருப்பணி நிதியுதவி வழங்கும் திட்டத்தின்கீழ் இத்திருக்கோயில் தேர்வு செய்யப்பட்டு ரூ.25,000/-நிதியுதவி வழங்கப்பட்டுள்ளது.

7—

## இரத்த சேமிப்பு வங்கிக்குக் கட்டடம்

**வினா எண் 17807—திரு. ஜெக. வீரபாண்டியன்:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

மயிலாடுதுறை அரசு மருத்துவமனையில் கட்டி முடிக்கப்பட்டுள்ள இரத்த சேமிப்பு வங்கிக்கான கட்டடம் எப்போது திறக்கப்படும் என்பதை அரசு அறிவிக்குமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. ந. தளவாய் சுந்தரம், மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:**

மயிலாடுதுறையில் உள்ள அரசு மருத்துவமனை குருதி வங்கிக் கட்டடம் சில மாற்றங்களுடன் குருதி வங்கிக்கு ஏற்றவாறு ஒழுங்குபடுத்தப்பட்டுள்ளது. இங்கு உள்ள குருதி வங்கிக்கு 9-3-2004 முதல் 8-3-2009 வரையிலான ஐந்தாண்டு காலத்திற்கு உரிமம் பெறப்பட்டு, இம்மருத்துவமனையில் 26-5-2004 முதல் குருதி வங்கி செயல்பட்டு வருகிறது.

8—

## மாநில மகளிர் ஆணையம்

**வினா எண் 22759—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு சமூக நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழக மாநிலப் பெண்கள் ஆணையத்தின் முக்கிய பணிகள் யாவை?

(ஆ) அதில் உறுப்பினர்கள் எத்தனை பேர்?

(இ) கடந்த 2001-2002 ஆம் ஆண்டு கொடுமைக்கு ஆளான பெண்கள் எத்தனை பேரைச் சந்தித்து ஆய்வறிக்கை கொடுத்துள்ளது என்பதை அரசு தெரிவிக்குமா?



**விடை—**

**மாண்புமிகு திருமதி பா. வளர்மதி, சமூக நலத் துறை அமைச்சர்:**

(அ) 1. மகளிர் நலன்கள் பாதுகாத்தல்

2. பண்பு உயர்வு குறித்த மகளிர் நிலையை உயர்த்துதல் மற்றும் மேம்படுத்துதல் குறித்து

3. அரசுக்குத் தக்க நடவடிக்கை எடுக்க பரிந்துரை செய்தல் போன்றவை ஆகும்.

கீழ்க்கண்ட அதிகாரங்கள் தமிழ்நாடு மாநில மகளிர் ஆணையத்திற்கு வழங்கப்பட்டுள்ளது.

மகளிருக்கு இந்திய அரசமைப்புச் சட்டப்படியும் மற்ற சட்டங்களின்படியும், பாதுகாப்பு அளித்து, விசாரணை செய்தலும், ஆய்வு செய்தலும் அரசியல் சட்டத்தில் ஆய்வு செய்து அதிக அதிகாரங்கள் இயற்றுதல் மற்றும் சட்டத்தில் உள்ள குறைபாடுகளை நீக்கி கூடுதல் அதிகாரங்கள் கிடைக்க வேண்டி வழி செய்தல்.

அரசமைப்புச் சட்டத்தில் மகளிருக்குத் தரப்பட்டுள்ள அதிகாரங்கள் பாதிக்கப்படாவண்ணம் பாதுகாத்தல்.

மகளிருக்குக் கொடுக்கப்பட்ட அதிகாரங்களும் அவர்களுக்கு இயற்றப்பட்டுள்ள சட்டங்களும் செயல்படுகின்றனவா என்பதைக் கணித்து மகளிருக்கு மீண்டும் அவை கிடைப்பதற்கு உரிய பாதுகாப்பு கொடுத்து அதன் நோக்கங்களை நிறைவேற்றுதல்.

மகளிருக்கு ஏற்படக்கூடிய குறிப்பிட்ட பிரச்சினைகளைச் சிறப்பு ஆய்வு செய்து, வேற்றுமைகளையும், மகளிருக்கு எதிராக வன்முறை செய்பவர்களையும் அடையாளம் கண்டு கொண்டு அவற்றை நீக்குவதற்குப் பரிந்துரை செய்தல்.

பெண் கல்வி மற்றும் ஆய்வு அனைத்து நோக்கங்களிலும் பெண்களின் பங்கேற்பு குறித்து ஆலோசனை வழங்குதல், சிறைச்சாலைகளை ஆய்வு செய்தல், தண்டனை பெற்ற மகளிர் வசிக்கும் பாதுகாப்பு இல்லங்கள் மற்றும் மகளிர் சிறைச்சாலைகள், மகளிர் தங்கி இருக்கும் இல்லங்கள் ஆகியவற்றைப் பார்வையிட்டு அதுகுறித்து அரசுக்கு அறிக்கை அனுப்புதல்.

(ஆ) அரசாணை எண் 34, சமூக நலம் மற்றும் சத்துணவுத் திட்டத் துறை, நாள்: 11-3-2002-ன்படி முனைவர் வே. வசந்தி தேவி அவர்களைத் தலைவியாகக் கொண்டு கீழ்க்கண்ட 9 உறுப்பினர்களுடன் தமிழ்நாடு மாநில மகளிர் ஆணையம் இயங்கி வருகிறது:—

1. திருமதி ஷீலா பாலகிருஷ்ணன், இ.ஆ.ப.,
2. திருமதி ஜி. திலகவதி, இ.கா.ப.,
3. திருமதி மந்தாகினி கிருஷ்ணமூர்த்தி,
4. திருமதி வை.ஜி. பார்த்தசாரதி,
5. திருமதி பதர் சையத்,
6. திருமதி ஆர். தமிழ்மொழி ராஜதத்தன் (சட்டமன்ற உறுப்பினர்)
7. திருமதி செல்வி முருகேசன் (சட்டமன்ற உறுப்பினர்)
8. அரசுச் செயலர், சமூக நலம் மற்றும் சத்துணவுத் திட்டத் துறை, தலைமைச் செயலகம், சென்னை-9
9. ஆணையர், சமூக நலம் மற்றும் சத்துணவுத் திட்டத் துறை, சேப்பாக்கம், சென்னை-5.

(இ) கடந்த 2001-2002 ஆம் ஆண்டு கொடுமைக்கு ஆளான பெண்கள் விவரம் கீழ்வருமாறு:—

| மாதம் | வரதட்சணை கொடுமை | பாலியல் கொடுமை | பெண்களை கேலி செய்தல் | சொத்து தகராறு | மற்றவை | மொத்தம் |
|---|---|---|---|---|---|---|
| | | 2001 ஆம் வருடத்திலிருந்து | | | | |
| ஜனவரி | 0 | 5 | 2 | 1 | 4 | 12 |
| பிப்ரவரி | 3 | 1 | 1 | 1 | 4 | 10 |
| மார்ச் | 2 | 1 | 1 | 1 | 3 | 8 |
| ஏப்ரல் | 1 | 1 | 1 | 1 | 2 | 6 |
| மே | 4 | 3 | 2 | 1 | 0 | 10 |
| ஜுன் | 0 | 0 | 1 | 1 | 1 | 3 |
| ஜுலை | 1 | 5 | 2 | 1 | 2 | 11 |
| ஆகஸ்ட் | 5 | 0 | 1 | 1 | 1 | 8 |
| செப்டம்பர் | 5 | 0 | 1 | 1 | — | 7 |
| அக்டோபர் | 2 | 0 | 0 | 1 | 5 | 8 |
| நவம்பர் | 0 | 0 | 1 | 0 | 3 | 4 |
| டிசம்பர் | 8 | 0 | 1 | 0 | 14 | 23 |
| | | 2002 ஆம் வருடத்திலிருந்து | | | | |
| ஜனவரி | 2 | 3 | 3 | 2 | 5 | 15 |
| பிப்ரவரி | 1 | 1 | 1 | 0 | 4 | 7 |
| மார்ச் | 0 | 6 | 0 | 2 | 13 | 21 |
| ஏப்ரல் | 2 | 5 | 2 | 6 | 9 | 24 |
| மே | 5 | 7 | 1 | 2 | 11 | 26 |
| ஜுன் | 7 | 2 | 1 | 4 | 12 | 26 |
| ஜுலை | 10 | 1 | 0 | 8 | 10 | 29 |
| ஆகஸ்ட் | 3 | 4 | 1 | 4 | 4 | 16 |
| செப்டம்பர் | 6 | 4 | 0 | 0 | 13 | 23 |
| அக்டோபர் | 5 | 5 | 1 | 0 | 10 | 21 |
| நவம்பர் | 5 | 6 | 1 | 3 | 15 | 30 |
| டிசம்பர் | 7 | 10 | 0 | 5 | 8 | 30 |
| | | | மொத்தம் | | | 378 |



378 புகார் மனுக்களில் 146 மனுக்கள் தீர்வு காணப்பட்டுவிட்டன. மீதமுள்ள 232 மனுக்கள், மாவட்ட ஆட்சியர் மற்றும் காவல் கண்காணிப்பாளர் அவர்களிடம் மேல் நடவடிக்கையில் உள்ளன.

9—

## முதியோர் உதவித் தொகை

**வினா எண் 28948—டாக்டர் சி. விஜயபாஸ்கர்:** மாண்புமிகு சமூக நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

[2004 நவம்பர் 17

(அ) புதுக்கோட்டை தொகுதியில் ஆதரவற்ற முதியோர் உதவித் தொகை திட்டத்தில் பயன்பெறும் பயனாளிகளின் விவரம் என்ன?

(ஆ) 2001-2002 ஆம் ஆண்டில் பயன்பெறும் புதிய பயனாளிகள் எத்தனை பேர்?

**விடை—**

**மாண்புமிகு திருமதி பா. வளர்மதி, சமூக நலத் துறை அமைச்சர்:**

(அ) புதுக்கோட்டை தொகுதியில் ஆதரவற்ற முதியோர் உதவித் தொகை திட்டத்தின்கீழ் முதியோர் உதவித் தொகை பெறும் பயனாளிகளின் விவரம்:—

| வ.எண் | திட்டத்தின் பெயர் | 31.03.2004-ல் உதவித் தொகை பெற்ற பயனாளிகள் விவரம் |
|---|---|---|
| 1 | முதியோர் உதவித் தொகை | 2010 |
| 2 | விதவை உதவித் தொகை | 1736 |
| 3 | ஆதரவற்ற விவசாயக் கூலிகள் உதவித் தொகை | 218 |
| 4 | உடல் ஊனமுற்றோர் உதவித் தொகை | 299 |
| 5 | கணவனால் கைவிடப்பட்டோர் உதவித் தொகை | 370 |
| | மொத்தம் | 4633 |

(ஆ) புதுக்கோட்டை தொகுதியில் 2001-2002 ஆம் ஆண்டில் பயன்பெறும் புதிய பயனாளிகளின் எண்ணிக்கை 243 ஆகும்.

**10—**

## முதியோர் உதவித் தொகை

**வினா எண் 33829—திரு. என்.ஆர். ரங்கராஜன்:** மாண்புமிகு சமூக நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—



2004 நவம்பர் 17]

(அ) பட்டுக்கோட்டை தொகுதியில் வயது முதிர்ந்தோருக்கான உதவித் தொகைக்கு 2001-2002 வரை விண்ணப்பித்தவர்கள் எத்தனை பேர்?

(ஆ) எத்தனை பேர்களுக்கு வழங்கப்பட்டுள்ளது?

**விடை—**

**மாண்புமிகு திருமதி பா. வளர்மதி, சமூக நலத் துறை அமைச்சர்:**

(அ) பட்டுக்கோட்டை தொகுதியில் வயது முதிர்ந்தோருக்கான உதவித் தொகைக்கு 2001 ஆம் ஆண்டில் 200 நபர்களும், 2002 ஆம் ஆண்டில் 241 நபர்களும் விண்ணப்பித்துள்ளார்கள்.

(ஆ) 2001 ஆம் ஆண்டில் 150 நபர்களுக்கும், 2002 ஆம் ஆண்டில் 52 நபர்களுக்கும் உதவித் தொகை வழங்கப்பட்டுள்ளது.

**11—**

## முதியோர் உதவித் தொகை

**வினா எண் 33970—திரு. கே.கே. சிவசாமி:** மாண்புமிகு சமூக நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

அருப்புக்கோட்டை தொகுதி, திருச்சுழி ஒன்றியம், புரசலூர் பகுதியில் முதியோர் உதவித் தொகை கேட்டு விண்ணப்பித்தவர்களுக்கு உதவித் தொகை வழங்க அரசு ஆவன செய்யுமா?

**விடை—**

**மாண்புமிகு திருமதி பா. வளர்மதி, சமூக நலத் துறை அமைச்சர்:**

அருப்புக்கோட்டை தொகுதி, திருச்சுழி ஒன்றியம், புரசலூர் பகுதியில் முதியோர் உதவித் தொகை கேட்டு விண்ணப்பம் செய்தவர்களுக்கு அரசு விதிகளின் அடிப்படையில் தகுதியுள்ள நபர்களுக்கு முதியோர் உதவித் தொகை வழங்கப்பட்டு வருகிறது. தற்போது புரசலூர் பகுதியில் 20 நபர்கள் முதியோர் உதவித் தொகை திட்டத்தின்கீழ் பயனடைந்து வருகிறார்கள்.

[2004 நவம்பர் 17

12—

## இலவச தொழில் கருவிகள்

**வினா எண் 34642—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு சமூக நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) 2001—2002 ஆம் ஆண்டில் சேலம் மாவட்டத்தில் இலவச தொழில் கருவிகள் வழங்கும் திட்டத்தின்கீழ் எத்தனை இலவச இயந்திரங்கள் எத்தனை பேருக்கு வழங்கப்பட்டன?

(ஆ) அவற்றின் மதிப்பு எவ்வளவு?

**விடை—**

**மாண்புமிகு திருமதி பா. வளர்மதி, சமூக நலத் துறை அமைச்சர்:**

(அ) சமூக நலத் துறை மூலம் இலவச தொழில் கருவிகள் வழங்கும் திட்டம் எதுவும் தனியாக செயல்படுத்தப்படுவதில்லை. இலவச தையல் இயந்திரம் வழங்கும் திட்டமே செயல்படுத்தப்பட்டு வருகின்றது. 2001-2002 ஆம் ஆண்டில் 834 தையல் இயந்திரங்கள் சேலம் மாவட்டத்தில் இலவசமாக பயனாளிகளுக்கு வழங்கப்பட்டுள்ளன.

(ஆ) 834 தையல் இயந்திரங்களின் மொத்த மதிப்பு ரூ.14,46,900/- ஆகும்.

13—

## இலவச தையல் இயந்திரம்

**வினா எண் 37427—திரு. கா.தி. இளையகண்ணு:** மாண்புமிகு சமூக நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) ஏற்காடு தொகுதியில் சத்தியவாணிமுத்து அம்மையார் நினைவு மகளிர் இலவச தையல் இயந்திரம் வழங்கும் திட்டம் செயல்படுத்தப்படுகிறதா?

(ஆ) ஆம் எனில், பயனடைந்தோர் எத்தனை பேர்?



2004 நவம்பர் 17]

**விடை—**

**மாண்புமிகு திருமதி பா. வளர்மதி, சமூக நலத் துறை அமைச்சர்:**

(அ) ஆம். ஏற்காடு தொகுதி என்று மட்டுமல்லாமல் தமிழ்நாட்டில் அனைத்து மாவட்டத்திலுள்ள அனைத்து தொகுதிகளிலும் இத்திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகிறது.

(ஆ) ஏற்காடு தொகுதியில், சத்தியவாணிமுத்து அம்மையார் நினைவு மகளிர் இலவச தையல் இயந்திரம் வழங்கும் திட்டத்தில் 2003-2004 ஆம் ஆண்டில் 11 பயனாளிகள் பயன் அடைந்துள்ளனர்.

14—

## ஆதரவற்ற பெண்கள் ஓய்வூதியத் திட்டம்

**வினா எண் 37439—திரு. கா.தி. இளையகண்ணு:** மாண்புமிகு சமூக நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) ஏற்காடு தொகுதியில் கணவனால் கைவிடப்பட்ட ஆதரவற்ற பெண்கள் ஓய்வூதியத் திட்டம் செயல்படுத்தப்படுகிறதா?

(ஆ) ஆம் எனில், பயனடைந்தோர் எத்தனை பேர்?

**விடை—**

**மாண்புமிகு திருமதி பா. வளர்மதி, சமூக நலத் துறை அமைச்சர்:**

(அ) ஆம். ஏற்காடு தொகுதியில் முதியோர் உதவித் தொகை திட்டத்தின்கீழ் கணவனால் கைவிடப்பட்ட ஆதரவற்ற பெண்கள் ஓய்வூதியத் திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகிறது.

(ஆ) ஏற்காடு தொகுதியில் கணவனால் கைவிடப்பட்ட ஆதரவற்ற பெண்கள் ஓய்வூதியம் கோரி மனுக்கள் பெறப்படாததால் எவருக்கும் வழங்கப்படவில்லை.

[2004 நவம்பர் 17

15—

## நலிந்தோர் குடும்ப நலத் திட்டம்

**வினா எண் 41760—திரு. கா.தி. இளையகண்ணு:** மாண்புமிகு சமூக நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) ஏற்காடு தொகுதியில், நலிந்தோர் குடும்ப நலத் திட்டம் செயல்படுத்தப்படுகிறதா?

(ஆ) ஆம் எனில், பயனடைந்தோர் எத்தனை பேர்?

**விடை—**

**மாண்புமிகு திருமதி பா. வளர்மதி, சமூக நலத் துறை அமைச்சர்:**

(அ) ஆம். ஏற்காடு தொகுதியில் நலிந்தோர் குடும்ப நலத் திட்டம் செயல்படுத்தப்படுகிறது.

(ஆ) கடந்த 1998 ஆம் ஆண்டு முதல் இதுவரை 76 பயனாளிகள் பயனடைந்துள்ளனர்.

16—

## இலவச தையல் இயந்திரம்

**வினா எண் 49742—திரு. கோவை தங்கம்:** மாண்புமிகு சமூக நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கோவை மாவட்டத்தில் ஆண்டுதோறும் வழங்கும் இலவச தையல் இயந்திரங்களைக் கூடுதலாக வழங்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திருமதி பா. வளர்மதி, சமூக நலத் துறை அமைச்சர்:**

(அ) கோவை மாவட்டத்தில் ஆண்டுதோறும் தேவைப் பட்டியலின் அடிப்படையில் இலவச தையல் இயந்திரங்கள் வழங்கப்பட்டு வருகின்றன. கூடுதலாக மாவட்ட சமூக நல அலுவலரால் தையல் இயந்திரங்கள் கேட்கப்படின் மற்ற மாவட்டங்களில் அவரவர்களுக்கு வழங்கப்பட்ட தையல் இயந்திரங்களின் தேவை போக மீதம் இருப்பின் அப்போது கூடுதலாக வழங்கப்படும்.



2004 நவம்பர் 17]

(ஆ) 2003-2004-ல் கோயம்புத்தூர் மாவட்டத்திற்கு 800 தையல் இயந்திரங்கள் முதலில் ஒதுக்கீடு செய்யப்பட்டன. கூடுதலாக கேட்கப்பட்டபின் 475 தையல் இயந்திரங்கள் வாங்கி வழங்க உத்தரவு வழங்கப்பட்டுள்ளது.

17—

## உண்டி உறைவிடப் பள்ளி

**வினா எண் 31102—திரு. வெ. ஏழுமலை:** மாண்புமிகு ஆதி திராவிடர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

விழுப்புரம் மாவட்டம், செஞ்சி வட்டம், சோழங்குளம் கிராமத்தைச் சுற்றியுள்ள ஊர்களில் வாழும் இருளர்களுக்கு உண்டி உறைவிடப் பள்ளி ஏற்படுத்த அரசு நடவடிக்கை மேற்கொள்ளுமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. சொ. கருப்பசாமி, ஆதி திராவிடர் நலத் துறை அமைச்சர்:**

விழுப்புரம் மாவட்டம், செஞ்சி வட்டம், சோழங்குளம் மற்றும் அதைச் சுற்றியுள்ள 13 கிராமங்களில், 7 கிராமங்களில் இருளர் இனத்தைச் சார்ந்த பள்ளிக்குச் செல்லும் வயதுடைய பிள்ளைகள் ஒருவர்கூட இல்லை; ஏனைய கிராமங்களில் ஏற்கெனவே பள்ளிகள் இயங்கி வருகின்றன. எனவே, சோழங்குளம் மற்றும் அதனைச் சுற்றியுள்ள கிராமங்களில் உள்ள பண்டைய பழங்குடியினராகிய இருளர் சமுதாயத்திற்கு தனியாக உண்டி உறைவிடப் பள்ளி ஏற்படுத்தத் தேவை எழவில்லை.

[2004 நவம்பர் 17

**18—**

## ஆசிரியர் பணியிடங்கள் நிரப்புதல்

**வினா எண் 35050—திரு. நா. சந்திரமோகன்:** மாண்புமிகு ஆதி திராவிடர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

*(அ)* நாகப்பட்டினம் மாவட்டம், சீர்காழி தொகுதியில் உள்ள ஆதி திராவிட பள்ளியான மாதானம், காரைமேடு பள்ளிகள் நடுநிலைப் பள்ளிகளாக உயர்த்தப்பட்டும் அப்பள்ளிகளில் தலைமை ஆசிரியர், தமிழாசிரியர், உடற்கல்வி ஆசிரியர்கள் பணியிடம் நிரப்பவில்லை என்பதை அரசு அறியுமா?

*(ஆ)* மேற்கண்ட ஆசிரியர் பணியிடத்தை நிரப்ப அரசு முன்வருமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. சொ. கருப்பசாமி, ஆதி திராவிடர் நலத் துறை அமைச்சர்:**

*(அ)* மற்றும் *(ஆ)* நாகப்பட்டினம் மாவட்டம், சீர்காழி வட்டம், மாதானம் நடுநிலைப் பள்ளி 2003-2004 ஆம் கல்வி ஆண்டில் நிலை உயர்த்தப்பட்டு, அப்பள்ளியில் உயர்நிலைப் பள்ளி தலைமை ஆசிரியர், பட்டதாரி ஆசிரியர் மற்றும் உடற்கல்வி ஆசிரியர்கள் பணியேற்று தொடர்ந்து பணிபுரிந்து வருகின்றனர்.

அதேபோல் கல்வித் துறை மூலம் நடுநிலைப் பள்ளியாக நிலை உயர்த்தப்பட்ட காரைமேடு ஆதி திராவிடர் நல நடுநிலைப் பள்ளிக்கு நடுநிலைப் பள்ளி தலைமை ஆசிரியர், பட்டதாரி ஆசிரியர் மற்றும் உடற்கல்வி ஆசிரியர் பணியிடங்கள் நிரப்பப்பட உரிய நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

**19—**

## ஆசிரியர்கள் நியமனம்

**வினா எண் 35056—திரு. நா. சந்திரமோகன்:** மாண்புமிகு ஆதி திராவிடர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—



2004 நவம்பர் 17]

*(அ)* நாகப்பட்டினம் மாவட்டம், சீர்காழி தொகுதி, கொண்டல் ஆதி திராவிடர் நல மேல்நிலைப் பள்ளியில் ஆசிரியர்கள் பற்றாக்குறையாக உள்ளதை அரசு அறியுமா?

*(ஆ)* ஆம் எனில், ஆசிரியர்களை நியமிக்க அரசு முன்வருமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. சொ. கருப்பசாமி, ஆதி திராவிடர் நலத் துறை அமைச்சர்:**

*(அ)* மற்றும் *(ஆ)* நாகப்பட்டினம் மாவட்டம், கொண்டல் ஆதி திராவிடர் நல மேல்நிலைப் பள்ளியில் தற்போது 4 பட்டதாரி ஆசிரியர்கள் பணிபுரிந்து வருகின்றனர். கூடுதல் ஆசிரியர் பணியிடங்கள் குறித்து கருத்துரு பரிசீலிக்கப்பட்டு வருகிறது.

**20—**

## தொழில் சார்ந்த புத்தறிவுப் பயிற்சி

**வினா எண் 41586—திரு. கா.தி. இளையகண்ணு:** மாண்புமிகு ஆதி திராவிடர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

*(அ)* ஏற்காடு தொகுதியில் படித்த ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் இளைஞர்களுக்குத் தொழில் சார்ந்த புத்தறிவுப் பயிற்சி வழங்கும் திட்டம் செயல்படுத்தப்படுகிறதா?

*(ஆ)* ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. சொ. கருப்பசாமி, ஆதி திராவிடர் நலத் துறை அமைச்சர்:**

*(அ)* ஆம்.

*(ஆ)* தொழில் சார்ந்த புத்தறிவுப் பயிற்சி வழங்கும் திட்டத்தின் கீழ் ஏற்காடு தொகுதியில் 2002-2003 நிதியாண்டில் 12 பேருக்கு கணினி வன்பொருள் பயிற்சி அளிக்கப்பட்டது.

[2004 நவம்பர் 17

21—

## பேருந்து இயக்குதல்

**வினா எண் 14368—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

சேலம் மாவட்டம், எடப்பாடி நகரிலிருந்து நாச்சிபாளையம், சௌரியூர், வேம்பனேரி, புதுப்பாளையம், சமுத்திரம் வழியாக சின்னப்பம்பட்டி வரை நகரப் பேருந்து இயக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. இரா. விசுவநாதன், போக்குவரத்துத் துறை அமைச்சர்:**

சேலம் மாவட்டம், எடப்பாடியிலிருந்து நாச்சிபாளையம், சௌரிபாளையம், வேம்பனேரி, புதுப்பாளையம், சமுத்திரம் வழியாக சின்னப்பம்பட்டி வரையுள்ள வழித்தடத்தில் கீழ்க்கண்டவாறு நகர மற்றும் புறநகர் பேருந்துகள் இயங்கி வருகின்றன.

| | பேருந்துகளின் எண்ணிக்கை | தினசரி நடைகள் |
|---|---|---|
| நகரப் பேருந்துகள் | 2 | 10 |
| புறநகர் பேருந்து | 1 | 2 |
| **மொத்தம்** | 3 | 12 |

இவ்வழித்தடத்தில் பயணிகளின் சராசரி விகிதாச்சாரம் நகரப் பேருந்துகளில் 45%ம் புறநகர் பேருந்தில் 59%ம் உள்ளன. எனவே, தற்போதுள்ள பேருந்து வசதியே இப்பகுதி மக்களின் போக்குவரத்துத் தேவையை நிறைவு செய்யப் போதுமானதாக கருதப்படுகிறது.



2004 நவம்பர் 17]

22—

## பேருந்து இயக்குதல்

**வினா எண் 18913—திரு. எ.வ. வேலு:** மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

திருவண்ணாமலையிலிருந்து கொழுந்தம்பட்டு தரடாப்பட்டு வழியாக செல்லும் தடம் எண் 12 நகரப் பேருந்து திரும்பும்போதும் அதே வழியாகவே இயக்க அரசு முன்வருமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. இரா. விசுவநாதன், போக்குவரத்துத் துறை அமைச்சர்:**

வேலூர் அரசுப் போக்குவரத்துக் கழகத்தில் நகரப் பேருந்து தடம் எண் டி12 திருவண்ணாமலை—சாத்தனூர் அணை (வழி) கொழுந்தம்பட்டு, தரடாப்பட்டு தடத்தில் தினசரி 6 நடைகள் இயக்கப்பட்டது. இதில் இரவு 20.15 மணிக்கு சாத்தனூரில் நடையெடுத்து கொழுந்தம்பட்டு தரடாப்பட்டு வழியாக திருவண்ணாமலை நோக்கி வரும் கடைசி நடை (6-வது நடை) பயணிகள் உபயோகமின்றி இயக்கப்பட்டது. எனவே, மேற்படி சாத்தனூர்—திருவண்ணாமலை கடைசி நடை மட்டும் பயணிகள் பயன்பெறும் விதத்தில் தண்டராம்பட்டு வழியாக மாற்றி இயக்கப்படுகிறது. மற்ற 5 நடைகள் எல்லாம் கொழுந்தம்பட்டு, தரடாப்பட்டு வழியாகத்தான் இயக்கப்படுகின்றன.

23—

## எல்.எஸ்.எஸ். பேருந்துகள்

**வினா எண் 22915—திரு. பி.ஜி. இராஜேந்திரன்:** மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

மானூரில் ஒன்றிய அலுவலகம் உள்ள இடத்தில் எல்.எஸ்.எஸ். பேருந்துகள் நின்று செல்ல ஆவன செய்யப்படுமா?

[2004 நவம்பர் 17

**விடை—**

**மாண்புமிகு திரு. இரா. விசுவநாதன், போக்குவரத்துத் துறை அமைச்சர்:**

திருநெல்வேலி - சங்கரன்கோவில் வழித்தடத்தில் அமைந்துள்ள மானூர் பேருந்து நிறுத்தத்தில் அவ்வழியாக இயக்கப்பட்டு வரும் திருநெல்வேலி அரசுப் போக்குவரத்துக் கழக எல்.எஸ்.எஸ். பேருந்துகள் நின்று செல்ல வசதியாக மானூருக்கு தனி கட்டண நிலை வழங்கப்பட்டு செயல்படுத்தப்படுகிறது.

**24—**

## பேருந்து நிறுத்தம் செய்தல்

**வினா எண் 27961—திரு. மு. அப்பாவு:** மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

திருநெல்வேலி மாவட்டம், ராதாபுரம் வட்டம், ஆதி திராவிட காலனி (காந்தி நகர்) பகுதியில் பேருந்துகள் நின்று செல்ல அரசு நடவடிக்கை எடுக்குமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. இரா. விசுவநாதன், போக்குவரத்துத் துறை அமைச்சர்:**

வள்ளியூர் — திருச்செந்தூர் பிரதான சாலையில் காந்திநகர் ஆதி திராவிடர் காலனி அமைந்துள்ளது. மேற்படி காலனி சுமார் 40 வீடுகளையும், மக்கள் தொகை சுமார் 200 மட்டுமே கொண்டுள்ளது. மேற்படி காலனியைச் சார்ந்த பொதுமக்கள் தற்போது இக்காலனியிலிருந்து சுமார் 0.5 கிலோ மீட்டர் தொலைவில் உள்ள கோட்டைக்கருங்குளம் என்ற இடத்தில் செயல்பட்டுவரும் பேருந்து நிறுத்தத்தைப் பயன்படுத்தி வருகின்றனர். எனவே, தற்போது செயல்பட்டு வரும் பேருந்து நிறுத்தத்திலிருந்து மிக அருகிலேயே காந்தி நகர் ஆதி திராவிடர் காலனி இருப்பதனால், மேற்படி காலனிக்கு என தனிப் பேருந்து நிறுத்தம் வழங்க வேண்டிய அவசியம் இல்லை.



2004 நவம்பர் 17]

**25—**

## பேருந்து இயக்குதல்

**வினா எண் 34089—டாக்டர் சி. விஜயபாஸ்கர்:** மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) புதுக்கோட்டை மாவட்டம், கந்தர்வக்கோட்டை ஒன்றியம், கந்தர்வக்கோட்டை ஊராட்சி, தாலுகா நுகர்வோர் குழு மறுபடி கந்தர்வக்கோட்டை—செல்லம்பட்டி வரை நாள் ஒன்றுக்கு 3 முறை மட்டும் செல்லும் ஜி4 நகர் பேருந்தை அனைத்து முறைகளும் செல்லம்பட்டி வரை சென்று திரும்பும்படி செய்திட அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. இரா. விசுவநாதன், போக்குவரத்துத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) ஜி4 பேருந்து என்.டி.என்.55/என் 0051 பல்முனைத் திட்டத்தின்கீழ் 6 வழித்தடத்தில் இயக்கப்பட்டு வருகின்றன. மேற்படி பேருந்தை செல்லம்பட்டி வரை அனைத்து நடைகளும் ஓ வழித்தடத்தில் இயக்கினால், ஏற்கெனவே பேருந்து வசதி பெற்று வரும் பொதுமக்களுக்கு முற்றிலுமாக போக்குவரத்து தடைபட்டு, சட்ட ஒழுங்குப் பிரச்சனை ஏற்பட வாய்ப்புள்ளது. எனவே, கோரிக்கையில் கேட்டுள்ளபடி செல்லம்பட்டிக்கு அனைத்து நடைகளை இயக்க சாத்தியக்கூறு இல்லை.

**26—**

## பேருந்து இயக்குதல்

**வினா எண் 38767—திரு. லா. சந்தானம்:** மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

[2004 நவம்பர் 17

உசிலம்பட்டி பேருந்து நிலையத்திலிருந்து ஜோதில்மாணிக்கம், கொடிக்குளம் வழியாக சோழவந்தான் சென்று கொண்டிருந்த பேருந்தினை மீண்டும் இயக்க அரசு முன்வருமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. இரா. விசுவநாதன், போக்குவரத்துத் துறை அமைச்சர்:**

உசிலம்பட்டி—சோழவந்தான் (வழி) செல்லம்பட்டி, ஜோதில்மாணிக்கம், கொ.வடுகபட்டி, விக்கிரமங்கலம் தடத்தில் இயக்கப்பட்டு வந்த பேருந்து (8 தனி நடைகள்) செல்லம்பட்டி முதல் ஜோதில்மாணிக்கம் வழியாக கொ.வடுகபட்டி வரை சாலை மோசமாக இருந்ததால் இயக்கம் நிறுத்தி வைக்கப்பட்டிருந்தது. இப்பகுதி சாலை சீர் செய்யப்பட்டு 31-10-2003 முதல் தொடர்ந்து இயக்கப்பட்டு வருகிறது.

**27—**

## ஓட்டுநர் பயிற்சிப் பள்ளி

**வினா எண் 51992—திரு. நா. சந்திரமோகன்:** மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) நாகப்பட்டினம் மாவட்டத்தில் போக்குவரத்துக் கழகம் மூலம் ஓட்டுநர் பயிற்சிப் பள்ளி இயங்குகிறதா?

(ஆ) ஆம் எனில், ஆண்டிற்கு எத்தனை நபர்களுக்கு பயிற்சி அளிக்கப்படுகிறது?

**விடை—**

**மாண்புமிகு திரு. இரா. விசுவநாதன், போக்குவரத்துத் துறை அமைச்சர்:**

(அ) இல்லை.

(ஆ) இவ்வினா எழ வாய்ப்பில்லை.



2004 நவம்பர் 17]

**28—**

## கிளிஞ்சல் குத்தகை விடுதல்

**வினா எண் 34498—திரு. நா. சந்திரமோகன்:** மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சீர்காழி தொகுதி, சீர்காழிக்குட்பட்ட ஆறுகளில் (திருநகர்) ஏற்படுகின்ற கிளிஞ்சல் சேகரிப்பைக் குத்தகைக்குவிட அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. நயினார் நாகேந்திரன், தொழில் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) நாகப்பட்டினம் மாவட்டம், சீர்காழி சட்டமன்ற தொகுதிக்குட்பட்ட, சீர்காழி வட்டம், திருநகரி மற்றும் திருக்கருகாவூர் ஆகிய கிராமங்களில் உள்ள உப்பனாற்றில் கிளிஞ்சல் கிடைக்கிறது. திரு. ஆர். நந்தகோபால் என்பவருக்கு திருநகரி கிராமத்தில் புல எண் 1-ல் (12.58.05 ஹெக்டேர்) மற்றும் திருக்கருகாவூர் கிராமத்தில் புல எண் 258-ல் (17.84.00 ஹெக்டேர்) மொத்தம் 30.42.5 ஹெக்டேர் நிலங்களில் கிளிஞ்சல் சேகரிக்க குத்தகை உரிமம் வழங்கப்பட்டுள்ளது. மேலும், சீர்காழி வட்டம், ராதாநல்லூர், எடமணல் கிராமங்களில் உப்பனாற்றில் கிளிஞ்சல் சேகரிக்க திரு. ஜெயக்குமார் என்பவர் விண்ணப்பம் செய்துள்ளார். இவ்விண்ணப்பம் புவியியல் மற்றும் சுரங்கத் துறை அலுவலகத்தில் பரிசீலனையில் உள்ளது.

**29—**

## கூட்டுறவு பண்டகசாலை பணியாளருக்குப் பணி வழங்குதல்

**வினா எண் 4748—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு வணிக வரி மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

எடப்பாடி தொகுதி, கொங்கணாபுரத்திலுள்ள கூட்டுறவு பண்டகசாலையில் பணிபுரிந்த 17 நபர்களில் 13 நபர்களுக்கு மட்டும்

பணி வழங்கியுள்ளது. பணி வழங்கப்படாத மீதமுள்ள 4 பேருக்கு பணி வழங்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. செ.ம. வேலுசாமி, வணிக வரி மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர்:**

எடப்பாடி தொகுதி, கொங்கணாபுரம் கூட்டுறவு பண்டகசாலையில் பணிபுரிந்த 17 பணியாளர்களில் மாற்றுப் பணி வழங்கப்படாத 4 பேர்களில் 2 பேருக்கு நியமனம் வழங்கப்பட்டுவிட்டது. மீதமுள்ள 2 பேர்களுக்கு பணி வழங்குவது குறித்து பண்டகசாலையின் பணியாளர் திறன் மற்றும் துணை விதிகள் ஆகியவற்றை நிர்ணயித்த பின்னர் பரிசீலிக்கப்படும்.

**30—**

## அலுவலகத்திற்குப் பலமாடிக் கட்டடம்

**வினா எண் 9614—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு வணிக வரி மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழக வணிக வரித் துறை, சென்னை வணிக வரித் துறை ஆணையாளர் அலுவலகத்திற்குத் தனியாக பல்லடுக்குமாடி கட்டடம் கட்டும் திட்டம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், இந்த நிதியாண்டில் அது கட்டப்படுமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. செ.ம. வேலுசாமி, வணிக வரி மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) வணிக வரி ஆணையர், சென்னை அவர்களின் அலுவலகத்திற்குத் தனியாக பலமாடி கட்டடம் கட்டும் திட்டம் ஏதும் தற்போது இல்லை.





**31—**

## நியாய விலைக் கடை கட்டுதல்

**வினா எண் 29335—திரு. நா. சந்திரமோகன்:** மாண்புமிகு வணிக வரி மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) அச்சரப்பாக்கம் தொகுதி, அச்சரப்பாக்கம் ஒன்றியம், விளாங்காடு ஊராட்சியில் நியாய விலைக் கடை கட்டிக் கொடுக்க அரசிடம் திட்டம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. செ.ம. வேலுசாமி, வணிக வரி மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) காஞ்சிபுரம் மாவட்டம், அச்சரப்பாக்கம் ஒன்றியத்தின் விளாங்காடு முழுநேர கூட்டுறவு நியாய விலைக் கடை 164 குடும்ப அட்டைகளுடன் பஞ்சாயத்துக் கட்டடத்தில் இலவசமாக இயங்கி வருகிறது. இக்கடை பஞ்சாயத்து கட்டடத்தில் இலவசமாக செயல்பட்டிருந்ததால் இக்கடைக்கு கட்டடம் கட்ட நடவடிக்கை எடுக்க வேண்டிய அவசியம் எழாமல் இருந்தது. இக்கடை இயங்கிவரும் கட்டடம் தற்போது பழுதடைந்துள்ள நிலையில் உள்ளதால் இக்கடைக்கு அரசுக் கட்டடம் கட்டித்தர நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

**32—**

## நியாய விலைக் கடைக்குக் கட்டடம்

**வினா எண் 32992—திரு. வே. கிருஷ்ணமூர்த்தி:** மாண்புமிகு வணிக வரி மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) அரூர் தொகுதி, ஊத்தங்கரை வட்டம், மூன்றாம்பட்டி ஊராட்சி, கேத்துநாய்க்கன்பட்டியில் நியாய விலைக் கடைக்கு கட்டடம் கட்டித்தரும் திட்டம் அரசிடம் உண்டா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

[2004 நவம்பர் 17

**விடை—**

**மாண்புமிகு திரு. செ.ம. வேலுசாமி, வணிக வரி மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) அரூர் தொகுதி, ஊத்தங்கரை வட்டம், மூன்றாம்பட்டி ஊராட்சி, கேத்துநாய்க்கன்பட்டியில் செயல்படும் நியாய விலைக் கடை ஊத்தங்கரை கூட்டுறவு விற்பனைச் சங்கத்தின் கட்டுப்பாட்டில் முழுநேரக் கடையாக 154 குடும்ப அட்டைகளுடன் வாடகைக் கட்டடத்தில் செயல்பட்டு வருகிறது. இந்நியாய விலைக் கடைக்கு கட்டடம் கட்ட 18-9-2003-ல் வட்டார வளர்ச்சி அலுவலருக்கு முன்மொழிவு அனுப்பப்பட்டுள்ளது. அரசின் ஏதேனும் ஒரு திட்டத்தின்கீழ் 2004-2005 ஆம் ஆண்டு நிதி ஒதுக்கீடு பெற்று மேற்படி நியாய விலைக் கடைக்கான கட்டடம் கட்டுவது தொடர்பாக நடவடிக்கை மேற்கொள்ளும்படி தருமபுரி மண்டல இணைப் பதிவாளருக்கு அறிவுறுத்தப்பட்டுள்ளது.

**33—**

## பதிவுச் சான்று பெற்று வணிக வரி செலுத்துவோர் விவரம்

**வினா எண் 36431—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு வணிக வரி மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

ஈரோடு மாவட்டத்தில் வணிக வரித் துறையில் பதிவுச் சான்று பெற்று வணிக வரி செலுத்துபவர்கள் எத்தனை பேர்?

**விடை—**

**மாண்புமிகு திரு. செ.ம. வேலுசாமி, வணிக வரி மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர்:**

ஈரோடு மாவட்டத்தில் வணிக வரித் துறையில் மொத்தம் 16,584 வணிகர்கள் பதிவுச் சான்று பெற்றுள்ளனர். இவர்களில் 6490 பேர் மட்டுமே வணிக வரி செலுத்துகின்றனர். எஞ்சியுள்ள 10094 வணிகர்கள், வரி விலக்குப் பெற்றுள்ள பொருட்களை வணிகம் செய்பவர்களாகவும், ரூ. 3 இலட்சத்துக்குகீழ் வியாபாரத் தொகை உள்ளவர்களாகவும், இரண்டாம் விற்பனை ரூ. 10 இலட்சத்துக்குக் குறைவாக வணிகம்



2004 நவம்பர் 17]

செய்பவர்களாகவும் மற்றும் சிலர் கமிஷன் விற்பனை செய்யும் வணிகர்களாகவும் உள்ள காரணத்தால் இத்தகையோர் வணிக வரி செலுத்துவதில்லை.

**34—**

## பணியாளர் சங்கங்கள்

**வினா எண் 39333—திரு. கே. ஆறுமுகம்:** மாண்புமிகு வணிக வரி மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) காஞ்சிபுரம் மாவட்டத்தில் நகர்ப்புற மற்றும் பணியாளர்கள் சங்கங்கள் எத்தனை உள்ளன?

(ஆ) அவற்றில் எத்தனை இலாபத்தில் இயங்குகின்றன?

(இ) எத்தனை நட்டத்தில் இயங்குகின்றன?

**விடை—**

**மாண்புமிகு திரு. செ.ம. வேலுசாமி, வணிக வரி மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர்:**

(அ), (ஆ) மற்றும் (இ)

காஞ்சிபுரம் மண்டலத்தில் செயல்படும் நகர்ப்புற மற்றும் பணியாளர் கூட்டுறவுச் சங்கங்கள் : 61

இலாபத்தில் இயங்குபவை : 57

நட்டத்தில் இயங்குபவை : 4

**35—**

## நியாய விலைக் கடைகள்

**வினா எண் 44198—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு வணிக வரி மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

2002-2003 ஆம் ஆண்டில் சேலம் மாவட்டம் மற்றும் எடப்பாடி தொகுதியிலும் பொது விநியோகத் திட்டத்தின்கீழ் எத்தனை நியாய விலைக் கடைகள் தணிக்கை செய்யப்பட்டன?

**விடை—**

**மாண்புமிகு திரு. செ.ம. வேலுசாமி, வணிக வரி மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர்:**

சேலம் மாவட்டத்தில் மொத்தம் 1233 நியாய விலைக் கடைகள் செயல்பட்டு வருகின்றன. சேலம் மாவட்டத்தில் செயல்படும் 1233 நியாய விலைக் கடைகளில் 2002-2003 ஆம் ஆண்டில் 1175 நியாய விலைக் கடைகள் தணிக்கை செய்யப்பட்டுள்ளன. நிலுவையிலுள்ள 58 நியாய விலைக் கடைகள் 15 தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கிகளால் நடத்தப்பட்டு வருகின்றன. இக்கடைகளுக்கும் தணிக்கை மேற்கொள்ள நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. மேலும் எடப்பாடி தொகுதியில் செயல்படும் 118 நியாய விலைக் கடைகளுக்கும் 2002-2003 ஆம் ஆண்டுக்கான தணிக்கை முடிக்கப்பட்டுவிட்டன.

**36—**

## நியாய விலைக் கடைக்கு சொந்தக் கட்டடம்

**வினா எண் 44370—திரு. நா. சந்திரமோகன்:** மாண்புமிகு வணிக வரி மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சீர்காழி தொகுதி, சீர்காழி ஒன்றியம், எடக்குடி வடபாதி ஊராட்சியில் நியாய விலைக் கடைக்கு சொந்தக் கட்டடம் கட்டிக் கொடுக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. செ.ம. வேலுசாமி, வணிக வரி மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) சீர்காழி தாலுகா, எடக்குடி-வடபாதி கிராமத்தில் உள்ள 226 குடும்ப அட்டைகளும் வைத்தீஸ்வரன்கோயில் III கடையுடன் இணைக்கப்பட்டுள்ளன. சீர்காழி ஒன்றியம், எடக்குடி-வடபாதி கிராமத்தில் நியாய விலைக் கடை ஏதும் செயல்படவில்லை.



வைத்தீஸ்வரன்கோயில் III நியாய விலைக் கடை மயிலாடுதுறை நுகர்வோர் கூட்டுறவு மொத்த விற்பனை பண்டகசாலையின் கட்டுப்பாட்டில் முழுநேரக் கடையாகச் செயல்படுகிறது. இக்கடை தற்போது ஊராட்சி ஒன்றிய அலுவலகக் கட்டடத்தில் இயங்கி வருகிறது. இந்நிலையில் எடக்குடி—வடபாதி கிராமத்தில் நியாய விலைக் கடை ஏதும் இல்லாத நிலையில் கூட்டுறவு நியாய விலைக் கடைகளுக்கான கட்டடம் கட்ட வேண்டிய நிலை எழவில்லை.

**37—**

## நியாய விலைக் கடைக்கு சொந்தக் கட்டடம்

**வினா எண் 51953—திரு. நா. சந்திரமோகன்:** மாண்புமிகு வணிக வரி மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சீர்காழி தொகுதி, புதுப்பட்டினம் மற்றும் வடகால் ஊராட்சியில் நியாய விலைக் கடைக்கு சொந்தக் கட்டடம் கட்டிக் கொடுக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. செ.ம. வேலுசாமி, வணிக வரி மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) சீர்காழி தொகுதி, புதுப்பட்டினம் மற்றும் வடகால் ஊராட்சியில் இயங்கும் நியாய விலைக் கடை செம்மங்குடி தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கியின் நிர்வாகக் கட்டுப்பாட்டில் 225 குடும்ப அட்டைகளுடன் முழுநேரக் கடையாக வாடகைக் கட்டடத்தில் செயல்பட்டு வருகிறது. இந்த நியாய விலைக் கடைக்கு அரசின் ஏதேனும் ஒரு நலத் திட்டத்தின்கீழ் சொந்தக் கட்டடம் கட்டித்தர நாகப்பட்டினம் மண்டல இணைப் பதிவாளரினால் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

[2004 நவம்பர் 17

38—

## வீட்டுவசதி வாரியம் மூலம் வீடுகட்ட கடன்

**வினா எண் 33969—திரு. கே.கே. சிவசாமி:** மாண்புமிகு வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

அருப்புக்கோட்டை தொகுதி, திருச்சுழி ஒன்றியம், நெடுங்குளம் பகுதி மக்கள் வீடு கட்ட வீட்டுவசதி வாரியத்தின் மூலம் கடன் வழங்க அரசு முன்வருமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. அனிதா ஆர். ராதாகிருஷ்ணன், வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை அமைச்சர்:**

தனி நபர்கள் வீடு கட்டும் திட்டத்தில் வீட்டுவசதி வாரியத்தில் கடன் உதவி அளிக்கும் திட்டம் எதுவும் இல்லை.

39—

## வீட்டுவசதி வாரியம் மூலம் வீடுகள்

**வினா எண் 50708—திரு. கோவை தங்கம்:** மாண்புமிகு வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வால்பாறையில் அதிகாரிகள் தங்குவதற்கு வீட்டுவசதி வாரியம் மூலம் வீடு கட்டித்தர அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?



2004 நவம்பர் 17]

**விடை—**

**மாண்புமிகு திரு. அனிதா ஆர். ராதாகிருஷ்ணன், வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை அமைச்சர்:**

(அ) வால்பாறையில் அலுவலர்கள் தங்குவதற்கு வீட்டுவசதி வாரியம் மூலம் வீடு கட்டித்தரும் திட்டம் ஏதும் பரிசீலனையில் இல்லை.

(ஆ) வினா எழவில்லை.

40—

## ஏரிக்கரை பகுதியை மேம்படுத்துதல்

**வினா எண் 38798—திரு. கே. ஆறுமுகம்:** மாண்புமிகு கல்வி மற்றும் பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழ்நாடு பிற்படுத்தப்பட்டோர் பொருளாதார மேம்பாட்டுக் கழகத்தின் மூலம் 2001-2002 ஆம் ஆண்டில் கடன் வேண்டி காஞ்சிபுரம் மாவட்டத்திலிருந்து பெறப்பட்ட விண்ணப்பங்கள் எத்தனை?

(ஆ) இம்மாவட்டத்திற்கு வழங்கப்பட்ட கடன் தொகை எவ்வளவு?

**விடை—**

**மாண்புமிகு திரு. சி.வி. சண்முகம், கல்வி மற்றும் பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர்:**

(அ) 2001-2002 ஆம் ஆண்டில் காஞ்சிபுரம் மாவட்டத்திலிருந்து தமிழ்நாடு பிற்படுத்தப்பட்டோர் பொருளாதார மேம்பாட்டுக் கழகம் மூலம் கடன் வேண்டி பெறப்பட்ட விண்ணப்பங்கள் 778.

(ஆ) இந்த 778 விண்ணப்பங்களில் நிராகரிக்கப்பட்ட விண்ணப்பங்கள் 377. ஆண்டு இறுதியில் பரிசீலனையில் இருந்த விண்ணப்பங்கள் 394. ஏழு நபர்களுக்கு கூட்டுறவு வங்கிகள் மூலம் ரூ. 6.65 இலட்சம் கடன் வழங்கப்பட்டுள்ளது.

[2004 நவம்பர் 17

41—

## இலவச பாடநூல்கள்

**வினா எண் 44080—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு கல்வி மற்றும் பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

2003-2004 ஆம் கல்வியாண்டில் சேலம் மாவட்டத்தில் பிற்படுத்தப்பட்டோர் நலத் துறையின் மூலம் எவ்வளவு மதிப்புள்ள பாடநூல்கள் மாணவர்களுக்கு இலவசமாக வழங்கப்பட்டுள்ளன?

**விடை—**

**மாண்புமிகு திரு. சி.வி. சண்முகம், கல்வி மற்றும் பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர்:**

சேலம் மாவட்டத்தில் 2003-2004 ஆம் ஆண்டில் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் மிகப் பிற்படுத்தப்பட்டோர் நலத் துறையின் மூலம் ரூ.35,71,889/- மதிப்புள்ள பாடநூல்கள் மாணவ, மாணவியர்களுக்கு இலவசமாக வழங்கப்பட்டுள்ளன.

42—

## பள்ளி மேற்படிப்பு சலுகைகள்

**வினா எண் 52512—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு கல்வி மற்றும் பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மிகவும் பிற்படுத்தப்பட்ட வகுப்பினருக்கு ஐந்து வருட கணினி படிப்புக்கு பள்ளி மேற்படிப்பு சலுகைகள் அளிக்கப்படுகின்றனவா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?



2004 நவம்பர் 17]

**விடை—**

**மாண்புமிகு திரு. சி.வி. சண்முகம், கல்வி மற்றும் பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர்:**

(அ) மிகவும் பிற்படுத்தப்பட்ட வகுப்பைச் சார்ந்த மாணவ, மாணவிகளில் ஐந்து வருட கணினி படிப்பு என்ற புதிய பாடப் படிப்பு பயில்வோருக்கு மேற்படிப்பு உதவித் தொகை பெறுவதற்கு இதுகாறும் மேற்படிப்பு அங்கீகரிக்கப்படவில்லை.

(ஆ) உதவித் தொகை தரப்படாததால் இக்கேள்வி எழ வாய்ப்பில்லை.

43—

## தேயிலை தோட்டத் தொழிலாளர்களுக்கு அடிப்படை வசதிகள்

**வினா எண் 43162—திரு. கோவை தங்கம்:** மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

வால்பாறை தொகுதி, புதுத்தோட்டம் எஸ்டேட், வாட்டர் பால்ஸ் எஸ்டேட், கோத்தாரி எஸ்டேட், டான்டி எஸ்டேட், டாடா குருப், பழைய வால்பாறை எஸ்டேட், ஜெயஸ்ரீ குருப், சோலையார் டேம் ஆகியவற்றில் பணிபுரியும் தேயிலை தோட்டத் தொழிலாளர்களுக்கு அடிப்படை வசதிகள் செய்து தர அரசு வலியுறுத்துமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. ப. அண்ணாவி, தொழிலாளர் நலத் துறை அமைச்சர்:**

தோட்டத் தொழிலாளர் சட்டம் மற்றும் விதிகளின்கீழ் வால்பாறை தொகுதியிலுள்ள தோட்ட நிறுவனங்களில் பணிபுரியும் தேயிலை தோட்டத் தொழிலாளர்களுக்கு அடிப்படை வசதிகள் செய்து தராத தோட்ட நிறுவனங்கள்மீது தோட்ட நிறுவனங்கள் ஆய்வரால் நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

44—

## அண்ணா கலையரங்கைப் புதுப்பித்தல்

**வினா எண் 3865—திரு. எம். சுப்பையா பாண்டியன்:** மாண்புமிகு செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

கடையநல்லூர் தொகுதி, ஆயக்குடியிலுள்ள அண்ணா கலையரங்கை புதுப்பிக்க அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன், செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

ஆயக்குடி பேரூராட்சி நான்காவது வார்டில் உள்ள பேரூராட்சிக்குச் சொந்தமான அண்ணா கலையரங்கை ஏற்கெனவே பேரூராட்சியிலிருந்து பராமரிக்கப்பட்டு நல்ல நிலையில் உள்ளது. பொது நிகழ்ச்சி, அரசியல் பொதுக்கூட்டம் போன்ற காரியங்களுக்காக நாள் ஒன்றுக்கு ரூ.50/- வீதம் வசூல் செய்து பயன்படுத்தப்பட்டு வருகிறது. எனவே, இக்கலையரங்கைக் கூடுதலாக பராமரிக்க வேண்டியது ஏதும் இல்லை.

45—

## இலவசக் கழிப்பிடம் கட்டுதல்

**வினா எண் 7318—திரு. மு. அப்பாவு:** மாண்புமிகு செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

திருநெல்வேலி மாநகராட்சிக்குட்பட்ட பாளையங்கோட்டை மண்டலம், பாளையங்கோட்டை பேருந்து நிலையத்தில் இடிக்கப்பட்ட பழைய கழிப்பிடத்தில் இலவச கழிப்பிடம் கட்ட அரசு நடவடிக்கை எடுக்குமா?





**விடை—**

**மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன், செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

பாளையங்கோட்டை பேருந்து நிலைய வளாகத்தினுள் பழுதடைந்த பொதுக் கழிப்பிடம் இடித்து அப்புறப்படுத்தப்பட்டுள்ளது. மேற்படி கழிப்பிடத்திற்கு அருகில் மாநகராட்சியால் பராமரிக்கப்பட்டு வரும் கட்டணக் கழிப்பிடம் நல்ல முறையில் தற்போது இயங்கி வருகிறது.

46—

## சாக்கடை தூர் வாருதல்

**வினா எண் 7408—திரு. டி.பி. பொன்னம்பலம்:** மாண்புமிகு செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

*(அ)* சமயநல்லூர் தொகுதியில் உள்ளடங்கிய மதுரை மாநகர 1—8 வார்டு பகுதிகளில் சாக்கடைகளை அள்ளி சாலையில் போட்டு விட்டு மீண்டும் அவற்றை அகற்றுவது இல்லை. அவற்றை அகற்றும் திட்டம் அரசு மேற்கொள்ள இருக்கிறதா?

*(ஆ)* ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன், செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

*(அ)* மற்றும் *(ஆ)* மதுரை மாநகராட்சி, சமயநல்லூர் தொகுதி, 1-8 வார்டு பகுதிகளில், திறந்தவெளி சாக்கடையில் சேரும் வண்டல் மண் படிவங்கள் அவ்வப்போது சுகாதாரப் பிரிவு ஊழியர்களால் தூர் வாரப்படுகின்றன. அவை சகதி வடிவில் இருப்பதால் மறுநாள் தண்ணீர் வடிந்து காய்ந்தவுடன் தவறாமல் அப்புறப்படுத்தப்பட்டு வரப்படுகின்றன.

[2004 நவம்பர் 17

47—

## ஆழ்துளைக் கிணறு அமைத்தல்

**வினா எண் 10776—திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தருமபுரி மாவட்டம், பெண்ணாகரம் தொகுதி, நல்லம்பள்ளி ஒன்றியம், பங்குநத்தம் கொட்டாய் கிராமத்தில் நடப்பாண்டில் ஆழ்துளைக் கிணறு ஒன்று அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன், செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) நல்லம்பள்ளி ஊராட்சி ஒன்றியம், சாமிசெட்டிப்பட்டி ஊராட்சி, பங்குநத்தம் குடியிருப்பில் 40 வீடுகள் உள்ளன. இக்குடியிருப்பிற்கு 30,000 லிட்டர் கொள்ளளவு கொண்ட மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி ஒன்றும் மற்றும் ஒரு கைப் பம்பும் இயக்க நிலையில் உள்ளது. இக்குடியிருப்புகளுக்கு போதுமான தண்ணீர் வசதியும் உள்ளது.

மேலும் பங்குநத்தம் கொட்டாய் அருகில் எருமை தொட்டி கொட்டாய், பெரியசாமி கொட்டாய் ஆகிய இரண்டு புதிய குடியிருப்புகள் உள்ளன. இரண்டு குடியிருப்புகளிலும் இரண்டு கைப் பம்புகள், ஊராட்சி ஒன்றிய பொது நிதியிலிருந்து 2002-2003 ஆம் ஆண்டு அமைக்கப்பட்டு இயக்க நிலையில் உள்ளன. மேற்கண்ட குடியிருப்பிலுள்ள பொது மக்களுக்கு புதிய கைப் பம்பு அமைக்க வேண்டிய அவசியமில்லை.

48—

## போர்வெல் அமைத்தல்

**வினா எண் 10785—திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—



2004 நவம்பர் 17]

(அ) தருமபுரி மாவட்டம், பெண்ணாகரம் தொகுதி, கஞ்சல்நத்தம் ஊராட்சி, தேங்கல்காடு கிராமத்திற்கு போர்வெல் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன், செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) தருமபுரி மாவட்டம், நல்லம்பள்ளி ஊராட்சி ஒன்றியம், கஞ்சல்நத்தம் ஊராட்சி, தேங்கல்காடு கிராமத்திற்கு நடப்பு நிதி ஆண்டில் மாவட்ட ஊராட்சி நிதியிலிருந்து ஒரு புதிய ஆழ்துளைக் கிணறு அமைக்கப்பட்டுள்ளது.

49—

## சிறுவர் பூங்காவை சீரமைத்தல்

**வினா எண் 10841—திரு. மு. அப்பாவு:** மாண்புமிகு செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

திருநெல்வேலி மாநகராட்சி, பாளையங்கோட்டை மண்டலம், 18-வது வார்டு, சரண்யா நகர் பகுதியில் மோசமான நிலையிலுள்ள சிறுவர் பூங்காவை சீரமைக்க அரசு நடவடிக்கை மேற்கொள்ளுமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன், செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

திருநெல்வேலி மாநகராட்சி, பாளையங்கோட்டை மண்டலம், 18-வது வார்டு, சரண்யா நகர் பகுதியில் சரண்யா நகர் நலச் சங்கத்திடம் இருந்து பங்குத் தொகை பெற்று சிறுவர் பூங்கா அமைக்கப்பட்டுள்ளது. மேற்படி சிறுவர் பூங்கா பராமரிக்கப்பட்டு தற்போது நல்லமுறையில் இயங்கி வருகின்றது.

[2004 நவம்பர் 17

50—

## கழிப்பிடம் சீர்படுத்துதல்

**வினா எண் 10883—திரு. மு. அப்பாவு: மாண்புமிகு செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—**

(அ) திருநெல்வேலி மாவட்டம், பாளையங்கோட்டை மண்டலத்திற்குட்பட்ட பேருந்து நிலையத்திலுள்ள பழுதடைந்த கழிப்பிடத்தினால் பொது மக்கள் பாதிக்கப்படுவதை அரசு அறியுமா?

(ஆ) ஆம் எனில், அரசின் நடவடிக்கை என்ன?

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன், செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) பாளையங்கோட்டை பேருந்து நிலையத்திலுள்ள பழுதடைந்த கழிப்பிடம் சரி செய்யப்பட்டு தற்போது நல்லமுறையில் இயங்கி வருகின்றது.

51—

## மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி

**வினா எண் 12041—திரு. பி.எச். பால் மனோஜ் பாண்டியன்:** மாண்புமிகு செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சேரன்மகாதேவி தொகுதி, ஓடைமறிச்சான் பஞ்சாயத்து ஒன்றியம், இந்திரா நகர் கிராமத்திற்கு மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி கட்டித்தர அரசு உடனடி நடவடிக்கை எடுக்குமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?



2004 நவம்பர் 17]

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன், செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) சேரன்மகாதேவி தொகுதி, ஓடைமறிச்சான் ஊராட்சி, இந்திரா நகர் குடியிருப்புக்கு பாப்பாக்குடி, கூட்டுக் குடிநீர்த் திட்டத்தின்கீழ் தற்போது குடிநீர் வழங்கப்பட்டு வருகிறது.

52—

## மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி

**வினா எண் 12097—திரு. பி.எச். பால் மனோஜ் பாண்டியன்:** மாண்புமிகு செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சேரன்மகாதேவி தொகுதி, பாப்பாக்குடி ஊராட்சி ஒன்றியம், புதுப்பட்டி ஆதி திராவிடர் காலனிக்கு மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி கட்டித்தர அரசு உடனடி நடவடிக்கை எடுக்குமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன், செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) சேரன்மகாதேவி தொகுதி, பாப்பாக்குடி ஊராட்சி ஒன்றியம், புதுப்பட்டி ஆதி திராவிடர் வசிக்கும் பகுதியில் 60,000 லிட்டர் கொள்ளளவுள்ள மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டியுடன் கூடிய திட்டம் நிறைவேற்றப்பட்டு மக்கள் பயனுக்குக் கொண்டு வரப்பட்டு, மேற்கொண்டு பராமரிப்பிற்காக ஊராட்சியிடம் 4/2002-ல் ஒப்படைக்கப்பட்டு உள்ளது.

53— [2004 நவம்பர் 17

## மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி

**வினா எண் 13951—திரு. தி. வேல் முருகன்:** மாண்புமிகு செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பண்ருட்டி தொகுதிக்குட்பட்ட காடாம்புலியூர் ஊராட்சியில் உள்ள குடிநீர் மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டியில் குடிநீர் கொள்ளளவு குறைவாக உள்ளதால், கொள்ளளவு மிக்க குடிநீர் மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி அமைத்துத் தர அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

**மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன், செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) கடலூர் மாவட்டம், பண்ருட்டி ஒன்றியத்தைச் சேர்ந்த காடாம்புலியூர் ஊராட்சியிலுள்ள காடாம்புலியூர் குடியிருப்பின் தெற்கு மற்றும் வடக்குப் பகுதிகளுக்கு தனித்தனியே 30,000 லிட்டர் கொள்ளளவுள்ள மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டியுடன்கூடிய மின்விசைத் திட்டம் முறையே 7/2002 மற்றும் 3/2003-ல் முடிக்கப்பட்டு தற்போது மக்கள் பயன்பாட்டில் உள்ளது. வழங்கப்படும் நீர் போதுமானதாகும்.

54—

## பொது குடிநீர்க் குழாய் சீரமைத்தல்

**வினா எண் 16455—திரு. மு. அப்பாவு:** மாண்புமிகு செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

திருநெல்வேலி மாநகராட்சி, பாளையங்கோட்டை 25-வது வார்டு பகுதிக்குட்பட்ட நந்தனார் தெருவில் பொது குடிநீர்க் குழாய் உள்ள இடத்தில் திண்காரை தளம் அமைக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?



2004 நவம்பர் 17]

விடை—

**மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன், செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

திருநெல்வேலி மாநகராட்சி, 25-வது வார்டு நந்தனார் தெருவில் உள்ள பொது குடிநீர்க் குழாயினைச் சுற்றிலும் தளம் நல்லமுறையில் அமைக்கப்பட்டுள்ளது. மேலும், அப்பொது குடிநீர்க் குழாயில் நீரின் வருகையின் அழுத்தம் குறைவாக இருந்ததால் பொது மக்களின் நலன் கருதி அக்குடிநீர்க் குழாயுடன் அடிபம்பு இணைக்கப்பட்டு தற்போது குடிநீர் நல்லமுறையில் கிடைத்து வருகின்றது.

55—

## நடுநிலைப் பள்ளிக்குக் கூடுதல் கட்டடம்

**வினா எண் 18187—திரு. எஸ். வி. திருஞானசம்பந்தம்:** மாண்புமிகு செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

பேராவூரணி தொகுதி, பேராவூரணி பேரூராட்சி, பொன்னாங்கன்னிக்காடு நடுநிலைப் பள்ளிக்குக் கூடுதல் புதிய கட்டடம் கட்டித் தர அரசிடம் திட்டம் உள்ளதா?

விடை—

**மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன், செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

பேராவூரணி தொகுதி, பேராவூரணி பேரூராட்சி, பொன்னாங்கன்னிக்காடு நடுநிலைப் பள்ளியில் 443 மாணவ மாணவிகள் பயிலுகின்றனர். கூடுதல் வகுப்பறைகள் கொண்ட கல்நார் கூரை கட்டடம் ஒன்று கல்வி நிதியிலிருந்து ரூ.1.00 இலட்சம் மதிப்பீட்டில் ஏப்ரல் 2002-ல் கட்டி முடிக்கப்பட்டு பள்ளி நடைபெற்று வருகிறது.

56—

## தண்ணீர் வசதி

**வினா எண் 18282—திரு. தி. வேல் முருகன்:** மாண்புமிகு செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

[2004 நவம்பர் 17

(அ) பண்ருட்டி தொகுதி, காமாட்சிபாளையம் கிராமத்தில் வடக்குத் தெருவில் தண்ணீர் வசதியை அரசு ஏற்படுத்தித்தர முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன், செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) வழுதலம்பட்டு ஊராட்சி, காமாட்சிபாளையம் கிராமத்தில் மொத்த ஜனத்தொகை 1000 பேர் ஆகும். இங்கு 3,000 லிட்டர் கொள்ளளவுள்ள மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி நல்ல நிலையில் இயங்கிக் கொண்டிருக்கிறது. இங்கு தரை மட்ட நீரின் அளவு 150 அடிக்குக் கீழே சென்றுவிட்டதால் தொழில்நுட்ப ரீதியாக கைப்பம்பு அமைத்திட சாத்தியமில்லை.

**57—**

## கழிவறைகள் அமைத்தல்

**வினா எண் 19020—திரு. த. ஆறுமுகம்:** மாண்புமிகு செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மணலி பேரூராட்சியில் மிகவும் பின்தங்கிய பகுதிகளில் கழிவறைகள் அமைத்துத்தர அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன், செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) திருவள்ளூர் மாவட்டம், மணலி பேரூராட்சியில் மிகவும் பின்தங்கிய பகுதிகளில் கழிவறைகள் கட்டி முடிக்கப்பட்டு மகளிர் குழுவிடம் பயன்பாட்டிற்கு ஒப்படைக்கப்பட்டு கழிவறைகள் நல்ல முறையில் பயன்படுத்தப்படுகின்றன.



2004 நவம்பர் 17]

**58—**

## தொலைக்காட்சிப் பெட்டி அறை அமைத்தல்

**வினா எண் 22062—திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தருமபுரி மாவட்டம், பெண்ணாகரம் தொகுதி, பிக்கிலி ஊராட்சி, புதூர் கிராமத்திற்கு புதிதாக தொலைக்காட்சிப் பெட்டி அறை கட்டித்தர அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன், செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) தருமபுரி மாவட்டம், பெண்ணாகரம் தொகுதி, பிக்கிலி ஊராட்சி, புதூர் கிராமத்தில் தொலைக்காட்சிப் பெட்டி இல்லை. எனவே, மேற்காணும் கிராமத்திற்கு தொலைக்காட்சிப் பெட்டி அறை கட்ட அவசியம் இல்லை.

**59—**

## தொலைக்காட்சிப் பெட்டி அறை அமைத்தல்

**வினா எண் 22065—திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தருமபுரி மாவட்டம், பெண்ணாகரம் தொகுதி, பிக்கிலி ஊராட்சி, பானாகட்டு குதிரைக்காரன் கொட்டாய்க்கு தொலைக்காட்சிப் பெட்டி அறை அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

**மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன், செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) தருமபுரி மாவட்டம், பெண்ணாகரம் ஒன்றியம், பிக்கிலி ஊராட்சி, பானாகட்டு குதிரைக்காரன் கொட்டாய் கிராமத்தில் தொலைக்காட்சிப் பெட்டி அறை தற்போது தேவை இல்லை.

60—

## நடுநிலைப் பள்ளிக்குப் புதிய கட்டடம்

**வினா எண் 22492—திரு. எம். ராம்குமார்:** மாண்புமிகு செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பாபநாசம் தொகுதிக்குட்பட்ட திருவைகாவூர் ஊராட்சி, மேலமாஞ்சேரியில் இயங்கி வரும் நடுநிலைப் பள்ளிக்குக் கட்டட வசதியில்லை என்பதை அரசு அறியுமா?

(ஆ) ஆம் எனில், இந்த ஆண்டு புதிய கட்டடம் கட்டித் தரும் செயற்குறிப்பு உள்ளதா?

விடை—

**மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன், செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) பாபநாசம் தொகுதிக்குட்பட்ட திருவைகாவூர் ஊராட்சி, மேலமாஞ்சேரி ஊராட்சி ஒன்றிய நடுநிலைப் பள்ளியில் கூடுதல் பள்ளிக் கட்டடம் ஒன்று ஒன்றியப் பொது நிதியிலிருந்து ரூ.3,48,654/- மதிப்பீட்டில் கட்டி முடிக்கப்பட்டுள்ளது.

61—

## பாதுகாப்புச் சுவர் அமைத்தல்

**வினா எண் 25673—திரு. அ.இரா. மலையப்பசாமி:** மாண்புமிகு செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—



(அ) கபிலர்மலை தொகுதி, மோகனூர் ஊராட்சி ஒன்றிய தொடக்கப் பள்ளி பாதுகாப்புச் சுவர் இன்றி இருப்பது அரசுக்குத் தெரியுமா?

(ஆ) ஆம் எனில், அமைத்துத் தரப்படுமா?

விடை—

**மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன், செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) ஆம்.

(ஆ) மோகனூர் ஊராட்சி ஒன்றிய தொடக்கப் பள்ளிக்கு பாதுகாப்புச் சுவர் கட்ட 2003-2004 ஆம் நிதியாண்டில் எந்தத் திட்டத்திலும் நிதி ஒதுக்கீடு ஏதும் செய்யப்படவில்லை. எனவே, பாதுகாப்புச் சுவர் அமைத்துத் தர இயலாது.

62—

## சுடுகாட்டிற்குச் சுற்றுச் சுவர் அமைத்தல்

**வினா எண் 27543—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

எடப்பாடி தொகுதி, எடப்பாடி நகராட்சிக்கு உட்பட்ட பெரிய ஏரிக்கு அருகில் உள்ள சுடுகாட்டில் ஆக்கிரமிப்பை அகற்றி சுற்றுச் சுவர் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

**மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன், செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

எடப்பாடி நகராட்சிக்கு உட்பட்ட பெரிய ஏரிக்கு அருகில் உள்ள சுடுகாட்டில் ஆக்கிரமிப்பு ஏதுமில்லை. எடப்பாடி நகராட்சியின் நிதி நிலைமை மிகவும் பின்தங்கியுள்ளதால், சுடுகாட்டைச் சுற்றி சுற்றுச் சுவர் அமைக்கும் திட்டம் ஏதுமில்லை.

63— [2004 நவம்பர் 17

## டாக்டர் அம்பேத்கர் சிலை அமைத்தல்

**வினா எண் 28744—திரு. கோவை தங்கம்:** மாண்புமிகு செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கோவை மாநகரிலுள்ள தலைமை நீதிமன்றம் முன்பு உரூர் ரோட்டில் போலீஸ் கமிஷனர் அலுவலகம் அருகில் டாக்டர் அம்பேத்கர் சிலையை வைக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன், செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) சிலை அமைப்பதற்கான மற்றும் அதனை பராமரிப்பதற்கான முழுச் செலவையும் தனி நபரோ அல்லது பொது அமைப்பு/நிறுவனம் ஆகியவையோ ஏற்பதன் அடிப்படையில் உரிய கோரிக்கை சம்பந்தப்பட்ட மாவட்ட ஆட்சியர் மூலமாக வரப்பெற்றால் பரிசீலனை செய்யலாம். தவிர மேற்படி சிலையை அரசு நிறுவுவதற்கான செயற்குறிப்பு ஏதும் தற்போது பரிசீலனையில் இல்லை.

64—

## ஆழ்துளைக் கிணறு ஏற்படுத்துதல்

**வினா எண் 29176—திரு. கோவை தங்கம்:** மாண்புமிகு செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வால்பாறை தொகுதியிலுள்ள அர்த்தநாரிபாளையம் ஊராட்சியில் ஆழ்துளைக் கிணறு ஒன்றை ஏற்படுத்தித்தர அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?



2004 நவம்பர் 17]

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன், செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) கோயம்புத்தூர் மாவட்டம், ஆனைமலை ஊராட்சி ஒன்றியம், அர்த்தநாரிபாளையம் ஊராட்சி, அர்த்தநாரிபாளையம் குடியிருப்பு, ஏற்கெனவே உள்ள ஆழ்துளைக் கிணற்றில் சிறு மின்விசைத் திட்டம் மூலம் குடிநீர் வசதி பெறுகிறது. மேலும், மாவட்ட ஆட்சித் தலைவரின் பொது நிதி வேலைகள் மூலம் புதிய ஆழ்துளைக் கிணறு அமைக்கப்பட்டுள்ளது.

65—

## பழ அங்காடி அமைக்க கடன் வசதி

**வினா எண் 31705—திரு. செ. வெங்கடாஜலம்:** மாண்புமிகு செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சேலம் மாநகராட்சி மூலம் மணியனூரில் புதிய பழ அங்காடி அமைக்க எவ்வளவு தொகை செலவழிக்கப்பட்டது?

(ஆ) அங்கு பழ அங்காடி கட்டடம் கட்ட அரசு கடன் வசதி செய்து கொடுக்குமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன், செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) சேலம் மாநகராட்சி, கோட்டம் எண் 50 மணியனூரில் புதிய பழ அங்காடி அமைப்பதற்காக சாலை மற்றும் சாக்கடை அமைத்ததற்கு 1997 மற்றும் 1998 ஆம் ஆண்டுகளில் தோராயமாக ரூ.45 இலட்சம் செலவிடப்பட்டுள்ளது. பழ அங்காடி கட்டடம் கட்டுவது தொடர்பான கருத்துரு ஏதும் பெறப்படவில்லை. பெற்ற பின் பரிசீலனை செய்யப்படும்.

[2004 நவம்பர் 17

66—

## சொத்து வரி விதித்தல்

**வினா எண் 31709—திரு. செ. வெங்கடாஜலம்:** மாண்புமிகு செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சேலம் மாநகராட்சியில் 1996 முதல் 2001 வரை எவ்வளவு வீடுகளுக்கு வரைபடம் அங்கீகரிக்கப்பட்டுள்ளன?

(ஆ) இந்த வீடுகளுக்கு கதவு எண்கள் கொடுக்கப்பட்டு சொத்து வரிகள் விதிக்கப்பட்டுள்ளனவா?

(இ) ஆம் எனில், வருமானம் எவ்வளவு?

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன், செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) சேலம் மாநகராட்சியில் 1996 முதல் 2001 வரை உள்ள காலங்களில் 4,429 கட்டடங்களுக்கு வரைபடம் அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

(ஆ) ஆம். இந்த வீடுகளுக்கு கதவு எண்கள் அளிக்கப்பட்டு சொத்து வரிகள் விதிக்கப்பட்டுள்ளன.

(இ) இதன் மூலம் மாநகராட்சிக்கு கிடைக்கப்பெற்ற வருமானம் ரூ.2,00,00,067/-.

67—

## சாக்கடை வசதி செய்தல்

**வினா எண் 32739—திரு. செ. வெங்கடாஜலம்:** மாண்புமிகு செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சேலம் மாநகரம், 37 மற்றும் 40வது கோட்டம் இணைந்த பகுதிகளான ஆறுமுக நகரில் பல வீதிகள் செப்பனிடப்படாமல் உள்ளதை அரசு அறியுமா?



2004 நவம்பர் 17]

(ஆ) ஆம் எனில், எப்போது சாக்கடை வசதிகள் செய்து தரப்படும்?

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன், செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) சேலம் மாநகராட்சி, 37 மற்றும் 40வது கோட்டத்தின் இணைந்த பகுதிகளான ஆறுமுக நகர் பகுதியின் சாலைகள் இன்னமும் மாநகராட்சி வசம் ஒப்படைக்கப்படவில்லை. எனினும் இப்பகுதியில் சேலம் 1வது சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு நிதியின்கீழ் ரூ.6,82,000/- செலவில் கழிவுநீர் சாக்கடை மற்றும் சிறுபாலம் கட்டிக் கொடுக்கப்பட்டுள்ளது. இப்பகுதி சாலையினை வரும் நிதியாண்டில் சட்டமன்ற உறுப்பினர் நிதி (அ) பாராளுமன்ற உறுப்பினர் நிதியிலிருந்து உரிய நிதி ஒதுக்கீடு செய்து பணிகள் மேற்கொள்ள வழிவகை செய்யப்பட்டுள்ளது.

68—

## நீர்த்தேக்கத் தொட்டி அமைத்தல்

**வினா எண் 33127—டாக்டர் சி. விஜயபாஸ்கர்:** மாண்புமிகு செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) புதுக்கோட்டை தொகுதி, குன்னாண்டார் கோயில் ஒன்றியம், தெம்பாவூர் ஊராட்சி, பூச்சிக்குடி வயலுக்கு புதிய சிறிய நீர்த்தேக்கத் தொட்டி கட்டித்தர அரசிடம் திட்டம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன், செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) புதுக்கோட்டை தொகுதி, குன்னாண்டார் கோயில் ஒன்றியம், தெம்பாவூர் ஊராட்சியைச் சார்ந்த பூச்சிக்குடி வயல் மக்கட்தொகை சுமார் 120. இங்கு சிறு மின்விசைத் திட்டம்

2002-2003 ஆம் ஆண்டில் முடிக்கப்பட்டு 12/2002-ல் ஊராட்சியிடம் பராமரிப்பிற்காக ஒப்படைக்கப்பட்டுள்ளது.

69—

## கழிவுநீருக்கான இணைப்பு

**வினா எண் 34375—திரு. பி.கே. சேகர்பாபு:** மாண்புமிகு செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சென்னை மாநகரில் ரூ.100/- செலுத்தினால் கழிவு நீருக்கான இணைப்பு அளிக்கப்படும் என்ற திட்டத்தின்கீழ் பணம் செலுத்தியவர்கள் எத்தனை பேர்?

(ஆ) இத்திட்டத்தின் மூலம் எத்தனை வீடுகளுக்கு இணைப்புகள் வழங்கப்பட்டுள்ளன?

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன், செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களின் உத்தரவின் பேரில் சென்னை மாநகரில் வறுமைக்கோட்டிற்குக்கீழ் உள்ளவர்கள் ரூ.100/- மட்டும் செலுத்தி கழிவுநீர் இணைப்பு பெறலாம் என்ற சிறப்புத் திட்டத்தின்கீழ் 10-6-2004 வரை மொத்தம் 27,740 விண்ணப்பங்கள் பதிவு செய்யப்பட்டுள்ளன.

மேற்படி திட்டத்தில் 6-1-2003 முதல் தொடர்ந்து சென்னைக் குடிநீர் வாரியத்தில் விண்ணப்பங்கள் பதிவு செய்யப்பட்டு வருகின்றன. 10-6-2004 வரை மொத்தம் 27,740 விண்ணப்பங்கள் பதியப்பட்டு 5,003 விண்ணப்பங்கள் பல்வேறு காரணங்களுக்காக விண்ணப்பதாரர்களுக்கு திருப்பி அனுப்பப்பட்டுவிட்டன. இதுவரை மொத்தம் 21,479 கழிவுநீர் இணைப்புகள் வழங்கப்பட்டுள்ளன.





70—

## பசுமை போர்வைத் திட்டம்

**வினா எண் 34568—திரு. செ. வெங்கடாஜலம்:** மாண்புமிகு செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சேலம் மாநகராட்சியில் பசுமை போர்வைத் திட்டம் செயல்படுத்தப்படுகிறதா?

(ஆ) ஆம் எனில், எவ்வளவு நிதி செலவிடப்பட்டுள்ளது?

(இ) இத்திட்டத்தினால் எவ்வளவு மரக்கன்றுகள் நடப்பட்டுள்ளன?

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன், செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ), (ஆ) மற்றும் (இ) வனத் துறையினரால் சேலம் மாநகராட்சியில் 2000-2001 ஆம் ஆண்டு தமிழ்நாடு பசுமை போர்வைத் திட்டம் என்ற திட்டம் செயல்படுத்தப்பட்டது. மேற்படி திட்டத்திற்கு சேலம் மாநகராட்சிக்கு நிதி ஒதுக்கீடு எதுவும் செய்யப்படவில்லை. எனினும் தமிழ்நாடு வனத் துறையினரால் 32,000 மரக்கன்றுகள் சேலம் மாநகராட்சிப் பகுதியில் நடப்பட்டுள்ளன. அவை தற்போது மாநகராட்சியின் பராமரிப்பிற்கு ஒப்படைக்கப்பட்டுள்ளது.

71—

## நகராட்சியில் வசூலான தொகை விவரம்

**வினா எண் 34793—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) 2001-2002 ஆம் ஆண்டு எடப்பாடி நகராட்சியின் மூலம் வசூலான தொகை எவ்வளவு?

(ஆ) நிலுவையிலுள்ள தொகை எவ்வளவு?

[2004 நவம்பர் 17

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன், செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) எடப்பாடி நகராட்சியில் 2001-2002ஆம் ஆண்டில், சொத்து வரி, தொழில் வரி, விளம்பர வரி, குடிநீர் கட்டணம் மற்றும் வரியில்லா இனம் ஆகிய இனங்களில் வசூலான தொகை மொத்தம் ரூ.1,56,42,863 ஆகும். மேற்கண்ட அனைத்து இனங்களிலும் சேர்த்து வசூலாகாமல் நிலுவையாக உள்ள தொகை மொத்தம் ரூ.70,53,692 ஆகும். மேலும், தற்பொழுது 2003—2004 ஆம் ஆண்டு முடிய ரூ.55 இலட்சம் வசூல் செய்யப்பட்டுள்ளது. மீதமுள்ள நிலுவைத் தொகையை வசூல் செய்ய நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

**72—**

## இலவச சிறுநீர் கழிப்பிடம்

**வினா எண் 34827—திரு. கே. ஆறுமுகம்:** மாண்புமிகு செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

செங்கல்பட்டு நகரப் பேருந்து நிலையத்தில் இலவச சிறுநீர் கழிப்பிடம் அரசால் கட்டித் தரப்படுமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன், செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

செங்கல்பட்டு நகரப் பேருந்து நிலையத்தில் இலவச சிறுநீர் கழிப்பிடம் ரூ. 40,000/- செலவில், செங்கல்பட்டு நகராட்சியால் கட்டப்பட்டு, 15-7-2004 முதல் பொதுமக்கள் பயன்பாட்டில் உள்ளது.

**73—**

## வாகன வசதி

**வினா எண் 35208—திரு. ப. அரசன்:** மாண்புமிகு செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—



2004 நவம்பர் 17]

ஊராட்சி ஒன்றியங்களில் பணியாற்றும் பொறியாளர் மற்றும் ஓவர்சீயர்களுக்கு இரண்டு சக்கர மோட்டார் பைக் போன்ற வாகன வசதி செய்து தரும் திட்டம் அரசிடம் உள்ளதா?

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன், செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

ஊராட்சி ஒன்றியங்களில் இரண்டு ஈப்பு ஊர்திகள் உள்ள நிலையில் ஒன்றிய பொறியாளர்கள் மற்றும் ஓவர்சீயர்களுக்கு இரண்டு சக்கர மோட்டார் பைக் வசதி செய்து தரும் திட்டம் அரசிடம் இல்லை.

**74—**

## பாலர் பள்ளி ஏற்படுத்துதல்

**வினா எண் 35917—திரு. கி. பாரிமோகன்:** மாண்புமிகு செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தருமபுரி ஒன்றியம், திப்பிரெட்டி அள்ளி ஊராட்சி, செவத்தான் கொட்டாயில் பாலர் பள்ளி வசதி ஏற்படுத்தித்தர அரசு முன்வருமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன், செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

தருமபுரி ஒன்றியம், திப்பிரெட்டி அள்ளி ஊராட்சி, செவத்தான் கொட்டாயில் 14 குழந்தைகள் மட்டுமே இருப்பதால் குழந்தைகள் நல மையம் தொடங்கும் திட்டம் அரசிடம் ஏதும் இல்லை.

**75—**

## ஆழ்குழாய்க் கிணறு அமைத்தல்

**வினா எண் 36460—திரு. மு. அப்பாவு:** மாண்புமிகு செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

[2004 நவம்பர் 17

(அ) திருநெல்வேலி மாவட்டம், பணகுடி பேரூராட்சி, பாம்பன்குளம் கிராமத்தில் ஆழ்குழாய்க் கிணறு அமைத்து குடிநீர் பிரச்சினையைத் தீர்த்திட அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. கோ.சி. அன்பழகன், செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) திருநெல்வேலி மாவட்டம், பணகுடி பேரூராட்சிப் பகுதியில் பாம்பன்குளத்தில் சுமார் 278 குடியிருப்புகள் உள்ளன. இது சுமார் 1,200 மக்கள் தொகை கொண்டுள்ளது. இதில் 5 பொது நல்லி, ஒரு ஆழ்குழாய்க் கிணறு அமைத்து மற்றும் இரண்டு மினி பவர் பம்பு (சின்டெக்ஸ்) மற்றும் 21 வீட்டுக் குடிநீர் இணைப்புகளும் உள்ளன. மேலும், 4 இலட்சம் லிட்டர் கொள்ளளவு கொண்ட மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி மூலம் இரண்டு நாட்களுக்கு ஒரு முறை குடிநீர் விநியோகம் செய்யப்பட்டு, பாம்பன்குளம் பகுதிக்கு ஒரு பிரிவாக விநியோகம் செய்யப்பட்டு வருகிறது.

**76—**

## குடிநீர்க் குழாய்கள் அமைத்தல்

**வினா எண் 36461—திரு. மு. அப்பாவு:** மாண்புமிகு செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

திருநெல்வேலி மாவட்டம், ராதாபுரம் வட்டம், திசையன்விளை பேரூராட்சி 15வது வார்டு பகுதிக்குட்பட்ட முத்தாரம்மன் கோயில், வேதக்கோயில் மற்றும் அம்பேத்கர் ஆகிய மூன்று தெருக்களில் தாமிரபரணி தண்ணீர் வழங்கிட குடிநீர்க் குழாய்கள் அமைத்துக் கொடுக்கப்படுமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. கோ.சி. அன்பழகன், செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

திருநெல்வேலி மாவட்டம், ராதாபுரம் வட்டம், திசையன்விளை பேரூராட்சி 15வது வார்டு பகுதிக்குட்பட்ட முத்தாரம்மன் கோயில்,



2004 நவம்பர் 17]

வேதக்கோயில் மற்றும் அம்பேத்கர் ஆகிய 3 தெருக்களிலும் பேரூராட்சி திட்டங்கள் மூலம் 11வது பொது நல்லிகள் மற்றும் தாமிரபரணி கூட்டுக் குடிநீர்த் திட்டம் மூலம் 8 பொது நல்லிகளும் வைக்கப்பட்டு ஒரு நாள் விட்டு ஒரு நாள் ஒரு தனி நபருக்கு 60 லிட்டர் வீதம் குடிநீர் விநியோகம் செய்யப்படுகிறது. மேற்கண்ட 3 தெருக்களிலும் குடிநீர்த் தட்டுப்பாடு ஏதும் இல்லை.

**77—**

## சொத்து வரி விதித்தல்

**வினா எண் 37638—டாக்டர் ஆர். கோவிந்தசாமி:** மாண்புமிகு செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) விருத்தாசலம் நகராட்சியில் சொத்து வரி இதுநாள் வரை விதிக்கப்பட்டுள்ள கட்டடங்களின் எண்ணிக்கை எத்தனை?

(ஆ) ஆம் எனில், இதன்மூலம் நகராட்சிக்குக் கிடைத்த வருமானம் எவ்வளவு?

**விடை—**

**மாண்புமிகு திரு. கோ.சி. அன்பழகன், செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) விருத்தாசலம் நகராட்சியில் இதுவரை 13,789 கட்டடங்களுக்கு சொத்து வரி விதிக்கப்பட்டுள்ளது.

(ஆ) இவ்வாண்டில் மட்டும் ரூ.56.66 இலட்சம் வசூலிக்கப்பட்டுள்ளது.

**78—**

## பிரசவ கால பேருதவி வழங்குதல்

**வினா எண் 38304—திரு. செ. வெங்கடாஜலம்:** மாண்புமிகு செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

[2004 நவம்பர் 17

(அ) சேலம் மாநகராட்சியில் ஏழை கர்ப்பிணி தாய்மார்களுக்கு பிரசவ கால பேருதவி ரூ.600/— வழங்கப்பட்டுள்ளதா?

(ஆ) ஆம் எனில், எத்தனை பேருக்கு வழங்கப்பட்டுள்ளது?

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன், செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) ஆம். 2002-2003 ஆம் ஆண்டில் 1,029 பயனாளிகளுக்கு பிரசவ பேருதவி வழங்கப்பட்டுள்ளது. 2003-2004 ஆம் நிதியாண்டிற்கு ரூ.525/- வீதம் 3,480 பயனாளிகளுக்கு ரூ.18,27,000/- வழங்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

**79—**

## மழைநீர் சேகரிப்புக் கட்டமைப்பு

**வினா எண் 38307—திரு. செ. வெங்கடாஜலம்:** மாண்புமிகு செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

சேலம் மாநகராட்சியில் எத்தனை பள்ளிக் கட்டடங்களில் மழைநீர் சேகரிப்பு கட்டமைப்பு ஏற்படுத்தப்பட்டுள்ளது?

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன், செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

சேலம் மாநகராட்சிக்குச் சொந்தமான தொடக்கப் பள்ளி, உயர்நிலைப் பள்ளி மற்றும் மேல்நிலைப் பள்ளி ஆகிய அனைத்து பள்ளிகளிலும் மழைநீர் சேகரிப்பு கட்டமைப்பு செய்யப்பட்டுள்ளது.

**80—**

## மாநகராட்சி உறுப்பினர்களுக்குப் பயிற்சி

**வினா எண் 38308—திரு. செ. வெங்கடாஜலம்:** மாண்புமிகு செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—



2004 நவம்பர் 17]

(அ) சேலம் மாநகராட்சி உறுப்பினர்களுக்கு கூட்டம் நடத்துதல் பற்றி பயிற்சி அளிக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன், செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) சேலம் மாநகராட்சி மாமன்ற உறுப்பினர்களுக்கு கோவையில் உள்ள தமிழ்நாடு நகரவியல் பயிற்சி நிறுவனம் மூலம் அக்டோபர் 2002-ல் பயிற்சி நடத்தப்பட்டுள்ளது. மேற்கண்ட உறுப்பினர்களுக்கு கூட்டம் நடத்துவது பற்றி பயிற்சி அளிக்கும் திட்டம் ஏதும் தற்போது மாநகராட்சியில் இல்லை.

**81—**

## பிரிபெய்டு கார்டு அறிமுகம்

**வினா எண் 38587—திரு. செ. வெங்கடாஜலம்:** மாண்புமிகு செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சேலம் மாநகராட்சியில் வாகன நிறுத்தக் கட்டணம் செலுத்துவதற்கு பிரிபெய்டு கார்டு அறிமுகம் செய்யும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன், செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) சேலம் மாநகராட்சிக்குச் சொந்தமான வாகன நிறுத்தங்கள் ஒவ்வொரு ஆண்டும் ஏல விதிமுறைகளுக்குட்பட்டு பொது ஏலம் மூலம் உச்ச ஏலக் கேள்விதாரார்களுக்கு இவ்வினத்திற்கான ஆண்டின் முழுத் தொகையினையும் வசூல் செய்து கொண்டு மன்றத்தால் நிர்ணயிக்கப்பட்டுள்ள வாகன நிறுத்தக் கட்டணத்தினை வசூல் செய்துகொள்ள அனுமதித்து நடைமுறைப்படுத்தப்பட்டு

[2004 நவம்பர் 17

வருகிறது. எனினும் பிரிபெய்டு கார்டு அறிமுகம் செய்யும் திட்டம் எதுவும் பரிசீலனையில் இல்லை.

**82—**

## கணினி செயல்பாடு

**வினா எண் 38640—திரு. செ. வெங்கடாஜலம்:** மாண்புமிகு செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

நடப்பாண்டில் சேலம் மாநகராட்சியில் கணினிகள் பொருத்தப்பட்டு என்னென்ன பணிகள் மேற்கொள்ளப்படுகின்றன?

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன், செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

சேலம் மாநகராட்சில் நான்கு வார்டு அலுவலகங்களில் கணினிகள் பொருத்தி கணினி சேவை மையங்கள் ஏற்படுத்தப்பட்டு சொத்து வரி, குடிநீர் வரி வசூலித்தல், பிறப்பு இறப்பு சான்று வழங்குதல் மற்றும் இதர இனங்கள் கணினி மூலம் செயல்படுத்தப்படுகின்றன.

**83—**

## சுற்றுச்சுவர் அமைத்தல்

**வினா எண் 40920—திரு. எஸ். நடராஜன்:** மாண்புமிகு செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) நாட்ராம்பள்ளி தொகுதி, நாட்ராம்பள்ளி பேரூராட்சி பேருந்து நிலையத்திற்குச் சுற்றுச்சுவர் அமைத்துத்தர அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன், செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**



2004 நவம்பர் 17]

(அ) நாட்ராம்பள்ளி தொகுதி, நாட்ராம்பள்ளி பேரூராட்சி பேருந்து நிலையத்திற்குச் சுற்றுச்சுவர் அமைத்துத்தர பேரூராட்சியில் நிதி வசதியில்லை. நிதிநிலை சீரான பின்னர் நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

(ஆ) கேள்வி எழவில்லை.

**84—**

## மேல்நிலைத் தொட்டி அமைத்தல்

**வினா எண் 41446—திரு. லா. சந்தானம்:** மாண்புமிகு செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

உசிலம்பட்டி தொகுதி, பாப்பாப்பட்டி ஊராட்சி, பேயம்பட்டியில் மேல்நிலைத் தொட்டி மிகவும் மோசமாக உள்ளதை மாற்றி புதிய மேல்நிலைத் தொட்டி கட்டிக்கொடுக்க அரசு முன்வருமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன், செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

மதுரை மாவட்டம், செல்லம்பட்டி ஒன்றியம், பாப்பாப்பட்டி ஊராட்சியைச் சார்ந்த பேயம்பட்டியில் பழுதடைந்த 10,000 லிட்டர் மேல்நிலைத் தொட்டி தற்போது ஊராட்சி ஒன்றியத்தின் மூலம் வறட்சி நிவாரணத் திட்டத்தின்கீழ் 2003-2004 ஆம் நிதியாண்டில் புனரமைப்பு செய்யப்பட்டு நல்ல நிலையிலும் மக்கள் பயன்பாட்டிலும் உள்ளது. தற்போதைய மக்கள் தொகைக்கு ஏற்ப மேல்நிலைத் தொட்டியின் கொள்ளளவு உள்ளதால் தற்போது புதியதாக மேல்நிலைத் தொட்டி கட்டும் திட்டம் ஏதும் பரிசீலனையில் இல்லை.

**85—**

## பாலம் சீரமைத்தல்

**வினா எண் 42791—திரு. கோவை தங்கம்:** மாண்புமிகு செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

[2004 நவம்பர் 17

(அ) கோவை மாநகரம், சொக்கம்புதூர் மயானம் செல்லும் பாதையில் உள்ள பாலம் மிகவும் பழுதுபட்டு இருப்பது அரசுக்குத் தெரியுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. கோ.சி. அன்பழகன், செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) ஆம்.

(ஆ) கோயம்புத்தூர் மாவட்ட நிர்வாகத்தின்கீழ் "நமக்கு நாமே" திட்டத்தில் பாலம் புதுப்பித்து கட்டும் பணி முடிவடையும் தறுவாயில் உள்ளது.

**86—**

## நடைபாதைக் கடைகளை அகற்றுதல்

**வினா எண் 43738—திரு. அ.இரா. மலையப்பசாமி:** மாண்புமிகு செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

நாமக்கல் பேருந்து நிலையத்தில் நடைபாதையில் உள்ள கடைகள் பயணிகள் நடந்து செல்லமுடியாத அளவிற்கு நெருக்கடியாக உள்ளதால், அக்கடைகளை அகற்ற அரசு நடவடிக்கை எடுக்குமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. கோ.சி. அன்பழகன், செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

நாமக்கல் நகராட்சி பேருந்து நிலையத்தில் உள்ள நடைபாதைக் கடைகள் மற்றும் நான்கு சக்கர வண்டிகள் அகற்றப்பட்டுவிட்டன.



2004 நவம்பர் 17]

**87—**

## மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி கட்டுதல்

**வினா எண் 43881—திரு. அ.இரா. மலையப்பசாமி:** மாண்புமிகு செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) நாமக்கல் மாவட்டம், கபிலர்மலை ஊராட்சி ஒன்றியம், சிறுகிணத்துப்பாளையம் காலனிக்கு மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி கட்டித்தர அரசு நடவடிக்கை எடுக்குமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. கோ.சி. அன்பழகன், செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) கபிலர்மலை ஒன்றியம், பெரிய சோளிபாளையம் ஊராட்சியில், சிறுகிணத்துப்பாளையம் அருந்ததியர் காலனி குடியிருப்பின் மக்கட்தொகை 470 ஆகும். இங்கு 30,000 லிட்டர் கொள்ளளவுள்ள மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி மூலம் போதுமான அளவு குடிநீர் வழங்கப்பட்டு வருகிறது.

**88—**

## கழிப்பிட வசதி, நிழற்குடை அமைத்தல்

**வினா எண் 45810—திரு. கோவை தங்கம்:** மாண்புமிகு செய்தி, விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வால்பாறை தொகுதி, கோட்டூர் பேரூராட்சி மூலம் ஆழியார் பூங்காவில் கழிப்பிட வசதியும் மற்றும் ஆழியார் நகரில் நிழற்குடை அமைக்கவும் அரசு நடவடிக்கை எடுக்குமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன், செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) கோவை மாவட்டம், வால்பாறை தொகுதி, கோட்டூர் பேரூராட்சியின் மூலம் ஆழியார் பூங்காவில் கழிப்பிட வசதியும் மற்றும் ஆழியார் நகரில் நிழற்குடை அமைக்கவும் கோட்டூர் பேரூராட்சியின் பொது நிதியில் போதுமான நிதி வசதி இல்லையாதலால், அவற்றைச் செயல்படுத்த இயலாதுள்ளது.

(ஆ) வினா எழவில்லை.

**89—**

## தெருவிளக்குகள் அமைத்தல்

**வினா எண் 46612—திரு. கோவை தங்கம்:** மாண்புமிகு செய்தி, விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கோயம்புத்தூர் மாவட்டம், வால்பாறை தொகுதி, வேட்டைக்காரன்புதூர் பேரூராட்சி, சேத்துமடை மூவேந்தர் காலனியில் தெரு விளக்குகள் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன், செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) கோயம்புத்தூர் மாவட்டம், வால்பாறை தொகுதி, வேட்டைக்காரன்புதூர் பேரூராட்சி, சேத்துமடை மூவேந்தர் காலனியில் 11-வது நிதிக் குழுத் திட்டத்தின்கீழ் 43 தெரு விளக்குகள் அமைத்துக் கொடுக்கப்பட்டுள்ளது. இவ்விளக்குகள் போதுமானது.

(ஆ) வினா எழவில்லை.



**90—**

## கழிவுநீர்க் கால்வாய் வசதி

**வினா எண் 48478—திரு. அ.இரா. மலையப்பசாமி:** மாண்புமிகு செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கபிலர்மலை தொகுதி, மோகனூர் பேரூராட்சி, 4-வது வார்டில் கழிவுநீர்க் கால்வாய் வசதி ஏற்படுத்தித்தர அரசு உடனடி நடவடிக்கை எடுக்குமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன், செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) சேலம் மண்டலம், நாமக்கல் மாவட்டம், மோகனூர் பேரூராட்சி, 4-வது வார்டு பகுதியில் ஏற்கெனவே 2.342 கி.மீ. நீளத்திற்கு சாக்கடை வசதி செய்துத் தரப்பட்டுள்ளது. மேலும் 1.259 கி.மீ. நீளத்திற்கு சாக்கடை வசதிகள் செய்துத் தரவேண்டியுள்ளது. இப்பணி மேற்கொள்ள சுமார் ரூ.16.50 இலட்சம் செலவாகும் என மதிப்பிடப்பட்டுள்ளது. பேரூராட்சியில் போதிய நிதி வசதியில்லாததால் இப்பணியினை செய்துத் தர இயலாத நிலை உள்ளது.

**91—**

## தார்ச் சாலை அமைத்தல்

**வினா எண் 48935—திருமதி மல்லிகா சின்னசாமி:** மாண்புமிகு செய்தி, விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) முசிறி தொகுதி, மண்ணச்சநல்லூர் பேரூராட்சி, 11-வது வார்டு, புவனேஸ்வர நகர், நான்காம் தெரு முதல் ஓம்சக்தி நகர் வரை, இலங்கைத் தமிழர் காலனி முதல் மேகல்பாளையம் பள்ளி வரையிலான சாலை, நமச்சிவாய நகர் 2ஆம் தெரு முதல் புவனேஸ்வர நகர் வரை,

அயனாவரம் காலனி முதல் காமராஜர் காலனி வரை, இந்திரா நகர் 6 ஆம் தெரு, வடக்கு காமராஜ் காலனி முதல் எம்.ஜி.ஆர். நகர் வரையிலான சாலைகளை தார்ச் சாலைகளாக மாற்ற அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன், செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) முசிறி தொகுதி, மண்ணச்சநல்லூர் பேரூராட்சி, 11-வது வார்டு புவனேஸ்வர நகர் நான்காம் தெரு முதல் ஓம்சக்தி நகர் வரை, இலங்கைத் தமிழர் காலனி முதல் மேகல்பாளையம் பள்ளி வரையிலான சாலை, நமச்சிவாய நகர் 2 ஆம் தெரு முதல் புவனேஸ்வர நகர் வரை, அயனாவரம் காலனி முதல் காமராஜர் காலனி வரை, இந்திரா நகர் 6 ஆம் தெரு, வடக்கு காமராஜ் காலனி முதல் எம்.ஜி.ஆர். நகர் வரையிலான சாலைகளைத் தார்ச்சாலைகளாக மாற்ற பேரூராட்சியில் போதிய நிதி வசதி இல்லை.

(ஆ) வினா எழவில்லை.

**92—**

## பிறப்பு, இறப்புச் சான்றிதழ்கள்

**வினா எண் 49283—திரு. செ. வெங்கடாஜலம்:** மாண்புமிகு செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

சேலம் மாநகராட்சியில் பிறப்பு, இறப்புச் சான்றிதழ்கள் கணினி முறையில் வழங்க அரசு ஆவன செய்யுமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன், செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

சேலம் மாநகராட்சி மைய அலுவலகத்தில் உள்ள பிறப்பு/ இறபபுப் பதிவேடுகளுக்கு தற்போது கணினி மூலம் பிறப்பு/ இறப்புச்



சான்றிதழ்கள் வழங்கப்பட்டு வருகின்றன. வார்டு அலுவலகங்களில் பிறப்பு/ இறப்புப் பதிவேடுகளுக்கான பிறப்பு/ இறப்புச் சான்றிதழ்களை கணினி மூலம் வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

**93—**

## தெரு விளக்குகள் அமைத்தல்

**வினா எண் 49636—திரு. கோவை தங்கம்:** மாண்புமிகு செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கோவை மாவட்டம், வால்பாறை தொகுதி, காஞ்சமலை வடக்கு தண்ணீர்த் தொட்டி அருகிலும், காஞ்சமலை பேருந்து நிலையத்திற்கும் தெரு விளக்குகள் அமைக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன், செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) கோவை மாவட்டம், வால்பாறை தொகுதி, காஞ்சமலை வடக்கு தண்ணீர்த் தொட்டி அருகிலும், காஞ்சமலை பேருந்து நிலையத்திற்கும் 229 தெரு விளக்குகள் பேரூராட்சி மூலம் அமைத்துக் கொடுக்கப்பட்டுள்ளது.

**94—**

## கழிவுநீர் இணைப்புகள்

**வினா எண் 50015—திரு. பி.கே. சேகர்பாபு:** மாண்புமிகு செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

[2004 நவம்பர் 17

சென்னை நகரில் ஏழை எளிய மக்கள் ரூ.100/- மட்டும் செலுத்தி, கழிவுநீர் இணைப்பு பெறும் திட்டத்தின்கீழ் விண்ணப்பித்தவர்களுக்கு இணைப்புகள் வழங்கப்பட்டுவிட்டனவா?

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன், செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களின் உத்தரவின் பேரில் சென்னை மாநகரில் வறுமைக்கோட்டிற்குகீழ் உள்ளவர்கள் ரூ.100/- மட்டும் செலுத்தி கழிவுநீர் இணைப்பு பெறலாம் என்ற சிறப்புத் திட்டம் 6-1-2003 முதல் சென்னைக் குடிநீர் வாரியத்தால் தொடங்கப்பட்டு தொடர்ந்து விண்ணப்பங்கள் பதிவு செய்யப்பட்டு வருகின்றன. 10-6-2004 வரை மொத்தம் 27,740 விண்ணப்பங்கள் பதிவு செய்யப்பட்டுள்ளன. இவற்றில் 5,003 விண்ணப்பங்கள் பல்வேறு காரணங்களுக்காக விண்ணப்பதாரர்களுக்கு திருப்பி அனுப்பப்பட்டு விட்டன. விண்ணப்பம் பதிவு செய்வதற்கு கால வரம்பு எதுவும் நிர்ணயிக்கப்படவில்லை.

கழிவுநீர் இணைப்புகள் கொடுக்கும் பணி 10-1-2003 முதல் தொடங்கப்பட்டு தொடர்ந்து கொடுக்கப்பட்டு வருகின்றன. இத்திட்டத்தின் மூலம் 10-6-2004 வரை மொத்தம் 21,479 கழிவுநீர் இணைப்புகள் கொடுக்கப்பட்டுள்ளன.

**95—**

## வர்த்தக விளம்பர வசூல்

**வினா எண் 50076—திரு. செ. வெங்கடாஜலம்:** மாண்புமிகு செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சேலம் மாநகராட்சி புதிய பேருந்து நிலையத்தில் தொலைக்காட்சி மூலம் வர்த்தக விளம்பரம் செய்யப்படுகிறதா?

(ஆ) ஆம் எனில், விவரம் என்ன?



2004 நவம்பர் 17]

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன், செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) ஆம். வர்த்தக விளம்பரம் செய்யப்படுகிறது.

(ஆ) சேலம் மாநகராட்சி புதிய பேருந்து நிலையத்தில் டி.வி. விளம்பரம் அறை ஒதுக்கப்பட்டு மாத அடிப்படையில் மாதம் ஒன்றுக்கு ரூ. 6,750/- வீதம் ஆண்டிற்கு ரூ.81,000/- கேட்பு நிர்ணயம் செய்யப்பட்டு வசூல் செய்யப்பட்டு வருகிறது.

**96—**

## கழிப்பிட வசதி செய்தல்

**வினா எண் 50086—திரு. அ.இரா. மலையப்பசாமி:** மாண்புமிகு செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

சேலம் மாநகராட்சியில் அம்மாபேட்டை, கிருஷ்ணன்புதூர், மற்றும் இந்திரா நகர் பகுதிகளில் கழிப்பிட வசதி செய்துதர நடவடிக்கை எடுக்கப்படுமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன், செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

சேலம் மாநகராட்சியின் அம்மாபேட்டை, கிருஷ்ணன்புதூர் மற்றும் இந்திரா நகர் ஆகிய பகுதிகளில் மாநகராட்சிக்குச் சொந்தமான இடம் ஏதும் இல்லாததால் கழிப்பிட வசதி மாநகராட்சியால் செய்ய இயலாத நிலை உள்ளது.

**97—**

## புதிய தெரு விளக்குகள் அமைத்தல்

**வினா எண் 50518—திரு. செ. வெங்கடாஜலம்:** மாண்புமிகு செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

[2004 நவம்பர் 17

(அ) சேலம் மாநகராட்சி 35, 43, 44 கோட்டங்களில் புதிய தெருவிளக்குகள் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன், செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) சேலம் மாநகராட்சியின் கோட்டம் எண். 35-ல் 25 தெருவிளக்குகளும், கோட்டம் எண்.43-ல் 10 தெருவிளக்குகளும், கோட்டம் எண்.44-ல் 15 தெருவிளக்குகளும் புதிதாக அமைக்கப்பட்டுள்ளன.

**98—**

## பூங்கா அழகுபடுத்துதல்

**வினா எண் 50790—திரு. கோவை தங்கம்:** மாண்புமிகு செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கோயம்புத்தூர் மாநகர், சிதம்பரம் பூங்கா மற்றும் காந்தி பூங்கா முதலியவற்றை அழகுபடுத்த அரசு நடவடிக்கை எடுக்குமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன், செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) கோவை மாநகராட்சி, சிதம்பரம் பூங்கா மற்றும் காந்தி பூங்கா ஆகியவற்றை 2004-2005 ஆம் நிதி ஆண்டில் ரூ.120.00 இலட்சம் மதிப்பீட்டில் அபிவிருத்தி மற்றும் பராமரிப்புப் பணிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

**99—**

## நீச்சல் குளம் ஏற்படுத்துதல்

**வினா எண்—50800—திரு. கோவை தங்கம்:** மாண்புமிகு செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—



2004 நவம்பர் 17]

(அ) கோயம்புத்தூர் மாநகரிலுள்ள சிதம்பரம் பூங்காவில் நீச்சல் குளம் ஏற்படுத்த அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன், செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) கோயம்புத்தூர் மாநகரிலுள்ள சிதம்பரம் பூங்காவில் நீச்சல் குளம் அமைக்கும் திட்டம் ஏதும் இல்லை.

**100—**

## தொகுப்பு வீடுகள் கட்டித் தருதல்

**வினா எண் 51065—திரு. கோவை தங்கம்:** மாண்புமிகு செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கோயம்புத்தூர் மாவட்டம், வால்பாறை தொகுதி, 11-வது வார்டு, கோட்டூர் பேரூராட்சி, புளியங்கண்டி ஆழியார் நகர்ப் பகுதியில் குடியிருப்போருக்கு தொகுப்பு வீடுகள் கட்டித்தர அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன், செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) பேரூராட்சிகள் துறை 19-5-1994 முதல் நகராட்சிகள் சட்டம், 1920-ன்கீழ் செயல்பட்டு வருவதால் கோயம்புத்தூர் மாவட்டம், வால்பாறை தொகுதி 11-வது வார்டு, கோட்டூர் பேரூராட்சி, புளியங்கண்டி ஆழியார் நகர்ப் பகுதியில் குடியிருப்போருக்கு தொகுப்பு வீடுகள் கட்டித்தரும் திட்டம் பேரூராட்சிகளுக்கு விரிவுபடுத்தப்படவில்லை.

(ஆ) தொகுப்பு வீடுகள் கட்டும் திட்டம் பேரூராட்சிகளில் தற்போது செயல்படுத்தப்படவில்லையாதலால் இக்கேள்வி எழவில்லை.

[2004 நவம்பர் 17

## மூன்றாம் பட்டியல்

1—

### வாக்குச் சாவடிகள்

**வினா எண் 44844—திரு. எஸ். நடராஜன்:** மாண்புமிகு நிதி அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) நாட்ராம்பள்ளி தொகுதி, கந்திலி ஒன்றியம், தோரணம்பதி ஊராட்சிக்குட்பட்ட தாதகுள்ளனூர் மற்றும் குமாரம்பட்டி கிராமங்களில் வாக்குச் சாவடி அமைத்துத்தர அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன், நிதி அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) வேலூர் மாவட்டம், தாதகுள்ளனூர் மற்றும் குமாரம்பட்டி கிராமங்களிலுள்ள மக்கள் வாக்களிப்பதற்கு ஏதுவாக தோரணம்பதியில் உள்ள ஊராட்சி ஒன்றிய நடுநிலைப் பள்ளியில் வாக்குச் சாவடி அமைக்கப்பட்டுள்ளது. இவ்விரு கிராமங்களில் வாக்காளர்களின் எண்ணிக்கை 1,063 ஆகும். வாக்குச் சாவடி அமைக்கப்பட்டுள்ள இடத்திலிருந்து தாதகுள்ளனூர் கிராமம் 1½ கி.மீ. தொலைவிலும், குமாரம்பட்டி கிராமம் 1 கி.மீ. தொலைவிலும் உள்ளன. எனவே, மேற்கண்ட இரு கிராமங்களிலும் வாக்குச் சாவடிகள் அமைக்கத் தேவையில்லை.

2—

### ஆய்வு மையம்

**வினா எண் 49998—திரு. பி.கே. சேகர்பாபு:** மாண்புமிகு சட்டம் மற்றும் தகவல் தொழில்நுட்பவியல் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—



2004 நவம்பர் 17]

மத்திய அரசு அமெரிக்க தொழில்நுட்பக் கூட்டுடன் தொடங்கப்பட்ட மீடியா லேப் ஏசியா எந்தெந்த வட்டாரங்களில் சோதனைக் கூடங்களை அமைத்துள்ளது?

**விடை—**

**மாண்புமிகு திரு. டி. ஜெயக்குமார், சட்டம் மற்றும் தகவல் தொழில்நுட்பவியல் துறை அமைச்சர்:**

மீடியா லேப் ஏசியா (Media Lab Asia) என்ற பெயரில், இந்திய அரசின் தகவல் தொழில்நுட்ப அமைச்சகமும், மசாச்சுசெட்ஸ் (Massasuchusetts Institute of Technology - MIT ) USA கல்வி நிறுவனமும் தமிழக அரசின் கூட்டமைப்போடு சென்னையில் ஒரு மண்டல கணிப்பியல் ஆய்வுக்கூடத்தை (Regional Lab Computing) நிறுவியுள்ளது. இந்த ஆய்வு மையம் தொடர்பியல் (Communication) மற்றும் கணிப்பியல் (Computing)துறைகளில் உயர்ந்த அளவிலான ஆய்வு மற்றும் வளர்ச்சிப் பணிகளை மேற்கொள்ளும். மேற்கொண்டு மற்ற வட்டாரங்களில் ஆய்வுக்கூடத்தை நிறுவுவதற்கான நடவடிக்கைகளில் இருந்து மத்திய அரசு விலகிக் கொண்டது.

3—

### உழவர் பணி கூட்டுறவுச் சங்கத்தில் கணினி கொள்முதல்

**வினா எண் 20379—திரு. டி.கே. இராஜா:** மாண்புமிகு உணவு மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருப்பத்தூர் தொகுதி, மாடப்பள்ளி உழவர்கள் கூட்டுறவுச் சங்கத்தில் கணினி வாங்கியதில் ஊழல் முறைகேடு செய்துள்ளதை அரசு விசாரித்து நடவடிக்கை மேற்கொள்ளுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. பொள்ளாச்சி வி. ஜெயராமன், உணவு மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) மாடப்பள்ளி உழவர் பணி கூட்டுறவுச் சங்கத்தில் அப்போதைய நிர்வாகக் குழுவினால் கணினி கொள்முதல்

செய்யப்பட்டதில் ஊழல் ஏதேனும் நடைபெற்றுள்ளதா என்பதைக் கண்டறிய 1983 ஆம் வருடத்திய தமிழ்நாடு கூட்டுறவுச் சங்கங்களின் சட்டப் பிரிவு 82-ன்கீழ் ஆய்வு மேற்கொண்டு அறிக்கை பெறப்பட்டது. அவ்வறிக்கையில் ஊழல் நடைபெற்றதற்கான ஆதாரங்கள் இல்லை என தெரிவிக்கப்பட்டுள்ளது. இருப்பினும், கணினி கொள்முதல் செய்யப்படும்போது மாவட்ட மத்திய கூட்டுறவு வங்கியின் தொழில்நுட்ப சாத்தியக்கூறுகளின் அறிக்கை பெறப்பட வேண்டும். அப்போதைய மேலாண்மை இயக்குநர் மற்றும் சங்கச் செயலாளர் இந்த நடைமுறையை கடைப்பிடிக்காததால் இவர்கள்மீது ஒழுங்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

**4—**

## அடையாள அட்டைகள்

**வினா எண் 30490—திரு. இ. கணேசன்:** மாண்புமிகு உணவு மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

சேலம் மாவட்டத்தில் சேலம் வேளாண்மை உற்பத்தியாளர்கள் கூட்டுறவு விற்பனைச் சங்கம் கொப்பரைக் கொள்முதல் மையத்தில் எவ்வளவு விவசாயிகள் அடையாள அட்டைகள் பெற்றுள்ளனர்?

**விடை—**

**மாண்புமிகு திரு. பொள்ளாச்சி வி. ஜெயராமன், உணவு மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர்:**

சேலம் மாவட்டத்தில், சேலம் வேளாண்மை உற்பத்தியாளர்கள் கூட்டுறவு விற்பனைச் சங்கத்தில் சேலம் மற்றும் நாமக்கல் மாவட்டங்களைச் சேர்ந்த மொத்தம் 31 விவசாயிகள் தங்கள் பகுதி வருவாய்த் துறை மற்றும் வேளாண்மைத் துறையினர் மூலம் தென்னை சாகுபடி அடையாள அட்டை பெற்றுள்ளனர்.

**5—**

## ஒருகால பூஜைத் திட்டம்

**வினா எண் 48861—திரு. நா. சந்திரமோகன்:** மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—



(அ) சீர்காழி தொகுதியில் இந்து சமய அறநிலையத் துறைக்குச் சொந்தமான கோயில்களில் ஒரு கால பூஜைத் திட்டத்தின்கீழ் எத்தனை கோயில்கள் பயனடைந்துள்ளன?

(ஆ) கோயில்களின் பெயர்கள் என்ன?

**விடை—**

**மாண்புமிகு திரு. பி.சி. ராமசாமி, இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர்:**

(அ) நாகப்பட்டினம் மாவட்டம், சீர்காழி வட்டம், சீர்காழி தொகுதியில் இந்து சமய அறநிலைய ஆட்சித் துறைக்குச் சொந்தமான கோயில்களில், ஒரு கால பூஜைத் திட்டத்தின்கீழ் 63 கோயில்கள் பயனடைந்துள்ளன.

(ஆ) திருக்கோயில்களின் பெயர்கள்:—

1. அருள்மிகு திருமேனியழகர் திருக்கோயில், பச்சைபெருமாநல்லூர்.
2. அருள்மிகு சேத்ரபாலீஸ்வரர் திருக்கோயில், கண்ணுக்கியார்கோவில்.
3. அருள்மிகு காளியம்மன் சிவன் வகையறா திருக்கோயில், திட்டுப்படுகை.
4. அருள்மிகு குட்டியாண்டவர் திருக்கோயில், இராதாநல்லூர்.
5. அருள்மிகு கம்பநாதசுவாமி திருக்கோயில், பெருமங்கலம்.
6. அருள்மிகு மாரியம்மன் திருக்கோயில், பெருமங்கலம்.
7. அருள்மிகு கைலாசநாதர் திருக்கோயில், கன்னியாகுடி.
8. அருள்மிகு பத்ரகாளியம்மன் திருக்கோயில், உச்சிமேடு.
9. அருள்மிகு திரௌபதியம்மன் திருக்கோயில், ஏகோஜிமகாராசபுரம்.
10. அருள்மிகு அய்யனார், சித்திவிநாயகர் மற்றும் பிடாரி திருக்கோயில், செங்கமேடு.

[2004 நவம்பர் 17

11. அருள்மிகு அய்யனார் திருக்கோயில், செம்பதனிருப்பு.

12. அருள்மிகு காமாட்சியம்மன் திருக்கோயில், காலைமேடு.

13. அருள்மிகு காத்தாயியம்மன் திருக்கோயில், கார்த்திகேயிருப்பு.

14. அருள்மிகு காளியம்மன் திருக்கோயில், காட்டூர்.

15. அருள்மிகு மாரியம்மன் திருக்கோயில், அல்லிவிளாகம்.

16. அருள்மிகு நாகநாதசுவாமி திருக்கோயில், செம்பதனிருப்பு.

17. அருள்மிகு தர்மராஜா மாரியம்மன் திருக்கோயில், செம்மங்குடி.

18. அருள்மிகு திருமேனியழகர் திருக்கோயில், மகேந்திரபள்ளி.

19. அருள்மிகு அய்யனார் திருக்கோயில், நல்லூர்.

20. அருள்மிகு விடங்கேஸ்வரர் திருக்கோயில், தில்லைவிடங்கன்.

21. அருள்மிகு விசுவநாதசுவாமி திருக்கோயில், நெம்மேலி.

22. அருள்மிகு மாரியம்மன் திருக்கோயில், புதுப்பட்டினம்.

23. அருள்மிகு திரௌபதியம்மன் திருக்கோயில், பச்சைபெருமாநல்லூர்.

24. அருள்மிகு தாரனேஸ்வரர் திருக்கோயில், புதுத்துறை.

25. அருள்மிகு நாகேஸ்வரமுடையார் திருக்கோயில், சீர்காழி.

26. அருள்மிகு மூர்த்திராஜமுடையார் திருக்கோயில், காப்பியக்குடி

27. அருள்மிகு கற்பகவிநாயகர் திருக்கோயில், திருக்கருகாவூர்.

28. அருள்மிகு திரௌபதியம்மன் திருக்கோயில், சென்னியநல்லூர்.

29. அருள்மிகு வெல்விடைநாதசுவாமி திருக்கோயில், திருக்கருகாவூர்.

30. அருள்மிகு செங்கழுநீர்ப்பிள்ளையார் திருக்கோயில், காரைமேடு.



2004 நவம்பர் 17]

31. அருள்மிகு கோதண்டராமர் திருக்கோயில், நல்லூர்.

32. அருள்மிகு மாதவப்பெருமாள் திருக்கோயில், கீழசாலை.

33. அருள்மிகு மாரியம்மன் திருக்கோயில், புதுத்துறை.

34. அருள்மிகு நைனியப்ப அய்யனார் திருக்கோயில், மாணிக்கவாசல்.

35. அருள்மிகு பாலமுருகன் திருக்கோயில், செங்கமேடு.

36. அருள்மிகு விஜயகோதண்டராமர் திருக்கோயில், தீவுக்கோட்டை.

37. அருள்மிகு காளியம்மன் திருக்கோயில், திருமயிலாடி.

38. அருள்மிகு பிள்ளையார் பிடாரி வகையறா திருக்கோயில்கள், திருமயிலாடி.

39. அருள்மிகு வேதபுரீஸ்வரர் திருக்கோயில், கூத்தியாம்பேட்டை.

40. அருள்மிகு கைலாசநாதசுவாமி திருக்கோயில், சோதியாகுடி.

41. அருள்மிகு சுந்தரமூர்த்திசாமி திருக்கோயில், கடவாசல்.

42. அருள்மிகு மன்னாதசுவாமி திருக்கோயில், மண்ணன்கோவில்.

43. அருள்மிகு கன்னிகாபரமேஸ்வரி திருக்கோயில், மடப்புரம்.

44. அருள்மிகு வீரகாளியம்மன் திருக்கோயில், நெருநாதபுரம்.

45. அருள்மிகு வேணுகோபாலசுவாமி திருக்கோயில், ஆணைக்காரன்சத்திரம்.

46. அருள்மிகு வரதராஜபெருமாள் திருக்கோயில், கூத்தியாம்பேட்டை.

47. அருள்மிகு சாலக்கரை சந்தானமுத்துமாரியம்மன் திருக்கோயில், சட்டநாதபுரம்.

48. அருள்மிகு மாரியம்மன் திருக்கோயில், கடவாசல்.

49. அருள்மிகு அய்யனார் திருக்கோயில், எடமணல்.

[2004 நவம்பர் 17

50. அருள்மிகு இராமசாமி திருக்கோயில், ஏகோஜிமகாராசபுரம்.

51. அருள்மிகு விநாயகர் திருக்கோயில், ஆலாலசுந்தரம்.

52. அருள்மிகு விசுவநாதசுவாமி திருக்கோயில், தென்பாதி.

53. அருள்மிகு கன்னிகாபரமேஸ்வரி திருக்கோயில், செம்மங்குடி.

54. அருள்மிகு விசுவநாதசுவாமி திருக்கோயில், வரவுக்குடி.

55. அருள்மிகு மாரியம்மன் திருக்கோயில், மாதானம்.

56. அருள்மிகு கன்னிகாபரமேஸ்வரியம்மன் திருக்கோயில், இராதாநல்லூர்.

57. அருள்மிகு அய்யனார் மற்றும் வீரனார் திருக்கோயில், நெம்மேலி.

58. அருள்மிகு ஆலடி ஆலயமாரியம்மன் திருக்கோயில், திருநகரி.

59. அருள்மிகு பொய்யாநாதவிநாயகர் திருக்கோயில், திருநகரி.

60. அருள்மிகு ராஜகோபாலசுவாமி திருக்கோயில், காவாளம்பாடி.

61. அருள்மிகு ஐராவதீஸ்வரர் மற்றும் ஆதிகேசவப்பெருமாள் திருக்கோயில், பெருந்தோட்டம்.

62. அருள்மிகு கரிகாமேஸ்வரர் திருக்கோயில், தென்னம்பட்டினம்.

63. அருள்மிகு கைலாசநாதர் திருக்கோயில், பெருந்தோட்டம்.

6—

## திருக்கோயில் தேரோட்டம்

**வினா எண் 49797—திரு. கோவை தங்கம்:** மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

கோயம்புத்தூரில் மிகச் சிறப்பாக நடைபெறும் கோனியம்மன் திருக்கோயில் தேரோட்டம் நிகழ்ச்சிக்கு கூடுதலாக மகளிர் காவலர்கள் நியமிக்க அரசு முன்வருமா?



2004 நவம்பர் 17]

**விடை—**

**மாண்புமிகு திரு. பி.சி. ராமசாமி, இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர்:**

கோவை மாவட்டம் மற்றும் வட்டம், நகர் பெரிய கடைவீதி அருள்மிகு கோனியம்மன் திருக்கோயிலில் நடைபெறும் தேரோட்டம் போன்ற முக்கிய திருவிழாக்காலங்களில் பாதுகாப்பிற்கு ஆண் காவலர்களுடன் அதிகமாக பெண் காவலர்களும் ஈடுபடுத்தப்படுகின்றனர். 3-3-2004 அன்று நடைபெற்ற தேரோட்ட நிகழ்ச்சியின்போதும் கூடுதலாக மகளிர் காவலர்களால் பாதுகாப்பு கொடுக்கப்பட்டது.

7—

## திருக்கோயிலில் கேமிரா வசதி

**வினா எண் 49803—திரு. கோவை தங்கம்:** மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

கோவையில் உள்ள மருதமலை திருக்கோயிலில் விசேஷ காலங்களில் கேமிரா, தொலைக்காட்சியை அமைத்து கண்காணிக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. பி.சி. ராமசாமி, இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர்:**

கோவை மாவட்டம், மருதமலை திருக்கோயிலில் தற்போது சுமார் ரூபாய் இரண்டு கோடி செலவில் இராஜகோபுர திருப்பணியும் இராஜகோபுரத்திற்குச் செல்லும் படிக்கட்டுகளில் அலுவலகம் கட்டுவதும் நடைபெற்று வருவதால், மேற்படி திருப்பணி முடிவடையும்போது கேமிரா வசதி செய்ய நடவடிக்கை எடுக்கப்படும்.

8—

## திருக்கோயிலுக்கு அடிப்படை வசதி

**வினா எண் 50666—திரு. கே. ஆறுமுகம்:** மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

செங்கல்பட்டு தொகுதி, மணப்பாக்கம் கன்னியம்மன் திருக்கோயிலுக்கு அடிப்படை வசதிகள் செய்ய அரசு முன்வருமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. பி.சி. ராமசாமி, இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர்:**

காஞ்சிபுரம் மாவட்டம், செங்கல்பட்டு வட்டம், மணப்பாக்கம் கிராமம், அருள்மிகு கன்னியம்மன் திருக்கோயில் இந்து சமய அறநிலைய ஆட்சித் துறை ஆளுகையின்கீழ் உள்ள பட்டியலைச் சேராத திருக்கோயிலாகும். இத்திருக்கோயிலுக்கு திரு. பிரவாளவண்ண நாயக்கர் குடும்பத்தைச் சேர்ந்தவர்கள் பரம்பரை அறங்காவலர்களாக இருந்து வருகிறார்கள். திருக்கோயிலில் தற்போது அறங்காவலராக திரு. பி.ரகுபதி நாயக்கர் நிர்வகித்து வருகிறார். மேற்படி அறங்காவலர் மீது 1981 ஆம் ஆண்டு புகார் மனு வரப்பெற்றதின் பேரில் தற்காலிக பணிநீக்கம் செய்ததில் அன்னார் இதனை எதிர்த்து, சென்னை உயர் நீதிமன்றத்தில் நீதிப்பேராணை மனு மற்றும் நீதிப்பேராணை மேல்முறையீட்டு மனுக்களில் வழக்குகள் தொடர்ந்துள்ளார். மேற்காணும் திருக்கோயிலுக்கு அடிப்படை வசதிகள் செய்துதர அறநிலையத் துறையோ அல்லது அரசோ முன்வந்தாலும், வழக்காடுதல், அதிகார துஷ்பிரயோகம் மற்றும் பொது நலம் இல்லாத தற்போதைய நிர்வாகி திரு. பி. ரகுபதி நாயக்கர் என்பவரின் ஒத்துழைப்பு இன்மையால், மேற்படி திருக்கோயிலுக்கு உடனடியாக அடிப்படை வசதிகள் ஏதும் செய்ய இயலாத நிலை ஏற்பட்டுள்ளது. எனினும் மேற்படி வழக்குகள் முடிந்தவுடன் செயல் அலுவலர் நியமனம் செய்து, இக்கோயில் நிர்வாகத்தினைச் சீரமைக்கவும், அடிப்படை வசதிகள் செய்து கொடுக்கவும் தேவையான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும்.



9—

## கோயில் குளம் தூர் வாருதல்

**வினா எண் 51271—திரு. நா. சந்திரமோகன்:** மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சீர்காழி தொகுதி, காரைமேடு ஊராட்சி, தென்னலக்குடியிலுள்ள காளியம்மன் கோயில் குளத்தை தூர் வாரி, சுத்தப்படுத்த அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. பி.சி. ராமசாமி, இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) நாகப்பட்டினம் மாவட்டம், சீர்காழி வட்டம், காரைமேடு, தென்னலக்குடி, அருள்மிகு காளியம்மன் திருக்கோயில், இந்து சமய அறநிலைய ஆட்சித் துறை கட்டுப்பாட்டில் இல்லாத ஒன்றாகும். இதன் நிர்வாகம் கிராம பொதுமக்கள் சார்பாக பார்க்கப்பட்டு வருகிறது. இத்திருக்கோயிலுக்கு வருமானம் ஏதுமில்லை. கிராம மக்கள் வரி வைத்து சிறிய தொகை மூலம் நிர்வாகம் நடைபெற்று வருகிறது. இத்திருக்கோயிலுக்கு பின்புறம் 50x25 அடி அளவிலான சிறிய குளம் உள்ளது. இருபுறம் மதிற்சுவரும், ஒரு புறத்தில் சிறிய அளவிலான படிக்கட்டும் அமைக்கப்பட்டுள்ளது. இக்குளம் ஆழமாகவும் தற்போது நீர் நிரம்பியும் உள்ளது. எனவே, இதனை தற்போது தூர் வார வேண்டிய அவசியமில்லை.

10—

## திருக்குளத்தைத் தூர்வாருதல்

**வினா எண் 51272—திரு. நா. சந்திரமோகன்:** மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

[2004 நவம்பர் 17

(அ) சீர்காழி தொகுதி, சீர்காழி ஒன்றியம், திருப்பன்கூர் விக்னேஸ்வரர் திருக்குளத்தை தூர் வாரி, சுத்தப்படுத்த அரசு முன்வருமா ?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. பி.சி. ராமசாமி, இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) நாகப்பட்டினம் மாவட்டம், சீர்காழி தொகுதி, சீர்காழி ஒன்றியம், திருப்பன்கூரில் வினாவில் குறிப்பிடப்படும் விக்னேஸ்வரர் திருக்கோயிலோ அல்லது குளமோ இல்லை.

**11—**

## கோயிலுக்கு அடிப்படை வசதிகள்

**வினா எண் 53072—திரு. டி.பி.எம். மைதீன்கான்:** மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பாளையங்கோட்டை தொகுதி, கிருஷ்ணாபுரம், அருள்மிகு வெங்கடேசப்பெருமாள் கோயிலுக்கு வருகை தரும் பக்தர்களின் நலன் கருதி அடிப்படை வசதிகள் செய்து தரப்படுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. பி.சி. ராமசாமி, இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) திருநெல்வேலி மாவட்டம், பாளையங்கோட்டை வட்டம், கிருஷ்ணாபுரம், அருள்மிகு வெங்கடாசலபதி திருக்கோயில், திருச்செந்தூர், அருள்மிகு சுப்பிரமணியசுவாமி திருக்கோயிலுடன் இணைந்த உபகோயில் ஆகும். இத்திருக்கோயில் பக்தர்கள் அறியும் வண்ணம் திருநெல்வேலி-திருச்செந்தூர் நெடுஞ்சாலையில் கிருஷ்ணாபுரம் கிராமத்திற்கு செல்லும் ஆரம்ப இடத்தில் உபயதாரர்



2004 நவம்பர் 17]

மூலம் நுழைவு வாயில் கட்டப்பட்டும், கிராம ஆரம்ப எல்லையிலிருந்து திருக்கோயில் வரையிலும், மற்றும் பிரகாரம் மற்றும் உள்ள சன்னதிகளிலும் போதிய அளவு மின் வசதியும் செய்து தரப்பட்டுள்ளது. திருக்கோயில் நுழைவு வாயிலிலிருந்து திருக்கோயிலுக்குச் செல்வதற்கு வசதியாக சாலை வசதி செய்து தரப்பட்டுள்ளது. பக்தர்களின் வசதிக்காக திருக்கோயிலுக்குள் ஆழ்குழாய்க் கிணறு அமைத்து, அதன் மூலம் தண்ணீர் வசதி செய்து தரப்பட்டுள்ளது. திருக்கோயிலின் பாதுகாப்பைக் கருதி ரூ.6,00,000/— மதிப்பீட்டில் சுற்றுச்சுவர் கட்டப்பட்டுள்ளது. வாகனங்களை நிறுத்துவதற்கு இடம் ஒதுக்கீடு செய்து தரப்பட்டுள்ளது. மேற்படி கிராமம் மற்றும் சுற்று கிராமத்திலுள்ள பொதுமக்கள் திருமணம் நடத்துவதற்கும் திருக்கோயிலில் வசதிகள் செய்து தரப்பட்டுள்ளன. பக்தர்கள் சமையல் செய்து உணவருந்த ஏதுவாக சமையல் கூடமும் அமைத்துக் கொடுக்கப்பட்டுள்ளது. திருக்கோயில் சிறப்பு மற்றும் சிற்பங்கள் குறித்து வருகை தரும் பக்தர்களுக்கு விவரங்கள் தெரிவிக்க திருக்கோயில் பணியாளர்களைக் கொண்டு ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன. பக்தர்கள் வசதிக்காக திருக்கோயில் வரலாறு புத்தகமும் வெளியிடப்பட்டுள்ளது. திருக்கோயில் சன்னதிகள் மூடப்பட்டிருந்தாலும் அங்குள்ள சிற்பங்களைப் பார்வையிட ஏதுவாக பகல் முழுவதும் கோயில் திறந்து வைக்கப்பட்டு அதற்கென வசதிகள் செய்து தரப்படுகின்றன. எனவே, திருக்கோயிலுக்கு தரிசனம் செய்ய வரும் பக்தர்களின் நலன் கருதி தேவையான அடிப்படை வசதிகள் நல்ல முறையில் ஏற்கெனவே செய்து கொடுக்கப்பட்டுள்ளன.

**12—**

## ஆலயத்தைப் புதுப்பித்தல்

**வினா எண் 56676—திரு. நா. சந்திரமோகன்:** மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சீர்காழி தொகுதி, திருவெண்காடு ஊராட்சியிலுள்ள கன்னிகாபரமேஸ்வரி ஆலயத்தைப் புதிதாகக் கட்டித்தர அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. பி.சி. ராமசாமி, இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) நாகப்பட்டினம் மாவட்டம், சீர்காழி வட்டம், திருவெண்காடு ஊராட்சி, அம்பேத்கர் நகர், அருள்மிகு கன்னிகாபரமேஸ்வரி கோயில் (என்கிற) கன்னியம்மன் கோயில் இந்து சமய அறநிலைய ஆட்சித் துறை நிர்வாகத்திற்குட்படாத திருக்கோயிலாகும். இத்திருக்கோயில் ஆதிதிராவிடர் வாழும் பகுதியில் அமைந்துள்ளது. மேற்படி திருக்கோயிலைப் புதிதாகக் கட்டும் திட்டம் ஏதும் அரசிடம் இல்லை. இருப்பினும், மேற்படி திருக்கோயிலுக்கு, மேதகு ஆளுநரின் சட்டமன்றப் பேரவை உரையின் அறிவிப்பின்படி, இத்திருக்கோயில் திருப்பணிகளை மேற்கொள்ள ரூ.25,000/— அனுமதிக்கப்பட்டுள்ளது. அதன்படி திருப்பணிக் குழு அமைத்தும் திருப்பணி வேலைகளுக்கு மதிப்பீடுகள் அங்கீகாரம் பெற்றும் திருப்பணி வேலைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

**13—**

## கோயிலைப் புதுப்பித்தல்

**வினா எண் 56680—திரு. நா. சந்திரமோகன்:** மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சீர்காழி தொகுதி, மங்கைமடம் ஊராட்சியிலுள்ள பொன்னியம்மன் கோயிலைப் புதிதாகக் கட்ட அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. பி.சி. ராமசாமி, இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) நாகப்பட்டினம் மாவட்டம், சீர்காழி வட்டம், மங்கைமடம் ஊராட்சியிலுள்ள அருள்மிகு பொன்னியம்மன் திருக்கோயில், இந்து சமய அறநிலைய ஆட்சித் துறை நிர்வாகத்திற்குட்படாத திருக்கோயிலாகும். இத்திருக்கோயில் ஆதிதிராவிடர் வாழும் பகுதியில் அமைந்துள்ளது. மேற்படி திருக்கோயிலைப் புதிதாகக் கட்டும் திட்டம் ஏதும் அரசிடம் இல்லை. இருப்பினும், மேற்படி திருக்கோயிலுக்கு, மேதகு ஆளுநரின் சட்டமன்றப் பேரவை உரையின் அறிவிப்பின்படி, இத்திருக்கோயில் திருப்பணிகளை மேற்கொள்ள ரூ.25,000/— அனுமதிக்கப்பட்டுள்ளது. அதன்படி திருப்பணிக் குழு அமைத்தும், திருப்பணி வேலைகளுக்கு மதிப்பீடுகள் அங்கீகாரம் பெற்றும் திருப்பணி வேலைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.



**14—**

## கோயிலைப் புதிதாகக் கட்டுதல்

**வினா எண் 56685—திரு. நா. சந்திரமோகன்:** மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சீர்காழி தொகுதி, அன்னப்பன்பேட்டை ஊராட்சியிலுள்ள பொன்காளியம்மன் கோயிலைப் புதிதாகக் கட்டித்தர அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. பி.சி. ராமசாமி, இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர்:**

(அ) நாகப்பட்டினம் மாவட்டம், சீர்காழி தொகுதி, அன்னப்பன்பேட்டை ஊராட்சியிலுள்ள அருள்மிகு பொன்காளியம்மன் திருக்கோயில், இந்து சமய அறநிலைய ஆட்சித் துறை நிர்வாகத்திற்குட்படாத திருக்கோயிலாகும். இத்திருக்கோயில் ஆதிதிராவிடர் வாழும் பகுதியில் அமைந்துள்ளது. இத்திருக்கோயிலுக்கு நிரந்தரமாக கட்டடம் கட்டிட அப்பகுதி மக்களால் விண்ணப்பிக்கப்பட்டு உதவி ஆணையரால் நிதியுதவி வழங்க பரிந்துரைக்கப்பட்டுள்ளது.

(ஆ) நடப்பு நிதியாண்டில் இத்திருக்கோயிலை சேர்க்க போதிய நிதி ஒதுக்கீடு இல்லை. எனவே, இத்திருக்கோயிலுக்கு நிதி வழங்க அடுத்த ஆண்டு பட்டியலில் சேர்த்து பரிசீலிக்கப்படும்.

15—

## கோயிலைப் புதிதாகக் கட்டுதல்

**வினா எண் 56686—திரு. நா. சந்திரமோகன்:** மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சீர்காழி தொகுதி, நெப்பத்தூர் ஊராட்சி, முல்லையாம்பட்டினம் கன்னியம்மன் கோயிலைப் புதிதாகக் கட்டித்தர அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. பி.சி. ராமசாமி, இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) நாகப்பட்டினம் மாவட்டம், சீர்காழி வட்டம், நெப்பத்தூர் ஊராட்சி, முல்லையாம்பட்டினம் அருள்மிகு கன்னிகாபரமேஸ்வரியம்மன் கோயில், இந்து சமய அறநிலைய ஆட்சித் துறை நிர்வாகத்திற்குட்படாத திருக்கோயிலாகும். இத்திருக்கோயில் ஆதிதிராவிடர் வாழும் பகுதியில் அமைந்துள்ளது. மேற்படி திருக்கோயிலைப் புதிதாகக் கட்டும் திட்டம் ஏதும் அரசிடம் இல்லை. இருப்பினும், மேற்படி திருக்கோயிலுக்கு மேதகு ஆளுநரின் சட்டமன்றப் பேரவை உரையின் அறிவிப்பின்படி, இத்திருக்கோயில் திருப்பணிகளை மேற்கொள்ள ரூ.25,000/- அனுமதிக்கப்பட்டுள்ளது. அதன்படி திருப்பணிக் குழு அமைத்தும், திருப்பணி வேலைகளுக்கு மதிப்பீடுகள் அங்கீகாரம் பெற்றும் திருப்பணி வேலைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

16—

## திருக்கோயிலுக்கு நிதியுதவி

**வினா எண் 56693—திரு. நா. சந்திரமோகன்:** மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—



(அ) சீர்காழி ஒன்றியம், தில்லைநத்தம், ஆதிதிராவிட தெருவில் புதியதாகக் கட்டப்படவுள்ள கன்னியம்மன் கோவிலுக்கு நிதியுதவி அளிக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. பி.சி. ராமசாமி, இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) சீர்காழி ஒன்றியம், தில்லைநத்தம், ஆதிதிராவிட தெருவில் புதியதாகக் கட்டப்படவுள்ள கன்னியம்மன் கோவிலுக்கு நிதியுதவி அளிக்க இந்து சமய அறநிலைய ஆட்சித் துறையின் சட்ட விதிகளில் இடமில்லை.

17—

## கண் பரிசோதனைத் திட்டம்

**வினா எண் 16546—திரு. பி.எச். பால் மனோஜ் பாண்டியன்:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சேரன்மகாதேவி தொகுதி, மேலச்செவல் பேரூராட்சியில் உள்ள அனைத்துப் பள்ளிக் குழந்தைகளுக்கும் கண் பரிசோதனைத் திட்டத்தின்கீழ் பரிசோதனை செய்ய அரசு நடவடிக்கை எடுக்குமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. ந. தளவாய் சுந்தரம், மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) மேலச்செவல் பேரூராட்சியில் உள்ள அனைத்துப் பள்ளிகளிலும் கண் பரிசோதனைத் திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகிறது.

[2004 நவம்பர் 17

18—

## மதில் சுவர் கட்டுதல்

**வினா எண் 38713—திரு. ந. கணபதி:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வானூர் தொகுதிக்குட்பட்ட வானூர் அரசு மருத்துவமனைக்கு மதில் சுவர் கட்ட அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. ந. தளவாய் சுந்தரம், மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) வானூர் தொகுதிக்குட்பட்ட வானூர் அரசு மருத்துவமனைக்கு சுற்றுச்சுவர் பழுது பார்க்க ரூ.3,50,000/— தற்போது ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

19—

## அவசர கால ஊர்தி வழங்குதல்

**வினா எண் 54504—திருமதி மல்லிகா சின்னசாமி:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) முசிறி தொகுதி, புலிவலத்தில் அமைந்துள்ள அரசு ஆரம்ப சுகாதார நிலையத்துக்கு அவசர ஊர்தி புதிதாக வழங்கும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. ந. தளவாய் சுந்தரம், மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) திருச்சிராப்பள்ளி மாவட்டம், முசிறி வட்டத்தில் உள்ள புலிவலத்தில், கூடுதல் ஆரம்ப சுகாதார நிலையம் இயங்கி வருகின்றது. அவசர கால ஊர்தி, முதன்மை ஆரம்ப சுகாதார



2004 நவம்பர் 17]

நிலையத்திற்கு மட்டுமே வழங்கப்படுகிறது. எனினும், அவசர காலத் தேவையின்போது அருகில் உள்ள முதன்மை ஆரம்ப சுகாதார நிலையத்தில் உள்ள அவசர கால ஊர்தி பயன்படுத்தப்பட்டு வருகிறது.

20—

## தாட்கோ வீடுகள்

**வினா எண் 10503—திரு. கோ. இரவிராஜ்:** மாண்புமிகு ஆதிதிராவிடர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருவள்ளூர் மாவட்டம், திருத்தணி வட்டம், கீழக்கசரவாய்ப்பேட்டை, ஆதிதிராவிடர் அருந்ததியர் காலனி தாட்கோ வீடுகள் பழுதடைந்த நிலையிலுள்ளது அரசின் கவனத்திற்கு வந்துள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது வீடுகள் பழுதுபார்க்கப்படும்?

**விடை—**

**மாண்புமிகு திரு. சொ. கருப்பசாமி, ஆதிதிராவிடர் நலத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) இலவச தொகுப்பு வீடுகள் திட்டத்தின்கீழ் வீடுகள் கட்டப்பட்டு பயனாளிகளுக்கு வழங்கிய பின் பிற்காலங்களில் ஏற்படும் பழுதுகளைச் சரி செய்ய திட்டத்தில் வழிவகை ஏதும் செய்யப்படவில்லை.

21—

## வீட்டுமனைப் பட்டா வழங்குதல்

**வினா எண் 31574—திரு. கோவை தங்கம்:** மாண்புமிகு ஆதிதிராவிடர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வால்பாறை தொகுதியில் உள்ள தென்சங்கம் பாளையம் ஊராட்சியில் குடியிருக்கும் ஆதிதிராவிட மக்களுக்கு வீட்டுமனைப் பட்டா வழங்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. சொ. கருப்பசாமி, ஆதிதிராவிடர் நலத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) பொள்ளாச்சி வட்டம், தென்சங்கம் பாளையம் கிராமம் க.ச.74/ச2, ச3 மற்றும் ச4 காலையில் 4.67 ஏக்கர் நிலம் கையகப்படுத்தப்பட்டு 133 பயனாளிகளுக்கு பட்டா ஏற்கெனவே வழங்கப்பட்டுள்ளன.

**22—**

## வீட்டுமனைப் பட்டா

**வினா எண் 31575—திரு. கோவை தங்கம்:** மாண்புமிகு ஆதிதிராவிடர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வால்பாறை தொகுதியில் உள்ள மஞ்சநாய்க்கனூர் ஊராட்சியில் குடியிருக்கும் ஆதிதிராவிட மக்களுக்கு வீட்டுமனைப் பட்டா வழங்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. சொ. கருப்பசாமி, ஆதிதிராவிடர் நலத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) வால்பாறை சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட பொள்ளாச்சி வட்டத்தில் அடங்கிய மஞ்சநாய்க்கனூர் ஊராட்சியில் வசிக்கும் ஆதிதிராவிட மக்களுக்கு வீட்டுமனைப் பட்டா வழங்க, ஜல்லிப்பட்டி கிராமம் க.ச.194 நெ. காலையில் 0.72.0 எக்டேர் மற்றும் க.ச.195/2சி/2பி நெ. காலையில் 0.25.0 எக்டேர் நிலம் ஆக மொத்தம் 0.97.0 எக்டேர் நிலம் ஆர்ஜிதம் செய்து 58 ஆதிதிராவிட மக்களுக்கு வீட்டுமனைப் பட்டாக்கள் ஏற்கெனவே வழங்கப்பட்டுள்ளன.



**23—**

## பட்டா வழங்குதல்

**வினா எண் 34381—திரு. சி. சண்முகவேலு:** மாண்புமிகு ஆதிதிராவிடர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) உடுமலைப்பேட்டை, சாளையூர் கிராம ஆதிதிராவிட மக்களுக்கு பட்டா கிடைத்திட அரசு நடவடிக்கை மேற்கொள்ளுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. சொ. கருப்பசாமி, ஆதிதிராவிடர் நலத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) உடுமலைப்பேட்டை வட்டம், சாளையூர் நத்தம் புறம்போக்கில் வாழ்ந்து வந்த ஆதிதிராவிட மக்களுக்கு சின்னப்பட்டி கிராமம் க.ச.53/1பி காலையில் 1.11.5 எக்டேர் நிலம் கையகப்படுத்தப்பட்டு 100 குடும்பங்களுக்கும் மற்றும் க.ச.53/1பி1 காலையில் 0.40.5 எக்டேர் நிலம் கையகப்படுத்தப்பட்டு 39 நபர்களுக்கும் வீட்டுமனைப் பட்டா வழங்கப்பட்டு வீடுகள் கட்டி குடியிருந்து வருகின்றனர்.

**24—**

## இலவச வீட்டுமனைப் பட்டா

**வினா எண் 41850—திரு. சி. சண்முகவேலு:** மாண்புமிகு ஆதிதிராவிடர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) உடுமலைப்பேட்டை தொகுதி, புங்கமுத்தூர், காட்டூர், எரிசனம்பட்டி ஆகிய கிராம ஆதிதிராவிட மக்களுக்கு இலவச வீட்டுமனைப் பட்டா வழங்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், அரசின் நடவடிக்கை யாது?

விடை—

**மாண்புமிகு திரு. சொ. கருப்பசாமி, ஆதிதிராவிடர் நலத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) உடுமலைப்பேட்டை தொகுதி, புங்கமுத்தூர் கிராம ஆதிதிராவிட மக்களுக்கு வீட்டுமனைப் பட்டா வழங்க மேற்படி கிராமம் க.ச.101/1பி காலையில் 0.98.0 எக்டேர் நிலம் கையகப்படுத்தப்பட்டு வீட்டுமனைப் பட்டா வழங்கப்பட்டுள்ளது. அதேபோல் எரிசனம்பட்டி ஆதிதிராவிட மக்களுக்கு வீட்டுமனைப் பட்டா வழங்க கொடிங்கியம் கிராமம் க.ச.198/எ2ஏ நெ. காலையில் 0.95.0 எக்டேர் நிலம் கையகப்படுத்தப்பட்டு அக்கிராமத்தைச் சேர்ந்த ஆதிதிராவிட மக்களுக்கு வீட்டுமனைப் பட்டா வழங்கப்பட்டுள்ளது. கரட்டூர் கிராம ஆதிதிராவிட மக்களுக்கு வீட்டுமனைப் பட்டா வழங்க புங்கமுத்தூர் கிராமத்தில் நில எடுப்பு செய்ய தகுதியான நிலம் தேர்வு செய்ய நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

25—

## பழங்குடியினர் நலன்

**வினா எண் 53065—திரு. கா. கந்தசாமி:** மாண்புமிகு ஆதிதிராவிடர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

நீலகிரி மாவட்டம், குன்னூர் — கோத்தகிரி ஒன்றியங்களில் ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினருக்கு ஈமச்சடங்கு உதவித் தொகைகளை மீண்டும் கொடுக்க அரசு முன்வருமா?

விடை—

**மாண்புமிகு திரு. சொ. கருப்பசாமி, ஆதிதிராவிடர் நலத் துறை அமைச்சர்:**

ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் மற்றும் மதம் மாறிய கிறித்துவ ஆதிதிராவிடர்கள் இறந்தால், இறந்தவரின் ஈமக்கிரியைக்காக மானியம் ரூ.500/- வழங்கும் திட்டம் தொடர்ந்து செயல்படுத்தப்பட்டு வருவதால் இந்த உதவித் தொகையை மீண்டும் கொடுக்கும் கேள்விக்கு இடமில்லை. இத்திட்டத்திற்காக 2003-2004 ஆம் ஆண்டிற்கான நிதி ஒதுக்கீடு ரூ.50 இலட்சம் ஆகும். இத்திட்டத்திற்கு வரவு-செலவுத்



திட்டத்தில் ஆண்டுதோறும் ஒதுக்கப்படும் தொகை ஊரக வளர்ச்சி இயக்குநர், பேரூராட்சிகள் இயக்குநர், நகராட்சிகளின் நிருவாக ஆணையர் மற்றும் மாநகராட்சிகளின் ஆணையாளர் ஆகியோருக்குப் பிரித்தளிக்கப்பட்டு திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகிறது.

26—

## பேருந்தைக் கூடுதலாக இயக்குதல்

**வினா எண் 38772—திரு. ஷா. சந்தானம்:** மாண்புமிகு போக்குவரத்து மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

உசிலம்பட்டி தொகுதி, மதுரை பெரியார் நிலையத்திலிருந்து அம்பட்டையம் செல்லும் பேருந்தை மேலும் கூடுதலாக இயக்க அரசு முன்வருமா?

விடை—

**மாண்புமிகு திரு. இரா. விசுவநாதன், போக்குவரத்து மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்:**

மதுரை பெரியார் பேருந்து நிலையத்திலிருந்து அம்பட்டையன்பட்டிக்கு தற்போது 12 தனி நடை பேருந்துகள் இயக்கப்பட்டு வருகின்றன. இந்த நடைகளின் பயணிகள் அடர்வு சுமார் 52 விழுக்காடுதான் உள்ளது. கூடுதல் பேருந்து இயக்கும் அளவிற்கு போதுமான பயணிகள் அடர்வு இல்லை. எனவே, இத்தடத்தில் கூடுதல் நடைகள் இயக்கும் திட்டம் ஏதும் அரசிடம் இல்லை.

27—

## இரண்டு சக்கர வாகனங்களுக்குப் பதிவு

**வினா எண் 44191—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு போக்குவரத்து மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தமிழ்நாட்டில் புதிய இரண்டு சக்கர வாகனங்களுக்குப் பதிவு செய்யப்படும் பதிவு எண், பதிவு செய்பவர்களின் ஒப்புதலோடு வேண்டியவர்களுக்கு வேண்டிய எண் கொடுக்க அரசு பரிசீலிக்குமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. இரா. விசுவநாதன், போக்குவரத்து மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்:**

மோட்டார் வாகனச் சட்டப்படி வரிசையாக மட்டுமே பதிவு எண்கள் வழங்க முடியும். அதே வரிசையில் (From the current series) 1000 எண்களுக்குள் தேர்ந்தெடுக்கப்படும் முன் பதிவு எண்களுக்கு 50 சி.சி.களுக்கு மிகாமல் உள்ள மோட்டார் சைக்கிள்களுக்கு ரூ.1000/-மும், 50 சி.சி.களுக்கு மேற்பட்ட மோட்டார் சைக்கிள் மற்றும் மூன்று சக்கர வாகனங்களுக்கு ரூ.2,000/-மும் கட்டணம் செலுத்தினால் வட்டாரப் போக்குவரத்து அலுவலரால் வாகன உரிமையாளர்கள் விரும்பும் எண் வழங்கப்படும். 1000 எண்களுக்கு அப்பால் உள்ள எண்களையோ அல்லது அடுத்த வரிசையிலோ எண்கள் கோரினால், அவை அரசால் பரிசீலிக்கப்பட்டு ஆணை வெளியிடப்படும். இதற்கான கட்டணம் ரூ.15,000/-.

**28—**

## கூடுதலாகப் பேருந்துகள் இயக்குதல்

**வினா எண் 48147—திரு. டி.பி. பொன்னம்பலம்:** மாண்புமிகு போக்குவரத்து மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சமயநல்லூர் தொகுதி, மதுரை கிழக்கு ஊராட்சி ஒன்றியம், இளமனூர் ஊராட்சி, கோழிக்குடி கிராமத்திற்கு கூடுதலாகப் பேருந்துகள் இயக்கப்படுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. இரா. விசுவநாதன், போக்குவரத்து மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) மதுரை பெரியார் பேருந்து நிலையத்திலிருந்து 16.5 கிலோ மீட்டர் தொலைவில் உள்ள இளமனூரின் ஒரு பகுதியான கோழிக்குடிக்கு பெரியார் பேருந்து நிலையம் - இளமனூர் என ஒரு தனிப் பேருந்தின் மூலம் 16 தனி நடைகள் பேருந்து இயக்கப்பட்டு





வருகிறது. மேலும் அதே வழித்தடத்தில் கோழிக்குடி/இளமனூருக்கு 1 கிலோ மீட்டருக்கு முன்பாக உள்ள சக்கிமங்கலம் பிரிவு நிறுத்தம் வழியாக சக்கிமங்கலம் மற்றும் கார்சேரி கிராமங்களுக்கு இயக்கப்படும் 38 தனி நடைகள் பேருந்து வசதியினையும் கோழிக்குடி/இளமனூர் கிராம மக்கள் பயன்படுத்தி வருகிறார்கள். கோழிக்குடி/இளமனூருக்கு இயக்கப்பட்டு வரும் பேருந்தில் பயணிகள் அடர்வு தற்போது ஓரளவே உள்ளதால் தற்போதுள்ள பேருந்து வசதிகள் போதுமானது என்று கருதப்படுகிறது.

**29—**

## பேருந்து நிறுத்தச் செய்தல்

**வினா எண் 49832—திரு. டி.பி. பொன்னம்பலம்:** மாண்புமிகு போக்குவரத்து மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மதுரையிலிருந்து சிவகங்கை செல்லும் அரசு பேருந்து வரிச்சியூர் கிராமத்தில் நின்று செல்ல நடவடிக்கை எடுக்கப்படுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. இரா. விசுவநாதன், போக்குவரத்து மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) மதுரை—சிவகங்கை பிரதானச் சாலையில் வரிச்சியூர் கிராமம் உள்ளது. இது கட்டண நிறுத்த நிலையாகும். வரிச்சியூர் வழியாக தமிழ்நாடு அரசுப் போக்குவரத்துக் கழகம் (மதுரை) லிமிடெட், மதுரை மூன்று பேருந்துகளை இயக்கி வருகிறது. இப்பேருந்துகள் வரிச்சியூர் நின்று பயணிகளை ஏற்றி இறக்கிச் செல்கின்றது. தமிழ்நாடு அரசுப் போக்குவரத்துக் கழகம் (கும்பகோணம்) லிமிடெட், காரைக்குடி இடை நில்லா பேருந்துகளைத் தவிர நகர மற்றும் புறநகர் பேருந்துகளுக்கு நிறுத்த நிலை அளிக்கப்பட்டு வரிச்சியூரில் நின்று பயணிகளை ஏற்றி இறக்கிச் செல்கின்றது.

[2004 நவம்பர் 17

30—

## பேருந்து வசதி

**வினா எண் 53810—திரு. கோவை தங்கம்:** மாண்புமிகு போக்குவரத்து மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கோயம்புத்தூர் மாவட்டம், வால்பாறை தொகுதி, உடுமலை, ஆனைமலை பேருந்து மீண்டும் மஞ்சநாயக்கனூர் வழியாக செல்ல அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. இரா. விசுவநாதன், போக்குவரத்து மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) கோயம்புத்தூர் மாவட்டம், வால்பாறை தொகுதி உடுமலை—ஆனைமலை வழித்தடம் பேருந்து ஒன்று ஏற்கெனவே மஞ்சநாயக்கனூர் வழியாக இரண்டு நடைகள் இயக்கப்பட்டு வருகின்றது. இப்பேருந்தில் மிகக் குறைந்த அளவிலேயே உடுமலைக்கும், ஆனைமலைக்கும் நேரடிப் பயணிகள் பயணிக்கின்றனர் என்பதாலும், உடுமலை—ஆனைமலை புறநகர் பேருந்து மஞ்சநாயக்கனூர் வழியாக இயக்கப்படும்பொழுது அது ஒரு சுற்று வழிப்பாதையாக அமைவதால் நேரடிப் பயணிகள் பாதிப்பு அடைவதுடன் வழித்தட நீளம் கூடுவதால் அதிகக் கட்டணம் செலுத்த வேண்டிவரும். பொள்ளாச்சியிலிருந்து மஞ்சநாயக்கனூர் வழியாக கோயம்புத்தூர் தமிழ்நாடு அரசுப் போக்குவரத்துக் கழகத்தைச் சார்ந்த இரண்டு நகர வழித்தடங்கள் மூலம் தினசரி 20 நடைகள் இயக்கப்படுகின்றன. இவற்றின் மூலம் உடுமலை—ஆனைமலை பிரதான சாலையை அடைந்துவிட்டால் உடுமலை மற்றும் ஆனைமலைக்குப் போதுமான பேருந்து வசதிகள் உள்ளன. எனவே, உடுமலை—ஆனைமலை பிற வழித்தடப் பேருந்துகளை மஞ்சநாயக்கனூர் வழியே இயக்கிட அவசியமில்லை.



2004 நவம்பர் 17]

31—

## பேருந்து வசதி

**வினா எண் 54217—திரு. எஸ். சுப்பையா பாண்டியன்:** மாண்புமிகு போக்குவரத்து மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருநெல்வேலி மாவட்டம், செங்கோட்டை முதல் கோவில்பட்டி வரை, புளியங்குடி முதல் திருச்செந்தூர் வரை, மேலும் சுரண்டை திருமலைக்கோவில் வரை நேரடி பேருந்து வசதி செய்ய அரசிடம் திட்டம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. இரா. விசுவநாதன், போக்குவரத்து மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) செங்கோட்டை — கோவில்பட்டி நேர் வழித்தடத்தில் திருநெல்வேலி மண்டலப் பேருந்துகள் 13 மூலம் நாளொன்றுக்கு 27 சுற்றுக்களும், புளியங்குடி — திருச்செந்தூர் நேர் வழித்தடத்தில் திருநெல்வேலி கோட்டத்தைச் சார்ந்த 5 பேருந்துகள் வாயிலாக நாளொன்றுக்கு 16 சுற்றுக்களும் போதிய அளவு ஏற்கெனவே இயக்கப்பட்டு வருகின்றன. சுரண்டை — திருமலைக்கோவில் தடத்தைப் பொறுத்தவரை தற்போது சுரண்டையிலிருந்து தென்காசிக்கு 12 பேருந்துகள் மூலம் 120 சுற்றுக்களும், தென்காசியிலிருந்து திருமலைக்கோவில் செல்ல 1 பேருந்து வாயிலாக 14 சுற்றுக்களும் தற்போது உள்ளன. இவை தவிர தனியார் பேருந்து வசதிகளும் உள்ளன. தவிரவும், சுரண்டையிலிருந்து செங்கோட்டைக்கு இயக்கப்படும் 20 சுற்றுக்களைப் பயன்படுத்தி செங்கோட்டைக்கு வந்து திருமலைக்கோவில் செல்லும்படி தற்போது வசதிகள் உள்ளன. எனவே, கோரிக்கை வழித்தடத்தில் போதுமான பேருந்து வசதிகள் உள்ளதால் மேற்கொண்டு கூடுதலாகப் பேருந்து வசதி செய்து தரும் திட்டம் அரசிடம் இல்லை.

32— [2004 நவம்பர் 17

## நகரப் பேருந்து இயக்குதல்

**வினா எண் 54224—செல்வி சி. கனகதாரா:** மாண்புமிகு போக்குவரத்து மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வேலூர் மாவட்டம், பேரணாம்பட்டு தொகுதி, மசிகம் ஊராட்சி, சாராங்கல கிராமத்தில் காலை மற்றும் மாலை நேரத்திற்கு மட்டும், அரசு வழித்தடம் எண் பி2 நகரப் பேருந்து இயக்கும் திட்டம் அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. இரா. விசுவநாதன், போக்குவரத்து மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) தமிழ்நாடு அரசுப் போக்குவரத்துக் கழகம் (விழுப்புரம்) லிமிடெட், வேலூர் நகரத் தடம் பி2 ஆம்பூர் — பேரணாம்பட்டு வழித்தடத்தில் மிட்டப்பள்ளி கூட்டுச் சாலையிலிருந்து 10 கிலோ மீட்டர் தொலைவில், சாரங்கல் கிராமம் உள்ளடங்கி இருக்கிறது. மிட்டப்பள்ளி கூட்டுச் சாலையிலிருந்து சாரங்கல் இடையே உள்ள சாலை குறுகலாக கனரகப் பேருந்து இயக்கத்திற்குத் தகுதியானதாக இல்லை. இத்தடத்தில் சிற்றுந்து மட்டுமே இயக்க இயலும். சாரங்கல் கிராமத்திற்குச் செல்லும் சாலை குறுகலாக இருப்பதால் பி2 வழித்தட பேருந்தை அக்கிராமத்திற்கு இயக்குவது சாத்தியமில்லை. மேலும், அக்கிராமத்திற்கு சிற்றுந்து இயக்கும்பொருட்டு உரிமம் வழங்க வட்டாரப் போக்குவரத்து அலுவலரால் தட ஆய்வு செய்யப்பட்டு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

33—

## கிரானைட் கற்கள்

**வினா எண் 41066—திரு. இ. கணேசன்:** மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—



2004 நவம்பர் 17]

தமிழகத்தில் எந்தெந்த மாவட்டங்களில் மஞ்சள் நிற கிரானைட் கற்கள் அதிகமாக உள்ளதாக அரசு கண்டறிந்துள்ளது?

**விடை—**

**மாண்புமிகு திரு. நயினார் நாகேந்திரன், தொழில் துறை அமைச்சர்:**

தமிழகத்தில் கரூர், திருவண்ணாமலை, மதுரை மற்றும் விருதுநகர் மாவட்டங்களில் மட்டுமே தரமான மஞ்சள் நிற கிரானைட் கற்கள் இருப்பதாக கண்டறியப்பட்டுள்ளது.

34—

## வெள்ளைக்கல் ஏற்றுமதி

**வினா எண் 41170—திரு. இ. கணேசன்:** மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சேலம் மாவட்டம், எடப்பாடி பகுதியில் வெட்டி எடுக்கப்படும் வெள்ளைக்கல் வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்யப்படுகிறதா?

(ஆ) ஆம் எனில், 2001-2002ல் அரசுக்குக் கிடைத்த வருமானம் எவ்வளவு?

**விடை—**

**மாண்புமிகு திரு. நயினார் நாகேந்திரன், தொழில் துறை அமைச்சர்:**

(அ) ஆம்.

(ஆ) 2001—2002ல் அரசுக்கு சீனியரேஜ் கட்டணமாகக் கிடைத்த வருமானம் ரூ.79,64,707/— ஆகும்.

35—

## கிரானைட் வெட்டுதல்

**வினா எண் 43528—திரு. அ.இரா. மலையப்பசாமி:** மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

[2004 நவம்பர் 17

(அ) கிரானைட் குவாரி பட்டா நிலங்களில் வெட்ட அரசு அனுமதி அளிக்குமா?

(ஆ) ஆம் எனில், விதிமுறைகள் என்ன?

(இ) 2001 முதல் இதுவரை எவ்வளவு குவாரிகள் அனுமதிக்கப்பட்டுள்ளன?

**விடை—**

**மாண்புமிகு திரு. நயினார் நாகேந்திரன், தொழில் துறை அமைச்சர்:**

(அ) பட்டா நிலங்களில் கிரானைட் வெட்ட அரசு அனுமதி அளிக்கிறது.

(ஆ) தமிழ்நாடு சிறு கனிமச் சலுகை விதிகள் 1959ன் விதி எண் 19அ-யின்படி பட்டா நிலங்களில் கிரானைட் குவாரி குத்தகை பெற மாவட்ட ஆட்சியரிடம் விண்ணப்பதாரர்கள் அதற்குரிய விண்ணப்பப் படிவத்தில் விண்ணப்பிக்க வேண்டும். விண்ணப்பம் மாவட்ட ஆட்சியர்/புவியியல் மற்றும் சுரங்கத் துறை ஆணையரின் பரிந்துரையுடன் அரசுக்கு அனுப்பப்பட்டு, பரிந்துரைகள் அரசினால் பரிசீலிக்கப்பட்டு உரிய ஆணைகள் பிறப்பிக்கப்படும்.

(இ) 2001 முதல் நவம்பர் 2004 வரை 64 குவாரிகள் (258.49.6 ஹெக்டேர் பரப்பிற்கு) குத்தகை வழங்கப்பட்டுள்ளது.

**38—**

## துணை கால்நடை மருந்தகம் தொடங்குதல்

**வினா எண் 57800—திரு. நா. சந்திரமோகன்:** மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சீர்காழி தொகுதி, பணங்காட்டாங்குடி ஏலத்தூர் ஊராட்சியில் துணை கால்நடை மருந்தகம் தொடங்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?



2004 நவம்பர் 17]

**விடை—**

**மாண்புமிகு திரு. ப.வெ. தாமோதரன், கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்:**

(அ) தற்போது மாநிலத் திட்டக் குழு புதிய கால்நடை கிளை நிலையம் திறக்க தடையாணை விதித்துள்ளதாலும், அதேபோல் புதிய பதவிகளைத் தோற்றுவிக்க அரசு தடை செய்துள்ளதாலும், சீர்காழி தொகுதி, பணங்காட்டாங்குடி ஏலத்தூர் ஊராட்சியில் துணை கால்நடை மருந்தகம் அதாவது கால்நடை கிளை நிலையம் தொடங்க சாத்தியக்கூறுகள் இல்லை.

(ஆ) எழாது.

**37—**

## அறிஞர் அண்ணா உயிரியல் பூங்கா வருமானம்

**வினா எண் 34829—திரு. கே. ஆறுமுகம்:** மாண்புமிகு வனம் மற்றும் சுற்றுச்சூழல் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வண்டலூர் அறிஞர் அண்ணா உயிரியல் பூங்காவில் நுழைவுச் சீட்டின் மூலம் கிடைத்த வருமானம் எவ்வளவு?

(ஆ) வன விலங்குகளைப் பிற இடங்களுக்கு அனுப்புவதன் மூலம் கிடைக்கப்பெற்ற வருமானம் எவ்வளவு?

**விடை—**

**மாண்புமிகு திரு. ஆர். வைத்திலிங்கம், வனம் மற்றும் சுற்றுச்சூழல் துறை அமைச்சர்:**

(அ) வண்டலூர் அறிஞர் அண்ணா உயிரியல் பூங்காவில் நுழைவுச் சீட்டு மூலம் கிடைத்த வருமானம்

*2002-2003ம் ஆண்டு*

(i) பெரியவர்கள், சிறுவர்கள் & பள்ளி சிறுவர்கள் வருகை மூலம் : *ரூ.68,30,473/-*

[2004 நவம்பர் 17

| | |
|---|---|
| (ii) இதர வருவாய் (மின்கல ஊர்தி மூலம் பூங்கா சுற்று மற்றும் வாகன நிறுத்துவதற்கான கட்டணம்) : | ரூ.14,49,781/- |
| மொத்தம் | ரூ.82,80,254/- |

(ரூபாய் எண்பத்து இரண்டு இலட்சத்து எண்பதாயிரத்து இருநூற்று ஐம்பத்து நான்கு மட்டும்)

(ஆ) வனவிலங்குகள் பரிமாற்ற முறையில் மேற்கொள்ளப்படுவதால் இதில் வருமானம் ஏதும் இல்லை.

**38—**

**பசுமைப் பகுதியினை அதிகரித்தல்**

**வினா எண் 38674—திரு. செ. வெங்கடாஜலம்:** மாண்புமிகு வனம் மற்றும் சுற்றுச்சூழல் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சேலம் மாவட்டத்தில், சமூக வனவியல் திட்டத்தின்கீழ் பசுமைப் பகுதியினை அதிகரிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

**விடை—**

**மாண்புமிகு திரு. ஆர். வைத்திலிங்கம், வனம் மற்றும் சுற்றுச்சூழல் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) சேலம் மாவட்டத்தில் சமூக வனவியல் திட்டம் 1981 முதல் 1996 வரை சுவீடன் பன்னாட்டு நிதி ஆதாரங்கள் மூலம் இரண்டு நிலைகளில் செயல்படுத்தப்பட்டது. கண்மாய், ஏரி மற்றும் குளங்களின் படுகைகளில் மரக்கன்றுகள் நடவு செய்ய 21.4.97 முதல் தடை செய்யப்பட்டதால் 1996ஆம் ஆண்டுக்குப் பிறகு நடவுப்பணிகள் மேற்கொள்ளப்படவில்லை. தற்போது அரசாணை (நிலை) எண் 98, சுற்றுச்சூழல் மற்றும் வனம், நாள் 6.5.2002ன்படி குளங்களின் கரைகளில், படுகைகளில் மரங்கள் நடுவதற்கான நடைமுறையிலிருந்த தடை விலக்கப்பட்டது. 2003-2004 ஆம் ஆண்டில்



2004 நவம்பர் 17]

திருவண்ணாமலை, சேலம், நாமக்கல், திருச்சிராப்பள்ளி, இராமநாதபுரம், திண்டுக்கல், தேனி, வேலூர், திருநெல்வேலி மற்றும் புதுக்கோட்டை ஆகிய 10 மாவட்டங்களில் ஏறத்தாழ 100 குளக்கரைகளின் மேல் பகுதியில் 3100 எக்டேரில் ஒருங்கிணைந்த தரிசு நில மேம்பாட்டுத் திட்டத்தின்கீழ் எழுப்பப்பட்ட 40 இலட்சம் மரக்கன்றுகளில் தகுதி பெற்ற 22 இலட்சம் மரக்கன்றுகளை நடவு செய்யவும், பாதுகாக்கவும் ரூ.3.50 கோடி அரசால் ஒப்பளிப்பு செய்யப்பட்டுள்ளது. இதன்படி சேலம் மாவட்டத்தில் இடைபடு காடுகள் கோட்டத்தில் (2003-2004) நடப்பாண்டில் 500 எக்டேர் பரப்பளவில் குளக்கரைகளில் மரக் கன்றுகள் நடவு செய்ய ஆயத்தப் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. இவ்வாறு சேலம் மாவட்டத்தில் பசுமைப் பகுதியினை அதிகரிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

**39—**

**தார்ச் சாலை**

**வினா எண் 53087—திரு. டி.கே. இராஜா:** மாண்புமிகு வனம் மற்றும் சுற்றுச்சூழல் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வேலூர் மாவட்டம், திருப்பத்தூர் தொகுதி, ஜவ்வாதுமலை ஆலங்காயம் ஒன்றியம், சிங்காரப்பேட்டை முதல் காவலூர் வரையிலான மண் சாலையைப் பிரதம மந்திரி கிராமசாலை திட்டத்தில் தார்ச் சாலையாக மாற்றும் திட்டம் அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. ஆர். வைத்திலிங்கம், வனம் மற்றும் சுற்றுச்சூழல் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) வேலூர் மாவட்டம், ஜவ்வாதுமலையில் 39.75 கி.மீ. நீளமுள்ள சிங்காரப்பேட்டை — புதூர் நாடு மற்றும் புதூர் நாடு — காவலூர் ஆகிய இரு சாலைகளின் மேம்பாட்டிற்காக ரூ.625 இலட்சத்திற்கான முன்மொழிவுகள் பிரதம மந்திரி கிராமச் சாலைகள் திட்டத்தின்கீழ் அனுப்பி வைக்கப்பட்டு, 10.5 கி.மீ. நீளத்துக்கு வனத்

[2004 நவம்பர் 17

துறை சாலையினை மேம்படுத்த ரூ.297.75 இலட்சங்கள் நிதி ஒப்புதல் அளித்து ஊரக வளர்ச்சித் துறையால் ஆணை வெளியிடப்பட்டுள்ளது. நிதி கிடைக்கப் பெற்றதும் பணிகள் தொடங்கத் தேவையான நடவடிக்கை எடுக்கப்படும்.

**40—**

## ஆவின் பாலகம்

**வினா எண் 37538—திருமதி காசாம்பு பூமாலை:** மாண்புமிகு பால் வளத் துறை அமைச்சர் கீழ்க்காணும வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சங்கராபுரம் தொகுதி மூங்கில்துறைப்பட்டு நகரில் ஆவின் பாலகம் அமைக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. எஸ். இராமச்சந்திரன், பால் வளத் துறை அமைச்சர்:**

(அ) வாய்ப்பு இல்லை. மூங்கில்துறைப்பட்டு கூட்டுறவு பால் உற்பத்தியாளர்கள் சங்கம் "ஆவின் பாலகம்" ஒன்றினை மூங்கில்துறைப்பட்டில் தொடங்கியது. இப்பாலக விற்பனையில் நுகர்வோர்களது ஆதரவு எதிர்பார்த்த அளவில் இல்லாததால், மேற்படி ஆவின் பாலகம் மூடப்பட்டது. எனவே, மூங்கில்துறைப்பட்டில் மீண்டும் ஆவின் பாலகம் அமைக்க வாய்ப்பு இல்லை.

(ஆ) இவ்வினாவிற்கு இடமில்லை.

**41—**

## பால் கூட்டுறவுச் சங்கம்

**வினா எண் 45090—திரு. ப. அரசன்:** மாண்புமிகு பால் வளத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

அறந்தாங்கி நகரில் பால் கூட்டுறவுச் சங்கம் தொடங்கும் கருத்துரு அரசின் பரிசீலனையில் உள்ளதா?



2004 நவம்பர் 17]

**விடை—**

**மாண்புமிகு திரு. எஸ். இராமச்சந்திரன், பால் வளத் துறை அமைச்சர்:**

இல்லை. அறந்தாங்கி நகரம் ஒரு நகராட்சியாக இருப்பதால் இங்கு உற்பத்தி செய்யப்படும் பால் முழுவதும் நகரத்திலேயே விற்பனை செய்யப்படுகிறது. அறந்தாங்கி, தற்போதுள்ள பால் வழித்தடத்திலிருந்து சுமார் 20 கி.மீ. தொலைவில் உள்ளது. அறந்தாங்கியில் வேறு சங்கங்கள் எதுவும் செயல்படவில்லை. பால் உற்பத்தியாளர் கூட்டுறவுச் சங்கம் அமைப்பதற்கு பால் உற்பத்தியாளர்கள் முன்வராததால் அறந்தாங்கியில் பால் உற்பத்தியாளர் கூட்டுறவுச் சங்கம் தொடங்க கருத்துரு எதுவும் பரிசீலனையில் இல்லை.

**42—**

## ஆவின் பால் விற்பனை நிலையம்

**வினா எண் 54728—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு பால் வளத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

எடப்பாடி பேருந்து நிலையத்தில் சூடான பால் விற்பனை நிலையம் தொடங்க நடவடிக்கை எடுக்கப்படுமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. எஸ். இராமச்சந்திரன், பால் வளத் துறை அமைச்சர்:**

எடப்பாடி பேருந்து நிலையத்தில் வெகுவிரைவில் ஆவின் பாலகம் தொடங்கப்பட்டு, சூடான பால் மற்றும் ஆவின் பால் பொருட்கள் அனைத்தும் விற்பனை செய்ய நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

**43—**

## நிலுவைத் தொகை வழங்குதல்

**வினா எண் 54742—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு பால் வளத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

[2004 நவம்பர் 17

சேலம் மாவட்ட பால் உற்பத்தியாளர்களுக்கு வழங்க வேண்டிய நிலுவைத் தொகையை உடனடியாக வழங்க அரசு ஆவன செய்யுமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. எஸ். இராமச்சந்திரன், பால் வளத் துறை அமைச்சர்:**

பால் நிலுவைப் பணம் வழங்க அனைத்து நடவடிக்கைகளும் எடுக்கப்பட்டு சேலம் மாவட்ட கூட்டுறவு பால் உற்பத்தியாளர்கள் சங்க உறுப்பினர்களுக்கு நிலுவை ஏதுமின்றி பால் பணம் பட்டுவாடா செய்யப்பட்டுள்ளது.

**44—**

## தானியங்கி பால் விற்பனை நிலையம்

**வினா எண் 54744—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு பால் வளத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

சேலம் மாவட்டம், எடப்பாடி நகரில் தானியங்கி பால் விற்பனை நிலையம் புதிதாகத் தொடங்க அரசு ஆவன செய்யுமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. எஸ். இராமச்சந்திரன், பால் வளத் துறை அமைச்சர்:**

எடப்பாடி மற்றும் அதன் அருகிலுள்ள வெள்ளாண்டிவலசு பகுதியில் நான்கு பால் விற்பனை முகவர்கள் நியமனம் செய்யப்பட்டு, நாளொன்றுக்கு சுமார் 740 லிட்டர் பால் விற்பனை செய்யப்பட்டு வருகிறது. இப்பகுதியில் சில உணவகங்கள் மற்றும் தேனீர் கடைகள் உள்ளன. இப்பகுதி வறுமைக்கோட்டிற்குக் கீழ் உள்ள நெசவாளர்கள் அதிகம் உள்ள பகுதி. மேலும், பெரிய தொழிற்சாலைகள் மற்றும் வியாபார நிறுவனங்கள் ஏதுமில்லை. பெரும்பாலோர் முகவர்களிடம் பாலைக் கடன் அடிப்படையில் பெற்றுக்கொண்டு வாரம் ஒருமுறை நெசவாளர்களுக்குக் கூலி வழங்கும் நாளில் பாலுக்கான தொகையை செலுத்தி வருகின்றனர். தற்போது தானியங்கி பால் விற்பனை நிலையம் அமைத்து, பால் விற்பனை செய்யுமளவிற்குப் பால் விற்பனை அளவு இல்லாமல் நாளொன்றுக்கு மிகக் குறைவாகவே பால் விற்பனை நடைபெற்று வருகிறது. எனவே,



2004 நவம்பர் 17]

எடப்பாடி பகுதியில் தானியங்கி பால் விற்பனை நிலையம் புதிதாக தொடங்க சாத்தியக்கூறுகள் இல்லை.

**45—**

## மீன் எண்ணெய் தொழிற்சாலை

**வினா எண் 53162—திரு. கோவை தங்கம்:** மாண்புமிகு மீன் வளத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வால்பாறை சோலையார் அணை அருகில் மீன் எண்ணெய் எடுக்கும் தொழிற்சாலை ஒன்றை ஏற்படுத்த அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. எம். ராதாகிருஷ்ணன், மீன் வளத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) வால்பாறை சோலையார் அணை அருகில் மீன் எண்ணெய் எடுக்கும் தொழிற்சாலை ஏற்படுத்தும் திட்டம் ஏதும் தற்போது அரசின் பரிசீலனையில் இல்லை.

**46—**

## மீன் கண்காட்சி ஏற்படுத்துதல்

**வினா எண் 54685—திரு. கோவை தங்கம்:** மாண்புமிகு மீன் வளத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வால்பாறை தொகுதியில் சோலையார் அணை அருகே மீன் கண்காட்சி ஏற்படுத்த அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. எம். ராதாகிருஷ்ணன், மீன் வளத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) இல்லை. பல மலைகளைத் தாண்டி அமைந்துள்ள சோலையாருக்கு, சமவெளி நீர்த்தேக்கப் பகுதிகளில் இருந்து வண்ண மீன்கள் எடுத்துச் சென்று மீன்காட்சியகம் அமைப்பது

என்பது கடினமானது. மேலும், சுற்றுலாப் பயணிகள் அதிகம் செல்லாத சோலையாறில் மீன் காட்சியகம் அமைத்தால் இலாபகரமாக நடத்த இயலாது.

**47—**

## உயர்ந்த ரக மீன்களை உற்பத்தி செய்தல்

**வினா எண் 58548—திரு. கோவை தங்கம்:** மாண்புமிகு மீன் வளத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

*(அ) வால்பாறை சோலையார், ஆழியார் மற்றும் பரம்பிக்குளம் முதலிய அணைகளில் விரால், கட்லா, ஜிலேபி போன்ற உயர்ந்த ரக மீன்களை உற்பத்தி செய்ய அரசு நடவடிக்கை எடுக்குமா?*

*(ஆ) ஆம் எனில், எப்போது?*

**விடை—**

**மாண்புமிகு திரு. எம். ராதாகிருஷ்ணன், மீன் வளத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) வால்பாறை தொகுதியைச் சேர்ந்த சோலையாறு அணையில் மீன் துறை, மீன்களை உற்பத்தி செய்து வருகிறது. ஆழியார் அணையில் தமிழ்நாடு மீன் வளர்ச்சிக் கழகம் மீன்களை உற்பத்தி செய்து வருகிறது. மேற்கண்ட இரு அணைகளிலும் கட்லா, மிர்கால், ரோகு மற்றும் சாதாக்கெண்டை போன்ற உயர்ரக மீன்கள் உற்பத்தி செய்யப்படுகின்றன. விரால் மீன்கள் மீன் துறை மற்றும் தமிழ்நாடு மீன் வளர்ச்சிக் கழகத்தால் அணைகளில் இருப்பு செய்து வளர்க்கப்படுவதில்லை. அதேபோல, "ஜிலேபி" என்று குறிப்பிடப்பட்டுள்ள திலேபியா மீன்வகையும் அரசால் இருப்பு செய்து உற்பத்தி செய்யப்படுவதில்லை. அவை தானாகவே நீர்நிலைகளில் உற்பத்தியாகி இருப்பு செய்யப்பட்ட மீன்களுடன் சேர்ந்து வளர்கின்றன. வால்பாறையில் தனியாக அணை ஏதும் இல்லை. பரம்பிக்குளம் அணையில் பெரும்பகுதி கேரள எல்லைக்குள் இருப்பதால் தமிழ்நாடு அரசு, அதில் மீன் உற்பத்திப் பணியை மேற்கொள்ளவில்லை.





**48—**

## தமிழில் பட்டம் பெற்றவர்களுக்கு முன்னுரிமை

**வினா எண் 25039—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

*தமிழ்நாட்டில் அரசு வேலைவாய்ப்புகளில் தமிழில் பயின்று பட்டம் பெற்றவர்களுக்கு உரிய முன்னுரிமை வழங்க அரசு ஆவன செய்யுமா?*

**விடை—**

**மாண்புமிகு திரு. ப. அண்ணாவி, தொழிலாளர் நலத் துறை அமைச்சர்:**

தமிழ்நாட்டில் தமிழைப் பயிற்று மொழியாகக் கொண்டு கற்றோருக்கு அரசுப் பணிகளிலும், அரசு சார்புப் பணிகளிலும் வேலைவாய்ப்பில் முன்னுரிமை அளிப்பது குறித்த செயற்குறிப்பு தமிழ் வளர்ச்சி, பண்பாடு மற்றும் அறநிலையத் துறையின் பரிசிலனையில் உள்ளது.

**49—**

## பயிற்சி மையம்

**வினா எண் 34469—திரு. செ. வெங்கடாஜலம்:** மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

*(அ) சேலத்தில் அடிப்படை பயிற்சி மையம்* (Basic Training Centre) *ஏற்படுத்தும் திட்டம் அரசின் பரிசிலனையில் உள்ளதா?*

*(ஆ) ஆம் எனில், எந்தெந்த தொழிற் பிரிவுகளில் பயிற்சி அளிக்கப்பட உள்ளது?*

[2004 நவம்பர் 17

**விடை—**

**மாண்புமிகு திரு. ப. அண்ணாவி, தொழிலாளர் நலத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) சேலத்தில் அரசினர் தொழிற் பயிற்சி நிலையம் மற்றும் அரசினர் தொழிற் பயிற்சி நிலையம் (மகளிர்) என இரண்டு அரசினர் தொழிற் பயிற்சி நிலையங்கள் இயங்கி வருவதால், சேலத்தில் அடிப்படை பயிற்சி மையம் (Basic Training Centre) அமைக்கும் உத்தேசம் அரசுக்கு இல்லை.

**50—**

## நூற்பு ஆலை திறத்தல்

**வினா எண் 41720—திரு. பி.கே.டி. நடராஜன்:** மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

திண்டுக்கல் மாவட்டம், ஆத்தூர் தொகுதி, ஆலமரத்துப்பட்டி ஊராட்சியில் உள்ள அண்ணாமலையார் டெக்ஸ்டைல்ஸ் நூற்பு ஆலை கடந்த ஐந்து ஆண்டுகளாக மூடப்பட்டு தொழிலாளர்கள் பாதிக்கப்பட்டுள்ளதை அரசு அறியுமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. ப. அண்ணாவி, தொழிலாளர் நலத் துறை அமைச்சர்:**

அண்ணாமலையார் டெக்ஸ்டைல்ஸ் நூற்பு ஆலை நிர்வாகம் அவ்வாலையில் பணிபுரியும் 225 தொழிலாளர்களின் ஊதிய குறைப்பு உள்ளிட்ட பணி நிலைகளில் மாற்றம் செய்வதாக தொழிற் தகராறு சட்டப் பிரிவு 9-ன் கீழ் அறிவிப்பு செய்ததால், தொழிலாளர்கள் 8.10.2001 முதல் உள்ளிருப்பு வேலைநிறுத்தத்தில் ஈடுபட்டனர். இதுகுறித்து மதுரை தொழிலாளர் இணை ஆணையர் முன்பு நடைபெற்ற பேச்சு வார்த்தையில் சுமுக முடிவு ஏற்படாததால் அவர் சமரச முறிவறிக்கை அனுப்பியதன் பேரில் அரசு இப்பிரச்சினையை அரசு ஆணை(டி) எண் 1028 தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத் துறை நாள் 28.10.2003 மூலம் சென்னை சிறப்பு தொழில் தீர்ப்பாயத் தீர்ப்பிற்கு விட்டு உத்தரவு பிறப்பித்துள்ளது.



2004 நவம்பர் 17]

**51—**

## தொழிலாளர்களுக்கு அடிப்படை வசதி

**வினா எண் 43238—திரு. கோவை தங்கம்:** மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

வால்பாறை தொகுதி, கருமலை மற்றும் முடிஸ் எஸ்டேட் பகுதிகளில் பணிபுரியும் தேயிலை தோட்டத் தொழிலாளர்களுக்கு அடிப்படை வசதிகள் செய்து தருமாறு நிர்வாகத்தை அரசு வலியுறுத்துமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. ப. அண்ணாவி, தொழிலாளர் நலத் துறை அமைச்சர்:**

வால்பாறை தொகுதி, கருமலை மற்றும் முடிஸ் எஸ்டேட் பகுதிகளில் பணிபுரியும் தேயிலை தோட்டத் தொழிலாளர்களுக்கு அடிப்படை வசதிகள், குடியிருப்புகள், தெரு விளக்குகள், சாலை வசதிகள், பள்ளிக்கூடங்கள், குழந்தைகள் காப்பகங்கள் மற்றும் இதர வசதிகளை நிர்வாகம் செய்து கொடுக்க அரசு நடவடிக்கை எடுத்து வருகிறது. இத்தோட்ட நிறுவனங்கள், தொழிலாளர் துறை அலுவலர்களால் ஆய்வு செய்யப்பட்டு, ஆய்வின்போது காணப்பட்ட அடிப்படை வசதி குறைபாடுகளுக்காக தோட்டத் தொழிலாளர்கள் சட்டம் மற்றும் விதிகளின்கீழ் வழக்கு தொடர நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

**52—**

## ஆய்வாளர் அலுவலகம் கட்டுதல்

**வினா எண் 47557—திரு. கோவை தங்கம்:** மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வால்பாறையில் உள்ள தொழிலாளர் நலத் துறை ஆய்வாளர் அலுவலகம் கட்டிக்கொடுக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. ப. அண்ணாவி, தொழிலாளர் நலத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) வால்பாறையில் தொழிலாளர் ஆய்வர் அலுவலகம் கட்டிக்கொடுப்பது குறித்து திட்டம் ஏதும் தற்போது அரசின் பரிசீலனையில் இல்லை.

**53—**

## பள்ளிவாசல் மற்றும் தர்கா

**வினா எண் 48358—திருமதி மல்லிகா சின்னசாமி:** மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) முசிறி தொகுதி, முசிறி ஒன்றியம், புலிவளத்திலுள்ள தர்கா, பள்ளிவாசலுக்கு முறைப்படி தேர்தல் நடத்தி, உறுப்பினர்களைத் தேர்வு செய்து தர்கா நிர்வாகம் செய்திட அரசு உரிய நடவடிக்கை மேற்கொள்ளுமா?

(ஆ) ஆம் எனில், விவரம் என்ன?

**விடை—**

**மாண்புமிகு திரு. ப. அண்ணாவி, தொழிலாளர் நலத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) திருச்சி மாவட்டம், முசிறி வட்டம், புலிவளம் கிராமத்திலுள்ள மொய்தீன் ஆண்டவர் பள்ளிவாசல் மற்றும் தர்காவின் தற்போதைய முத்தவல்லி துறையூர் மாவட்ட உரிமையியல் நீதிமன்றத்தில் அசல் வழக்கு எண் 1/98-ல் தடையுத்தரவு பெற்றுள்ளார். அவ்விடைக்கால உத்தரவு இன்னும் நிலுவையில் உள்ளதால் தமிழ்நாடு வக்ஃப்பு வாரியம் தற்போது தேர்தல் மூலம் நிர்வாகம் அமைக்க இயலாது.



**54—**

## குழந்தைத் தொழிலாளர் மறுவாழ்வு நலச் சங்கம்

**வினா எண் 49591—திரு. செ. வெங்கடாஜலம்:** மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சேலம் மாவட்டத்தில் தொழிலாளர் நலத் துறை மூலம் குழந்தைத் தொழிலாளர் மறுவாழ்வு நலச் சங்கம் ஏற்படுத்தப்பட்டுள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

**விடை—**

**மாண்புமிகு திரு. ப. அண்ணாவி, தொழிலாளர் நலத் துறை அமைச்சர்:**

(அ) ஆம்.

(ஆ) சேலம் மாவட்டத்தில் மத்திய அரசின் நிதியுதவியுடன் குழந்தைத் தொழிலாளர் மறுவாழ்வு நலச் சங்கம் (SMILE) (Society for Monitoring and Implementation of Child Labour Elimination) தேசிய குழந்தைத் தொழிலாளர் திட்டத்தின்கீழ் 1996 ஆம் ஆண்டு முதல் ஏற்படுத்தப்பட்டு இயங்கி வருகிறது. இச்சங்கத்தின் மூலம் சேலம் மாவட்டத்தில் 40 சிறப்புப் பள்ளிகள் இயங்கி வருகின்றன. அவற்றில் 2137 குழந்தைத் தொழிலாளர்கள் சிறப்புப் பள்ளி மாணவர்களாக பயின்று வருகின்றனர். 2003-04 ஆம் ஆண்டில் மேற்கண்ட சிறப்புப் பள்ளிகளில் இருந்து 826 மாணவர்கள் முறைசார்ந்த பள்ளிகளில் சேர்க்கப்பட்டுள்ளனர். இப்பள்ளிகளில் சிறப்புப் பள்ளி மாணவர்களுக்கு சத்துள்ள, இலவச மதிய உணவு மற்றும் இலவச தேநீர் வழங்கப்படுகிறது. மேலும், அவர்களுக்குத் தொடர் மருத்துவ பரிசோதனை, ஆரம்ப சுகாதார நிலைய மருத்துவர்களால் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. மேற்கண்ட பள்ளிகளில் 80% வருகை புரியும் ஒவ்வொரு குழந்தைத் தொழிலாளருக்கும் ஒரு மாதத்திற்கு ரூ.100/- வீதம் ஊக்கத் தொகை அவர்களுடைய சேமிப்பு கணக்கில் வங்கியிலோ அல்லது அஞ்சலகத்திலோ முதலீடு செய்யப்படுகிறது.

[2004 நவம்பர் 17

2. குழந்தைத் தொழிலாளர் முறையை அகற்ற சேலம் மாவட்டத்தில் 1995-லிருந்து இதுவரை 490 விழிப்புணர்வு முகாம்கள் நடத்தப்பட்டுள்ளன. குழந்தைத் தொழிலாளர் குடும்பப் பொருளாதார மேம்பாட்டிற்காக சேலம் மாவட்டத்தில் 42 சுய உதவிக் குழுக்கள் ஏற்படுத்தப்பட்டுள்ளன. மத்திய அரசு குழந்தைத் தொழிலாளர் பிரச்சினை குறித்த விழிப்புணர்வை ஏற்படுத்துவதற்காக 2003-2004 ஆம் ஆண்டிற்கு ரூ.5 இலட்சம் நிதி உதவி அளித்துள்ளது.

3. மேலும், தொழிலாளர் மற்றும் தொழிற்சாலை ஆய்வகத் துறையில் முறைசார்ந்த மற்றும் முறைசாராத நிறுவனங்களில் உள்ள குழந்தைத் தொழிலாளர்களைக் கண்டறிய, குறிப்பிட்ட கால இடைவெளியில் ஆய்வுகள் மற்றும் கூட்டாய்வுகள் மேற்கொள்ளப்பட்டு வருவதுடன், இது தொடர்பாக வேலையளிப்பவர்கள் மற்றும் பல்வேறு தொழில் நிறுவனங்களின் பிரதிநிதிகளிடம் விழிப்புணர்வு முகாம்கள் நடத்தப்பட்டு வருகின்றன. மேலும், இத்திட்டத்தின்கீழ் கல்வித் துறை, ஊரக வளர்ச்சித் துறை, சமூக நலத் துறை, பொதுப் பணித் துறை, நெடுஞ்சாலைத் துறை, காவல் துறை, சுகாதாரத் துறை, செய்தி மற்றும் தகவல் தொடர்புத் துறை, வருவாய்த் துறை மற்றும் ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் துறை ஆகிய துறைகளிலும், அரசு சாரா நிறுவனங்களிலும் உள்ள அலுவலர்களின் ஒத்துழைப்புடன், குழந்தைத் தொழிலாளர் முறையை அகற்றவும், நலத்திட்டங்கள் மூலம் நல்வாழ்வளிக்கவும் பலவேறு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன.

**55—**

## ஆய்வு மையக் கட்டடத்தைச் செயல்படுத்துதல்

**வினா எண் 50327—திரு. கோவை தங்கம்:** மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கோவை மாவட்டம், வால்பாறையில் உள்ள அரசு மேல்நிலைப் பள்ளிக்கு அருகில் செயல்படாமலுள்ள தொழிலாளர் நலத் துறை ஆய்வு மையக் கட்டடத்தைச் செயல்படுத்த நடவடிக்கை எடுக்கப்படுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?



2004 நவம்பர் 17]

**விடை—**

**மாண்புமிகு திரு. ப. அண்ணாவி, தொழிலாளர் நலத் துறை அமைச்சர்:**

(அ) கோவை மாவட்டம், வால்பாறையிலுள்ள அரசு மேல்நிலைப் பள்ளிக்கு அருகில் தொழிலாளர் நலத் துறை ஆய்வு மையக் கட்டடம் ஏதும் செயல்படவில்லை. அவ்விடத்தில் உள்ளது தொழிலாளர் அலுவலர்களுக்கான குடியிருப்பாகும். தோராய மதிப்பீடு ரூ.5 இலட்சம் செலவில் இக்குடியிருப்பின் பழுதுபார்க்கும் பணிகள் மேற்கொள்ள 2004-2005 ஆண்டிற்கான பகுதி-II திட்டத்தில் நிதி நிலைக் குழுவால் ஒப்புதல் அளிக்கப்பட்டுள்ளது.

(ஆ) அரசு ஆணைகள் வெளியிட்ட பின்னர் பொதுப் பணித் துறையினரால் பழுதுபார்க்கும் பணிகள் மேற்கொள்ளப்படும்.

**56—**

## பார்வையற்றவர்களுக்கு இட ஒதுக்கீடு

**வினா எண் 56128—திரு. ஜ. கணேசன்:** மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வேலை வாய்ப்புக்கான திட்டத்தில் பார்வையற்றவர்களுக்கான இட ஒதுக்கீடு முறை பின்பற்றப்பட்டு வருகிறதா?

(ஆ) ஆம் எனில், எப்போது முதல் பின்பற்றப்படுகிறது?

**விடை—**

**மாண்புமிகு திரு. ப. அண்ணாவி, தொழிலாளர் நலத் துறை அமைச்சர்:**

(அ) அரசாணை எண் 99, பணியாளர் மற்றும் நிர்வாகச் சீர்திருத்தத் (Personnel-S) துறை, நாள் 26-2-1988-ல் உடல் ஊனமுற்றோருக்கென ஒதுக்கப்பட்ட 3 சதவீத இட ஒதுக்கீட்டில் 1 சதவீதம் கண் பார்வையற்றவர்களுக்கென ஒதுக்கப்பட்டு குரூப் "சி" மற்றும் "டி"-ல் காணும் பணியிடங்களில் பணியமர்த்தப்படுகிறார்கள்.

[2004 நவம்பர் 17

ஆசிரியர் பணிக் காலியிடங்களைப் பொறுத்தவரை அரசாணை எண் 619, கல்வித் (எம்) துறை, நாள் 23-6-1993-ல் உடல் ஊனமுற்றோருக்கென ஒதுக்கப்பட்ட 3 சதவீத இட ஒதுக்கீட்டில் 2 சதவீதம் கண் பார்வையற்றோருக்கென ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

(ஆ) இவ்விட ஒதுக்கீடு முறையே 26-8-1988 மற்றும் 23-6-1993 ஆகிய தேதி முதல் பின்பற்றப்பட்டு வருகிறது.

57—

## ஈமக்கிரியை செய்ய கொட்டகை

**வினா எண் 7672—திரு. பி.கே. சேகர்பாபு:** மாண்புமிகு செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

இராதாகிருஷ்ணன் நகர் தொகுதி, 6-வது வட்டம், பூண்டி தங்கம்மாள் தெரு, நாகூரார் தோட்டம் ஆகிய பகுதிகளில் உள்ள மக்களுக்கு பயன்படும் வகையில் ஈமக்கிரியை செய்ய கொட்டகை கட்டித்தர அரசு ஆவன செய்யுமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன், செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

சென்னை மாநகராட்சிக்குச் சொந்தமான காலி நிலம் இராதாகிருஷ்ணன் நகர் தொகுதி, 6-வது வட்டம், பூண்டி தங்கம்மாள் தெரு, நாகூரார் தோட்டம் ஆகிய பகுதியில் இல்லை. எனவே, அப்பகுதிவாழ் மக்களுக்கு 16-வது நாள் ஈமக்கிரியை செய்வதற்கான கூடம் கட்டப்படவில்லை. ஆனால், க்லூ சாலை 1-வது வட்டத்தில் 16-வது நாள் ஈமக்கிரியை செய்வதற்கான கூடம் உள்ளது. இவ்விடம் 6-வது வட்டமான பூண்டி தங்கம்மாள் தெரு, நாகூரார் தோட்டம் அருகில் உள்ளது. அதனை இவ்விரு தெரு மக்களும் பயன்படுத்திக்கொள்ளலாம்.



2004 நவம்பர் 17]

58—

## சுடுகாட்டில் எரிமேடை

**வினா எண் 10344—திரு. மு. கார்த்தி:** மாண்புமிகு செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சேலம் 2-வது தொகுதி, கன்னங்குறிச்சி பேரூராட்சி, 15-வது வார்டு கோவிந்தராஜா பட்டணத்தில் சுடுகாட்டுக்கு எரிமேடை அமைக்கும் திட்டம் அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன், செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) சேலம் மாவட்டம், கன்னங்குறிச்சி பேரூராட்சி, 15-வது வார்டு கோவிந்தராஜா பட்டணம் சுடுகாட்டில் 2001-2002-ம் ஆண்டு சுவர்ண ஜெயந்தி திட்டத்தில் ரூ.6,000/- மதிப்பீட்டில் எரிமேடை கட்டப்பட்டு தற்போது உபயோகத்தில் இருந்து வருகிறது.

59—

## குடிநீர் வழங்குதல்

**வினா எண் 12274—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

சேலம் மாவட்டம், எடப்பாடி தொகுதி, இடங்கணசாலை பேரூராட்சி, முருகன் நகர் மோட்டூர் பகுதிக்குப் புதிதாக மேல்நிலைத் தொட்டி கட்டி, குடிநீர் வழங்க அரசு ஆவன செய்யுமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன், செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

சேலம் மாவட்டம், இடங்கணசாலை பேரூராட்சி, 13-வது வார்டு மோட்டூர் முருகன் நகரில் தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்தின்

[2004 நவம்பர் 17

மூலம் 60,000 லிட்டர் கொள்ளளவில் மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி கட்டப்பட்டு குடிநீர் ஏற்றப்பட்டு, அப்பகுதி மக்களுக்குக் குடிநீர் சீராக விநியோகம் செய்யப்பட்டு வருகிறது. அப்பகுதி மக்களுக்குக் குடிநீர் தட்டுப்பாடின்றி கிடைத்து வருவதால், அங்கு தற்போது குடிநீர் பிரச்சினை ஏதுமில்லை.

**60—**

## குடிநீர் விசைப்பம்பு அமைத்தல்

**வினா எண் 15621—திரு. கோ. இரவிராஜ்:** மாண்புமிகு செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருவள்ளூர் மாவட்டம், திருத்தணி வட்டம், கார்த்திகேயபுரம் ஊராட்சிப் பகுதியில் விசைப் பம்பு அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், குடிநீர் விசைப் பம்பு மாற்றம் எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன், செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) திருவள்ளூர் மாவட்டம், திருத்தணி ஒன்றியம், கார்த்திகேயபுரம் ஊராட்சியில் உள்ள கார்த்திகேயபுரம் குடியிருப்பின் மக்கள் தொகை 380. இக்குடியிருப்பிற்கு ஒரு கைபிறைப்பான், சிறு மின்விசைத் திட்டம் மற்றும் 30,000 லிட்டர் கொள்ளளவுள்ள மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டியுடன் கூடிய விசைப் பம்பு திட்டம் ஆகியவை மூலம் போதுமான அளவு குடிநீர் வழங்கப்பட்டு வருகிறது.

**61—**

## குடிநீர்க் குழாய்கள் அமைத்தல்

**வினா எண் 16400—திரு. மு. அப்பாவு:** மாண்புமிகு செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—



2004 நவம்பர் 17]

திருநெல்வேலி மாவட்டம், ராதாபுரம் வட்டம், திசையன்விளை பேரூராட்சி, செல்வமருதூர் பகுதியில் உள்ள கருப்பசாமி கோவில் தெரு, நாராயணசாமி கோவில் தெருக்களுக்குக் குடிநீர்க் குழாய்கள் அமைத்துக்கொடுக்க அரசு முன்வருமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன், செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

திருநெல்வேலி மாவட்டம், திசையனவிளை பேரூராட்சி செல்வமருதூர் பகுதி, கருப்பசாமி கோயில் தெரு, நாராயணசாமி கோவில் தெருவில் 2 பொது நல்லிகள் அமைக்கப்பெற்று, குடிநீர் விநியோகம் செய்யப்பட்டு வருகிறது.

**62—**

## தெரு விளக்குகள் சரிசெய்தல்

**வினா எண் 19152—திரு. பி.கே. சேகர்பாபு:** மாண்புமிகு செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

ஆர்.கே. நகர் தொகுதி, 3-வது வட்டம், பட்டேல் நகர், நேதாஜி நகர், நேரு நகர், அன்னை சத்யா நகர், ராஜீவ் காந்தி நகர், நெடுஞ்செழியன் நகர் ஆகிய இடங்களிலும் மற்றும் பல்வேறு நகரங்களில், 900-க்கும் மேற்பட்ட தெரு விளக்குகள் எரியாததைச் சரி செய்ய அரசு முன்வருமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன், செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

சென்னை மாநகராட்சி வட்டம் 3-ல் 903 தெரு விளக்குகள் பராமரிக்கப்பட்டு வருகின்றன. அந்த வட்டத்தில் உள்ள மின் விளக்குகளை ஆய்வு செய்ததில் 12 விளக்குகள் எரியாமல் இருந்தது தெரிய வந்தது. மேற்படி எரியாமலிருந்த 12 தெரு விளக்குகளும் 1-3-2004 அன்று சரி செய்யப்பட்டது. மேலும், பழுதடைந்த விளக்குகள் தொடர்ந்து ஆய்வு செய்யப்பட்டு, உடனுக்குடன் சரி

செய்ய சென்னை மாநகராட்சியால் நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

63—

## பன்றிகள் தொல்லையைக் கட்டுப்படுத்துதல்

**வினா எண் 19370—திரு. அ.இரா. மலையப்பசாமி:** மாண்புமிகு செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கரூர் தொகுதி, தாந்தோணி பேரூராட்சியிலுள்ள தமிழ்நாடு வீட்டுவசதி வாரிய குடியிருப்புகளில் பன்றிகள் தொல்லை அதிகமாக உள்ளது அரசுக்குத் தெரியுமா?

(ஆ) அதைக் கட்டுப்படுத்த நடவடிக்கை எடுக்கப்படுமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன், செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) ஆம். தாந்தோணி பேரூராட்சிகளில் பன்றித் தொல்லை உள்ளது.

(ஆ) பொது சுகாதாரக் கேடுகள் விளைவிக்கும் பன்றிகளை நவீன முறையில் பிடித்து ஊசி போட்டு அழித்திட உத்தரவிடப்பட்டதைத் தொடர்ந்து, அப்பகுதியில் உள்ள பன்றிகள் பிடிக்கப்பட்டு ஊருக்கு வெளியே கொண்டு சென்று அழிக்கப்பட்டுவிட்டன.

64—

## பேருந்து நிலையம் முன் கடைகள் கட்டுதல்

**வினா எண் 20348—திரு. செ. வெங்கடாசலம்:** மாண்புமிகு செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சேலம் மாநகராட்சியின் வருமானத்தை அதிகரிக்க புதிய பேருந்து நிலையத்தின் முன்பக்கத்தில் கடைகள் கட்டும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளதா?



(ஆ) ஆம் எனில், அத்திட்டம் எப்போது செயல்படுத்தப்படும்?

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன், செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) சேலம் மாநகராட்சியின் வருமானத்தை அதிகரிக்க புதிய பேருந்து நிலையத்தின் முகப்பின் இரு பகுதியிலும் ரூ.50.00 இலட்சம் மதிப்பீட்டில் கடைகள் கட்ட உத்தேசிக்கப்பட்டுள்ளது. மாநகராட்சியின் நிதிநிலையினை அனுசரித்து செய்ய நடவடிக்கை எடுக்கப்பட உள்ளது.

65—

## ஆழ்துளைக் கிணறு அமைத்தல்

**வினா எண் 22412—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) எடப்பாடி தொகுதி, எடப்பாடி ஒன்றியம், இருப்பாளி கிராமத்தைச் சேர்ந்த கண்பட்டி, மாணிக்கம்பட்டி, குறுக்கல்பட்டி, அம்மாசியூர், சீரங்கன்வளவு, பனங்காட்டுவளவு அருந்ததியர் காலனி, குப்பமுத்துவளவு பகுதிகளுக்குக் குடிநீர்ப் பற்றாக்குறை உள்ளதால், அங்கு ஆழ்துளைக் கிணறு அமைத்துத்தர அரசு நடவடிக்கை எடுக்குமா?

(ஆ) ஆம் எனில், அது குறித்த தகவலை அரசு தெரிவிக்குமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன், செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) சேலம் மாவட்டம், எடப்பாடி ஊராட்சி ஒன்றியத்திற்குட்பட்ட இருப்பாளி ஊராட்சியைச் சேர்ந்த கண்பட்டி, மாணிக்கம்பட்டி, குறுக்கல்பட்டு, அம்மாசியூர், சீரங்கன்வளவு, பனங்காட்டுவளவு அருந்ததியர் காலனி, குப்பமுத்துவளவு பகுதிகளுக்கு இருப்பாளி காவிரி குடிநீர்த் திட்டத்தின்கீழ் குடிநீர் வசதி செய்யப்பட்டுள்ளது.

66—

[2004 நவம்பர் 17

## குடிநீர் நீர்த்தேக்கத் தொட்டி

**வினா எண் 27072—திரு. பி.எச். பால் மனோஜ் பாண்டியன்:** மாண்புமிகு செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சேரன்மகாதேவி தொகுதி, முக்கூடல் பேரூராட்சியில், சடையபுரம் கிராமத்திற்கு 2 இலட்சம் கொள்ளவு கொண்ட நீர்த்தேக்கத் தொட்டி கட்டித்தர அரசு நடவடிக்கை மேற்கொள்ளுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன், செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) முக்கூடல் பேரூராட்சியின் நிதிநிலை சீரானவுடன் மேற்படி குடிநீர்த் தேக்கத்தொட்டி அமைக்க நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

67—

## குடிநீர் வழங்குதல்

**வினா எண் 27284—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

எடப்பாடி தொகுதி, கொங்கணாபுரம் ஒன்றியம், வெள்ளாலபுரம் ஊராட்சி, முனியம்பட்டி பெருமாள் கோவில் அருகில் மேல்நிலைத் தொட்டி கட்டி, குடிநீர் வழங்க அரசு நடவடிக்கை எடுக்குமா?



2004 நவம்பர் 17]

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன், செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

கொங்கணாபுரம் ஒன்றியம், வெள்ளாலபுரம் ஊராட்சியில் உள்ள முனியம்பாளையம் (முனியம்பட்டி) என்ற குடியிருப்பின் ஒரு பகுதியே முனியம்பட்டி பெருமாள் காடு (கோவில்) ஆகும். இக்குடியிருப்பிற்கு இருப்பாளி கூட்டுக் குடிநீர்த் திட்டத்தின் கீழ் கொங்கணாபுரம் ஒன்றியத்திற்குட்பட்ட 107 குடியிருப்புகளுக்கு செயல்படுத்தப்பட்டுள்ள திட்டத்தில் ஏற்கெனவே அமைக்கப்பட்டுள்ள 30,000 லிட்டர் கொள்ளளவுள்ள மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி மூலம் இப்பகுதிக்கு குடிநீர் வழங்கப்படுகிறது.

68—

## குடிநீர் விநியோகம்

**வினா எண் 27293—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) எடப்பாடி தொகுதி, மகுடஞ்சாவடி ஒன்றியம், காளிகவுண்டம்பாளையம் ஊராட்சியில் பனைகொட்டைகாடு மற்றும் எடையன்காடு பகுதிகளில் மேல்நிலைத்தொட்டி கட்டி, குடிநீர் வழங்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன், செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) மகுடஞ்சாவடி ஒன்றியம், காளிகவுண்டம்பாளையம் ஊராட்சியிலுள்ள பனைகொட்டைகாடு (நல்லாயிவளவு குடியிருப்பின் ஒரு பகுதி) மற்றும் இடையன்காடு பகுதிகளுக்குத் தனித் தனியாக அமைக்கப்பட்டுள்ள 30,000 லிட்டர் கொள்ளளவுள்ள மேல்நிலை நீர்த் தேக்கத் தொட்டிகளுக்கு இருப்பாளி

[2004 நவம்பர் 17

கூட்டுக் குடிநீர்த் திட்டத்தின்கீழ் செயல்படுத்தப்பட்டுள்ள மருடஞ்சாவடி ஒன்றியத்திலுள்ள 175 குடியிருப்புகளுக்கான கூட்டுக் குடிநீர்த் திட்டத்தின்மூலம் காவிரி குடிநீர் ஏற்றப்பட்டு, பகிர்மானக் குழாய்கள்மூலம் குடிநீர் விநியோகம் செய்யப்பட்டு வருகிறது.

**69—**

## சாலை சீரமைத்தல்

**வினா எண் 28169—திரு. கோவை தங்கம்:** மாண்புமிகு செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வால்பாறை தொகுதி, வேட்டைக்காரன்புதூர் பேரூராட்சி, மீனாட்சிபுரம் ரோடு மிகவும் பழுதடைந்துள்ளது அரசுக்குத் தெரியுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது நடவடிக்கை எடுக்கப்படும்?

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன், செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) கோவை மாவட்டம், வால்பாறை தொகுதி, வேட்டைக்காரன்புதூர் பேரூராட்சி, மீனாட்சிபுரம் சாலை 0.800 கி.மீ. நீளம் கொண்ட மண் சாலையாக உள்ளது. இதனைத் தார்ச் சாலையாக மாற்றுவதற்கு ரூ.6.00 இலட்சம் செலவாகும். இச்செலவினத்தை ஏற்க பேரூராட்சியில் போதிய நிதி வசதி இல்லை.

(ஆ) வினா எழவில்லை.

**70—**

## சத்துணவுக் கூடம் அமைத்தல்

**வினா எண் 29624—திருமதி மல்லிகா சின்னசாமி:** மாண்புமிகு செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) முசிறி தொகுதி, மண்ணச்சநல்லூர் ஒன்றியம், மண்ணச்சநல்லூர் பேரூராட்சி, திருநகரில் அமைந்துள்ள ஊராட்சி



2004 நவம்பர் 17]

ஒன்றிய தொடக்கப் பள்ளிக்குச் சுற்றுச் சுவர் கட்டி, சத்துணவுக் கூடம் அமைத்துத் தர அரசு ஆவன செய்யுமா?

(ஆ) அதன் விவரம் என்ன?

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன், செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மண்ணச்சநல்லூர் பேரூராட்சி, திருநகரில் அமைந்துள்ள ஊராட்சி ஒன்றிய தொடக்கப் பள்ளி ஊராட்சியின் கட்டுப்பாட்டில் உள்ளதால் பேரூராட்சி மூலம் சுற்றுச் சுவர் எழுப்பவும் அதில் சத்துணவுக் கூடம் கட்டுவதற்கும் வழிவகை இல்லை. மேலும், பேரூராட்சியில் அப்பணிகளைச் செய்வதற்குப் போதிய நிதி வசதி இல்லை.

(ஆ) கேள்வி எழவில்லை.

**71—**

## குளத்தில் படித்துறை கட்டுதல்

**வினா எண் 30848—டாக்டர் சி. விஜயபாஸ்கர்:** மாண்புமிகு செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

புதுக்கோட்டை மாவட்டத்தில் இலுப்பூர் பேரூராட்சி, ஓடமான் குளத்தில் படித்துறை கட்ட அரசு ஆவன செய்யுமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன், செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

புதுக்கோட்டை மாவட்டத்தில் இலுப்பூர் பேரூராட்சியில் ஓடமான் குளத்தில் படித்துறை ரூ.4,00,000/- மதிப்பீட்டிலும் மெட்டல் சாலை ரூ.2,00,000/- மதிப்பீட்டிலும் பாராளுமன்ற உறுப்பினர் உள்ளூர் வளர்ச்சித் திட்டத்தின்கீழ் செய்யப்பட்டு 24-9-2002-ம் தேதியளவில் பணிகள் முடிக்கப்பட்டுள்ளன.

[2004 நவம்பர் 17

72—

## புதிய தார்ச் சாலைகள்

**வினா எண் 31701—திரு. செ. வெங்கடாஜலம்:** மாண்புமிகு செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) 2001-2002-ல் சேலம் தொகுதியில் புதிய தார்ச் சாலைகள் எத்தனை புதுப்பிக்கப்பட்டன?

(ஆ) அதன் மொத்த மதிப்பீட்டுத் தொகை எவ்வளவு?

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன், செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) சேலம் மாநகராட்சியில் 2001-2002-ம் நிதியாண்டில் 97 எண்ணிக்கையுள்ள சாலைப் பணிகள் எடுத்துக்கொள்ளப்பட்டன.

(ஆ) சாலைப் பணிகளுக்கான மொத்த மதிப்பீடு ரூ.259.50 இலட்சம் ஆகும்.

73—

## திருமண மண்டபங்கள் கட்டுதல்

**வினா எண் 33179—திரு. கோவை தங்கம்:** மாண்புமிகு செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வால்பாறை தொகுதி, கோட்டூர் பேரூராட்சி, வால்பாறை பேரூராட்சி மூலம் திருமண மண்டபங்கள் கட்டி வாடகைக்கு விடும் திட்டம் அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், நடவடிக்கை என்ன?



2004 நவம்பர் 17]

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன், செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) கோவை மாவட்டம், கோட்டூர் பேரூராட்சியில் போதுமான நிதி வசதி இல்லாததால், திருமண மண்டபம் இதுவரை அமைக்கப்படவில்லை. மேலும், சட்டமன்ற உறுப்பினர் தொகுதி நிதி ஒதுக்கீடு செய்யும்பட்சத்தில் கோட்டூர் பேரூராட்சி வாயிலாக திருமண மண்டபம் கட்ட நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

74—

## குடிநீர்த் தொட்டி கட்டுதல்

**வினா எண் 33185—திரு. கோவை தங்கம்:** மாண்புமிகு செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வால்பாறையில் 10 இலட்சம் லிட்டர் கொள்ளளவு கொண்ட குடிநீர்த் தொட்டி கட்டுவதற்கு அரசிடம் திட்டம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், நடவடிக்கை என்ன?

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன், செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) கோவை மாவட்டம், வால்பாறை பேரூராட்சியில் தற்போது 5 திறந்தவெளிக் கிணறுகள், 9 ஆழ்துளைக் கிணறுகள், 19 பவர் பம்புகள்மூலம் 15 தரைமட்ட நீர்த்தேக்கத் தொட்டிகள் அமைக்கப்பட்டு பொதுமக்களுக்கு தினசரி நபர் ஒருவருக்கு ஒரு நாளைக்கு 70 லிட்டர் குடிநீர் வழங்கப்பட்டு வருகிறது. எனவே, 10 இலட்சம் லிட்டர் கொள்ளளவு கொண்ட குடிநீர்த் தொட்டி கட்ட வேண்டிய அவசியமில்லை. தற்போது உள்ள தரைமட்ட நீர்த்தேக்கத் தொட்டிகளே போதுமானவையாக உள்ளன.

75—

## பள்ளிச் சுவர்களைச் சீர் செய்தல்

**வினா எண் 34343—திரு. நா. சந்திரமோகன்:** மாண்புமிகு செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

[2004 நவம்பர் 17

(அ) சீர்காழி தொகுதி, கொள்ளிடம் ஒன்றியம், உமையாள்பதி ஊராட்சி, உமையாள்பதியிலுள்ள ஊராட்சி தொடக்கப் பள்ளிச் சுவர் சீர்கேடான நிலையில் உள்ளது. இதை சீர்செய்திட அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன், செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) சீர்காழி தொகுதி, கொள்ளிடம் ஒன்றியத்தைச் சேர்ந்த உமையாள்பதி ஊராட்சி ஒன்றிய தொடக்கப் பள்ளி சுட்டடச் சுவர் 11-வது நிதிக்குழு 2001-2002 ஆம் ஆண்டு திட்டத்தில் ரூ.20,000/- மதிப்பில் எடுத்து செய்து பணி முடிக்கப்பட்டுள்ளது.

**76—**

## தாய்-சேய் நல விடுதிகள்

**வினா எண் 34372—திரு. பி.கே. சேகர்பாபு:** மாண்புமிகு செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சென்னை மாநகராட்சியில் எத்தனை தாய்-சேய் நல விடுதிகள் செயல்படுகின்றன?

(ஆ) குடும்ப நலத் திட்டச் செயல்பாடு உள்ள தாய்-சேய் நல விடுதிகள் எத்தனை?

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன், செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) சென்னை மாநகராட்சியில் 30 தாய்-சேய் நல விடுதிகள் செயல்படுகின்றன. இவை அனைத்துமே, குடும்ப நலத் திட்டச் செயல்பாடு உள்ள தாய்-சேய் நல விடுதிகள்தான்.



2004 நவம்பர் 17]

**77—**

## நூலகம் அமைத்தல்

**வினா எண் 39170—திரு. சோ. இராசேந்திரன்:** மாண்புமிகு செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கோவில்பட்டி தொகுதி, எட்டையபுரம் பேரூராட்சியில் கிழவாசல் பகுதியில் 2-வது வார்டில் நூலகம் அமைக்க அரசிடம் திட்டம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன், செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) கோவில்பட்டி தொகுதி, எட்டையபுரம் பேரூராட்சிக்குட்பட்ட நடுவிற்பட்டி பகுதியில் ஏற்கெனவே ஒரு பொது நூலகம் இருப்பதால் கிழவாசல் பகுதியில் 2-வது வார்டில் நூலகம் அமைப்பது தொடர்பாக திட்டம் ஏதுமில்லை.

(ஆ) கேள்வி எழவில்லை.

**78—**

## சலவைத் துறையை உயர்த்தும் திட்டம்

**வினா எண் 39175—திரு. சோ. இராசேந்திரன்:** மாண்புமிகு செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கோவில்பட்டி தொகுதி, எட்டையபுரத்தில் சலவைத் துறையை உயர்த்தும் திட்டம் செயல்படுத்தப்படுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன், செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) கோவில்பட்டி தொகுதி, எட்டையபுரத்தில் உள்ள சலவைத் துறை, இரண்டு மின் மோட்டார்கள் கொண்டு, 10 தொட்டிகளில் போதிய அளவு தண்ணீர் வசதியுடன் செயல்பட்டு வருவதால், மேலும் இச்சலவைத் துறையை உயர்த்தும் திட்டம் ஏதும் தற்போது இல்லை.

(ஆ) இவ்வினா எழ வாய்ப்பில்லை.

**79—**

## நியாய விலைக் கடைக்குக் கட்டடம்

**வினா எண் 41116—திரு. டி.கே. இராஜா:** மாண்புமிகு செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருப்பத்தூர் தொகுதி, ஜோலார்பேட்டை ஒன்றியம், ஜோலார்பேட்டை பேரூராட்சி, குடியானக்குப்பத்தில் நியாய விலைக் கடைக்கு அரசு கட்டடம் கட்டித்தர முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன், செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) ஜோலார்பேட்டை பேரூராட்சிக்குட்பட்ட குடியானக் குப்பத்தில் நியாய விலைக் கடைக் கட்டடம் கட்ட அரசு நிலம் ஏதுமில்லை. எனவே, குடியானக்குப்பத்தில் நியாய விலைக் கடைக் கட்டடம் கட்டும் திட்டம் ஏதும் இல்லை.

(ஆ) கேள்வி எழவில்லை.



**80—**

## குடிநீர் வசதி

**வினா எண் 41338—திரு. எஸ். மாணிக்கராஜ்:** மாண்புமிகு செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருநெல்வேலி மாவட்டம், நாங்குநேரி தொகுதி, மூலக்கரைப்பட்டி பேரூராட்சியில் குடிநீர் வசதி செய்து தர அரசு நடவடிக்கை எடுக்குமா?

(ஆ) ஆம் எனில், விவரம் என்ன?

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன், செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) திருநெல்வேலி மாவட்டம், மூலக்கரைப்பட்டி பேரூராட்சியில் தற்போது 40 திறந்தவெளிக் கிணறுகள், 56 ஆழ்துளைக் கிணறுகள், 8 பவர் பம்புகள்மூலம் பாதுகாக்கப்பட்ட குடிநீர், தினசரி நபர் ஒருவருக்கு 70 லிட்டர் வழங்கப்பட்டு வருகிறது. மேற்படி குடிநீர் போதுமானதாக உள்ளது.

**81—**

## தொலைக்காட்சிப் பெட்டி அமைக்கும் திட்டம்

**வினா எண் 41361—திரு. வே. கிருஷ்ணமூர்த்தி:** மாண்புமிகு செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) அரூர் தொகுதி, ஊத்தங்கரை பேரூராட்சி, தாண்டியப்பனூர் பகுதியில் தொலைக்காட்சிப் பெட்டி அமைக்கும் திட்டம் அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

[2004 நவம்பர் 17

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன், செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) அரூர் தொகுதி, ஊத்தங்கரை தேர்வுநிலை பேரூராட்சி எல்லைக்குட்பட்ட தாண்டியப்பனூர் கிராமத்தில் தொலைக்காட்சிப் பெட்டி அமைக்கும் திட்டம் ஏதுமில்லை.

(ஆ) கேள்வி எழவில்லை.

**82—**

## சோடியம் விளக்கு அமைத்தல்

**வினா எண் 45960—திரு. கோவை தங்கம்:** மாண்புமிகு செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கோயம்புத்தூர் மாவட்டம், வால்பாறை தொகுதி, கோட்டூர் பேரூராட்சி, 4-வது வார்டிலுள்ள மகாளி அம்மன் கோயில் முன்பு சோடியம் விளக்கு அமைக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன், செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) கோயம்புத்தூர் மாவட்டம், வால்பாறை தொகுதி, கோட்டூர் பேரூராட்சி, 4-வது வார்டிலுள்ள மகாளி அம்மன் கோயில் முன்பு சோடியம் ஆவி விளக்கு அமைக்கப்பட்டு நல்ல முறையில் பராமரிக்கப்பட்டு வருகிறது.

**83—**

## திருமண மண்டபம் கட்டுதல்

**வினா எண் 46829—திரு. கோவை தங்கம்:** மாண்புமிகு செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—



2004 நவம்பர் 17]

(அ) கோயம்புத்தூர் மாவட்டம், வால்பாறை தொகுதி, வால்பாறை பேரூராட்சி, வேட்டைக்காரன்புதூர் பேரூராட்சி மற்றும் கோட்டூர் பேரூராட்சிகளில் திருமண மண்டபம் கட்டித்தர அரசு நடவடிக்கை எடுக்குமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன், செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) கோயம்புத்தூர் மாவட்டம், வால்பாறை தொகுதிக்குட்பட்ட வால்பாறை, கோட்டூர் மற்றும் வேட்டைக்காரன்புதூர் பேரூராட்சிகளில் திருமண மண்டபம் கட்டித்தர பேரூராட்சிகளில் போதிய நிதி ஆதாரம் இல்லை.

(ஆ) வினா எழவில்லை.

**84—**

## தொகுப்பு வீடுகள் கட்டித் தருதல்

**வினா எண் 47360—திரு. கோவை தங்கம்:** மாண்புமிகு செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கோயம்புத்தூர் மாவட்டம், வேட்டைக்காரன்புதூர் பேரூராட்சியில் மிகவும் பிற்படுத்தப்பட்டோர் சமுதாயத்தைச் சேர்ந்தவர்களுக்குத் தொகுப்பு வீடுகள் கட்ட அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன், செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) கோவை மாவட்டம், வேட்டைக்காரன்புதூர் பேரூராட்சியில் மிகவும் பிற்படுத்தப்பட்டோர் சமுதாயத்தைச் சேர்ந்தவர்களுக்குப் பேரூராட்சிகள் துறை 1.6.94 முதல் நகராட்சிகள் சட்டத்தின் வாயிலாக இயங்கி வருவதால் தொகுப்பு வீடுகள் கட்டும் திட்டம் பேரூராட்சிகளுக்குத் தொடர்ந்து அனுமதிக்கப்படவில்லை.

85— [2004 நவம்பர் 17

## மின்சார தகன எரிமேடை அமைத்தல்

**வினா எண் 47597—திரு. கோவை தங்கம்:** மாண்புமிகு செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கோயம்புத்தூர் மாவட்டம், வால்பாறையில் மின்சார தகன எரிமேடை அமைக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

**மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன், செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) கோயம்புத்தூர் மாவட்டம், வால்பாறை பேரூராட்சிக்குச் சொந்தமான சுடுகாட்டுப் பகுதி மிகவும் குறுகிய இடமாக இருப்பதாலும், போதிய இடவசதி இல்லாததாலும், மின்சார தகன எரிமேடை செலவு மற்றும் பராமரிப்புத் தொகையை ஈடு செய்யும் அளவிற்கு வருமானம் எதிர்பார்க்க இயலாது என்பதாலும், இத்திட்டம் அவசியம் இல்லை.

(ஆ) கேள்வி எழவில்லை.

86—

## தெருவிளக்குகள் அமைத்தல்

**வினா எண் 48034—திரு. கோவை தங்கம்:** மாண்புமிகு செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கோயம்புத்தூர் மாவட்டம், வால்பாறை, தோணிமுடி, கெஜமுடி குடியிருப்புப் பகுதிகளில் யானைகள் வந்து செல்வதால் போதுமான தெருவிளக்குகள் அமைக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?



2004 நவம்பர் 17]

விடை—

**மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன், செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) கோவை மாவட்டம், வால்பாறை, தோணிமுடி எஸ்டேட்டில் 22 குழல் விளக்குகளும், 1 சோடியம் ஆவி விளக்கும், கெஜமுடி பகுதியில் 17 குழல் மின்விளக்குகளும் அமைத்துக் கொடுக்கப்பட்டு நல்ல முறையில் பராமரிக்கப்பட்டு வருகின்றன.

87—

## பேருந்து நிலையத்தில் நிழற்குடை

**வினா எண் 48177—திரு. கோவை தங்கம்:** மாண்புமிகு செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கோயம்புத்தூர் மாவட்டம், வேட்டைக்காரன்புதூர் பேரூராட்சி, சேத்துமடையிலுள்ள பேருந்து நிலையத்தில் நிழற்குடை அமைக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

**மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன், செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) கோயம்புத்தூர் மாவட்டம், வேட்டைக்காரன்புதூர் பேரூராட்சி, சேத்துமடையிலுள்ள பேருந்து நிலையத்தில் நிழற்குடை அமைக்கும் பணியினைப் பேரூராட்சியின் பொது நிதியிலிருந்து மேற்கொள்ள போதுமான நிதிவசதி இல்லை. சட்டமன்ற உறுப்பினர் தொகுதி வளர்ச்சித் திட்டத்தின்கீழ் நிதி ஒதுக்கீடு கிடைக்கப்பெறும் பட்சத்தில் மேற்படி பணி செய்து கொடுக்கப்படும்.

88—

## சமுதாய நலக் கூடம் கட்டுதல்

**வினா எண் 48482—திரு. அ.இரா. மலையப்பசாமி:** மாண்புமிகு செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

[2004 நவம்பர் 17

(அ) நாமக்கல் மாவட்டம், கபிலர்மலை தொகுதி, வெங்கரை பேரூராட்சியில் சமுதாய நலக் கூடம் கட்டித் தர அரசு நடவடிக்கை எடுக்குமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. கோ.சி. அன்பழகன், செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) வெங்கரை பேரூராட்சிக்குச் சொந்தமான இடம் ஏதும் இல்லாத காரணத்தினாலும், சமுதாயக் கூடம் கட்டுவதற்குப் போதுமான நிதி ஆதாரம் இல்லாத காரணத்தினாலும் வெங்கரை பேரூராட்சியில் தற்போது சமுதாய நலக் கூடம் கட்ட இயலாத நிலை உள்ளது.

89—

## மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி அமைத்தல்

**வினா எண் 48512—திரு. அ.இரா. மலையப்பசாமி:** மாண்புமிகு செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கபிலர்மலை தொகுதி, வேலூர் பேரூராட்சி, 1-வது வார்டு ஒழுகூர்பட்டியில் குடிநீர் மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி கட்டி குழாய் இணைப்பு அமைத்துக் கொடுக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. கோ.சி. அன்பழகன், செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) நாமக்கல் மாவட்டம், கபிலர்மலைத் தொகுதி, வேலூர் பேரூராட்சி, 1-வது வார்டில் நேரடியாக பைப்லைன்கள் மூலம் அனைத்து மக்களுக்கும் காவிரி குடிநீர் விநியோகம் செய்யப்பட்டு வருகிறது. மற்றும், 2-வது வார்டு, ஒழுகூர்பட்டி பொதுமக்களுக்கும் நேரடியாக காவிரி குடிநீர் பைப்லைன் வாயிலாக விநியோகம் செய்யப்பட்டு வருகிறது.



2004 நவம்பர் 17]

(ஆ) இப்பகுதி முழுவதற்கும் சீரான குடிநீர் விநியோகம் செய்ய வேண்டுமெனில் இப்பகுதிக்கு சம்ப் தொட்டி கட்டி மின்மோட்டார் பொருத்தி குடிநீர் வழங்கினால், குடிநீர் சீராக வழங்க இயலும். எனினும், இதற்கு ரூ.2.00 இலட்சம் செலவாகும். தற்போது, இப்பேரூராட்சியில் போதிய நிதி வசதி இல்லை. எனவே, இத்திட்டத்தை தற்போது செய்ய இயலாது.

90—

## கழிவுநீர் வாய்க்கால் வசதி

**வினா எண் 48517—திரு. அ.இரா. மலையப்பசாமி:** மாண்புமிகு செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கபிலர்மலை தொகுதி, மோகனூர் பேரூராட்சி, கடைவீதியில் கழிவுநீர் வாய்க்கால் வசதி ஏற்படுத்தித் தர அரசு நடவடிக்கை எடுக்குமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. கோ.சி. அன்பழகன், செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) கபிலர்மலை தொகுதி, மோகனூர் பேரூராட்சி எல்லைக்குட்பட்ட 10-வது வார்டு கடைவீதியில் ஏற்கெனவே கழிவுநீர் வாய்க்கால் இருபுறமும் அமைக்கப்பட்டு, கழிவுநீர் வாய்க்கால் வசதி செய்து கொடுக்கப்பட்டுள்ளது.

(ஆ) வினா எழவில்லை.

91—

## பாலம் அமைத்தல்

**வினா எண் 48936—திருமதி மல்லிகா சின்னசாமி:** மாண்புமிகு செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

[2004 நவம்பர் 17

(அ) முசிறி தொகுதி, மண்ணச்சநல்லூர் பேரூராட்சி, 11-வது வார்டு, காமராஜர் காலனி சாலையில் பாலம் அமைத்துத் தர அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன், செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) திருச்சிராப்பள்ளி மாவட்டம், முசிறி தொகுதி, மண்ணச்சநல்லூர் பேரூராட்சி, 11-வது வார்டு, வடக்கு காமராஜர் காலனியில் தற்பொழுது 7 மீட்டர் நீளமும், 5 மீட்டர் அகலமும், 1 மீட்டர் விட்டமும் உள்ள 4 சிமெண்ட் ஏ.சி. பைப்புகளுடன் கூடிய பாலம் உள்ளது. மூன்று மாதங்களுக்கு முன்னர் அந்தப் பாலத்தில் சிறுபழுது ஏற்பட்டது. அது பேரூராட்சி மூலம் சரிசெய்யப்பட்டு தற்பொழுது பொதுமக்களுக்கு நல்லமுறையில் பயன்பாட்டில் உள்ளது.

**92—**

## காண்கிரீட் நடைபாதை

**வினா எண் 49126—திரு. கா. கந்தசாமி:** மாண்புமிகு செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

நீலகிரி மாவட்டம், உளிக்கல் பேரூராட்சி, சேலாஸ் ஆசிரியர் காலனியில், மலைப்பகுதி மேம்பாட்டுத் திட்டத்தின்கீழ் காண்கிரீட் நடைபாதை அமைக்க அரசு முன்வருமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன், செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

நீலகிரி மாவட்டம், உளிக்கல் பேரூராட்சி, சேலாஸ் ஆசிரியர் காலனியில் மலைப்பகுதி மேம்பாட்டுத் திட்டத்தின்கீழ் 2001-2002-ம் ஆண்டு பொது நிதியில் ரூ.1.00 இலட்சம் மதிப்பீட்டில் காண்கிரீட் நடைபாதை அமைக்கப்பட்டுள்ளது.



2004 நவம்பர் 17]

**93—**

## கழிப்பிட வசதி

**வினா எண் 49264—திரு. மு. கார்த்தி:** மாண்புமிகு செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

சேலம், சத்யா நகர்ப் பகுதியில் கழிப்பிட வசதி செய்ய அரசு நடவடிக்கை எடுக்குமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன், செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

சேலம், சத்யா நகர்ப் பகுதியில் சட்டமன்ற உறுப்பினர் தொகுதி வளர்ச்சித் திட்டத்தின்கீழ் நிதி ஒதுக்கீடு பெற்று கழிப்பிட வசதி செய்ய நடவடிக்கை மேற்கொள்ள வழிவகைகள் செய்யப்பட்டுள்ளன.

**94—**

## பிளாஸ்டிக் கழிவுகளை அகற்றுதல்

**வினா எண் 53020—திரு. கோவை தங்கம்:** மாண்புமிகு செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கோயம்புத்தூர் மாநகரில் அதிகமான இடங்களில் பிளாஸ்டிக் பொருட்கள் விற்பனை செய்யப்படுவதும், சாக்கடைகளில் தேங்கி மிக அதிக அளவில் கிடப்பதும் அரசுக்குத் தெரியுமா?

(ஆ) ஆம் எனில், அதைத் தடுக்க நடவடிக்கை எடுக்கப்படுமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன், செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) கோவை மாநகராட்சிப் பகுதியில் பிளாஸ்டிக் பொருட்கள் விற்பனை செய்யும் கடைகளில் திடீர் ஆய்வு மேற்கொள்ளப்பட்டு 20 மைக்ரான் அளவிற்குக் கீழே உள்ள பிளாஸ்டிக் பைகள், பிளாஸ்டிக் டம்ளர் மற்றும் மேஜை விரிப்புகள் ஆகிய பொருட்கள் பறிமுதல் செய்யப்பட்டு மாநகராட்சி குப்பைக் கிடங்கில்

அழிக்கப்பட்டு வருகின்றன. மேலும், பொதுமக்களால் சாக்கடையில் கொட்டப்படும் மற்ற பிளாஸ்டிக் பொருட்கள் அகற்றப்பட்டு சாக்கடையில் நீர் தேங்கி நிற்காதபடி சுத்தம் செய்யப்பட்டு வருகிறது.

**95—**

## விளையாட்டு மைதானம்

**வினா எண் 35701—டாக்டர் சி. விஜயபாஸ்கர்:** மாண்புமிகு விளையாட்டு மற்றும் இளைஞர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) புதுக்கோட்டை மாவட்டம், மஞ்சபேட்டை தெருவிற்கு விளையாட்டு மைதானம் அமைத்துத் தர அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. இன்பத்தமிழன், விளையாட்டு மற்றும் இளைஞர் நலத் துறை அமைச்சர்:**

(அ) புதுக்கோட்டை மாவட்டம், மஞ்சபேட்டை தெருவிற்கு விளையாட்டு மைதானம் அமைக்கும் திட்டம் ஏதும் அரசின் பரிசீலனையில் இல்லை.

(ஆ) நிலை எழவில்லை.

**96—**

## விளையாட்டு மைதானம்

**வினா எண் 48877—திரு. கோவை தங்கம்:** மாண்புமிகு விளையாட்டு மற்றும் இளைஞர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கோயம்புத்தூர் மாவட்டம், வால்பாறை தொகுதி, அர்த்தநாரிபாளையம், பெத்தநாயக்கனூர், ரமணமுதலிபூதூர், அங்களக்குறிச்சி, சம்பலாபட்டி, மஞ்சநாயக்கனூர், சின்னம்பாளையம், காளியாபுரம், சோமந்துறை, தென்சங்கம்பாளையம் மற்றும் கரியாசெட்டிபாளையம் ஊராட்சிகளுக்கு விளையாட்டு மைதானம் ஏற்படுத்த அரசு நடவடிக்கை எடுக்குமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?



**விடை—**

**மாண்புமிகு திரு. இன்பத்தமிழன், விளையாட்டு மற்றும் இளைஞர் நலத் துறை அமைச்சர்:**

(அ) கோயம்புத்தூர் மாவட்டம், வால்பாறை தொகுதி, அர்த்தநாரிபாளையம், பெத்தநாயக்கனூர், ரமணமுதலிபூதூர், அங்களக்குறிச்சி, சம்பலாபட்டி, மஞ்சநாயக்கனூர், சின்னம்பாளையம், காளியாபுரம், சோமந்துறை, தென்சங்கம்பாளையம் மற்றும் கரியாசெட்டிபாளையம் ஊராட்சிகளுக்கு விளையாட்டு மைதானம் ஏற்படுத்த செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் இல்லை.

(ஆ) நிலை எழவில்லை.

**97—**

## விளையாட்டு மைதானத்தைச் சீர்செய்தல்

**வினா எண் 48888—திரு. கோவை தங்கம்:** மாண்புமிகு விளையாட்டு மற்றும் இளைஞர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கோயம்புத்தூர் மாவட்டம், வால்பாறை தொகுதி, சோமந்துறை ஊராட்சி உயர்நிலைப் பள்ளிக்கு எதிரிலுள்ள விளையாட்டு மைதானத்தைச் சீர்படுத்த அரசு நடவடிக்கை எடுக்குமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. இன்பத்தமிழன், விளையாட்டு மற்றும் இளைஞர் நலத் துறை அமைச்சர்:**

(அ) கோயம்புத்தூர் மாவட்டம், வால்பாறை தொகுதி, சோமந்துறை ஊராட்சி உயர்நிலைப் பள்ளிக்கு எதிரிலுள்ள விளையாட்டு மைதானத்தைச் சீர்படுத்துவதற்கான நடவடிக்கை ஏதும் அரசின் பரிசீலனையில் இல்லை.

(ஆ) நிலை எழவில்லை.

98—

## விளையாட்டுச் சாதனங்கள் வழங்குதல்

**வினா எண் 49268—திரு. ஜெ. குரு என்கிற குருநாதன்:** மாண்புமிகு விளையாட்டு மற்றும் இளைஞர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) ஆண்டிமடம் தொகுதியில் ரெட்டிதத்தூரிலுள்ள இளைஞர்களுக்கு விளையாட்டை ஊக்குவிக்கும் வகையில் விளையாட்டுச் சாதனங்கள் வழங்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. இன்பத்தமிழன், விளையாட்டு மற்றும் இளைஞர் நலத் துறை அமைச்சர்:**

(அ) ஆண்டிமடம் தொகுதியில் ரெட்டிதத்தூரிலுள்ள இளைஞர்களுக்கு விளையாட்டை ஊக்குவிக்கும் வகையில் விளையாட்டுச் சாதனங்கள் வழங்கிட தற்போது வழிவகையில்லை.

(ஆ) நிலை எழவில்லை.

99—

## விளையாட்டு வளாகங்களை அமைத்தல்

**வினா எண் 51145—திரு. கா.தி. இளையகண்ணு:** மாண்புமிகு விளையாட்டு மற்றும் இளைஞர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) ஏற்காடு தொகுதியில் மலைப்பாங்கு மற்றும் பழங்குடியினர் வசிக்கும் பகுதிகளில் விளையாட்டு வளாகங்கள் அமைக்கும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், இத்திட்டத்திற்கு மைய அரசின் மானியம் வழங்கப்படுகிறதா?

**விடை—**

**மாண்புமிகு திரு. இன்பத்தமிழன், விளையாட்டு மற்றும் இளைஞர் நலத் துறை அமைச்சர்:**

(அ) ஏற்காடு தொகுதியில் மலைப்பாங்கு மற்றும் பழங்குடியினர் வசிக்கும் பகுதிகளில் விளையாட்டு வளாகங்கள் அமைக்கும் திட்டம் அரசின் பரிசீலனையில் இல்லை.

(ஆ) நிலை எழவில்லை.



100—

## விளையாட்டுப் பயிற்சியில் புதிய முறைகள்

**வினா எண் 51387—திரு. கோவை தங்கம்:** மாண்புமிகு விளையாட்டு மற்றும் இளைஞர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) விளையாட்டுப் போட்டிகளில் இளைஞர்கள் வெற்றி பெற, பயிற்சியில் புதிய முறைகளைக் கையாள அரசிடம் திட்டம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், விவரம் என்ன?

**விடை—**

**மாண்புமிகு திரு. இன்பத்தமிழன், விளையாட்டு மற்றும் இளைஞர் நலத் துறை அமைச்சர்:**

(அ) விளையாட்டுப் போட்டிகளில் இளைஞர்கள் வெற்றி பெற, பயிற்சியில் புதிய முறைகளைக் கையாள அரசிடம் திட்டம் உள்ளது.

(ஆ) தேசிய அளவில் மற்றும் பன்னாட்டு அளவில் பயிற்சி மற்றும் போட்டிகள் நடத்திட தேவையான கட்டமைப்பு வசதிகளை அரசு அமைத்துத் தந்துள்ளது.

சர்வதேச விளையாட்டு வீரர்களைக் கண்டறியும் திட்டத்தின்கீழ், மாநிலத்தில் உள்ள அனைத்துப் பள்ளிகளிலும் 6, 7 மற்றும் 8 வகுப்புகளில் பயிலும் சிறுவர், சிறுமியர்களுக்கு, தமிழ்நாட்டில் விளையாட்டினை வளர்ச்சி அடையச் செய்ய உடற்திறன் தேர்வு முடிவுகளின் அடிப்படையில், பள்ளி சிறுவர், சிறுமியர்களுக்கு விளையாட்டு முன்னேற்ற அறிக்கை வழங்கப்படுகிறது. அவர்களின் திறமைகளை மேம்படுத்திக்கொள்ள, மாநில அளவிலான விவரக் குறிப்பேட்டில் பதிவு செய்யப்பட்டு வருகிறது. இதனடிப்படையில் வேகமாக ஓடுதல், அதிகமாக தாக்குப்பிடிக்கும் திறனைக் கண்டறிதல், உடல் வலிமை கண்டறிதல், உந்து திறன் மற்றும் சுறுசுறுப்புத் திறனைக் கண்டறிதல் ஆகிய உடற்திறன் ஆற்றல் போட்டிகள் நடத்தப்பட்டு, தமிழ்நாட்டிலுள்ள 63 கல்வி மாவட்டங்களில் விளையாட்டுத் திறமை உடையவர்களைக் கொண்டு கல்வி மாவட்டங்கள் அனைத்தையும் ஒன்று சேர்த்து 9 மண்டலங்களில் தடகளப் போட்டிகள் நடத்தப்பட்டு வருகின்றன. கல்வி மாவட்ட அளவில் முதல் 2 (இரண்டு) இடங்களில்

வெற்றி பெற்றவர்களுக்கு, சிறந்த பயிற்சி அளிக்கப்பட்டு வருகிறது. இதற்கென தனியாக அகாடமி ஒன்றும் ஆரம்பிக்கப்பட்டு தலைசிறந்த பயிற்றுநர்களால் பயிற்சி அளிக்கப்பட்டு வருகிறது. சேம்பியன்களை உருவாக்க, தேசிய அளவில் முன்னிலை வகிக்கும் இளையோர் மற்றும் மிகவும் இளையோர்களைத் தேர்ந்தெடுத்து அவர்களின் தேவைக்கேற்ப உதவிகள் வழங்கப்பட்டு வருகின்றன. இத்திட்டத்தின்கீழ் பயன்பெறும் வீரர்கள் சர்வதேச அளவில் நடைபெறும் பயிற்சி மற்றும் விளையாட்டுப் போட்டிகளில் கலந்துகொண்டுள்ளார்கள்.

மேலும், கால்பந்து விளையாட்டில் ஆசிய கால்பந்து சம்மேளத்தின் பயிற்சியாளர்மூலம் நமது மாநிலத்தில் உள்ள கால்பந்து பயிற்றுநர்களுக்கு "சி" லைசென்ஸ் என்ற சர்வதேச அங்கீகாரம் பெற்ற பயிற்சியின்மூலம் பயிற்சி அளிக்கப்பட்டது. இந்தப் பயிற்சிபெற்ற கால்பந்து பயிற்றுநர்கள்மூலம் 14 வயதுக்குட்பட்ட கால்பந்து விளையாட்டு வீரர்களுக்கென தனியாக போட்டிகள் நடத்தப்பட்டு அதில் திறமையுள்ளவர்களைக் கண்டறிந்து அவர்களைக் கால்பந்து அகாடமியில் சேர்த்துக்கொண்டு விஞ்ஞான ரீதியாக பயிற்சி அளிக்கப்படுகிறது.

இந்தியாவில் தமிழகத்தில், சென்னையில்தான் 'சர்வதேச கையுந்துபந்து தென்னாசிய மண்டலப் பயிற்சி மையம்' அமைந்துள்ளது. அப்பயிற்சி மையத்தில் கையுந்து பயிற்றுநர்களுக்குப் பயிற்சி அளிக்கப்பட்டு, பயிற்சிபெற்ற பயிற்றுநர்கள், நவீன முறையில் மாணவ, மாணவியர்களுக்கு பயிற்சி அளித்து வருகின்றனர்.

இதுபோன்று பல விளையாட்டுகளிலும், சர்வதேச அங்கீகாரம் பெற்ற பயிற்சி வகுப்புகள் நடக்கும்போது, தமிழக பயிற்றுநர்கள், பயிற்சிக்கு அனுப்பப்பட்டு, புதிய நுட்பங்களை அறிந்து பயிற்சி அளிக்க வாய்ப்பு வசதி ஏற்படுத்தப்பட்டு வருகிறது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினாக்கள் விடைகள் முடிவுற்றன.

[**குறிப்பு:** ஓர் உரையின் தொடக்கத்தில் (*) உடுக்குறி இடம்பெற்றிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பெற்றது என்பதைக் குறிக்கும்.]





## 3. விதி 110-ன்கீழ் அறிக்கை

### காஞ்சிபுரம் வரதராஜப் பெருமாள் கோவிலில் சங்கரராமன் படுகொலையும், ஜெயேந்திர சரஸ்வதி சுவாமிகள் கைதும் குறித்து மாண்புமிகு முதலமைச்சரின் அறிக்கை

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பேரவை விதி 110-ன்கீழ் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அறிக்கை ஒன்றினை அளிக்க அனுமதி கோரியுள்ளார்கள். (குறுக்கீடு) கொஞ்சம் பொறுங்கள், கொஞ்சம் பொறுங்கள், திரு. எஸ்.ஆர்.பி. அவர்கள் கொஞ்சம் பொறுங்கள். (குறுக்கீடு) மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுடைய அறிக்கைக்குப் பிறகு நீங்கள் கேட்பதற்கு நான் அனுமதிக்கிறேன். (குறுக்கீடு) மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுடைய அறிக்கைக்குப் பிறகு நீங்கள் கேட்பதற்கு அனுமதிக்கிறேன். (குறுக்கீடு) மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் பேரவை விதி 110-ன்கீழ் அறிக்கை ஒன்றை அளிக்க அனுமதி கோரியுள்ளார்கள். அனுமதி அளிக்கப்படுகிறது. மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள். (குறுக்கீடு) அவர்கள் அறிக்கை கொடுத்ததற்குப்பிறகு நான் கேட்கிறேன். (குறுக்கீடுகள்)

**திரு. எச். ராஜா:** **

***மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 3-9-2004 அன்று காஞ்சிபுரம் வரதராஜப் பெருமாள் கோவிலின் மேலாளரான திரு. சங்கரராமன் என்பவர் அந்தக் கோவிலின் உள்ளே உள்ள தனது அலுவலகத்தில் பட்டப்பகலில் படுகொலை செய்யப்பட்டார். (குறுக்கீடுகள்) பட்டப்பகலில் ஒரு கோவிலுக்குள் இப்படி ஒரு கொடூரக் கொலை நடந்ததை அறிந்து பொதுமக்கள் மிகப் பெரும் அதிர்ச்சி அடைந்தனர். (குறுக்கீடுகள்) காஞ்சி வரதராஜப் பெருமாள் கோவில் பணியாளரான திரு. கணேஷ் என்பவர் அளித்த.. (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ராஜா, மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் நீங்கள் எழுப்பிய கேள்வி தொடர்பாகத்தான் அறிக்கையை அவையிலே அளித்துக்கொண்டிருக்கிறார்கள். அவர்கள் அறிக்கையைத் தருகின்ற வரைக்கும், அவர்கள் பேசி முடிக்கிற வரைக்கும் கொஞ்சம் பொறுமையாக இருங்கள். (குறுக்கீடுகள்)

**திரு. எச். ராஜா:** **

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.

வெற்றி பெற்றவர்களுக்கு, சிறந்த பயிற்சி அளிக்கப்பட்டு வருகிறது. இதற்கென தனியாக அகாடமி ஒன்றும் ஆரம்பிக்கப்பட்டு தலைசிறந்த பயிற்றுநர்களால் பயிற்சி அளிக்கப்பட்டு வருகிறது. சேம்பியன்களை உருவாக்க, தேசிய அளவில் முன்னிலை வகிக்கும் இளையோர் மற்றும் மிகவும் இளையோர்களைத் தேர்ந்தெடுத்து அவர்களின் தேவைக்கேற்ப உதவிகள் வழங்கப்பட்டு வருகின்றன. இத்திட்டத்தின்கீழ் பயன்பெறும் வீரர்கள் சர்வதேச அளவில் நடைபெறும் பயிற்சி மற்றும் விளையாட்டுப் போட்டிகளில் கலந்துகொண்டுள்ளார்கள்.

மேலும், கால்பந்து விளையாட்டில் ஆசிய கால்பந்து சம்மேளனத்தின் பயிற்சியாளர்மூலம் நமது மாநிலத்தில் உள்ள கால்பந்து பயிற்றுநர்களுக்கு "சி" லைசென்ஸ் என்ற சர்வதேச அங்கீகாரம் பெற்ற பயிற்சியின்மூலம் பயிற்சி அளிக்கப்பட்டது. இந்தப் பயிற்சிபெற்ற கால்பந்து பயிற்றுநர்கள்மூலம் 14 வயதுக்குட்பட்ட கால்பந்து விளையாட்டு வீரர்களுக்கென தனியாக போட்டிகள் நடத்தப்பட்டு அதில் திறமையுள்ளவர்களைக் கண்டறிந்து அவர்களைக் கால்பந்து அகாடமியில் சேர்த்துக்கொண்டு விஞ்ஞான ரீதியாக பயிற்சி அளிக்கப்படுகிறது.

இந்தியாவில் தமிழகத்தில், சென்னையில்தான் சர்வதேச கையுந்துபந்து தென்னாசிய மண்டலப் பயிற்சி மையம் அமைந்துள்ளது. அப்பயிற்சி மையத்தில் கையுந்து பயிற்றுநர்களுக்குப் பயிற்சி அளிக்கப்பட்டு, பயிற்சிபெற்ற பயிற்றுநர்கள், நவீன முறையில் மாணவ, மாணவியர்களுக்கு பயிற்சி அளித்து வருகின்றனர்.

இதுபோன்று பல விளையாட்டுகளிலும், சர்வதேச அங்கீகாரம் பெற்ற பயிற்சி வகுப்புகள் நடக்கும்போது, தமிழக பயிற்றுநர்கள், பயிற்சிக்கு அனுப்பப்பட்டு, புதிய நுட்பங்களை அறிந்து பயிற்சி அளிக்க வாய்ப்பு வசதி ஏற்படுத்தப்பட்டு வருகிறது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினாக்கள் விடைகள் முடிவுற்றன.

[**குறிப்பு:** ஓர் உரையின் தொடக்கத்தில் (*) உடுக்குறி இடப்பெற்றிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பெற்றது என்பதைக் குறிக்கும்.]



# 3. விதி 110-ன்கீழ் அறிக்கை

## காஞ்சிபுரம் வரதராஜப் பெருமாள் கோவிலில் சங்கரராமன் படுகொலையும், ஜெயேந்திர சரஸ்வதி சுவாமிகள் கைதும் குறித்து மாண்புமிகு முதலமைச்சரின் அறிக்கை

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பேரவை விதி 110-ன்கீழ் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அறிக்கை ஒன்றினை அளிக்க அனுமதி கோரியுள்ளார்கள். (குறுக்கீடு) கொஞ்சம் பொறுங்கள், கொஞ்சம் பொறுங்கள், திரு. எஸ்.ஆர்.பி. அவர்கள் கொஞ்சம் பொறுங்கள். (குறுக்கீடு) மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுடைய அறிக்கைக்குப் பிறகு நீங்கள் கேட்பதற்கு நான் அனுமதிக்கிறேன். (குறுக்கீடு) மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுடைய அறிக்கைக்குப் பிறகு நீங்கள் கேட்பதற்கு அனுமதிக்கிறேன். (குறுக்கீடு) மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் பேரவை விதி 110-ன்கீழ் அறிக்கை ஒன்றை அளிக்க அனுமதி கோரியுள்ளார்கள். அனுமதி அளிக்கப்படுகிறது. மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள். (குறுக்கீடு) அவர்கள் அறிக்கை கொடுத்ததற்குப்பிறகு நான் கேட்கிறேன். (குறுக்கீடுகள்)

**திரு. எச். ராஜா:** **

***மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 3-9-2004 அன்று காஞ்சிபுரம் வரதராஜப் பெருமாள் கோவிலின் மேலாளரான திரு. சங்கரராமன் என்பவர் அந்தக் கோவிலின் உள்ளே உள்ள தனது அலுவலகத்தில் பட்டப்பகலில் படுகொலை செய்யப்பட்டார். (குறுக்கீடுகள்) பட்டப்பகலில் ஒரு கோவிலுக்குள் இப்படி ஒரு கொடூரக் கொலை நடந்ததை அறிந்து பொதுமக்கள் மிகப் பெரும் அதிர்ச்சி அடைந்தனர். (குறுக்கீடுகள்) காஞ்சி வரதராஜப் பெருமாள் கோவில் பணியாளரான திரு. கணேஷ் என்பவர் அளித்த.. (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ராஜா, மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் நீங்கள் எழுப்பிய கேள்வி தொடர்பாகத்தான் அறிக்கையை அவையிலே அளித்துக்கொண்டிருக்கிறார்கள். அவர்கள் அறிக்கையைத் தருகின்ற வரைக்கும், அவர்கள் பேசி முடிக்கிற வரைக்கும் கொஞ்சம் பொறுமையாக இருங்கள். (குறுக்கீடுகள்)

**திரு. எச். ராஜா:** **

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.

[2004 நவம்பர் 17

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இல்லை. நீங்கள் பேசியது அனைத்தும் அவைக் குறிப்பிலிருந்து நீக்கப்படுகிறது. மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள். (குறுக்கீடுகள்) அவையின் நடவடிக்கைகளுக்கு தயவுசெய்து குந்தகம் விளைவிக்காதீர்கள். மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் உரிய அறிக்கையைப் படித்ததற்குப் பிறகு தேவைப்பட்டால் அதை பிறகு எடுத்துக்கொள்வது பற்றி யோசிக்கலாம். (குறுக்கீடுகள்) ராஜா, தயவுசெய்து உட்காருங்கள், ராஜா, தயவுசெய்து உட்காருங்கள்.

(பாரதிய ஜனதா கட்சி உறுப்பினர்கள் எழுந்து நின்று கோஷம் எழுப்பினர்.)

(இந்திய கம்யூனிஸ்ட் கட்சி மற்றும் மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி உறுப்பினர்கள் எழுந்து நின்று கோஷம் எழுப்பினர்.)

திரு. ஹேமச்சந்திரன், உட்காருங்கள். (குறுக்கீடுகள்) மாண்புமிகு உறுப்பினர்கள் அவை நடவடிக்கைக்குக் குந்தகம் விளைவிக்கக் கூடாது. (குறுக்கீடுகள்) தயவுசெய்து அமருங்கள். (குறுக்கீடுகள்). திரு. ராஜா, கருணாகரன், சிவபுண்ணியம், நீங்களெல்லாம் கண்ணியமான உறுப்பினர்கள். பேரவைத் தலைவர் எழுந்து நிற்கின்றபோது தயவுசெய்து உட்காருங்கள். பேரவைத் தலைவர் எழுந்து நிற்கிறபோது தயவுசெய்து உட்கார வேண்டும். (குறுக்கீடுகள்) தயவுசெய்து உட்காருங்கள். (குறுக்கீடுகள்) தயவுசெய்து உட்காருங்கள். ராஜா அவர்கள் தயவுசெய்து உட்காருங்கள். (குறுக்கீடுகள்) கம்யூனிஸ்ட் இயக்கத்தைச் சார்ந்த சகோதரர்கள் இப்படிக் குழப்பம் விளைவித்தால் நடவடிக்கை எடுக்க வேண்டிய நிலைமை வரும். திரு. பழனிசாமி, உங்கள் தோழர்களுக்குச் சொல்லுங்கள். (குறுக்கீடுகள்)

(முற்பகல் 11-05

(பாரதிய ஜனதா கட்சி, இந்திய கம்யூனிஸ்ட் கட்சி மற்றும் மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி உறுப்பினர்கள் கோஷமிட்டுக் கொண்டிருந்தனர்.)

**திரு. எச். ராஜா:** **

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** ராஜா அவர்கள் தயவுசெய்து அமருங்கள். (குறுக்கீடுகள்) தயவுசெய்து அமருங்கள். நீங்கள் எழுப்புகிற கோஷங்கள் அனைத்தும் அவைக் குறிப்பிலிருந்து நீக்கப்படுகின்றன. அவை நடவடிக்கைகளுக்குப் புறம்பாக நீங்கள் எழுப்புகிற கோஷங்கள்

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.



2004 நவம்பர் 17] [பேரவைத் தலைவர்]

அனைத்தும் அவைக் குறிப்பிலிருந்து நீக்கப்படுகின்றன. உட்காருங்கள் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் உரிய அறிக்கையைப் படிக்க இருக்கிறார்கள். தயவுசெய்து உட்காருங்கள். (குறுக்கீடுகள்) அறிக்கை படிக்கிறபோது குறுக்கிடக் கூடாது. தயவுசெய்து உட்காருங்கள். (குறுக்கீடுகள்) தயவுசெய்து உட்காருங்கள். (குறுக்கீடுகள்) அவை நடவடிக்கைகளுக்குக் குந்தகம் விளைவிக்கின்ற காரணத்தால் நான் நடவடிக்கை எடுக்க வேண்டிய சூழ்நிலை வரும். தயவுசெய்து அமருங்கள். ராஜா அவர்கள் தயவுசெய்து அமருங்கள்.

**திரு. வை. சிவபுண்ணியம்:** **

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** சிவபுண்ணியம், தாங்கள் பேசுவது எதுவும் அவைக் குறிப்பில் ஏறாது. மாண்புமிகு முதலமைச்சர் அவர்களை அறிக்கையைப் படிப்பதற்கு அனுமதி அளித்து அவர்களை அழைத்திருக்கிறேன். நீங்கள் எழுப்புகிற கோஷம் எதுவும் அவைக் குறிப்பில் ஏறாது. தயவுசெய்து உட்காருங்கள்.

**திரு. எச். ராஜா:** **

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** ராஜா அவர்கள் தயவுசெய்து உட்காருங்கள். (குறுக்கீடு) ராஜா அவர்களுக்கு நான் எச்சரிக்கை விடுக்கிறேன். தயவுசெய்து உட்காருங்கள். (குறுக்கீடு) இல்லாவிட்டால் நடவடிக்கை எடுக்க வேண்டிவரும். நீங்கள் பேசியது எதுவும் அவைக் குறிப்பில் ஏறாது. (குறுக்கீடு) ராஜா அவர்கள் தொடர்ந்து குழப்பம் விளைவித்தால் நடவடிக்கை எடுக்க வேண்டிய நிலைமை வரும். எச்சரிக்கிறேன், தயவுசெய்து உட்காருங்கள்.

**மாண்புமிகு திரு. டி. ஜெயக்குமார்:** வழக்கு நீதிமன்றத்தில் இருக்கிறபோது இங்கே விவாதிக்க முடியாது.

**திரு. எச். ராஜா:** **

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** ராஜா அவர்கள் தயவுசெய்து அமருங்கள். தொடர்ந்து குழப்பம் விளைவித்தால்... (குறுக்கீடு) ராஜா தயவுசெய்து அவையைவிட்டு வெளியேறுங்கள். தயவுசெய்து அவையைவிட்டு வெளியேறுங்கள். (குறுக்கீடு)

**திரு. எச். ராஜா:** **

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** ராஜா அவர்கள், தாங்கள் பேசியது எதுவும் அவைக் குறிப்பில் ஏறாது. தாங்கள் அமராவிட்டால் அவையைவிட்டு நானே வெளியேற்ற வேண்டிய நிலைமை வரும். தயவுசெய்து அமருங்கள்.

**திரு. எச். ராஜா:** **

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** தொடர்ந்து குழப்பம் விளைவிக்கின்ற காரணத்தால் ராஜா அவர்களை அவையிலே இருந்து வெளியேற்ற வேண்டுமென்று அவைக் காவலர்களுக்கு நான் உத்தரவிடுகிறேன். மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள். (குறுக்கீடுகள்) ராஜா அவர்களை அவைக் காவலர்கள் வெளியேற்ற வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

(அவைக் காவலர்கள் உறுப்பினர் திரு. ராஜா அவர்களை அவையிலிருந்து வெளியேற்றினர்.)

(மற்ற பாரதிய ஜனதா கட்சி உறுப்பினர்கள் அனைவரும் அவையிலிருந்து வெளியேறினர்.)

**மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 3-9-2004 அன்று, காஞ்சிபுரம் வரதராஜப் பெருமாள் கோவிலின் மேலாளரான, திரு. சங்கரராமன் என்பவர், அந்தக் கோவிலின் உள்ளே உள்ள தனது அலுவலகத்தில், பட்டப்பகலில் படுகொலை செய்யப்பட்டார். பட்டப்பகலில் ஒரு கோவிலுக்குள் இப்படி ஒரு கொடூரக் கொலை நடந்தது அறிந்து பொதுமக்கள் மிகப் பெரும் அதிர்ச்சி அடைந்தனர். காஞ்சி வரதராஜப் பெருமாள் கோவில் பணியாளரான, திரு. கணேஷ் என்பவர் அளித்த குற்ற முறையீட்டின் மீது விஷ்ணு காஞ்சி காவல் நிலையத்தில் வழக்குப் பதிவு செய்யப்பட்டு புலன் விசாரணை மேற்கொள்ளப்பட்டது.

காஞ்சிபுரம் மாவட்டம், மதுவிலக்கு அமல் பிரிவு கூடுதல் காவல் கண்காணிப்பாளர் திரு. சக்திவேலு அவர்கள் தலைமையில், 29 பேர் கொண்ட தனிப்படை அமைக்கப்பட்டு வழக்கு விசாரணை மேற்கொள்ளப்பட்டது.

** மாண்புமிகு போவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.



முற்பகல் 11-10

இந்த வழக்கு விசாரணை காஞ்சிபுரம், கடலூர் மற்றும் திருவள்ளூர் மாவட்டங்களின் காவல் துறைக் கண்காணிப்பாளர்களின் மேற்பார்வையில் நடைபெற்று வருகிறது. இந்தப் புலன் விசாரணையின்போது, கொலை செய்யப்பட்டவரின் வீட்டிலிருந்து கொலைக்கான ஆதார நோக்கங்களை வெளிப்படுத்துகின்ற பல ஆவணங்கள் கைப்பற்றப்பட்டன. இந்த ஆவணங்களும் சாட்சிகளிடம் மேற்கொண்ட விசாரணைகளும், காஞ்சி சங்கர மடத்தின் தலைமைப் பொறுப்பில் இருக்கும் ஸ்ரீ ஜெயேந்திர சரஸ்வதி சுவாமிகளுக்கு இந்தக் கொலையில் தொடர்புள்ளது என்பதை வெளிப்படுத்தியுள்ளன.

27-10-2004 அன்று, சென்னை ஜார்ஜ் டவுன் 15-வது பெருநகர நடுவர் நீதிமன்றத்தில், அதாவது, 15-வது Metropolitan Magistrate Court-ல் பாண்டியன் என்கிற தில் பாண்டியன், ஆறுமுகம், சதீஷ், தேவராஜ் மற்றும் அருண் ஆகிய 5 நபர்கள் சரணடைந்தனர். இவ்வாறு சரணடைந்தவர்களிடம் நடத்தப்பட்ட நேரடி விசாரணை மற்றும் அவர்களைப் பற்றிய புலன் விசாரணை ஆகியவை, குறிப்பிட்ட கொலைக் குற்றத்தில் இந்த நபர்கள் சம்பந்தப்பட்டவர்கள் இல்லை என்பதையும், இவர்களுக்குப் பணத்தாசை காட்டி போலியாக சரண் நாடகம் நடத்தப்பட்டுள்ளது என்பதையும், உண்மையான குற்றவாளிகளை நோக்கி விசாரணை நடத்தப்படுவதை திசை திருப்பும் வகையில் மேற்கொள்ளப்பட்ட செயல்தான் இது என்பதையும் தெளிவுபட வெளிப்படுத்தின. இந்த 5 நபர்களும் இந்திய தண்டனைச் சட்டப் பிரிவு 201-ன்கீழ் மேற்படி வழக்கில் குற்றம் சாட்டப்பட்டு 5-11-2004 அன்று நீதிமன்றக் காவலில் வைக்கப்பட்டனர்.

இதனைத் தொடர்ந்து, இந்தச் சரண் நாடகத்திற்கு ஏற்பாடு செய்தவர்களைப் பற்றி விசாரணை மேற்கொண்டதில், இது தொடர்பாக, பழனி, குருவி ரவி, சேகர் மற்றும் சுந்தரம் ஆகியோர் கைது செய்யப்பட்டு இந்திய தண்டனைச் சட்டம் 201, 120 (B) ஆகிய பிரிவுகளின்கீழ் குற்றம் சாட்டப்பட்டு, 6-11-2004 அன்று காவலில் வைக்கப்பட்டனர். மேற்கண்ட நபர்களிடம் தொடர்ந்து நடத்தப்பட்ட நேரடி விசாரணை மற்றும் புலன் விசாரணை மூலம் பெறப்பட்ட தகவலின் அடிப்படையில், இந்தக் கொலையில் நேரடித் தொடர்புடைய குமார் மற்றும் ஆனந்த் ஆகியோர் இந்திய தண்டனைச் சட்டப் பிரிவு 302-ன்கீழ், 7-11-2004 அன்று கைது செய்யப்பட்டு காவலில் வைக்கப்பட்டனர்.

8-11-2004 அன்று போலியான நபர்கள் சரண் அடைந்திட ஏற்பாடுகள் செய்த செந்தில் குமார் மற்றும் ஆறுமுகம் ஆகிய இருவர் கைது செய்யப்பட்டனர். வழக்கின் முக்கியக் குற்றவாளிகளைக் காப்பாற்றும் நோக்கில், இந்த வழக்கின் போக்கை திசை திருப்பிட, போலிச் சரண் நாடகத்தை நடத்திய குற்றத்துக்காக இந்திய தண்டனைச் சட்டம் 201, 120(B) ஆகிய பிரிவுகளின்கீழ் அவர்கள் கைது செய்யப்பட்டு நீதிமன்றக் காவலில் வைக்கப்பட்டனர்.

9-11-2004 அன்று, முக்கியக் குற்றவாளிகளில் இருவரான சென்னையைச் சேர்ந்த கதிரவன் மற்றும் ரஜினி ஆகியோர் விசாரணைக் குழுவால் இந்திய தண்டனைச் சட்டம் 302, 120 (B) ஆகிய பிரிவுகளின்கீழ் கைது செய்யப்பட்டனர். இருவரும் 10-11-2004 அன்று நீதிமன்றக் காவலில் வைக்கப்பட்டனர். அவர்களிடம் நடத்தப்பட்ட நேரடி விசாரணை, அவர்கள் தந்த வாக்குமூலங்கள் மற்றும் அவர்களிடமிருந்து கைப்பற்றப்பட்ட பல்வேறு பொருட்கள் மூலம், திரு. சங்கரராமன் கொடூரமாகக் கொல்லப்பட்டதிலும், இவ்வாறு கொலை செய்ததற்குக் கூலியாக காஞ்சி மடத்தின் வங்கிக் கணக்கிலிருந்து பெரும் தொகை கை மாறியதிலும், வழக்கின் போக்கைத் திசை திருப்பும் தந்திரமாக குற்றம் செய்ததாகப் பொய்யாக ஒப்புதல் அளித்து 5 போலி நபர்கள் சரண் அடைந்ததிலும், கொலைக் கூட்டாளிகளுடன் தொலைபேசி மூலம் உரையாடியதிலும், காஞ்சி சங்கர மடத்தின் தலைமைப் பொறுப்பிலிருக்கும் ஸ்ரீ ஜெயேந்திர சரஸ்வதி சுவாமிகளுக்கு உள்ள தொடர்பு பற்றிய திடுக்கிடும் உறுதியான தகவல்கள் கிடைக்கப்பெற்றன.

இதே நேரத்தில், திரு. ராதாகிருஷ்ணன் என்பவர் மீதும், அவரது மனைவி மற்றும் அவர்களது பணியாளர் ஆகியோர் மீதும், 20-9-2002 அன்று கொடூரத் தாக்குதல் நடத்தப்பட்டது குறித்து E-5, பட்டினப்பாக்கம் காவல் நிலையத்தில் இந்திய தண்டனைச் சட்டம், 452, 324 மற்றும் 307 ஆகிய பிரிவுகளின்கீழ் பதிவு செய்யப்பட்ட குற்ற எண் 859/2002 கொண்ட வழக்கிலும், ஸ்ரீ ஜெயேந்திர சரஸ்வதி சுவாமிகளுக்குத் தொடர்பு உள்ளது என்பதை விசாரணை வெளிப்படுத்தியது.

திரு. ராதாகிருஷ்ணன், முன்னர், காஞ்சி சங்கர மடத்தின் பக்தராக இருந்தவர் ஆவார். 20-9-2002 அன்று அவர் வீட்டில் இருந்தபோது, அங்கு வைத்தே 2 மர்ம நபர்கள் அவர்மீது கொலைவெறித் தாக்குதல் நடத்தினர். இந்தத் தாக்குதலின்போது, அவரது மனைவியும்,



பணியாளரும்கூட கடுமையாகக் காயமுற்றனர். இந்த வழக்கில் மேற்கொள்ளப்பட்ட விசாரணையில் சோமசேகர கனபாடிகள் என்ற பெயரில் தனக்கு எதிராக கடுமையான குற்றச்சாட்டுகளைக் கூறி மொட்டைக் கடிதங்கள் அனுப்பப்படுவதற்கு திரு. ராதாகிருஷ்ணன்தான் காரணம் என்று ஸ்ரீ ஜெயேந்திர சரஸ்வதி சுவாமிகள் சந்தேகப்பட்டது புலனாகியது.

முற்பகல் 11-15

மேலும், திரு. ராதாகிருஷ்ணனை ஒழித்துக்கட்ட ஸ்ரீ ஜெயேந்திர சரஸ்வதி சுவாமிகள் தன்னுடைய கையாட்களோடும், கூட்டாளிகளோடும் சதி செய்தார் என்பதும் புலனாகியது. இந்த வழக்கும் திரு. சங்கரராமன் கொலை வழக்கு போன்றதே என்பதால், அதே குழுவால் விசாரணை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

11-11-2004 அன்று இரவு 10 மணிக்கு ஆந்திர மாநிலத்தில் அவர் தங்கியிருந்த மெகபூப் நகரில் வைத்து, சட்டம் ஒழுங்குப் பிரச்சினைகள் எதுவும் ஏற்படாத வண்ணம் ஆந்திர மாநில காவல் துறையின் உதவியுடன் ஸ்ரீ ஜெயேந்திர சரஸ்வதி சுவாமிகள் கைது செய்யப்பட்டார். 12-11-2004 அன்று காலை 6-30 மணிக்கு காஞ்சிபுரம் முதலாம் குற்றவியல் நீதிபதி முன்னர் ஆஜர்படுத்தப்பட்டார். அன்றையதினமே காலை 9-00 மணிக்கு வேலூர் மத்திய சிறைச்சாலையில் காவலில் வைக்கப்பட்டார். அவருக்குரிய மரியாதையும், மதிப்பும் வழங்கப்பட்டது. எந்த நிலையிலும் அவர் துன்புறுத்தப்படவில்லை.

ஸ்ரீ ஜெயேந்திர சரஸ்வதி சுவாமிகள் கைது செய்யப்பட்டது; கைது செய்யப்பட்ட இடத்திலிருந்து அழைத்து வரப்பட்டது; விசாரணைக்கு ஆஜர்படுத்தப்பட்டது; மத்திய சிறைச்சாலையில் வைக்கப்பட்டது ஆகிய அனைத்து நடவடிக்கைகளும் சட்டத்தின் முறையான நடைமுறைப்படியே மேற்கொள்ளப்பட்டன.

இதற்கிடையில் 5-11-2004 அன்று திருவொற்றியூர் குற்றவியல் நீதிபதி முன்னர், திரு. சங்கரராமனைக் கொலை செய்ததில் தேடப்பட்டு வருபவர்களில் ஒருவரான 'மாடு' பாஸ்கர் என்பவர் சரணடைந்தார். இவரிடம் காவல் விசாரணை விரைவில் நடத்தப்பட உள்ளது.

ரவி சுப்ரமணியம், அப்பு என்கிற கிருஷ்ணசாமி மற்றும் கதிரவன் ஆகியோரின் துணையுடன் திரு. சங்கரராமனை கொலை செய்திட ஸ்ரீ ஜெயேந்திர சரஸ்வதி சுவாமிகள் சதி செய்தார் என்பது

விசாரணையில் புலனாகியுள்ளது. கைதில் இருந்து தப்பித்துவிட வேண்டும் என்பதற்காக தலைமறைவாக இருக்கும் ரவி சுப்ரமணியத்தையும், அப்பு என்கிற கிருஷ்ணசாமியையும் தேடிக் கண்டுபிடித்து கைது செய்திட சிறப்புப் படைகள் பணியில் ஈடுபடுத்தப்பட்டுள்ளன.

இந்தக் கொலையைச் செய்வதற்காகவும் பொய் வாக்குமூலம் அளித்து போலிகள் சரணடைந்த நாடகத்தை நடத்துவதற்காகவும் ஏராளமான பணம் கைமாறியிருக்கிறது என்பதும் புலன் விசாரணையில் தெரிய வந்துள்ளது. ஆனால், இந்த அரசுக்குக் களங்கம் கற்பிக்க வேண்டும் என்ற எண்ணத்துடன், உண்மைக் குற்றவாளிகளைக் காப்பாற்ற வேண்டுமென்ற நோக்கத்துடன்தான், இந்த அரசு காஞ்சிபுர மாவட்டக் காவல் துறைக் கண்காணிப்பாளராக இருந்த திரு. கே. பிரேம்குமார் அவர்களை காஞ்சிபுரத்திலிருந்து கடலூர் மாவட்டக் காவல் துறைக் கண்காணிப்பாளராக மாறுதல் செய்தது என்று ஒருசிலர் கூறியுள்ளார்கள். திரு. கே. பிரேம்குமார் காஞ்சிபுரம் மாவட்டத்திலிருந்து மாறுதல் செய்யப்பட்ட ஆணை, உள் துறையால் 2-9-2004 அன்றே, அதாவது திரு. சங்கரராமன் கொலை செய்யப்படுவதற்கு முதல் நாளே, வெளியிடப்பட்டுவிட்டது என்பதுதான் உண்மை. அதாவது, திரு. கே. பிரேம்குமார் மாறுதல் செய்யப்பட்ட ஆணை 2-9-2004 அன்று வெளியிடப்பட்டது. 3-9-2004 அன்றுதான் அதாவது, அடுத்த நாள்தான் திரு. சங்கரராமன் கொலை செய்யப்பட்டார். திரு. கே. பிரேம்குமார், திரு. சங்கரராமன் கொலை செய்யப்பட்ட பின்னர் 9-9-2004 அன்று கடலூர் மாவட்டக் காவல் துறைக் கண்காணிப்பாளராகப் பொறுப்பேற்றார். ஆனாலும், தொடர் நடவடிக்கைக்காக, இந்தக் கொலை தொடர்பான விசாரணை திரு. பிரேம்குமார் தலைமையில்தான் நடைபெற்று வருகிறது. இந்த வழக்கின் சிறப்புத் தன்மையைக் கருத்தில்கொண்டு, காஞ்சிபுரம், கடலூர் மற்றும் திருவள்ளூர் மாவட்டக் காவல் துறைக் கண்காணிப்பாளர்களைக் கொண்ட ஒரு சிறப்புக் குழு விசாரணையின் மேற்பார்வைக்காக நியமிக்கப்பட்டது. இந்தக் கண்காணிப்பாளர்களின் மேற்பார்வையில்தான் தற்போதும் விசாரணை நடைபெற்று வருகிறது.

இந்த நடவடிக்கைகளைத் தொடர்ந்து, தமிழ்நாட்டில் எந்தவித சட்டம் ஒழுங்குப் பிரச்சினைகளும் எழவில்லை. அச்சமோ, விருப்பு வெறுப்போ ஏதும் இன்றி, இந்த அரசு சட்டத்தின் ஆட்சியை நிலை நிறுத்தி இருக்கிறது. இந்தப் பிரச்சினையில், சட்டத்தின்முன் அனைவரும் சமம் என்ற கொள்கையை மிகுந்த உறுதியுடன் தமிழ்நாடு





அரசு செயல்படுத்தி உள்ளது என்பதுதான் பொதுமக்களின் கருத்தாகும். (மேசையைத் தட்டும் ஒலி)

சுமார் 2,500 வருடங்கள் பழம் பெருமை வாய்ந்த, பாரம்பரியமிக்க, காஞ்சி மடத்தின்மீது இந்த அரசுக்கு எப்பொழுதுமே மதிப்பும், மரியாதையும் உள்ளது. தற்போது உள்ள சூழ்நிலையில், காஞ்சி மடத்தின் நிர்வாகத்தை அரசே ஏற்று நடத்த வேண்டும் என்னும் பொருள்பட ஒரு சிலர் பேசி வருகின்றனர். காஞ்சி மடத்தின் நிர்வாகத்தை எடுத்துக்கொள்ளும் எண்ணம் எதுவும் இந்த அரசுக்கு அறவே கிடையாது. காஞ்சி மடம், தொடர்ந்து இந்து மதத்தின் பாரம்பரியத்தையும், கோட்பாடுகளையும் பேணிக் காக்க வேண்டும் என்பதுதான் எனது அரசின் விருப்பம் ஆகும்.

முற்பகல் 11-20

பெருமைமிகு காஞ்சி மடத்திற்கு எவ்வித அவப்பெயரும் ஏற்படக்கூடாது என்று இந்த அரசு எண்ணுகிறது. புனிதப் பாரம்பரியம் படைத்த காஞ்சி மடத்தை முடக்கும் எண்ணமோ அல்லது அதன் நிர்வாகத்தை எடுத்துக்கொள்ளும் எண்ணமோ இந்த அரசுக்குக் கிஞ்சித்தும் இல்லை என்பதைத் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

ஸ்ரீ ஜெயேந்திர சரஸ்வதி சுவாமிகள் மீது காவல் துறை நடவடிக்கை மேற்கொண்டதன்மூலம், சட்டத்தின்முன் உயர்ந்தவர், தாழ்ந்தவர் என்று எவரும் இல்லை; அனைவரும் சமமே என்பதை எனது அரசு நிலைநிறுத்தியுள்ளது என்று பலர் பாராட்டுகிறார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) செல்வாக்குமிக்க ஒரு மதத் தலைவரைக் கைது செய்யலாமா? இது சரியா? என்று சிலர் கேட்கிறார்கள். கைது செய்தால் பாராட்டுவார்கள் என்று எதிர்பார்த்தோ அல்லது கைது செய்யாவிட்டால் பழி சொல்வார்கள் என்று அஞ்சியோ எனது அரசு இந்த நடவடிக்கையை மேற்கொள்ளவில்லை. (மேசையைத் தட்டும் ஒலி) சட்டத்தின்முன் அனைவரும் சமம் என்ற அடிப்படையில்தான் இந்த நடவடிக்கையை என்னுடைய தலைமையிலான அரசு மேற்கொண்டுள்ளது. சட்டமன்றப் பேரவை கூட்டப்படும் நாள் பற்றிய அறிவிப்பு வெளிவந்த பின்னர் ஸ்ரீ ஜெயேந்திர சரஸ்வதி சுவாமிகள் கைது செய்யப்பட்டார் என்ற நிலையில், இதனைப் பற்றிய தகவல்களை சட்டமன்றப் பேரவையில் தெரிவிப்பதுதான் முறையாகும் என்பதால்தான், இதுகுறித்த எந்த அறிக்கையையும் இதற்குமுன் நான் வெளியிடவில்லை என்பதைத் தெரிவித்துக்கொண்டு அமைகிறேன்.

# 4. சிறப்புக் கவன ஈர்ப்பு

## சென்னை மற்றும் சில மாவட்டங்களில் பொது மக்கள் காலரா நோயினால் பாதிக்கப்பட்டுள்ளது

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** தமிழகத்தில் சென்னை மற்றும் சில மாவட்டங்களில் பொதுமக்கள் காலரா நோயினால் பாதிக்கப்பட்டுள்ளது குறித்து மாண்புமிகு உறுப்பினர்கள் திரு. சி. ஞானசேகரன், திரு. மு.க. ஸ்டாலின், திரு. ஜே. ஹேமச்சந்திரன், திரு. வை. சிவபுண்ணியம், திரு. கே. ஆறுமுகம், திரு. ஜி.கே. மணி, திரு. கோ. இரவிராஜ், திரு. பரிதி இளம்வழுதி, திரு. எஸ்.ஏ.எம். உசேன் ஆகியோர் ஒத்திவைப்புத் தீர்மானமாகவும், திரு. பே.ப. காமராஜ் அவர்கள் சிறப்புக் கவன ஈர்ப்பாகவும், திரு. ப. அரசன், திரு. கே.சி. கருணாகரன், திரு. கே. மகேந்திரன், திரு. மணி ஆகியோர் கவன ஈர்ப்பாகவும் அறிவிப்புகள் கொடுத்துள்ளார்கள். இவற்றைச் சிறப்புக் கவன ஈர்ப்பு அறிவிப்பாக எடுத்துக்கொள்கிறேன். கட்சிக்கு ஒருவர் என்ற முறையில் சுருக்கமாக எடுத்துச்சொல்ல வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். திரு. மு.க. ஸ்டாலின். (குறுக்கீடு) திரு. பரிதி இளம்வழுதி அவர்களை முதலில் பேச அழைக்கிறேன்.

**திரு. பரிதி இளம்வழுதி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இன்றைக்கு சென்னை மற்றும் புறநகர்ப் பகுதிகளில் காலரா நோயால் மக்கள் பெரிதும் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள். அண்மையில் பெய்த பெரு மழையின் காரணமாக இந்த தொற்றுநோயால் பாதிக்கப்பட்டு ஏறத்தாழ 300க்கும் மேற்பட்ட மக்கள் தண்டையார்பேட்டை தொற்றுநோய் பாதிப்பு மருத்துவமனையிலே சேர்க்கப்பட்டிருப்பதாக செய்திகள் வெளியாகியிருக்கின்றன. இந்தக் காலரா நோய், தமிழகம் முழுவதும் பரவக்கூடிய அபாயமும் இருக்கிறது. சுகாதார மேற்பார்வை நடவடிக்கையைச் செம்மையாக மேற்கொள்ள வேண்டுமென்று அரசாங்கத்தின் கவனத்திற்குக் கொண்டுவருவதற்காக இந்த அறிவிப்பைக் கொடுத்து, இதுவரை இந்தக் காலரா நோய் பரவாமல் இருப்பதற்கு அரசு மேற்கொண்ட நடவடிக்கைகள் என்ன என்பதையும் தங்கள் மூலமாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** ** திரு. ஞானசேகரன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.





**திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சென்னையிலும், சென்னை சுற்றுப்புறத்திலும் நவம்பர் 10 ஆம் தேதி முதல் பலபேர் காலரா நோயால் பாதிக்கப்பட்டு இருக்கிறார்கள். ஆனால் மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் அதை ஒப்புக்கொள்வாரா என்று எனக்குத் தெரியவில்லை. அவர்கள் பொதுவாக வாந்தி, பேதி, வயிற்றுப்போக்கு என்று மட்டும்தான் சொல்வார்கள். அரசு எப்போதுமே காலரா நோய் வந்தது என்றோ அல்லது அது பரவியிருக்கிறது என்றோ ஒப்புக்கொண்டதாகச் சமீபத்திலே வரலாறே இல்லாத ஒரு காலகட்டத்தில் இது உண்மைதானா?

ஒன்றாவது மண்டலத்திலே நேரு நகர், படேல் நகர், காரனேஸ்வரர் நகர், கொருக்குப்பேட்டை, தண்டையார்பேட்டை, பழைய வண்ணாரப்பேட்டை, முத்தமிழ் நகர், புதிய வண்ணாரப்பேட்டை, அதேபோல இரண்டாவது மண்டலத்திலே செட்டித் தோட்டம், மூன்றாவது மண்டலத்திலே வியாசர்பாடி, கல்யாணபுரம், எஸ்.எம். நகர் இன்னும் செரியன் நகர், தனபால் நகர், ராஜசேகரன் நகர், நேதாஜி நகர், ஜீவா நகர், ரங்கநாதபுரம் என்று பல இடங்களில் பலபேர் பாதிக்கப்பட்டு அன்றாடம் சுமார் 300 பேருக்குமேல் தண்டையார்பேட்டை மருத்துவமனை மற்றும் இருக்கக்கூடிய தனியார் மருத்துவமனைகள் என்று பல மருத்துவமனைகளில் இன்று அவர்கள் சிகிச்சை பெற்று வருகிறார்கள். இது சென்னையை மட்டும் பாதிப்பதாக நாம் எடுத்துக்கொள்ளக்கூடாது. பக்கத்தில் இருக்கிற என்னுடைய மாவட்டத்தில் இருக்கக்கூடிய அரக்கோணத்திற்கும் எட்டிப்பிடித்து இருக்கிறது. அங்கேயிருந்தும் சிலபேர் வந்து இப்போது தண்டையார்பேட்டை மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பெற்று வருகிறார்கள். இந்த அளவுக்குக் காலரா நோய் மிக வேகமாக பரவிக்கொண்டிருக்கிற இந்தக் காலகட்டத்தில் நம்முடைய மாண்புமிகு நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள்--சென்னை கார்ப்பரேஷன் மூலமாகவோ, அரசு தண்டையார்பேட்டை மருத்துவமனை மூலமாகவோ எடுக்கப்பட்டிருக்கிற நடவடிக்கை என்ன? நடமாடும் மருத்துவமனை ஏதும் அரசு அமைத்திருக்கிறதா? ஆம்புலன்ஸ் அதிலே ஈடுபடுத்தப்பட்டிருக்கிறதா? அல்லது குடிநீர் பொதுவாக பாதிக்கப்பட்டுள்ளதால், பாதுகாக்கப்பட்ட குடிநீர் வழங்க வேண்டும். கழிவுநீர்க் கால்வாய்களிலே நிறைய தண்ணீர் தேங்காமல் பார்த்துக்கொள்ள வேண்டும். இப்படிப்பட்ட நடவடிக்கைகளை எடுப்பதற்கு இந்த அரசு என்ன முயற்சிகளை மேற்கொண்டிருக்கிறது

என்பதை அவைக்குத் தெரிவித்து, இந்தக் காலரா நோய் மேலும் என்னுடைய மாவட்டம் போன்ற பகுதிகளுக்குப் பரவாமல் தடுத்து நிறுத்துவதற்கு இப்போது போர்க்கால நடவடிக்கை என்ன எடுக்கப்பட்டிருக்கிறது என்பதைத் தெரிவிக்கக் கேட்டுக்கொள்கிறேன்.

முற்பகல் 11-25

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** ** என்று நான் சொன்னதை அவைக் குறிப்பிலிருந்து நீக்க வேண்டும் என்று சொல்கிறார். அதை நீக்கிக்கொள்வதிலே எந்த ஆட்சேபணையும் இல்லை. திரு. மே.ப. காமராஜ் (குறுக்கீடு) திரு. ஜி.கே. மணி.

**திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சென்னை மாநகராட்சிக்குட்பட்ட முதலாவது மண்டலம், இரண்டாவது மண்டலம், மூன்றாவது மண்டலம் ஆகிய மூன்று மண்டலங்களுக்குட்பட்ட பகுதிகளிலேயும், அதிலும் குறிப்பாக தண்டையார்பேட்டை, கொருக்குப்பேட்டை, பழைய வண்ணாரப்பேட்டை போன்ற பல்வேறு நகர்ப் பகுதிகளிலே காலரா நோயால் பாதிக்கப்பட்டு, நிறைய பேர் மருத்துவமனையிலே சேர்க்கப்பட்டு, சிகிச்சை பெற்று வருகிறார்கள் என்ற செய்தி பத்திரிகைகளிலே வந்து, மக்களை எல்லாம் பீதியடையச் செய்திருக்கிறது. அதிலும் குறிப்பாக, தண்டையார்பேட்டை மருத்துவமனையிலே மட்டும் ஒரு நாளைக்கு 45, 50 பேர் சேர்க்கப்படுகிறார்கள்; சிகிச்சை பெற்று வருகிறார்கள் என்ற செய்தியோடு, இதுவரையிலே ஒரே மருத்துவமனையில் மட்டும் சிகிச்சை பெற்றவர்கள் 360 பேர் என்ற செய்தியும் பத்திரிகையிலே வந்திருக்கிறது. அங்கேகூட நாங்கள் எல்லாம் அவர்களைப் பார்வையிட்டு, மற்றவர்கள் மூலமாக விசாரணை செய்த நேரத்திலே, அதிலும் அரசாங்கத் தரப்பிலேயிருந்து, மாநகராட்சி மூலமாக சொல்லப்பட்ட தகவல்கூட, இப்போது மழை பெய்திருக்கிறது, மழை நீர் தேங்கியிருக்கின்ற காரணத்தினாலே இந்தக் காலரா வியாதி மக்களுக்குப் பரவியிருக்கிறது என்ற செய்தி எல்லாம் சொன்னாலும்கூட, இந்த நேரத்திலே நான் குற்றச்சாட்டாகச் சொல்ல விரும்பவில்லை என்று சொன்னாலும், மாநகராட்சியைப் பொறுத்தவரையிலே கடந்த சில மாதங்களாக, இங்கே குப்பைக் கூளங்கள் தேங்கிக்கிடக்கிற ஒரு சூழ்நிலை நிலவிக்கொண்டிருக்கிறது. சுகாதாரப் பணியும், கழிவு நீர் அகற்றல்

**மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.



பணியும் முறையாகப் பின்பற்றப்படவில்லை என்பதையும் இங்கே நான் சொல்லிக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். உதாரணத்திற்கு கடந்த மாதம்கூட திருவல்லிக்கேணி பகுதியிலே நான் காலை 11-00 மணிக்குச் செல்கின்ற நேரத்திலே, 11-00 மணிக்குத்தான் அந்தத் துப்புரவுப் பணியை மேற்கொள்கிற வண்டி, குப்பைகளைப் பாதையிலே கொட்டிக்கொண்டே செல்கிறது. அதைத் தடுத்து நிறுத்திடச் சொன்னாலும்கூட அந்தப் பணியாளர்கள் அதை காதிலே போட்டுக்கொள்ளாமல் சென்று கொண்டிருந்தார்கள். ஆகவே, மாநகராட்சி இந்தச் சுகாதாரப் பணியிலே மெத்தனப்போக்கிலே இருக்கிறது என்பதை இந்த நேரத்திலே சுட்டிக்காட்டி, இப்படி சென்னை மாநகராட்சியிலே ஏற்பட்டிருக்கிற இந்தக் காலரா நோய் திருச்சி, வேலூர் போன்ற பல்வேறு மாவட்டங்களிலேயும் பரவிக்கொண்டிருக்கிறது. ஆகவே, காலரா என்று சொன்னாலே மக்கள் எல்லாம் பீதி அடையக்கூடிய சூழ்நிலை இருக்கின்ற காரணத்தினாலே இதை அவசர முக்கியத்துவம் வாய்ந்த பிரச்சினையாகக் கருதி, உடனடியாகத் தடுப்பு நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும். அரசு இதுவரையிலே என்ன நடவடிக்கைகளை மேற்கொண்டிருக்கிறது என்பதை இங்கே விரிவாக எடுத்துச் சொல்லி, இதற்கு முற்றுப்புள்ளி வைக்க வேண்டும் என்று அரசின் கவனத்திற்குக் கொண்டு வந்து அமைகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஜே. ஹேமச்சந்திரன் (குறுக்கீடு) திரு. கே. மகேந்திரன்.

**•திரு. கே. மகேந்திரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடந்த 11 ஆம் தேதியிலிருந்து சென்னை மாநகரத்தினுடைய ஒன்றாவது மண்டலம், இரண்டாவது மண்டலம், மூன்றாவது மண்டலம் என்று மூன்று மண்டலங்களிலும், சென்னை மாநகரத்தைச் சுற்றியிருக்கக்கூடிய பல்வேறு பகுதிகளிலும் காலரா நோய் என்பது ஏற்பட்டிருக்கிறது. குறிப்பாக, மூன்றாவது மண்டலத்தில் இருக்கக்கூடிய வியாசர்பாடி, வி. கல்யாணபுரம், சத்தியமூர்த்தி நகர் போன்ற பகுதிகளில் கடந்த ஒரு வாரத்திற்கு முன்பாக காலரா நோய் ஏற்பட்டிருக்கிறது. பல நபர்கள் தண்டையார்பேட்டை அரசு மருத்துவமனையிலே அனுமதிக்கப்பட்டிருக்கிறார்கள்.

அதேபோன்று ஒன்றாவது மண்டலத்தில் இருக்கக்கூடிய தண்டையார்பேட்டை, கொருக்குப்பேட்டை, பழைய வண்ணாரப்பேட்டை, நேதாஜி நகர், எழில்நகர் போன்ற பகுதிகளிலும் காலரா நோய் ஏற்பட்டு, நூற்றுக்கணக்கான மக்கள் மருத்துவமனைகளில் அனுமதிக்கப்பட்டிருக்கிறார்கள். சென்னை மாநகரத்தினுடைய ஒன்றாவது மண்டலம், இரண்டாவது மண்டலம், மூன்றாவது மண்டலம் என்ற இந்த மூன்று மண்டலங்களைப் பொறுத்தவரையில் சாதாரண மக்கள் கூடுதலாக வாழக்கூடிய பகுதிகளாக இந்தப் பகுதிகள் இருந்துகொண்டிருக்கின்றன. இந்த ஆண்டு மழை பெய்த காரணத்தினால் மட்டும் இந்தப் பகுதிகளிலே காலரா நோய் ஏற்படுவது கிடையாது. தொடர்ச்சியாக சென்னை மாநகரத்திலே மழை பெய்யக்கூடிய காலங்களில் எல்லாம் இந்த மூன்று மண்டலங்களிலும், குறிப்பாக வியாசர்பாடி பகுதி, தண்டையார்பேட்டை பகுதி, இரண்டாவது மண்டலத்தினுடைய பல பகுதிகளிலே காலரா நோய் மக்களைத் தாக்கக்கூடிய ஒரு நிலைமை இருந்துகொண்டிருக்கின்றது. பள்ளமாக இருக்கக்கூடிய இந்தப் பகுதிகளில் மழை பெய்யக்கூடிய காலங்களிலே மழைநீர் வடிவதற்கான எந்த ஏற்பாடுகளும் இல்லாத சூழ்நிலையிலும், இந்தக் காலங்களில் கழிவுநீர் முறையாக வெளியேறாத காரணத்தினாலும், இந்தப் பகுதிகளிலே தொடர்ச்சியாக காலரா நோய் ஏற்பட்டுக்கொண்டிருக்கின்றது.

*முற்பகல் 11-30*

அரசு சில முயற்சிகளை மேற்கொண்டிருந்தாலும்கூட, ஏற்கெனவே என்னுடைய தொகுதியிலுள்ள வியாசர்பாடி பகுதியிலே கல்யாணபுரம், சத்தியமூர்த்தி நகர் பகுதிகளிலேயிருந்து இந்தக் காலரா நோய் நேற்றையதினம் அங்கேயிருக்கக்கூடிய சாமியார்தோட்டம் போன்ற பகுதிகளிலும் பரவக்கூடிய ஓர் அபாயம் ஏற்பட்டிருக்கிறது. இப்படி தொடர்ச்சியாக சென்னை மாநகரத்தினுடைய இந்த மூன்று பகுதிகளிலும் ஏற்படக்கூடிய காலரா நோயைக் கட்டுப்படுத்துவதற்கு அரசு எடுத்திருக்கக்கூடிய முயற்சிகள் என்ன என்பதை அறிய விரும்புவதோடு, தொடர்ச்சியாக மழைக்காலங்களில் எல்லாம் சென்னை மாநகரத்தினுடைய இந்தப் பகுதிகளிலே வாழக்கூடிய மக்கள் எல்லாம் காலராவால் அவதிப்படக்கூடிய நிலைமை தடுத்து நிறுத்தப்படுவதற்கும், மழைநீர் தேங்காமல் இருப்பதற்கும், அதேபோன்று கழிவுநீர் முறையாக அப்புறப்படுத்தப்படுவதற்கும் இந்த அரசு





எடுத்திருக்கக்கூடிய நடவடிக்கைகளை அறிய விரும்புகிறேன். இந்த இரண்டு பகுதிகளைப் பொறுத்தவரை, அருகிலே கேப்டன் காட்டன் கெனால் என்ற ஒரு மிகப்பெரும் கெனால் இருந்து கொண்டிருக்கக்கூடிய சூழ்நிலையில், கொருக்குப்பேட்டையாக இருந்தாலும் சரி, வியாசர்பாடியாக இருந்தாலும் சரி, இந்த இரண்டு பகுதிகளையும் பிரிக்கக்கூடிய கேப்டன் காட்டன் கெனாலிலே முறையாக தண்ணீர் வெளியேறினால், கடலுக்கு அந்தத் தண்ணீர் சென்றால், இந்தப் பகுதிகளிலே மழைநீர் தேங்காமல் இருப்பதற்கான வாய்ப்புகள் ஏற்படும். அப்படி செய்யாத சூழ்நிலையினால்தான் இதுபோன்ற பாதிப்புகள் கூடுதலாக, தொடர்ச்சியாக சென்னை மாநகரத்திலே ஏற்பட்டுக் கொண்டிருக்கின்றன. இந்தப் பாதிப்புகள் இந்த ஆண்டோடு நிறைவு பெறவேண்டும். அடுத்து வரக்கூடிய ஆண்டுகளிலே இதுபோன்ற பாதிப்புகள், காலரா நோய் சென்னை மாநகரம், வியாசர்பாடி, தண்டையார்பேட்டை பகுதிகளிலே ஏற்படாமல் இருப்பதற்கு நிரந்தரத் தீர்வு காண்பதற்கு அரசு எடுத்திருக்கக்கூடிய நடவடிக்கைகள் என்ன என்பதைத் தங்கள் மூலமாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. வை. சிவபுண்ணியம்.

**திரு. வை. சிவபுண்ணியம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சென்னைப் பகுதிகளிலே மக்கள் காலரா நோயால் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள். கடந்த ஒரு வாரத்திற்கு முன்னதாக சென்னைப் பொது மருத்துவமனையிலே 300-க்கும் மேற்பட்டவர்கள் அனுமதிக்கப்பட்டார்கள் என்ற செய்தியும் வந்தது. வேறு சில மாவட்டங்களிலேயும் அப்படிப்பட்ட பாதிப்புகள் வருவதற்கான அபாய சூழ்நிலை இருப்பதாகச் செய்திகள் வருகின்றன. ஆகவே, அரசு விரைவான நடவடிக்கையின்மூலமாக பாதுகாப்பு நடவடிக்கைகளை மேற்கொள்ளவேண்டும் என்பதற்காக இந்தத் தீர்மானம் முன்மொழியப்பட்டிருக்கிறது.

குறிப்பாக, இதற்கான தடுப்பு நடவடிக்கைகள் என்பது போதுமானதாக இல்லை. இதற்கு அளிக்கப்படுகிற சிகிச்சை குறித்து கிராமப்புறத்திலே ஒரு அச்சம் இருக்கும் எப்போதுமே; காலரா நோய்த் தடுப்புக்கான ஊசி என்றாலே அதைப் போட்டுக்கொள்ள மறுப்பார்கள். அது கால்நடைகளுக்குப் போடுவதைப் போன்ற ஒரு உணர்வு ஏற்படும். ஆகவே, அதை எளிதாக்கி வைத்தியச் சிகிச்சையைத்

துரிதமான முறையிலே உடனடியாக கிடைக்கச் செய்வதற்கான முயற்சியை மக்கள் நல்வாழ்வுத் துறை மேற்கொள்ளவேண்டும்.

குடிநீர்ப் பிரச்சினை என்பது, பிரச்சினைக்குரியதாக அதிலிருந்து கிருமிகள் தோன்றுவதாக சொல்லப்படுகிறது. ஆகவே, இதைப் பாதுகாக்கப்பட்ட குடிநீராக வழங்குவதற்கான முயற்சியையும் அரசு மேற்கொள்ளவேண்டும். வட்ட தலைநகரங்களிலேயும், மாவட்டத் தலைமை மருத்துவமனைகளிலேயும் போதிய மருத்துவ வசதிகள் இல்லாமல் இருந்தால் அவற்றை உடனடியாக சரி செய்வதற்கான முயற்சிகளையும் மேற்கொள்ளவேண்டுமென்று கேட்டு, இதிலே வேறுவிதமான பாதிப்புகள் வாராதவண்ணம் துரித நடவடிக்கை எடுக்கவேண்டுமென்று கேட்டு அமர்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள். (குறுக்கீடு) திரு. ப. அரசன், வந்தாச்சா? வருக, வருக. (சிரிப்பு)

***திரு. ப. அரசன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சகோதரர், மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர் முன்மொழிந்ததை நான் வழிமொழிந்து, காலரா தொடர்பாக முன்னெச்சரிக்கை நடவடிக்கை என்ன எடுத்திருக்கிறீர்கள் என்பதை மாண்புமிகு அமைச்சர் அவர்களிடத்திலேயிருந்து தெரிந்துகொள்ள விரும்புகிறேன் என்று சொல்லி அமர்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர்.

***மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு மாற்றுக் கட்சி உறுப்பினர்கள் ஒவ்வொருவராலும் தொடுக்கப்பட்ட கேள்விகள் அனைத்தும் காலரா சம்பந்தப்பட்டவை. ஆகவே, அனைவருக்கும் ஒருங்கிணைந்த பதிலாக இந்த அவையிலே சமர்ப்பிக்கின்றேன்.

வடகிழக்குப் பருவ மழை தொடர்ந்து பெய்ததையடுத்து, இம்மாதம் 10 ஆம் தேதியிலிருந்து வயிற்றுப்போக்கு, வாந்தியால் பாதிக்கப்பட்ட நோயாளிகள், சென்னை, தண்டையார்பேட்டையிலுள்ள தொற்றுநோய் மருத்துவமனையில் வழக்கத்திற்கும் மாறாக அதிக எண்ணிக்கையிலே அனுமதிக்கப்பட்டுள்ளார்கள். சாதாரணமான நாட்களில், ஒரு நாளில் 10 முதல் 20 வரை நோயாளிகள் வயிற்றுப்போக்கால் பாதிக்கப்பட்டு,



சென்னையிலே பல பகுதிகளிலேயிருந்தும் அனுமதிக்கப்படுவார்கள். அவர்களில் பெரும்பாலானோர் வடசென்னையில், தண்டையார்பேட்டை, கொருக்குப்பேட்டை, வண்ணாரப்பேட்டை, இராயபுரம், காசிமேடு, புளியந்தோப்பு, வியாசர்பாடி ஆகிய பகுதிகளிலே வசிப்பவர்கள். நவம்பர் 10 ஆம் தேதியன்று திடீரென்று வயிற்றுப்போக்கு, வாந்தியால் பாதிக்கப்பட்ட நோயாளிகளின் எண்ணிக்கை மண்டலம் 1, 2 மற்றும் 3 பகுதிகளிலேயிருந்து அனுமதிக்கப்பட்டவர்களே அதிகம். மண்டலம் 3-ல் வியாசர்பாடியில் உள்ள வார்டு 32, கல்யாணபுரம் பகுதியிலேயிருந்து வயிற்றுப்போக்கு வாந்தியால் பாதிக்கப்பட்டவர்கள், வழக்கத்திற்கும் மாறாக அதிக எண்ணிக்கையில் அனுமதிக்கப்பட்டனர். அன்று முதல் இன்று வரை நோயாளிகளின் எண்ணிக்கை ஒரே சீராக உள்ளது. ஆனால், நோய் தாக்கம் குறைக்கப்பட்டுள்ளது.

முற்பகல் 11-35

நவம்பர் 1 ஆம் தேதி முதல் 15 ஆம் தேதி வரை 410 நோயாளிகள் வயிற்றுப்போக்கு, வாந்தியால் சென்னை மாநகர எல்லைக்குள் இருந்து அனுமதிக்கப்பட்டனர். அதில் 100 நோயாளிகள் மட்டும் காலராவினால் பாதிக்கப்பட்டவர்கள் என்று கண்டறியப்பட்டது. சென்னை புறநகர்ப் பகுதியிலிருந்து 321 நபர்கள் அனுமதிக்கப்பட்டார்கள். அவர்களில், 112 பேர் மட்டும் காலராவால் பாதிக்கப்பட்டவர்கள் என்று கண்டறியப்பட்டது. அனுமதிக்கப்பட்ட நோயாளிகள் அனைவருக்கும் சிறப்பான சிகிச்சை அளிக்கப்பட்டு வருகிறது. நோயாளிகளில் பூரண குணமடைந்தவர்கள் வீட்டிற்கு அனுப்பப்பட்டு வருகிறார்கள். இன்றுவரை இறப்பு எதுவுமே இல்லை. மருத்துவமனையில் தேவைப்படும் மருந்துகள், கருவிகள் மற்றும் தேவையான உபகரணங்கள் அனைத்தும் போதுமான அளவு இருப்பில் வைக்கப்பட்டுள்ளது. நோயாளிகளின் உணவிற்குத் தேவையான அனைத்துப் பொருட்களும் போதுமான அளவில் இருக்கின்றன. பாதிக்கப்பட்ட பகுதிகளில் மண்டலம்-1 மற்றும் 3-ல் உள்ள பகுதிகளில் சிறப்பு மருத்துவ முகாம்கள் 10 ஆம் தேதி முதல் இன்று வரை நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. மண்டலம்-1-ல் 18 இடங்களில் நடைபெறும் சிறப்பு மருத்துவ முகாம்களில் நோயாளிகளுக்கு மருத்துவ சிகிச்சை மருத்துவர்களால் அளிக்கப்பட்டது. மண்டலம்-3-ல் 5 இடங்களில் நடைபெறும் மருத்துவ முகாம்களில் நோயாளிகளுக்கு மருத்துவ சிகிச்சை மருத்துவர்களால் அளிக்கப்படுகிறது.

தொற்றுநோய் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்ட நோயாளிகளின் வீட்டிற்கு உதவி சுகாதார ஆய்வாளர்களின் தலைமையிலே, சுகாதார ஆய்வாளர்களின் மேற்பார்வையில் தொற்றுநீக்கம் செய்யப்பட்டு, நோய் பரவாமல் கட்டுப்படுத்தப்பட்டது. அப்பகுதியைச் சார்ந்த மக்களுக்கு நோய் பற்றிய விழிப்புணர்ச்சி ஏற்படுத்தப்பட்டது. சுற்றுப்புறத்தைத் தூய்மையாக வைத்துக்கொள்ளவும், தண்ணீரைக் காய்ச்சிக் குடிக்கவும், ஈ மொய்க்கும் பண்டங்களை உண்ண வேண்டாம் என்றும் அறிவுறுத்தப்பட்டது. மேலும், குளோரின் மாத்திரைகள் வழங்கப்பட்டன. விழிப்புணர்ச்சி பற்றி ஒலிபெருக்கி மூலம் மக்களுக்கு எடுத்துரைக்கும் பிரச்சாரங்கள் செய்யப்பட்டன. மேலும், பகுதி மக்களுக்கு நோய் வாராமல் இருக்க விழிப்புணர்ச்சியுடன் இருக்க சுகாதாரத் துறையிலே பணிபுரியும் அனைத்து ஊழியர்களும் அறிவுறுத்தப்பட்டுள்ளனர். நகரின் ஒருசில தாழ்வான பகுதிகளில் மழை நீர் தேங்கிவிட்டதனாலும், அத்துடன் கழிவுநீர் கலந்துவிட்டபடியாலும், இந்நோய் பரவியிருக்கலாம் என்று கருதப்படுகிறது.

சென்னை மாநகராட்சியில், கடந்த மூன்றாண்டுகளில் புதிய மழைநீர் வடிகால் மற்றும் 40 ஆண்டுகளுக்கு மேலாக தூர்வாரப்படாமல் இருந்த கால்வாய்களைத் தூர்வாரி, பராமரிப்பு செய்யப்படுகிறது. 2003-2004 ஆம் ஆண்டு 66 மழைநீர்க் கால்வாய்களின் வடிகால் பணிகள் மூலம் இங்கே சுத்தம் செய்யப்படுவதற்காக மாண்புமிகு தமிழகத்தினுடைய முதலமைச்சர் இதய தெய்வம், புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய ஆலோசனையின்படி 16 கோடி ரூபாய் செலவழிக்கப்பட்டு, 40 ஆண்டுக்காலமாக தூர்வாரப்படாமல் இருந்த கால்வாய்களெல்லாம் சுத்தம் செய்யப்பட்டிருக்கின்றன. மேலும், இந்த ஆண்டு 2004-2005 ஆம் ஆண்டிற்கு கால்வாய்களைச் சுத்தம் செய்வதற்காக 18 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டு, அதில் 55 பணிகள், 5 கோடி ரூபாய் செலவிலே இதுவரை செய்து முடிக்கப்பட்டிருக்கின்றன. மேலும், அந்தப் பகுதியிலே இருக்கின்ற ஏழை மக்களுக்குக் கழிவுநீர் இணைப்பு வழங்குவதற்காக, ஒரு இணைப்பிற்கு 3,395 ரூபாய் என்று இருந்ததை, மக்களுடைய வறுமையைக் கருதி புரட்சித் தலைவி அம்மா அவர்கள் அதிலே, அவர்களுக்கென்று சலுகைகள் அளித்து, 100 ரூபாய்க்கு ஒரு இணைப்பை வழங்கிட ஆணை பிறப்பித்தார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) வறுமைக் கோட்டில் இருக்கின்ற அந்தப் பகுதி மக்கள் அனைவரும் சுகாதாரத்தை மேம்படுத்துவதற்காக இந்த இணைப்புகள் 100 ரூபாய்க்கு



இன்று வழங்கப்பட்டன என்பதையும் இந்த நேரத்திலே தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டவனாக இருக்கின்றேன்.

இது தவிர, பொது சுகாதாரத்திற்குக் கேடு விளைவிக்கும் வகையில் திறந்த வெளியிலே மல ஜலம் கழிப்பதைத் தடுப்பதற்கு சென்னை மாநகராட்சி தீவிர நடவடிக்கை எடுத்துள்ளது. இவ்வாறு கண்டறியப்பட்ட 290 இடங்களிலே 190 இடங்களில் இப்பழக்கம் அடியோடு தடுத்து நிறுத்தப்பட்டுள்ளது. மேலும், இந்தப் பழக்கத்திலிருந்து மாற்றுவதற்காக அந்தப் பகுதியிலே இருந்த கழிப்பறைகளையெல்லாம் சுத்தம் செய்து சுகாதார முறையிலே அவர்கள் பயன்படுத்துவதற்கான வாய்ப்பினை, புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய ஆலோசனையின்பேரிலே, உருவாக்கி இன்றையதினம் முறையாக அவர்கள் பயன்படுத்திக் கொண்டிருக்கிறார்கள்.

முற்பகல் 11-40

அதேபோல கிராமப்புறத்திலும் குடிநீரானது மிகவும் நல்ல முறையிலே மக்களுக்கு எந்தவிதத்திலும் பாதிப்பின்றி வழங்கப்படுகின்றது என்பதையும் இந்த நேரத்தில் குறிப்பிடக் கடமைப்பட்டவனாக இருக்கின்றேன்.

மாண்புமிகு உறுப்பினர் ஜி.கே. மணி அவர்கள் பேசும்பொழுது இங்கே, தண்டையார்பேட்டையிலுள்ள ஒரே மருத்துவமனையிலே அனைவரையும் சேர்க்கின்றார்கள் என்று சொன்னார்கள். சென்னை மாநகராட்சியில், தண்டையார்பேட்டையிலுள்ள தொற்றுநோய் மருத்துவமனையில், அந்தப் பகுதியில் வாந்தியால் பாதிக்கப்பட்ட மக்கள் அனுமதிக்கப்பட்டவுடன், அவர்களுக்குச் சிறந்த முறையிலே மருத்துவ சிகிச்சை அளிக்கப்பட்டு, அம்மருத்துவமனையிலே அவர்கள் சென்று சேர்ந்த இரண்டு, மூன்று நாட்களிலே அவர்கள் உடல்நிலையில் நல்ல தேர்ச்சியடைந்து வீட்டிற்கு அனுப்பப்படுகிறார்கள். இதுவரையில் அந்த மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டவர்கள் அனைவருக்கும், புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய ஆட்சியில் நல்ல முறையில் சிகிச்சையளிக்கப்பட்டு, நல்ல முறையில் அவர்களுக்கு மருந்துகள் வழங்கப்பட்டு, இதுவரை அந்த மருத்துவமனையில் எந்த இறப்பும் நிகழவில்லையென்பதை இந்த அவைக்குத் தெரிவித்துக்கொள்ள கடமைப்பட்டிருக்கின்றேன். ஆகவே, புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய ஆட்சிக் காலத்தில் சுகாதார முறையில் மக்களுக்கு

[திரு. கே.பி. அன்பழகன்] [2004 நவம்பர் 17

நல்ல சிகிச்சை அளிக்கப்பட்டு அங்கேயிருந்து அவர்கள் வீட்டுக்கு அனுப்பப்படுகிறார்கள்.

குப்பைகள் தேக்கநிலையில் உள்ளது என்று சொன்னார்கள். புரட்சித் தலைவி அம்மா அவர்கள் ஆட்சிப் பொறுப்பு ஏற்ற நாள் முதற்கொண்டு, அன்றாட குப்பைகள் அன்றாடம் சென்னை மாநகராட்சியினால் அள்ளப்பட்டு எல்லாப் பகுதிகளும் சுத்தமாக இருக்கின்றவகையிலே வைக்கப்பட்டிருக்கின்றன என்பதையும் அவருக்கு இந்த நேரத்திலே தெரிவித்துக்கொள்ள கடமைப்பட்டவனாக இருக்கின்றேன். கழிவுநீர் வெளியேற்றப்படுவதில் தாமதமாகிறது என்று மாண்புமிகு உறுப்பினர் மகேந்திரன் அவர்கள் பேசும்போது கூறினார்கள். கழிவுநீரும் நல்ல முறையிலே வெளியேற்றப்பட்டு, மக்களை பாதிக்காதவகையிலே புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய ஆட்சியிலே நல்ல முறையிலே செயல்படுத்தப்பட்டு வருகிறது என்பதையும் இந்த நேரத்தில் தெரிவித்துக்கொண்டு அமர்கின்றேன்.

## 5. அறிவிப்புகள்

### (அ) பல்கலைக்கழகங்களின் ஆட்சிமன்றப் பேரவை, ஆட்சிக் குழு மற்றும் நிர்வாகக் குழு ஆகியவற்றிற்கு உறுப்பினர்கள் தேர்வு

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பேரவைக்கு ஓர் அறிவிப்பு. சில பல்கலைக்கழகங்களின் ஆட்சிமன்றப் பேரவை, ஆட்சிக் குழு மற்றும் நிர்வாகக் குழு ஆகியவற்றிலுள்ள காலியிடங்களுக்கு சட்டமன்றப் பேரவை உறுப்பினர்கள் தேர்ந்தெடுக்கப்பட வேண்டுமென்று அப்பல்கலைக்கழகங்களிடமிருந்து கோரிக்கைகள் வரப்பெற்றுள்ளன. அழகப்பா பல்கலைக்கழகம் ஆட்சிமன்றப் பேரவை-1 உறுப்பினர், அண்ணா பல்கலைக்கழகம் ஆட்சிக் குழு-1 உறுப்பினர், பாரதியார் பல்கலைக்கழகம் ஆட்சிமன்றப் பேரவை-2 உறுப்பினர்கள், பாரதிதாசன் பல்கலைக்கழகம் ஆட்சிமன்றப் பேரவை-2 உறுப்பினர்கள், சென்னைப் பல்கலைக்கழகம் ஆட்சிமன்றப் பேரவை-1 உறுப்பினர், தமிழ்நாடு டாக்டர் எம்.ஜி.ஆர். மருத்துவப் பல்கலைக்கழகம் ஆட்சிமன்றப் பேரவை-2 உறுப்பினர்கள், மனோன்மணீயம் சுந்தரனார் பல்கலைக்கழகம் ஆட்சிமன்றப் பேரவை-2, உறுப்பினர்கள், தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம் நிர்வாகக் குழு-1 உறுப்பினர், தமிழ்நாடு கால்நடை மருத்துவ அறிவியல் பல்கலைக்கழகம், நிர்வாகக் குழு-1 உறுப்பினர், தமிழ்ப் பல்கலைக்கழகம், ஆட்சிமன்றப் பேரவை-2 உறுப்பினர்கள், பெரியார் பல்கலைக்கழகம், ஆட்சிமன்றப் பேரவை-2



2004 நவம்பர் 17] [பேரவைத் தலைவர்]

உறுப்பினர்கள். சென்னைப் பல்கலைக்கழக ஆட்சிமன்றப் பேரவைக்குத் தேர்ந்தெடுக்கப்படும் உறுப்பினரின் பதவிக்காலம் 6-5-2006 வரையாகும். பிற பல்கலைக்கழகங்களுக்குத் தேர்ந்தெடுக்கப்படும் உறுப்பினர்களின் பதவிக் காலம் தேர்ந்தெடுக்கப்பட்ட நாளிலிருந்து மூன்று ஆண்டுகள் ஆகும். தேர்ந்தெடுக்கப்படும் உறுப்பினர் ஏதாவது ஒரு காரணத்திற்காக பேரவை உறுப்பினர் பதவியை இழக்க நேரிட்டால் அந்த நாளோடு அவருடைய உறுப்பினர் பதவியும் முடிவடையும். தேர்ந்தெடுக்கப்பெற விழையும் வேட்பாளர்கள் தங்களின் வேட்பு மனுக்களை 19-11-2004 (வெள்ளிக்கிழமை) அன்று பிற்பகல் 3-00 மணிக்குள் பேரவைச் செயலாளரிடம் சேர்ப்பிக்க வேண்டும். வேட்பு மனு படிவங்கள் வேண்டுவோர், பேரவைச் செயலாளரிடமிருந்து பெற்றுக்கொள்ளலாம். வேட்பு மனுக்கள் அன்றையதினமே (19-11-2004) பிற்பகல் 4-00 மணிக்குப் பரிசீலனைக்கு எடுத்துக்கொள்ளப்படும். விலகிக்கொள்ள விரும்பும் வேட்பாளர்கள் 20-11-2004 (சனிக்கிழமை) அன்று பிற்பகல் 3-00 மணிக்குள் வேட்பு மனுக்களைத் திரும்பப் பெறலாம். வேட்பு மனுத் தாக்கல் செய்யும் வேட்பாளர்களின் எண்ணிக்கை, வெற்றிடங்களின் எண்ணிக்கைக்கு மேற்படுமாயின் 22-11-2004 (திங்கட்கிழமை) அன்று காலை 10-00 மணிக்கும் பிற்பகல் 1-30 மணிக்குமிடையே சட்டமன்றப் பேரவைச் செயலகத்தில் உள்ள குழுக்கள் கூடும் அறையில் வாக்கெடுப்பு நடைபெறும்.

### (ஆ) மாற்றுத் தலைவர்கள் பட்டியல்

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பேரவைக்கு ஓர் அறிவிப்பு. தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை விதி 9(1)-ன்கீழ், கீழ்க்காணும் உறுப்பினர்களைப் பேரவையின் ஒன்பதாவது கூட்டத்தொடருக்கான மாற்றுத் தலைவர்களாக நியமிக்கிறேன்:

திரு. ப. இராஜரெத்தினம்

திரு. அ. அன்வர் ராஜா

திருமதி சி.எம். சூரியகலா

திரு. லா. சந்தானம்

டாக்டர் தே. குமாரதாஸ்

திரு. செ.கு. தமிழரசன்

முற்பகல் 11-45

## 6. அரசினர் சட்டமுன்வடிவுகள் (அறிமுகம் செய்தல்)

### (அ) தமிழ்நாடு கள்ளச்சாராயக்காரர்கள், மருந்துச் சரக்குக் குற்றவாளிகள், வனக் குற்றவாளிகள், குண்டர்கள், விபச்சாரத் தொழில் குற்றவாளிகள், குடிசை நில ஆக்கிரமிப்பாளர்கள் ஆகியோரின் அபாயகரமான நடவடிக்கைகளைத் தடுத்தல் (திருத்தச்) சட்டமுன்வடிவு, 2004

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *அரசினர் சட்டமுன்வடிவுகள் அறிமுகம் செய்தல். 2004 ஆம் ஆண்டு தமிழ்நாடு கள்ளச்சாராயக்காரர்கள், மருந்துச் சரக்குக் குற்றவாளிகள், வனக் குற்றவாளிகள், குண்டர்கள், விபச்சாரத் தொழில் குற்றவாளிகள், குடிசை நில ஆக்கிரமிப்பாளர்கள் ஆகியோரின் அபாயகரமான நடவடிக்கைகளைத் தடுத்தல் (திருத்தச்) சட்டமுன்வடிவு. மாண்புமிகு பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர்.*

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

*"2004 ஆம் ஆண்டு தமிழ்நாடு கள்ளச்சாராயக்காரர்கள், மருந்துச் சரக்குக் குற்றவாளிகள், வனக் குற்றவாளிகள், குண்டர்கள், விபச்சாரத் தொழில் குற்றவாளிகள், குடிசை நில ஆக்கிரமிப்பாளர்கள் ஆகியோரின் அபாயகரமான நடவடிக்கைகளைத் தடுத்தல் (திருத்தச்) சட்டமுன்வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்ய அனுமதியளிக்க வேண்டும்"*

*எனக் கோருகிறேன்.*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.





ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

*மாண்புமிகு பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர்.*

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இச் சட்டமுன்வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்கிறேன்.

### (ஆ) தமிழ்நாடு ஒப்பந்தப்புள்ளிகள் ஒளிவின்மை (திருத்தச்) சட்டமுன்வடிவு, 2004

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *2004 ஆம் ஆண்டு தமிழ்நாடு ஒப்பந்தப்புள்ளிகள் ஒளிவின்மை (திருத்தச்) சட்டமுன்வடிவு. மாண்புமிகு நிதி அமைச்சர்.*

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

*"2004 ஆம் ஆண்டு தமிழ்நாடு ஒப்பந்தப்புள்ளிகள் ஒளிவின்மை (திருத்தச்) சட்டமுன்வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்ய அனுமதியளிக்க வேண்டும்"*

எனக் கோருகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

மாண்புமிகு நிதி அமைச்சர்.

[2004 நவம்பர் 17

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இச் சட்டமுன்வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்கிறேன்.

## 5. அறிவிப்புகள்— தொடர்ச்சி

### (இ) தமிழ்நாடு கேளிக்கைகள் வரி (திருத்தச்) சட்டமுன்வடிவு, 2004 (ஆ.இ.)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பேரவைக்கு ஓர் அறிவிப்பு. 2004 ஆம் ஆண்டு தமிழ்நாடு கேளிக்கைகள் வரி (திருத்தச்) சட்டமுன்வடிவைப் பேரவையில் அறிமுகம் செய்ய மேதகு ஆளுநர் அவர்கள் தமது இசைவைத் தெரிவித்துள்ளார்கள்.

## 6. அரசினர் சட்டமுன்வடிவுகள் (அறிமுகம் செய்தல்) — தொடர்ச்சி

### (இ) தமிழ்நாடு கேளிக்கைகள் வரி (திருத்தச்) சட்டமுன்வடிவு, 2004

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** 2004 ஆம் ஆண்டு தமிழ்நாடு கேளிக்கைகள் வரி (திருத்தச்) சட்டமுன்வடிவு, மாண்புமிகு கல்வி மற்றும் வணிக வரித் துறை அமைச்சர்.

**மாண்புமிகு திரு. சி.வி. சண்முகம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"2004 ஆம் ஆண்டு தமிழ்நாடு கேளிக்கைகள் வரி (திருத்தச்) சட்டமுன்வடிவை பேரவைமுன் அறிமுகம் செய்ய அனுமதியளிக்க வேண்டும்"

எனக் கோருகிறேன்.



2004 நவம்பர் 17]

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு கல்வி மற்றும் வணிக வரித் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்.)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை.)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

மாண்புமிகு கல்வி மற்றும் வணிக வரித் துறை அமைச்சர்.

**மாண்புமிகு திரு. சி.வி. சண்முகம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இச் சட்டமுன்வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்கிறேன்.

### (ஈ) தமிழ்நாடு வரிவிதிப்பு தனித் தீர்ப்பாயம் (நீக்கச்) சட்டமுன்வடிவு, 2004

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** 2004 ஆம் ஆண்டு தமிழ்நாடு வரிவிதிப்பு தனித் தீர்ப்பாயம் (நீக்கச்) சட்டமுன்வடிவு. மாண்புமிகு கல்வி மற்றும் வணிக வரித் துறை அமைச்சர்.

**மாண்புமிகு திரு. சி.வி. சண்முகம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"2004 ஆம் ஆண்டு தமிழ்நாடு வரிவிதிப்பு தனித் தீர்ப்பாயம் (நீக்கச்) சட்டமுன்வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்ய அனுமதியளிக்க வேண்டும்"

எனக் கோருகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு கல்வி மற்றும் வணிக வரித் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்.)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை.)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

மாண்புமிகு கல்வி மற்றும் வணிக வரித் துறை அமைச்சர்.

**மாண்புமிகு திரு. சி.வி. சண்முகம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இச் சட்டமுன்வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்கிறேன்.

**(உ) தமிழ்நாடு காணொலிப் பேழைப் பதிவுக் கருவிகள் மற்றும் கம்பி வடத் தொலைக்காட்சி இணைப்பமைவு மூலமாகத் தொலைக்காட்சி பெட்டித் திரையில் திரைப்படங்களைக் காட்டுதல் (முறைப்படுத்துதல்) திருத்தச் சட்டமுன்வடிவு, 2004**

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** 2004 ஆம் ஆண்டு தமிழ்நாடு காணொலிப் பேழைப் பதிவுக் கருவிகள் மற்றும் கம்பி வடத் தொலைக்காட்சி இணைப்பமைவு மூலமாகத் தொலைக்காட்சி பெட்டித் திரையில் திரைப்படங்களைக் காட்டுதல் (முறைப்படுத்துதல்) திருத்தச் சட்டமுன்வடிவு, மாண்புமிகு செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்.

***மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"2004 ஆம் ஆண்டு தமிழ்நாடு காணொலிப் பேழைப் பதிவுக் கருவிகள் மற்றும் கம்பி வடத் தொலைக்காட்சி இணைப்பமைவு மூலமாகத் தொலைக்காட்சி பெட்டித் திரையில் திரைப்படங்களைக் காட்டுதல் (முறைப்படுத்துதல்) திருத்தச் சட்டமுன்வடிவை பேரவைமுன் அறிமுகம் செய்ய அனுமதியளிக்க வேண்டும்"

எனக் கோருகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)





ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

மாண்புமிகு செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்.

**மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இச் சட்டமுன்வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்கிறேன்.

## 7. கூடுதல் செலவிற்கான இரண்டாவது துணை நிதிநிலை அறிக்கை, 2004-2005, அளித்தல்

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** 2004-2005 ஆம் ஆண்டின் கூடுதல் செலவிற்கான இரண்டாவது துணை நிதிநிலை அறிக்கை. மாண்புமிகு நிதி அமைச்சர்.

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 2004-2005 ஆம் ஆண்டிற்கான இரண்டாம் துணை மதிப்பீடுகளை இம் மாமன்றத்தின்முன் வைக்கிறேன். துணை மானியக் கோரிக்கைகளை விளக்கிக்கூறும் விரிவானதொரு அறிக்கை@ இம் மாமன்றத்தில் வைக்கப்பட்டுள்ளது. இந்தத் துணை மதிப்பீடுகள், மொத்தம் 60 கோடியே 35 இலட்சம் ரூபாய் நிதி ஒதுக்குவதற்கு வகை செய்கின்றன. இதில், 53 கோடியே 12 இலட்சம் ரூபாய் வருவாய்க் கணக்கிலும், எஞ்சிய தொகையான ரூபாய் 7.23 கோடி மூலதனம் மற்றும் கடன் கணக்கிலும் அடங்கும்.

2. 2004 ஆம் ஆண்டு ஜூலைத் திங்கள் 27 ஆம் நாளன்று இந்த நிதியாண்டிற்கான முதல் துணை மதிப்பீடுகள், சட்டமன்றப் பேரவையில் தாக்கல் செய்யப்பட்ட பின்னர், எதிர்பாராச் செலவு நிதியிலிருந்து முன்பணங்கள் பெற்று "புதுப் பணிகள்" குறித்து செய்யப்பட்ட செலவுகளுக்குச் சட்டமன்றப் பேரவையின் ஒப்புதலைப் பெறவும், எதிர்பாராச் செலவு நிதியை ஈடுசெய்யும் பொருட்டும், இந்தத் துணை மதிப்பீடுகள் தாக்கல் செய்யப்படுகின்றன.

---

@. அறிக்கையில் கோரப்பட்ட மானியக் கோரிக்கைகள் 279-281 வரையுள்ள பக்கங்களில் அச்சிடப்பெற்றுள்ளது.

3. மீனவர்களுக்கு நிவாரணம் அளிப்பதற்காக, 20 மீட்டர் நீளத்திற்குக் குறைவான மீன்பிடி விசைப் படகுகளுக்கு வழங்கப்படும் உயர்வேக டீசல் எண்ணெய் குறித்த மத்திய ஆயத்தீர்வையை ஈடுசெய்வதற்காக, மானியமாக அரசு 1.83 கோடி ரூபாய் அனுமதித்துள்ளது. முதற்கண் செலவு செய்ய, எதிர்பாராச் செலவு நிதியிலிருந்து, முன்பணமாக 1.83 கோடி ரூபாய் வழங்கப்பட்டுள்ளது. இந்தத் துணை மதிப்பீடுகளில், "மானியக் கோரிக்கை எண் 7 - கால்நடைப் பராமரிப்பு மற்றும் மீன்வளத் துறை - மீன்வளம்" என்ற தலைப்பின்கீழ் 1.83 கோடி ரூபாய் சேர்க்கப்பட்டுள்ளது.

முற்பகல் 11-50

4. அரசு மருத்துவமனைகளில் அளிக்கப்படும் மருத்துவ வசதிகளை மேம்படுத்தும் ஒரு நடவடிக்கையாக, மதுரை, அரசினர் ராஜாஜி மருத்துவமனைக்கு சாதனங்கள் வழங்குவதற்காக அரசு 1.95 கோடி ரூபாய் அனுமதித்துள்ளது. இந்தத் துணை மதிப்பீடுகளில், "மானியக் கோரிக்கை எண் 18 - மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறை" என்பதன்கீழ் 1.95 கோடி ரூபாய் சேர்க்கப்பட்டுள்ளது.

5. சென்னைப் பெருநகரப் பகுதிக்குள், 26 முக்கியமான சாலைப் பணிகளை மேற்கொள்ள அரசு 369.90 கோடி ரூபாய் அனுமதித்துள்ளது. இந்தச் சாலைகளில் போக்குவரத்து சீராக இயங்க, இது பெரிதும் துணைபுரியும். இது ஒரு புதுப்பணி என்பதால் இந்தத் துணை மதிப்பீடுகளில், "மானியக் கோரிக்கை எண் 20 - நெடுஞ்சாலைகள் துறை" என்பதன்கீழ் அடையாள நிதியொதுக்கம் சேர்க்கப்பட்டுள்ளது.

6. காட்டுக் கொள்ளையன் வீரப்பனையும் அவனது கும்பலையும் தீர்த்துக்கட்டும் பணியை வெற்றிகரமாக முடித்த சிறப்பு அதிரடிப்படையைச் சேர்ந்த 757 காவல் துறை அதிகாரிகள்/காவலர்கள் ஒவ்வொருவருக்கும் 3 இலட்சம் ரூபாய் ரொக்கப் பரிசு வழங்க அரசு 22.71 கோடி ரூபாய் அனுமதித்துள்ளது. முதற்கண் செலவு செய்ய, எதிர்பாராச் செலவு நிதியிலிருந்து முன்பணமாக 22.71 கோடி ரூபாய் வழங்கப்பட்டுள்ளது. இந்தத் துணை மதிப்பீடுகளில், "மானியக் கோரிக்கை எண் 21 - உள் துறை-காவல்" என்பதன்கீழ், 22.71 கோடி ரூபாய் சேர்க்கப்பட்டுள்ளது.



7. அரசு மருத்துவக் கல்லூரி மற்றும் மருத்துவமனைகளில் அடிப்படைக் கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்த வேண்டுமென்ற நோக்கத்தில், திருநெல்வேலியிலுள்ள அரசு திருநெல்வேலி மருத்துவக் கல்லூரி மற்றும் மருத்துவமனை, கன்னியாகுமரி மாவட்டம், ஆசாரிப்பள்ளத்திலுள்ள கன்னியாகுமரி மருத்துவக் கல்லூரி மற்றும் மருத்துவமனை, தூத்துக்குடியிலுள்ள அரசு தூத்துக்குடி மருத்துவக் கல்லூரி மற்றும் மருத்துவமனை, வேலூரிலுள்ள அரசு வேலூர் மருத்துவக் கல்லூரி மற்றும் மருத்துவமனை மற்றும் தேனி மருத்துவக் கல்லூரி மற்றும் மருத்துவமனை ஆகியவற்றிற்குக் கல்லூரி மற்றும் மருத்துவமனைக் கட்டடங்களைக் கட்ட, அரசு 187.29 கோடி ரூபாய் அனுமதித்துள்ளது. இந்தத் துணை மதிப்பீடுகளில் "மானியக் கோரிக்கை எண் 38 - பொதுப் பணித் துறை" என்பதன்கீழ் அடையாள நிதியொதுக்கமாக ரூ.6,000 சேர்க்கப்பட்டுள்ளது. பணி முன்னேற்றத்தின் அடிப்படையில் தேவையான நிதி ஒதுக்கப்படும்.

8. "அனைவருக்கும் கல்வி" திட்டத்தைச் செயற்படுத்த கூடுதலாக 15.61 கோடி ரூபாய் தேவைப்படுகிறது. இந்தத் துணை மதிப்பீடுகளில், "மானியக் கோரிக்கை எண் 11 - பள்ளிக் கல்வித் துறை" என்பதன்கீழ் அடையாள நிதியொதுக்கமாக 2,000 ரூபாய் சேர்க்கப்பட்டுள்ளது. எஞ்சிய தொகை மறு நிதியொதுக்கம் மூலம் ஒதுக்கீடு செய்யப்படும்.

9. யானைகளுக்கு புத்துணர்வூட்டும் முகாம்கள் நடத்துவதற்காக அரசு, 2004-2005 ஆம் ஆண்டுக்கு 87 இலட்சம் ரூபாய் அனுமதித்துள்ளது. இந்தத் துணை மதிப்பீடுகளில், "மானியக் கோரிக்கை எண் 45 - தமிழ் வளர்ச்சி-பண்பாடு மற்றும் அறநிலையத் துறை-இந்து சமய அறநிலையத் துறை" என்பதன்கீழ் 87 இலட்சம் ரூபாய் சேர்க்கப்பட்டுள்ளது.

10. மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 2004-2005 ஆம் ஆண்டிற்கான இரண்டாவது துணை மதிப்பீடுகளை, இம்மாமன்றம் ஏற்று, இசைவளிக்க வேண்டுகிறேன்.

(277 ஆம் பக்கத்திலுள்ள அடிக்குறிப்பைக் காண்க.)

## 2004-2005 ஆம் ஆண்டிற்கான கூடுதல் செலவுக்கான மானியக் கோரிக்கைகள்

(ரூபாய் ஆயிரத்தில்)

| கோரிக்கை | துறை | வருவாய் | மூலதனம் | கடன் |
|---|---|---|---|---|
| 6 | கால்நடை பராமரிப்பு மற்றும் மீன்வளத் துறை-கால்நடை பராமரிப்பு | 1,90,10 | ... | ... |
| 7 | கால்நடை பராமரிப்பு மற்றும் மீன்வளத் துறை-மீன்வளம் | 1,83,43 | ... | ... |
| 12 | கூட்டுறவு, உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை | 4,43,00 | ... | ... |
| 13 | எரிசக்தித் துறை | 30,00 | ... | ... |
| 14 | சுற்றுச்சூழல் மற்றும் வனத் துறை | 80,20 | 1 | ... |
| 18 | மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறை | 1,94,51 | ... | ... |
| 19 | உயர் கல்வித் துறை | 39,02 | ... | ... |
| 20 | நெடுஞ்சாலைகள் துறை | ... | 1 | ... |
| 21 | உள் துறை-காவல் | 27,72,27 | 50,00 | ... |
| 25 | வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை | 20,41 | ... | ... |
| 27 | செய்தி மற்றும் சுற்றுலாத் துறை-செய்தி மற்றும் விளம்பரம் | 1 | ... | ... |
| 31 | தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத் துறை | ... | 95,89 | ... |
| 33 | நகராட்சி நிருவாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை | ... | ... | 5,36,51 |
| 36 | மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை | 2,80,00 | ... | ... |
| 37 | பொதுத் துறை | 1,57,48 | ... | ... |
| 38 | பொதுப் பணித் துறை | 7,74,24 | 40,13 | ... |
| 40 | ஊரக வளர்ச்சித் துறை | 3 | ... | ... |
| 41 | பள்ளிக் கல்வித் துறை | 2 | ... | ... |
| 43 | சமூக நலன் மற்றும் சத்துணவுத் திட்டத் துறை | 60,31 | ... | ... |
| 45 | தமிழ் வளர்ச்சி-பண்பாடு மற்றும் அறநிலையத் துறை-இந்து சமய அறநிலையத் துறை | 87,47 | ... | ... |
| 47 | இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை | 1 | ... | ... |
| | பெருமொத்தம் | 53,12,51 | 1,86,04 | 5,36,51 |



**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பேரவையின் இன்றைய நிகழ்ச்சிகள் இத்துடன் முடிவுற்றன. பேரவை மீண்டும் நாளை (18-11-2004) காலை 10-00 மணிக்குக் கூடும். வணக்கம்.

பின்னர், பேரவை முற்பகல் 11-52 மணிக்கு ஒத்திவைக்கப்பெற்றது.

## 8. பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள்

### (அ) சட்டமுறை விதிகளும், ஆணைகளும்

1. 1988 ஆம் ஆண்டு தமிழ்நாடு கூட்டுறவுச் சங்கங்கள் விதிகளில் திருத்தம் செய்தது குறித்து கூட்டுறவு, உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் (சிஜெ1) துறையின் 4.6.2004 ஆம் நாளிட்ட 246 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை. (1983 ஆம் ஆண்டு தமிழ்நாடு கூட்டுறவுச் சங்கங்கள் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 30/1983) 180 (5) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது).

2. 1974 ஆம் ஆண்டு தமிழ்நாடு மோட்டார் வண்டிகள் வரி விதிப்புச் சட்டத்தின்கீழ் தமிழ்நாடு மாநிலச் சட்டப்பணிகள் குழுமத்தின் உறுப்பினர்-செயலாளர் அவர்களின் உபயோகத்திற்காக வாங்கப்படும் மோட்டார் வண்டிக்கு செலுத்தத்தக்க ஆயுட்கால வரியினையும் மற்றும் அரசு பதிவு எண் ஒதுக்கீட்டிற்கான கட்டணத்தையும் விலக்களித்து உள் (போக்குவரத்து-1) துறையின் 6.5.2004 ஆம் நாளிட்ட 597 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை. (1974 ஆம் ஆண்டு தமிழ்நாடு மோட்டார் வாகனங்கள்

வரி விதிப்புச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 13/1974) 25 (2) பிரிவின் கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது).

3. 1974 ஆம் ஆண்டு தமிழ்நாடு மோட்டார் வண்டிகள் வரிவிதிப்புச் சட்டத்தின்கீழ் சேலம், சங்கரியில் வசிக்கும் திரு. பி. ஜாகீர் உசேன் என்பவருக்குச் சொந்தமான TN 28 Y 7985 ஆம் பதிவு எண் கொண்ட சரக்கு வண்டிக்காக 1.7.1992 முதல் 30.9.1994 வரையிலான காலத்திற்குரிய வசூலிக்க இயலாத மோட்டார் வண்டி வரி மற்றும் அபராதத்தை தள்ளுபடி செய்து உள் (போக்குவரத்து-1) துறை 25.6.2004 ஆம் நாளிட்ட 700 ஆம் எண் அரசாணையில் (1D) வெளியிடப்பட்ட அறிவிக்கை. (1974 ஆம் ஆண்டு தமிழ்நாடு மோட்டார் வாகனங்கள் வரி விதிப்புச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 13/1974) 25 (2) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது).

4. 1974 ஆம் ஆண்டு தமிழ்நாடு மோட்டார் வண்டிகள் வரிவிதிப்பு சட்டத்தின் கீழ் திருப்பத்தூர் வட்டம், சிவகங்கையைச் சேர்ந்த காலஞ்சென்ற திரு.வி. மாணிக்கம் என்பவருக்குச் சொந்தமான TCA 2433 ஆம் எண்ணுள்ள சுற்றுலா மேக்சி கேப் வண்டிக்காக 1.1.1992 முதல் 7.10.1993 வரையிலான கால அளவிற்கு வசூலிக்க இயலாத மோட்டார் வண்டி வரி மற்றும் அபராதத் தொகையினை தள்ளுபடி செய்து உள் (போக்குவரத்து-1) துறையின் 24.6.2004 ஆம் நாளிட்ட 695 ஆம் எண் அரசாணையில் (1D) வெளியிடப்பட்ட அறிவிக்கை. (1974 ஆம் ஆண்டு தமிழ்நாடு மோட்டார் வாகனங்கள் வரி விதிப்புச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 13/1974) 25 (2) பிரிவின் கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது).

5. 1974 ஆம் ஆண்டு தமிழ்நாடு மோட்டார் வண்டிகள் வரிவிதிப்பு சட்டத்தின்கீழ் சென்னை-34, கிண்டியில் உள்ள மத்திய அரசின் தொழிலாளர் நல அமைச்சகத்தின் தென் மண்டல தொழிற் பயிற்சி இயக்குநரின் பொறுப்பிலுள்ள பயன்படுத்தமுடியாத நிலையில் உள்ள MSM 9092 ஆம் எண் வண்டியின் மீது 1.4.1994 முதல் 31.3.2003 வரையிலான கால அளவிற்கான வரி நிலுவைத் தொகை மற்றும் தண்டத்தொகையினை, அவ்வாகனத்தை கழிவு செய்ய அத்துறை துரித நடவடிக்கையினை மேற்கொள்ள வேண்டும் என்கிற நிபந்தனைக்கு உட்பட்டு தள்ளுபடி செய்து உள் (போக்குவரத்து-1) துறையின் 15.6.2004 ஆம் நாளிட்ட 280 ஆம் எண் அரசாணையில் (2D) வெளியிடப்பட்ட அறிவிக்கை. (1974 ஆம் ஆண்டு தமிழ்நாடு மோட்டார்



வாகனங்கள் வரி விதிப்புச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 13/1974) 25 (2) பிரிவின் கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது).

6. 2003 ஆம் ஆண்டு தமிழ்நாடு மின்சார நுகர்வின் அல்லது விற்பனையின் மீதான வரிச்சட்டம் 12.6.2003 முதல் அமலுக்கு வருவதாக எரிசக்தித் (பி1) துறையின் 12.6.2003ஆம் நாளிட்ட 49 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை. (2003 ஆம் ஆண்டு தமிழ்நாடு மின்சார நுகர்வின் அல்லது விற்பனையின் மீதான வரிச்சட்டம் (தமிழ்நாடு சட்டம் 12/2003) 15 (4) பிரிவின் கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது).

7. 2003 ஆம் ஆண்டு தமிழ்நாடு மின்சார நுகர்வின் அல்லது விற்பனை மீதான வரிச்சட்டத்தின் கீழ் உரிமம் பெற்றவர்களால் விற்பனை செய்யப்படும் மின்சாரத்தின்மீது விதிக்கப்படும் வரி வீதத்தின் அளவினை அறிவித்து எரிசக்தித் (பி1) துறையின் 13.6.2003 ஆம் நாளிட்ட 51 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை. (2003 ஆம் ஆண்டு தமிழ்நாடு மின்சார நுகர்வின் அல்லது விற்பனை மீதான வரிச்சட்டம் (தமிழ்நாடு சட்டம் 12/2003) 15 (4) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது).

8. 2003 ஆம் ஆண்டு தமிழ்நாடு மின்சார நுகர்வின் அல்லது விற்பனை மீதான வரிச்சட்டத்தின்கீழ் தமிழ்நாடு மின்சார நுகர்வின் அல்லது விற்பனை மீதான வரிச்சட்ட விதிகளை இயற்றி எரிசக்தித் (பி1) துறையின் 13.6.2003 ஆம் நாளிட்ட 52 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை. (2003 ஆம் ஆண்டு தமிழ்நாடு மின்சார நுகர்வின் அல்லது விற்பனை மீதான வரிச்சட்டம் (தமிழ்நாடு சட்டம் 12/2003) 15 (4) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது).

9. 2003 ஆம் ஆண்டு தமிழ்நாடு மின்சார நுகர்வின் அல்லது விற்பனை மீதான வரிச்சட்டத்தின்கீழ் அரசின் தலைமை மின் ஆய்வாளரை மின்சார வரிக்கான இயக்குநராக நியமித்து எரிசக்தித் (பி1) துறையின் 13.6.2003 ஆம் நாளிட்ட 53 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை. (2003-ஆம் ஆண்டு தமிழ்நாடு மின்சார நுகர்வின் அல்லது விற்பனை மீதான வரிச்சட்டம் (தமிழ்நாடு சட்டம் 12/2003) 15 (4) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது).

10. 2003 ஆம் ஆண்டு தமிழ்நாடு மின்சார நுகர்வின் அல்லது விற்பனை மீதான வரிச்சட்டத்தின் கீழ் சில அலுவலர்களை மின்சார

வாரியின் ஆய்வு அலுவலர்களாக நியமித்து எரிசக்தித் (பி1) துறையின் 13.6.2003 ஆம் நாளிட்ட 54 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை. (2003ஆம் ஆண்டு தமிழ்நாடு மின்சார நுகர்வின் அல்லது விற்பனை மீதான வரிச்சட்டம் (தமிழ்நாடு சட்டம் 12/2003) 15 (1) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது).

11. 2003 ஆம் ஆண்டு தமிழ்நாடு மின்சார நுகர்வின் அல்லது விற்பனை மீதான வரிச்சட்டத்தின்கீழ் மின் ஆய்வாளர்களாக பதவி வகிக்கும் மின்சார வாரியின் ஆய்வு அலுவலர்களை பதிவு செய்வதற்கான அலுவலர்களாக நியமித்து எரிசக்தித் (பி1) துறையின் 13.6.2003 ஆம் நாளிட்ட 55 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை. (2003 ஆம் ஆண்டு தமிழ்நாடு மின்சார நுகர்வின் அல்லது விற்பனை மீதான வரிச்சட்டம் (தமிழ்நாடு சட்டம் 12/2003) 15 (1) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது).

12. 2003 ஆம் ஆண்டு தமிழ்நாடு மின்சார நுகர்வின் அல்லது விற்பனை மீதான வரிச்சட்டத்தின்கீழ் நபர் அல்லது நபர்களுக்கு விற்பனை செய்யப்படும் மின்சாரத்தின் மீதான மின்சார வரியினை வசூலிக்க தமிழ்நாடு அரசால் தமிழ்நாடு மின்சார வாரியத்துக்கு ஒப்பளிப்பு வழங்கி எரிசக்தித் (பி1) துறையின் 13.6.2003 ஆம் நாளிட்ட 56 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை. (2003 ஆம் ஆண்டு தமிழ்நாடு மின்சார நுகர்வின் அல்லது விற்பனை மீதான வரிச்சட்டம் (தமிழ்நாடு சட்டம் 12/2003) 15 (1) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது).

13. 2003 ஆம் ஆண்டு தமிழ்நாடு மின்சார நுகர்வின் அல்லது விற்பனை மீதான வரிச்சட்டத்தின்கீழ் வீட்டு உபயோகத்திற்கென விற்கப்படும் மின்சாரத்தின் மீது விதிக்கப்படும் மின்சார வரியினை 17.9.2003 முதல் நுகர்வோர்களுக்கு விலக்கு அளித்து எரிசக்தித் (பி1) துறையின் 17.6.2003 ஆம் நாளிட்ட 77 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை. (2003ஆம் ஆண்டு தமிழ்நாடு மின்சார நுகர்வின் அல்லது விற்பனை மீதான வரிச்சட்டம் (தமிழ்நாடு சட்டம் 12/2003) 15 (1) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது).

14. 1908 ஆம் ஆண்டு பத்திரப் பதிவுச் சட்டத்தின் கீழ் 1982 ஆம் ஆண்டு பத்திரங்கள் எழுதுவோருக்கான உரிம விதிகள் மற்றும் 1971 ஆம் ஆண்டு பத்திர நகல் எழுதுவோருக்கான உரிம விதிகள் ஆகியவற்றிற்கு திருத்தங்கள் செய்து வணிக வரிகள் துறையின்



7.6.2004 ஆம் நாளிட்ட 103 மற்றும் 104 ஆம் எண் அரசாணைகளில் வெளியிடப்பட்ட அறிவிக்கைகள். (1908 ஆம் ஆண்டு பத்திரப் பதிவுச் சட்டத்தின் (மத்திய சட்டம் 16/1908) 89-A பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது).

15. 1996 ஆம் ஆண்டு தமிழ்நாடு மாநகராட்சிகள் பணி விதிகளில் திருத்தங்கள் செய்தது குறித்து நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறையின் 26.8.2004 ஆம் நாளிட்ட 304 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை. (1971ஆம் ஆண்டு மதுரை மாநகராட்சிச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 15/1971) 432 (2) பிரிவு, 1981 ஆம் ஆண்டு கோயம்புத்தூர் மாநகராட்சிச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 25/1981) 431 (2) பிரிவு, 1994-ஆம் ஆண்டு திருச்சிராப்பள்ளி மாநகராட்சிச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 27/1994) 11(3) பிரிவு, 1994 ஆம் ஆண்டு திருநெல்வேலி மாநகராட்சிச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 28/1994) 11 (3) பிரிவு மற்றும் 1994 ஆம் ஆண்டு சேலம் மாநகராட்சிச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 29/1994) பிரிவு 11 (3) ஆகிய பிரிவுகளின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது).

16. 1996 ஆம் ஆண்டு தமிழ்நாடு பேரூராட்சிகள் மற்றும் நகராட்சிகள் மற்றும் மாநகராட்சி மன்றங்கள் (தேர்தல்கள்) விதிகளில் சில திருத்தங்கள் செய்தது குறித்து நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறையின் 14.7.2004 ஆம் நாளிட்ட 280 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை. (1920 ஆம் ஆண்டு தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகள் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 5/1920) 304 (2) பிரிவு, 1919-ஆம் ஆண்டு சென்னை மாநகராட்சி சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 4/1919) 348 (டி) பிரிவு, 1971 ஆம் ஆண்டு மதுரை மாநகராட்சிச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 15/1971) 432 (2) பிரிவு, 1981 ஆம் ஆண்டு கோயம்புத்தூர் மாநகராட்சிச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 25/1981) 431 (2) பிரிவு, 1994 ஆம் ஆண்டு திருச்சிராப்பள்ளி மாநகராட்சிச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 27/1994) 11(3) பிரிவு, 1994-ஆம் ஆண்டு திருநெல்வேலி மாநகராட்சிச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 28/1994) 11 (3) பிரிவு மற்றும் 1994 ஆம் ஆண்டு சேலம் மாநகராட்சிச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 29/1994) பிரிவு 11 (3) ஆகிய பிரிவுகளின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது).

17. 1983 ஆம் ஆண்டு தமிழ்நாடு கூட்டுறவுச் சங்கங்கள் சட்டத்திலுள்ள அட்டவணை மற்றும் 1988 ஆம் ஆண்டு தமிழ்நாடு கூட்டுறவுச் சங்கங்களின் விதிகளின் அட்டவணையிலும் சில திருத்தங்கள் செய்தது குறித்து கூட்டுறவு, உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறையின் 29-6-2004 ஆம் நாளிட்ட 256 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை. [1983 ஆம் ஆண்டு தமிழ்நாடு கூட்டுறவுச் சங்கங்கள் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 30/1983) பிரிவு 180 (5) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது.]

18. 21-1-2003 ஆம் நாளிட்ட அரசாணை (நிலை) எண் 622-ல் வெளியிடப்பட்ட அறிக்கையில் விதிக்கப்பட்டுள்ள மோட்டார் வரியினை 1-12-2001 ஆம் நாளிலிருந்து திருத்தியமைத்தும், அபராதத் தொகையினை தள்ளுபடி செய்தும், 28-7-2004 ஆம் நாளிட்ட உள் (போக்குவரத்து-I) துறையின் அரசாணை 1டி எண் 836-ல் வெளியிடப்பட்ட திருத்த அறிவிக்கை. [1974 ஆம் ஆண்டு தமிழ்நாடு மோட்டார் வாகனங்கள் வரி விதிப்புச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 13/1974) 25 (2) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது.]

19. 2001 ஆம் ஆண்டு உள்ளாட்சிப் பரப்பிடங்களுக்குள் கொண்டு வரப்படும் சரக்குகள் மீதான வரிச் சட்டத்தின்கீழ் 1959 ஆம் ஆண்டு தமிழ்நாடு பொது விற்பனை வரிச் சட்டம் அல்லது 1956 ஆம் ஆண்டு மத்திய விற்பனை வரிச் சட்டத்தின்கீழ் மறுவிற்பனை செய்யும் நோக்கத்திற்காக மேற்படி சட்டங்களின் விவர அட்டவணையில் குறிப்பிட்டுள்ள அட்டவணைச் சரக்குகளின் மீது செலுத்தத்தக்க வரியினை பொது நலன் கருதி கொச்சி எண்ணெய் சுத்திகரிப்பு நிலையத்திற்கு விலக்களித்து வணிக வரித் துறையின் 8-9-2001 ஆம் நாளிட்ட 144 ஆம் அரசாணை (நிலை)யில் வெளியிடப்பட்ட அறிவிக்கை. [2001 ஆம் ஆண்டு தமிழ்நாடு உள்ளாட்சிப் பரப்பிடங்களுக்குள் கொண்டு வரப்படும் சரக்குகள் மீதான வரிச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 20/2001) 14 (4) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது.]

20. 2003 ஆம் ஆண்டு தமிழ்நாடு மதுபான சில்லறை விற்பனை (அங்காடிகள் மற்றும் மது அருந்தகங்கள்) விதிகளில் திருத்தங்கள் செய்தது குறித்து மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வை துறையின் 9-7 2004 ஆம் நாளிட்ட 267 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட [illegible] [1937 ஆம் ஆண்டு தமிழ்நாடு மதுவிலக்குச் சட்டத்தின்



(தமிழ்நாடு சட்டம் 10/1937) 54(3) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது.]

21. 2002-2003 ஆம் ஆண்டிற்கான தமிழ்நாடு ஊரக வீட்டு வசதி மற்றும் உட்கட்டமைப்பு வசதி மேம்பாட்டுக் கழகத்தின் ஆண்டறிக்கை. [1956 ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் (மத்திய சட்டம் 1/1956) 619-ஏ பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது.]

22. 2003-2004 ஆம் ஆண்டு தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகத்தின் முப்பத்தி மூன்றாவது ஆண்டறிக்கை. [1956ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் (மத்திய சட்டம் 1/1956) 619-ஏ பிரிவின்கீழ் பேரவை முன் வைக்கப்பெற்றது) (தமிழ், ஆங்கிலம்)]

23. 2001-2002 ஆம் ஆண்டு தமிழ்நாடு பிற்படுத்தப்பட்டோர் பொருளாதார மேம்பாட்டுக் கழகத்தின் இருபதாவது ஆண்டறிக்கை. [1956-ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் (மத்திய சட்டம் 1/1956) 619-ஏ பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது) (தமிழ், ஆங்கிலம்)]

## (ஆ) அறிக்கைகள், அறிவிக்கைகள் மற்றும் ஏனைய தாள்கள்

1. 2004 ஆம் ஆண்டு தமிழ்நாடு ஊராட்சிகள் (மூன்றாம் திருத்த) அவசரச் சட்டம். (தமிழ்நாடு அவசரச் சட்டம் எண் 9/2004)

2. 2004 ஆம் ஆண்டு தமிழ்நாடு கள்ளச்சாராயக்காரர்கள், மருந்து சரக்குக் குற்றவாளிகள், வனக்குற்றவாளிகள், குண்டர்கள், விபசாரத் தொழில் குற்றவாளிகள், குடிசை நில ஆக்கிரமிப்பாளர்கள் ஆகியோரின் அபாயகரமான நடவடிக்கைகளைத் தடுத்தல் (திருத்த) அவசரச் சட்டம். (தமிழ்நாடு அவசரச் சட்டம் எண். 10/2004)

3. 2004 ஆம் ஆண்டு தமிழ்நாடு காணொலிப் பேழை பதிவுக் கருவிகள் மற்றும் கம்பி வடத் தொலைக்காட்சிப் பெட்டித்திரையில் படங்களைக் காட்டுதல் (முறைப்படுத்துதல்) அவசரச் சட்டம். (தமிழ்நாடு அவசரச் சட்டம் எண் 11/2004)

4. 2004 ஆம் ஆண்டு தமிழ்நாடு கேளிக்கைகள் வரி (திருத்த) அவசரச் சட்டம். (தமிழ்நாடு அவசரச் சட்டம் எண் 12/2004)

5. 2004 ஆம் ஆண்டு தமிழ்நாடு ஒப்பந்தப்புள்ளிகள் (திருத்த) அவசரச் சட்டம் (தமிழ்நாடு அவசரச் சட்டம் எண்

6. 2004 ஆம் ஆண்டு தமிழ்நாடு ஊராட்சிகள் (நான்காம் திருத்த) அவசரச் சட்டம். (தமிழ்நாடு அவசரச் சட்டம் எண் 11/2004)

7. 2004-2005 ஆம் ஆண்டு வரவு-செலவு திட்டத்தினையொட்டிய வரவுகள் மற்றும் செலவுகளின் நிலை குறித்த ஆய்வு. (தமிழ், ஆங்கிலம்)

8. உடுக்குறியிடாத வினாக்கள்-விடைகள் பட்டியல். (முதல் பட்டியல்) (வரிசை எண்கள் 1 முதல் 100 வரை)

9. உடுக்குறியிடாத வினாக்கள்-விடைகள் பட்டியல். (இரண்டாம் பட்டியல்) (வரிசை எண்கள் 1 முதல் 100 வரை)

10. உடுக்குறியிடாத வினாக்கள்-விடைகள் பட்டியல். (மூன்றாம் பட்டியல்) (வரிசை எண்கள் 1 முதல் 100 வரை).

தமிழ்நாடு ஆவணக் காப்பகம்
சென்னை-600 008

**தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை**

**நடவடிக்கைக் குறிப்பு**

**தொகுதி 65 எண் 2, நாள்: 17-11-2004**

**பிழை திருத்தச் சீட்டு**

**இணைப்புப் பகுதி**

| பக்க எண் | வரி | பிழை | திருத்தம் |
|---|---|---|---|
| 110 | 2 வரிகள் தவிர | வினாப் பகுதி அச்சிடப் பெறவில்லை | அச்சிட்டு வைக்கப்பட்டுள்ளது |
| 274 | 2 | [பேரவைத் தலைவர்] | நீக்குக |
| 279 | கடைசி வரிக்கு முன் | 279-281 | 282-283 |
| 281 | கடைசி வரி | (277 ஆம் பக்கத்திலுள்ள அடிக்குறிப்பைக் காண்க) | நீக்குக |
| 282 | 4-வது வரிக்கு முன் | 2004-2005 ஆம் என்பதற்கு முன் | (279 ஆம் பக்கத்திலுள்ள அடிக்குறிப்பைக் காண்க) என சேர்க்க |

(அ) சேலம் மாநகர், அஸ்தம்பட்டியில் காய்கறி அங்காடி அமைக்கும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன், செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) சேலம் மாநகர், அஸ்தம்பட்டியில் காய்கறி அங்காடி அமைக்கும் திட்டம் தற்போது இல்லை.

**100—**

## பிளாஸ்டிக் சாலைகள்

**வினா எண் 53044—திரு. பி.கே. சேகர்பாபு:** மாண்புமிகு செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

சென்னை நகரில் எந்தெந்த இடங்களில் பிளாஸ்டிக் சாலைகள் போடப்படுகின்றன?

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன், செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

சென்னை நகரில் பிளாஸ்டிக் தார் சாலை அமைப்பதற்கு திட்டமிடப்பட்டு பரீட்சார்த்த முறையில் கீழ்க்கண்ட 6 உட்புறச் சாலைகளை தேர்ந்தெடுத்து பிளாஸ்டிக் தார் சாலைகள் 890 மீட்டர் நீளத்திற்கு 2002-2003 ஆம் ஆண்டில் அமைக்கப்பட்டு (1) ஸ்ரீ ஜம்புலிங்கம் சாலை, நுங்கம்பாக்கம், வார்டு-105, (2) ஸ்ரீ ரங்கம்மாள் தெரு, வார்டு-20, (3) மாடல் ஹவுஸ் ரோடு, வார்டு-137, (4) காமராஜர் தெரு, சாலிகிராமம், வார்டு-129 (5) வெள்ளாள தெரு, அயனாவரம், வார்டு-55, (6) அண்ணாநகர் W பிளாக் 4-வது தெரு, வார்டு-66, இந்தச் சாலைகளின் உறுதித் தன்மை மற்றும் செயல்பாடு பற்றிய விவரங்கள் கவனிக்கப்பட்டு வருகிறது. தமிழ்நாடு மாசுக் கட்டுப்பாடு வாரியத்திடமிருந்து சென்னை நகரில் பிளாஸ்டிக் தார் சாலை அமைப்பது பற்றிய கருத்துரைகள் கோரப்பட்டுள்ளன. இதற்கான கருத்துரைகள் கிடைக்கப் பெற்றபின் சென்னை நகரில் பிளாஸ்டிக் தார் சாலை அமைப்பதற்கான நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

226622
சென்னை-600 009

அரசு மைய அச்சகம், சென்னை-600 079.

**Copies can be had from the**
**Assistant Director,**
**Government Publication Depot,**
**112, Anna Salai,**
**Chennai-600 002.**

©

Published under Rules 280 and 283 of the Tamil Nadu Legislative Assembly Rules and printed by the Commissioner of Stationery and Printing, Chennai-600 002.

53-208